சிவமயம்

# காந்திக் கவிதை

''தமிழ்க்கடல்''
''சிவமணி''
''சிவம் பெருக்கும் சீலர்''

**ராய. சொ.**

இயக்குநர், தமிழ் ஆராய்ச்சித்துறை
அழகப்பா கல்லூரி
காரைக்குடி.

அழகப்பா கல்லூரி வெளியீடு
1969

அழகப்பா கல்லூரி வெளியீடு-3

முன்னைய வெளியீடுகள் :

1. கம்பனும் சிவனும் ரூ. 5/
2. வில்லியும் சிவனும் ரூ. 3/50

விலை ரூபாய் ஏழு


திருமகள் அச்சகம், காரைக்குடி



காந்தியடிகளும் வள்ளல் அழகப்பரும்



திருமதி உமையாள் இராமநாதன்
(வள்ளல் அழகப்பரின் மகள்)
அழகப்பர் அறநிலையச் செயலர்



தமிழ்க்கடல், சிவமணி, ராய. சொ.

# உள்ளுறை


| தொடர் எண் | பொருள் | பாடல் தொகை | பக்க எண் |
|---|---|---|---|
| | நன்றியுரை | | ௩ |
| | பதிப்புரையும் மதிப்புரையும் | | எ |
| 1 | காந்தி பிள்ளைத் தமிழ் | 111 | 1 |
| 2 | காந்தியும் வள்ளுவரும் | 126 | 55 |
| 3 | காந்தி அந்தாதி | 103 | 119 |
| 4 | காந்தி நான்மணிமாலை | 43 | 171 |
| 5 | காந்தி திருப்பள்ளி எழுச்சி | 11 | 182 |
| 6 | காந்தி திருத்தசாங்கம் | 11 | 185 |
| 7 | காந்தி திருப்பொன்னூசல் | 11 | 188 |
| 8 | காந்தி திருப்பல்லாண்டு | 11 | 191 |
| 9 | காந்தி திருநாமம் கேட்டல் | 11 | 194 |
| 10 | காந்தி புகழ் பாடுமின் | 12 | 196 |
| 11 | காந்தி சொற்பெருமை | 10 | 197 |
| 12 | அங்கங்களின் பயன் | 10 | 199 |
| 13 | ஆடாமோ ஊசல் | 10 | 201 |
| 14 | தோழிப் பேச்சு | 12 | 203 |
| 15 | ஏர்வாடாக் கோயில் | 10 | 205 |
| 16 | சபர்மதி | 10 | 208 |
| 17 | கடவுளை வேண்டல் | 10 | 211 |
| 18 | உண்ணாவிரத முடிவு | 10 | 214 |
| 19 | சிறை வாழ்வு | 10 | 217 |
| 20 | காந்தித் திருப்புகழ் | 10 | 220 |
| 21 | திருப்பணி | 10 | 225 |

## உள்ளுறை (தொடர்ச்சி)


| தொடர் எண் | பொருள் | பாடல் தொகை | பக்க எண் |
|---|---|---|---|
| 22 | தீண்டாமை | 10 | 228 |
| 23 | தாலாட்டு | 101 | 231 |
| 24 | கும்மி | 51 | 239 |
| 25 | எந்நாட் கண்ணி | 51 | 246 |
| 26 | பேரிகை | 20 | 250 |
| 27 | விடுதலை | 10 | 253 |
| 28 | இந்தியா | 10 | 255 |
| 29 | காதல் மறுமணம் | 11 | 256 |
| 30 | கிளி விடுதூது | 10 | 259 |
| 31 | கோயில் திறவு | 10 | 261 |
| 32 | வீர நாடு | 20 | 264 |
| 33 | விடுதலைப் பாடல் | 12 | 267 |
| 34 | நாம் ஆர்க்கும் குடிஅல்லோம் | 7 | 269 |
| 35 | இராசேந்திரர் | 1 | 271 |
| 36 | சுபாஷ் சந்திரர் | 6 | 272 |
| 37 | அன்புச் செல்வம் | 1 | 274 |
| 38 | காந்தி இரங்கற்பா | 7 | 276 |
| | வாழ்த்து | 1 | 278 |
| | ஆக | 901 | |
| | பாட்டு முதற்குறிப்பு அகராதி | | 279 |

உ
சிவமயம்

# நன்றியுரை.

வள்ளல் அழகப்பஞர் கண்ட அழகப்பர் கல்லூரியின் தமிழ் ஆராய்ச்சித் துறையின் சார்பில் வெளியாகும் மூன்ருவது நூல் இது.

முதல் வெளியீடு 'கம்பனும் சிவனும்'. இரண்டாவது 'வில்லியும் சிவனும்'. இம்மூன்ருவது வெளியீடு 'காந்திக் கவிதை' எனும் காந்தியடிகள் மீது நான் பாடிய பாடலின் தொகுப்பு.

காந்தியடிகளை ஒத்தவர் உலகில் எவரும் இலர் என்பது என் கருத்து. காந்தியடிகள் வாழ்ந்த காலத்தில் இருந்தமைக்காக நான் பெருமைப் படுபவன். அப்பெரியார் என் குடிலுக்கு எழுந்தருளிஞர் என்பதில், கண்ணபிரானை வரவேற்ற விதுரனைப் போல் பெருமகிழ்வு பூத்தவன் நான்.

காந்தியடிகள் மீது இரத்தாட்சி ஆடித் திங்களில், இயற்கை வளம் மல்கிய திருக்குற்ருலத் தலத்திலிருந்து பிள்ளைத் தமிழ் பாடினேன். பிள்ளைத் தமிழ் பாடி, இற்றைக்கு நாற்பத்தைந்து ஆண்டுகள் ஆகின்றன. பிள்ளைத் தமிழ் பல பதிப்புக்கள் வெளிவந்திருக்கின்றன.

நான் வேலூர்ச் சிறையில் இருந்தகாலத்து 1932-ஆம் ஆண்டு, மே ஐந்தாம் நாள் "தாலாட்டுப்" பாடினேன். அதைத் தொடர்ந்து 28 பகுதிகள் பாடி, இறுதியில் சிறையில் 1932 நவம்பர் எட்டாம் நாள் "தீண்டாமை" என்ற பதிகம் பாடினேன். நவம்பர் இறுதியில் சிறையினின்றும் வெளி வந்து விட்டேன்.

சிறையிருந்த காலத்துப் பாடிய பகுதிகள் 30. அவற்றின் பாடல் தொகை 629. இவை தவிர காந்தியடிகளுடன் தொடர்பில்லாத வேறு பாடல்களும் சிறையில் பாடினேன். அவை இங்கு இடம்பெற வில்லை.

நான் சிறையிருந்த ஓராண்டில் இப்பாடல்களை நல்கிய ஆறுதிங்கள்கட்கு வணக்கம் செலுத்துகின்றேன். இந்த அரிய வாய்ப்பு, சிறையிராவிட்டால் கிட்டுவது அருமை. 1948 இல் காந்தியடிகள் மறைந்த பிறகு "காந்தியும் வள்ளுவரும்" என்று ஒருநூல் செய்தேன். 125 திருக்குறட் பாக்களை எடுத்து, அவற்றைப் பிற்பகுதியாக்கி, அவற்றிற்குப் பொருத்தமான வினவை எழுப்பி, முன்னிரண்டு அடியும் தனிச்சீரும் அமைத்து, நேரிசை வெண்பாவாக ஆக்கியிருக்கின்றேன். அந்நூல் காந்திபிள்ளைத் தமிழை அடுத்து இத்தொகுப்பில் இரண்டாவது இடத்தைப் பெற்றிருக்கின்றது.

சிறையிற் பாடிய பாக்களுள் 100 பாடல்கள் கொண்ட 'காந்தி அந்தாதி' இத் தொகுப்பில் மூன்றுவது இடம் பெற்றிருக்கின்றது. 'காந்தி நான்மணிமாலை' என்ற 40 பாடல் கொண்ட பகுதி இத் தொகுப்பில் நான்காவது இடம் பெற்றிருக்கின்றது. தொடர்ந்து 32 பகுதிகள் முடிய சிறையிருந்தபோது பாடிய பாடல்கள். பின்னே உள்ள ஆறும் வெளிவந்த பின்னர்ப் பாடியவை.

'இராசேந்திரர்' பாடலும், 'சுபாஷ் சந்திரர்' என்ற தலைப்பில் வந்த பாடல்களும், 'அன்புச்செல்வம்' என்ற பாடலும் காந்தியடிகளுடன் தொடர்புடைமையின் இத் தொகுப்பில் இடம் பெற்றிருக்கின்றன. இந்நூலில் இறுதியாக அமைந்திருப்பது காந்தியடிகள் மறைந்தபோதுபாடிய இரங்கற்பா. இத்தொகுப்பு நூலின் மொத்தப் பாடல் 901. பாடற்பகுதி 38.

கலித்துறை அந்தாதியின் முறை முதலியவற்றைப் பற்றியும் வேறு சில பாடல்களின் அமைப்புப் பற்றியும் விளக்கம் செய்யவேண்டும் என எண்ணினேன். இதனை, தொடர்ந்துவரும் பதிப்புரையும் மதிப்புரையும் பெரிதும் விளக்கிவிட்டதால், அம்முயற்சியில் தலைப்பட வில்லை.

இத்தொகுப்பு நூலை முழுதும் படித்து, எடுத்துக் காட்ட வேண்டிய பகுதிகளை, என்னினும் சிறப்பாக எடுத்துக்

காட்டி, நூலுக்கு மகுடம் வைத்தது போல் மதிப்புரை எழுதிச் சிறப்பித்த, என் அரிய நண்பர், காய்தல் உவத்தல் இன்றி எதனையும் கூர்ந்து நோக்கும் சிறப்பியல்புடையவர், நல்ல தமிழ்ப் புலமை உடையார், அழகப்பர் கலைக்கல்லூரி முதல்வர் டாக்டர் வ. சுப. மாணிக்கனார் அவர்கட்குப் பெரிதும் கடப்பாடுடையேன்.

அழகப்பர் கல்லூரித் தமிழ் ஆராய்ச்சித் துறையின் சார்பாக, என் பாடல் தொகுப்பை வெளியிட்டுப் பெருமைப் படுத்திய, வள்ளல் அழகப்பர் மகள், அறநிலையச் செயற் குழுச் செயலர், திருமதி உமையாள் அவர்கட்கு என் உளங்கனிந்த நன்றி.

திருவள்ளுவரின் மறுபிறப்பே காந்தியடிகள் என்பதைக் காட்டுமாப் போல, திருவள்ளுவர் திரு உருவத்தை மேலே காட்டி, காந்தியடிகள் மோன நிலையில் அமர்ந்திருக்கும் அழகிய திருஉருவத்தை மூவண்ணத்தில் எழிலுறப் பொருத்தி, இந்நூலுக்கு அட்டை அமைத்து, ஆசையோடு, அன்புக்காணிக்கையாக அளித்த அன்பர் 'கல்கி' சதாசிவனார் அவர்கட்குப் பெரு நன்றியுடையேன்.

என்றும் போல் இந்நூல் வெளியீட்டிலும், என்னுடன் நிழல் போல் இருந்து உதவியவர் அன்பர் இரா. பதுமநாபன் அவர்கள். பாடல்தான் என்னுடையதே தவிர, பெரிதும் முயன்று தொகுத்து அளித்த சிறப்பு அன்பர் பதுமநாபனார்க்கே. அவருக்கு மனமார்ந்த நன்றி.

நூலை நல்ல முறையில் அச்சிட்டுத் தந்த காரைக்குடித் திருமகள் அச்சகத்தார்க்கு நன்றி.

இந்நூல் திருவள்ளுவர் ஈராயிரத்து ஆண்டுடன் கூடிய காந்தியடிகளின் நூற்றாண்டு விழாவாகிய அக்டோபர் 2-ஆம் நாளாகிய நல்லநாளில் வெளிவருகின்றது.

தோன்றாத் துணையாக இருந்த ஆண்டவனுக்கு வணக்கம்.

அழகப்பாபுரம்,
2—10—1969

**ராய. சொ.**

# பதிப்புரையும் மதிப்புரையும்

டாக்டர் வ. சுப. மாணிக்கம், முதல்வர்
அழகப்பா கல்லூரி.

"காந்திக் கவிதை" என்னும் இந்நூல் அழகப்பா கல்லூரித் தமிழாராய்ச்சித் துறையின் மூன்றாவது வெளியீடு. முன்னை வெளியீடுகளான 'கம்பனும் சிவனும்' 'வில்லியும் சிவனும்' என்ற இரு பனுவல்களும் ஆராய்ச்சி இனத்தைச் சார்ந்தவை; காந்திக் கவிதை என்ற இப்பதிப்பு படைப்பினத்தைச் சார்ந்தது. பழைய நூல்களை ஆராய்ந்து அமைவதே ஆராய்ச்சித் துறையின் நோக்கம் என்று கருதிக்கொண்டிருக்கின்றோம். இக்கருத்து ஓரளவே பொருந்தும். பல்கலைக் கழகங்களில் புது நூற்படைப்புக்குத் தனித்துறை இன்றில்லை; இல்லாதவரை உள்ள ஆராய்ச்சித் துறையே படைப்பியலையும் மேற்கொள்ள வேண்டும். முன்னோர் படைத்தளித்த பனுவல்களை ஆராயும் நாம் பின்னோர் ஆராயும் வண்ணம் சிலவேனும் புதியன ஆக்கிப்படைக்க வேண்டாமா? கதிரறுப்பவர்க்கு வித்திடலும் கடன். படைப்பு என்பது மூலநூல்; ஆராய்ச்சி என்பது வழிநூல். வழிநூல் இரண்டு வெளியீடு செய்த அழகப்பா கல்லூரி ஆராய்ச்சித்துறை, பல்கலைக்கழக ஆராய்ச்சித்துறைக்கு ஒரு வழிகாட்டியாக, இயக்குநர் தமிழ்க் கடல் ராய. சொ. படைத்த மூலநூலை வெளியிடுகின்றது என்பதனைப் பெருமிதமாகச் சுட்டிக்காட்ட விழைகின்றேன். திறமான புலமை என்பது ஆராய்ச்சி வன்மையையும் படைப்பு வன்மையையும் குறிக்கும். தமிழ்க்கடலார் இவ்விருவகைத் திறப்பாடும் வாய்ந்தவர் என்பதற்கு எம் மூன்று வெளியீடுகளும் சான்றாகின்றன. முன் இரு பதிப்புரைகளில் ராய. சொ.வின் ஆராய்ச்சி மதுகையை எடுத்துக்காட்டிய யான், அப்புலவர் பெருமகனாரின் படைப்புத் திறனைத் தொடுத்துக் காட்டும் மற்றொரு வாய்ப்புப் பெற்றமைக்கு உவக்கின்றேன்.

1. காந்திக் கவிதை நூல், காந்தி பிள்ளைத் தமிழ் முதலாகக் காந்தி இரங்கற்பா ஈருக 38 பிரிவுகொண்டது. பிறப்பொடு தொடங்கி இறப்புவரைக் கூறுதலின் இந்நூல் முழுமை வடிவுடையது என்று கண்டுகொள்ளலாம். 901செய்யுள் உடையது. இச்செய்யுட்கள் வெண்பா, அகவற்பா, ஆசிரியத் தாழிசை, அறுசீர்-எண்சீர்-பன்னிருசீர்-சந்த விருத்தங்கள், கலிவிருத்தம், கட்டளைக் கலித்துறை, வஞ்சித்தாழிசை, வஞ்சி விருத்தம், காவடிச்சிந்து, கண்ணி என்றவாறு பாவும் பாவினமும் கலந்த பல்வேறு யாப்பின. பிரிவு 38 என்றாலும் அனைத்தும் காந்தி என்னும் ஒரு பொருளை நுதலி எழுந்தனவே. ஒரு பொருளைப் புலவன் நேராகவும் பாடுவன்; உள்ளாகவும் பாடுவன். நேர்முகமாகப் பாடின், பாடற்பொருள் எனப்படும்; உள்முகமாகப் பாடின் வைப்புப் பொருள் எனப்படும். பாடல் பெற்ற தலம் எனவும் வைப்புத் தலம் எனவும் பாகுபடுத்தும் முறையை ஒப்பு நோக்குக. பிள்ளைத் தமிழ், நான்மணிமாலை, திருப்பள்ளி எழுச்சி, திருத்தசாங்கம், திருப்பல்லாண்டு என்றின்ன பகுதிகளில் காந்தி பாடற்பொருளாக விளங்குகின்ருர். காந்தி அந்தாதி, காதல் மறுமணம், தாலாட்டு, தோழிப் பேச்சு என்றின்ன பகுதிகளில் வைப்புப் பொருளாகத் திகழ்கின்ருர்.

மயிலே மணியே மணமே மருந்தே மனத்தில்வளர்
குயிலே கொடியே குணமே கொழுந்தே குழலொடுயாழ்
பயிலின் மொழியே விழிதிற வாயெனில் பாவியெதும்
அயிலேன் இதுமெய் ***அருங்காந்தி ஆணை*** அறிகுவையே (133)

இது காந்தியந்தாதிக்கண் ‘நாணிக்கண் புதைத்தல்’ என்ற துறையில் வரும் செய்யுள். நாணத்தால் கண்பொத்திக் கொண்ட காதலியை நோக்கி, ‘நீ எனைப் பார்க்கக் கண்திறவா விட்டால் பட்டினிகிடப்பேன்; காந்திமேல் ஆணை’ என்ருன் காதலன். இப்பாவில் காந்தி வைப்புப் பொருளாவார். தாலாட்டுப் பகுதியில், “காந்தி அறமதனைக் காசினியெலாம் பரப்பப் போந்த இளங்கொடியே’ எனவும் இராசன்பாபு வரவேற்புரையில், “நடுவுயர் காந்தி நன்மணிப் பாங்கர் வடுவிலாது ஒளிரும் வயிரமா மணியே’ எனவும் பாடுங்கால்,

காந்தி வைப்புப்பொருள் படுகின்றார். தலம் எதுவாயினும் பலவாயினும் ஓரிறைவன் உறைகின்றான்; அதுபோல் தலைப்பு எதுவாயினும் பலவாயினும் ஒரு காந்தியே எங்கும் பொருளாகின்றார்.

2, ராய. சொ. எத்தகைய மனநிலையில் காந்திக் கவிதைகளைப் பாடுகின்றார்? தமக்கும் காந்திக்கும் என்ன உறவு காண்கிறார்? இவ்வடிப்படை தெரிந்தால்தான் நூலின் உயிரோட்டம் விளங்கும். காந்திப் பெருமானைத் தம் தெய்வமாகவும், தம்மைக் காந்தியடியனாகவும் வைத்து வழிபடுகின்றார் ராய. சொ. எனவே தேவார, திருவாசக, பிரபந்தங்கள் போலக் காந்திக் கவிதையும் தெய்வப் பாசுரமாகும்.

பண்கொண்ட குழலூதிப் பசுக்காத்த
திருமாலும் பங்கிற் பச்சைப்
பெண்கொண்ட பெருமானும் பிரமனெனும்
மறையோனும் புத்தன், ஏசு,
மண்கொண்ட வள்ளுவனும் மற்றெழுந்த
பெரியோரும் ஒன்றாய் வந்த
கண்கண்ட தெய்வமெனும் காந்திதனை
இழந்திட்டோம் அந்தோ! அந்தோ! (277)

இதுவரை ஞாலத்தார் வழிபட்டுவரும் பல்வேறு கடவுளர்களும் சிந்தனைப் பெரியவர்களும் திரண்டு ஓருருக்கொண்ட தனிமுழுத் தெய்வம் எனக் காந்தியைப் போற்றுவர் ராய. சொ. அடிகளார். தெய்வ உறவு ஆனமையின், காந்திக் கவிதைகள் தெய்வ மணக்கும் தமிழ்ச் சோலையாகின்றன. தேவநிலைக் கருத்துக்கள் பொலிகின்றன. கடவுள் நிலைபெற்ற காந்திப் பெருமான் (56) காந்திப் பரந்தாமன் (86) கருதுமின் காந்தி பதமலர் (137) கன்னல்மொழி பகர் காந்தியடியார் (121) என்றாங்குப் புதிய தெய்வத் தொடர்கள் இந்நூலில் ஆளப்பட்டுள. மைப்படிந்தோன் ஆனாலும் அவன் புகழை வாயார வாழ்த்துவானேல் ஒப்பரிய உயர்பதத்தை உறுவன் (2) என முத்தியும் மொழியப் படுகின்றது,

தெய்வக் காந்தியைத் தொழும் ராய. சொ. இடத்து நாயன்மார் ஆழ்வார் ஒப்ப அடியவர் மனமையைக் காண்கின்றோம். எளியேன் உள்ளம் கோவில்கொண்டிருக்கும் கருணை இருங்கடலே (15) எனவும், இனிப்பிறவி எடுக்கும் போது எம்பெருமான் உன் குணத்தை இடைவிடாது கொண்டு பிறத்தல் வேண்டும் (20) எனவும் 'பாடுவர். தண்ணளிசேர் காந்திபாதம் தலைக்கொளும் நற் காரைநகர் ராய. சொக்கலிங்கன் (119) என்று தாள்தலை உறவு குறிப்பர். "நாயேனை நஞ்சாம் உலகத் தீநெறி அதனுள் நண்ணுது ஆட்கொண்ட சீல" (12) என்று மாணிக்கவாசகரின் தாழ்வுநடையில் நாயேனை என்று பணிவுமொழிகுவர்.

3. தெய்வப் பாசுரம் பாடிப்பாடிப் பாசுர இலக்கியத்தின் எல்லை கண்டது தமிழ் ஆதலின், எத்தெய்வத்தை யார் பாடினுலும் பழம் பாசுர அமைப்பின் படிவமாகத்தான் இருக்க முடியும். 'போரார் திறம்பாடிப் பொன்னூசல் ஆடாமோ' (189) என்பது திருவாசகத்தடம். 'பாரதர் முடிமணிக் காந்தியடிகட்குப் பல்லாண்டு கூறுதுமே' (192) என்பது சேந்தனர்; பெரியாழ்வார் தம் திருப்பல்லாண்டுச் சாயல். 'காந்தி திருமுன்குவியாக் கையென்ன கையே' (200) என்பது சிலப்பதிகார நெறி. 'எக்குறியும் திருநெற்றி இடாதான் கண்டாய் ஏர்வாடாக் கோவிலுறை எம்மான் தானே' (206) 'பொன்னுரும் திருமேனி பொலிந்து தோன்றும், பூவிலுயர் சபர்மதி எம் புனிதனர்க்கே' (208) என்பன திருத்தாண்டக வழி. இவ்வண்ணம் அடிகள் ராய. சொ. புதிய காந்திக் கடவுளைத் திருப்பொன்னூசல், திருப்பல்லாண்டு, திருப்புகழ், திருத்தசாங்கம் என்றின்ன தெய்வத் தலைப்புக்களில் நெக்கு நெக்குப் போற்றுவர்.

தடம், பழைமை என்றுலும் காந்திக் கவிதையின் உணர்ச்சிகளும் கொள்கைகளும் புதுவேகம் உடையன. புதியமுறை என்று பேரிட்டு ஓய்ந்த கருத்துக்களைப் பாடுவார் பல்கிய இந்நாளில், மரபான முறையில் தரமான நடையில் காந்தியின் புரட்சியங்களைப் பாடியுள்ளார் ராய. சொ. தெய்வப் பாசுரமாயினும் 'கைம்மையை உடைத்திடுவேன்' என மாதர்

மறுமணம் கமழ்கின்றது; 'எங்ஙனம் பெண்மை இழிவாகும்' எனச் சமுதாயத் திருத்தம் வலியுறுத்தப்படுகின்றது; 'இந்தியா எழுந்துவிட்டது' என நாட்டுப் பற்று எழுப்பப் படுகின்றது; வையகத்தில் எல்லோரும் பசியாமல் உண்டு உடுத்தி வாழவேண்டும் எனப் பொதுவாழ்வியம் வேண்டப் படுகின்றது; எனக்குத் தமிழ் வாராது என்றுரைப்பவர்தம் மனநிலை பழிக்கப்படுகின்றது. இவையெல்லாம் காந்திப் பாசுரத்தின் புதுக்கூறுகள். காந்தி, மக்கள் தலைவராதலின், பொதுமக்களின் நல்வாழ்வுக்கு வேண்டிய மக்களியம் காந்திக் கவிதை முழுதும் இலங்கக் காண்கின்றோம்.

சிறியதொரு கத்தர்ப்பை பக்கம் தோன்றும்
தினம்படிக்கும் ஒருகீதை அதனுள் தோன்றும்
மறையெழுதும் ஒருசிறிய குச்சி தோன்றும்
வனப்புயர்ந்த இராட்டொன்று திருமுன் தோன்றும்
கறையெதுவும் இல்லாத கத்தர் மாலைக்
கயிற்றுடனே கடிகாரம் ஒன்று தோன்றும்
பொறியடக்கி ஆண்டபெருந் தகைமை தோன்றும்
பூவிலுயர் சபர்மதியெம் புனித ஞர்க்கே. (210)

தெய்வக் காந்தியின் திருவுருவத் தோற்றம் புனையப்படும் இச்செய்யுளில் எவ்வளவு புதுக் கருத்துக்களும் காலப் புதுச் சொற்களும் தொக்குக்கிடக்கின்றன!

4. பாடும் புலவனின் சூழ்நிலையைப் பொறுத்துப் பாட்டுக்கு உணர்ச்சி அமையும். இடத்துக்கும் உணர்ச்சிக்கும் இயைபு உண்டு. மேடைமேல் ஏறிப்பேசும் உணர்ச்சி, பாயின் மேல் இருக்கும்போது தோன்ருது. காந்திக் கவிதையின் பல பகுதிகள் ராய. சொ. வேலூர்ச் சிறையில் வீற்றிருந்தகாலை, பாடியவை. 'சிறை காக்கும் காப்பு எவன் செய்யும்' என்று வினவுவர் வள்ளுவர். சிறைக்காப்பு தமிழ்செய்யும் என்று விடை சொல்லத் தோன்றுகின்றது. 38 பகுதிகளில் 30 வேலூர்ச் சிறையில் ஆறு திங்களில் யாத்தவை.

கறையுடையார் தமக்காகக் காணப்பட்ட
காவலமை வறட்டுமலை சூழ்ந்த வேலூர்ச்
சிறையதனில் சிற்றறையில் இருந்து ராய.
சொக்கலிங்கன் இப்பதிகம் சொல்லல் உண்டோ (219)

என்று தமிழ்க்கடலாரே சிறைப்பேற்றை மதிக்கின்றார். சிறைத் துயர் என்று பதிகத் தலைப்பிடாமல், சிறைவாழ்வு என்று தலைப்பிட்டிருத்தலின், ராய. சொ. விற்குச் சிறை தமிழ்நிறையாக அமைந்தது. "வேலூர் அரண்மனை மேவிய நாளென்" (185) என்று எட்டடி கொள் சிற்றறையை அரண்மனையாகக் காண்குவர். தாம் வதிந்த வறட்டுமலை வேலூர்ச் சிறையை அரண்மனையாக மதிக்கும் ராய. சொ. அடிகள், தம் தெய்வக் காந்தி அடைபட்டிருந்த ஏர்வாடாச் சிறையை "ஏர்வாடாக் கோவிலுறை எம்மான்" என்று போற்றித் தொழுவது எத்துணைப் பொருத்தம்! ஏர்வாடாக் கோவில் என்ற தொடர், எவ்வளவு சிறைப்பட்டிருந்தாலும், அழகு குன்றாத கோவில் என்று மற்றொரு பொருள்படுகின்றதன்றோ? விடுதலைக் களம் புக்க இந்தியத் தலைவர்களுக்குப் புகழ்பயந்தது சிறைக்களம் ஆதலின் புலவர் ராய. சொ. சிறையை மதித்தே பாடுகின்றனர். 'மலிந்த புகழ்தரு வேலூர்ச் சிறை' (182) சேண்புகழ்கொண்ட ஏர்வாடாச் சிறை (185) என்று பாடிப்போதுவர். சிறையிற் பட்டுச் சிறையையே நினைத்துப் பாடிய பழக்கத்தால், ராய. சொ. சிறையை மறக்கமுடியவில்லை.

"யாரும்நிகர் இல்லாத காந்திதனைத் திருக்குறளோ டிசைவுகண்டு
நேரிசைவெண் பாவொருநூற் றிருபத்தைந் தாஅமைத்து நெஞ்சிலன்னான்
**சீருருவை அகலாது சிறை வைத்த** ராய. சொக்கலிங்கன் (55)

அரசு துறந்திருந்த இளங்கோவடிகள் குணவாயிற் கோட்டத்தில் அமர்ந்து சிலப்பதிகாரம் பாடியாங்கு, நாடு விடுதலைப் போராடிய ராய. சொ. அடிகள் வேலூர்ச் சிறையில் தங்கிக் காந்திக் கவிதைகளைப் பாடினர். ராய. சொ. வின் ஓராண்டுச் சிறைவாழ்வையும் அக்குறுகிய பருவத்திற்குள் சிறைவயல் தந்த தமிழ்யாணரையும் நினைக்குங்காலை, பல்லாண்டு சிறையிருந்திருப்பரேல், காந்திக் காப்பியம் விளைந்திருக்குமே. ஆயிர விளக்கேந்திய திருமகள் வீடணன் மனை

புகுவதாக நற்கனுக் கண்டுகொண்டிருந்தபோது, துயில் எழுப்பி விட்டாயே என்று கவன்ற திரிசடைக்கு, கனுவின் குறையைக் காண மறுபடியும் தூங்குக என்று அன்னைச் சீதை இருகை கூப்பினுளாம் என்பது நினைவிற்கு வருகின்றது.

5 காந்தியை எண்ணும்போதெல்லாம் வள்ளுவனுர் நினைவே ராய. சொ. வின் மனத்தகத்து எழுகின்றது. பொய்யில் புலவரின் அறங்கள் மெய்யே என்று இலக்கியமாக வாழ்ந்துகாட்டியவர் காந்தித் தோன்றல் என்பது அவர்தம் முடிபு. பிள்ளைத் தமிழின் சிறுதேர்ப் பருவத்தில் வள்ளுவரோடு காந்தியை ஒப்பிட்டு, "தகுதியுடை நீ எங்கள் தண்மையோடு இனிமைசாரும், தெள்ளுதமிழ் வள்ளுவனுர் திருவரவு என்று இயம்பிடலாம்" என்று முடிப்பதனுல் வள்ளுவனுரே காந்தியாகப் பிறந்தார் என்று காட்டுவர் ராய. சொ. அவ்வாறே அன்னை கத்தூரியை வாசுகியாகவும் காண்பர்.

காந்திக் கவிதையில் வள்ளுவ மணம் பரவாத இடமில்லை. திருக்குறட்கு வரலாறு காட்டும் சோமேசர் முதுமொழி வெண்பா போன்ற நூல்கள் முன்னரே பலவுள. இந்நூல்களில் ஒவ்வொரு குறட்கும்பலர் தம் வாழ்க்கைச் செயல்கள் இலக்கிய மாகக் காட்டப்பட்டுள்ளன. காந்தியும் வள்ளுவரும் என்ற ராய. சொ. வின் கவிதைப் பகுதியில் எல்லாக் குறள்களுக்கும் காந்தி ஒருவரின் வாழ்க்கை வரலாறுகளே காட்டாகின்றன. தமிழிலக்கிய வரலாற்றில் இது ஒரு புதுமுறை. மேலும், 'காந்தியும் வள்ளுவரும்' என்ற நூற்பகுதி உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுளாக அமைந்திருக்கின்றது. செய்யுள் யாத்த ராய. சொ. அவர்களே வேண்டிய விளக்கத்தை உரை நடையில் எழுதியுள்ளனர். வெண்பாவாலும் விளக்கத்தாலும் திருக்குறட்கே சில புதிய கருத்துக்களை அறிந்துகொள் கின்றேம். பின்னிரண்டடித் திருக்குறளுக்கு ஏற்ப, முன் னிரண்டடி குறள் பாடும் புலவன் தனிச் சொல்லும் சேர்த்துப் பாடவேண்டும். யாப்பு நிறைவுக்காகப் பாடுபவன் யாப்பறி புலவன் ஆகின்றுன். இத்தனிச் சொல்லை ஒப்பற்ற சொல்லாக நயம்படத் தொகுப்பவன் பொருளறி புலவன் ஆகின்றுன்.

125 வெண்பா உடைய இக்கவிதைப் பகுதியில் ராய. சொ. இணைக்கும் தனிச் சொற்கள் திருக்குறளின் பொருளை முன்னிலும் வளப்படுத்துகின்றன.

அமைதி—தெரிதலும் தேர்ந்து செயலும் (99)
சின்ன—உருவுகண்டு எள்ளாமை வேண்டும் (104)
வருந்தி—நவில்தொறும் நூல்நயம் போலும் (108)
குணமான—மாறுபாடு இல்லாத உண்டி (111)
தேய்ந்த—சிறியார் உணர்ச்சியுள் இல்லை (113)
நன்றுக்கு—இரப்பாரை இல்லாயின் (118)

இம்மேற்கோள்களில் முதலில் நிற்பன தனிச் சொற்கள்; பின்வருவன குறளடிகள். கொண்டியில் தொடுத்தாற்போலத் தனிச் சொற்கள் குறளோடு எவ்வளவு பொருள்படத் தழுவிச் செல்கின்றன!

6. காந்திக் கவிதையில் காந்தி பிள்ளைத் தமிழ், காந்தியும் வள்ளுவரும், காந்தி யந்தாதி, காந்தி நான்மணிமாலை என்ற நான்கு பகுதிகள் அடங்கியுள. இவை ஒவ்வொன்றும் தனி நூல் வனப்பின. இவற்றுள் காந்தி யந்தாதி இலக்கியப் புரட்சி செய்கின்றது. இதுவும் உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள். அகப்பொருளில் பிரிவுபல கூறல் உண்டு. அப்பிரிவுகளினும் வேறாகத் தாய் நாட்டுக் கடமைக்குப் பிரிகின்றான் காந்தி யந்தாதித் தலைவன். தலைவியைத் தலைவன் பிரிவான் என்று பாடுவதே அகமரபு. ஈண்டோ நாட்டுப்பற்றுக் காரணமாகத் தலைவனைத் தலைவி பிரிந்து சிறைபுகுகின்றாள். இருவருமே வீட்டைவிட்டுத் தனித்தனிச் சிறையில் வாழ்கின்றனர். ஒரு சிறையிலிருந்து மறு சிறைக்கு வண்டுத் தூது விடுப. இங்ஙன் துறைகள் புதியவாம்போது துறை விளக்கங்களும் புதியனவாதல் இயல்பே.

எவரும் விரும்ப இசையிடு வண்டே: எழுந்துயர்ந்த
சுவருள் இருக்குமென் சுந்தரன் தன்னிடம் தூதுசென்று
கவரும் நினது கரும்பு சிறையிற் கலைபயின்று
தவரும் வியந்திட வாழுகின் றாளெனச் சாற்றுகவே. (131)

சிறையுறையும் தன் காதலனுக்கு இன்னொரு சிறைவாழ் காதலி வண்டு மூலம் கூறுகின்றாள் என்பது இவ்வந்தாதியின் துறை. இது அகத்துறையில் ஒரு புதுத்துறை.

காந்தியந்தாதித் தலைவி காதலுக்கும் ஒரு விதி போடுகின்றாள். தன்னை விழையும் தலைவனை நோக்கி, என்னை மணஞ்செய்துகொள்ள விரும்புவையேல் காந்தியின் அறத்தை உலகறியச் செயலால் பரப்புவேன், பரவ ஒத்துழைப்பேன் என்று காந்திமேல் ஆணையிடுவாய்; இடுவையேல் உனை நான் மன்றல் புரிவேன்; என்னை விரும்பின் இது தவிர உனக்கு வேறு வழி இல்லை என்று காதல் விதி பகர்கின்றாள் (145) இதனால் மணக்காதலினும் காந்திக் காதல் பெரிதென உணர்கின்றோம்.

**மெய்நொந்து உனைப் பெற்று யான் பெற்ற இன்பமிம் மேதினியில்**
**அய்யா பெரிதே எனினும் அருந்தவக் காந்தி களத்து**
**எய்யாது உழைத்தின்று இனிய பெருநலம் எய்தலின்றித்**
**துய்யாய் சிலநாள் வறிதே கழித்திடத் தோன்றினையே (128)**

உன்னைப் பெறக் கழித்த நாட்களில் காந்திவழிப்படி நாட்டுத் தொண்டு செய்ய முடியாமற்போயிற்றே என்று வருந்துகின்றாள் தாய். மகவின்பத்தினும் நாட்டுக்கடமை பெரிது எனவும் நாட்டுக்கடமை வீழ்நாள் படாமல் நாள்தோறும் செய்யவேண்டும் எனவும் உணர்கின்றோம். இது புறத்துறையில் ஒரு புதுத்துறையாகும். தலைவன் போர்க்களம் செல்வான் என்றல் புற மரபு. அப்போர்க்களம் குருதிப்படைப் போர்க்களம் ஆகும். காந்திப் போர்க்களம் உறுதியுடையதேயன்றிக் குருதியுடையதன்று. மக்களைச் சேர்த்து ஒரு மாபெரும் போர் முந்தையர் காணா முறை வகுத்திட்டவன் (132) என்பர் புலவர். இது பகைவர்க்கும் இனிய போராதலின் பெண்ணும் தனித்து அமர்க்களம் புகுகின்றாள். "வேந்தர் விறலும் மதியா வெறுங்கை அமர்க்களத்தே சேர்ந்தனளே" என்பது நற்றாய் இரக்கம் (139). கன்னி காதற்களம் புகாது காந்திக்களம் ஏகுகின்றாள். இதுவும் புறத்துறையில் ஒரு புதுத்துறை. இப்புதுமைத் துறைகள் பொருந்துமா? முரண்கொலோ என்றால், அன்பின் அடிப்படையிலும் அறத்தின் அடிப்படை

யிலும் வழக்கு வழிப்பட்ட துறைகள் இலக்கிய முறைகளே ஆகும். தொல்காப்பியர் ஆணைப்படி மரபு நிலை திரியா மாட்சியனவே ஆகும்.

7. சைவப் பாசுரங்களில் திருநீறு இடம் பெறல்போல, காந்திக் கவிதையில் கதர் நல்லிடம் பெறுகின்றது. காந்தி மதத்துக்குக் கதர் புறச்சின்னம். கதர் என்பது முரட்டுத்துணி. அதனை மென்காந்தித் தலைவி உடுத்துகின்றாள் என்னும் போது பெண்ணிலக்கியப்போக்கு மாறுமல் இருக்க முடியாது.

அனிச்சப்பூவையும் சூடமாட்டாத அவ்வளவு மெல்லிய இடையினள் என்று வள்ளுவர் நயம்படப் பாராட்டுகின்றாரே: அந்த மெல்லிடை கதர் பெறல் காணவில்லையா? அதன் மேலும் வண்டுகள் தலைமேல் இருந்தால் இடை என்னும் என்று வினவுகின்றான் தலைவன் (145) கத்தர் உடுத்தியே கைராட்டு உருட்டும் நற்காரிகையீர் (126) என்று காதலன் கலைமான் தேடு கின்றான். தரித்தாள் முரட்டுத் துணிக் கதரை (140) என்று உடன்போகிய மகளுக்கு நற்றாய் இரங்குகின்றாள். "நாடு செழித்திட நண்ணும் முரட்டுக் கதர் சுமந்து வாடிய சிற்றிடை (124) என்பதனால், கதரால் இடை வாடினாலும் நாடு செழிக்கும் என்ற கருத்துப் புலனாகின்றது. தனிக்கதர் தாங்கும் அழகினன் (127) என்று தலைவனும் காந்தி மதத்தவன் என்று காட்டுவான் கதரணிகின்றான். தமிழே பயின்று கதரே சுமந்து தளரும் இடை (144) என்றால், இடைத்தளர்ச்சிக்கு முரட்டுக் கதர் அணிதல் காரணம் என்பது சரி. தமிழ் பயில்தல் இடைத் தளர்வுக்கு எப்படிக் காரணம் ஆகும்? சிலர் இருந்து படிப்பர். சிலரோ நடந்து நடந்து படிப்பர். இக்காந்தித் தலைவி நடந்து தமிழ்நூலை ஏந்திப்படிப்பவள் ஆதலின் தமிழும் அவள் நுசுப்புத் தளர்ச்சிக்குக் காரணமாயிற்று. தமிழ்ப்படிப்பு மெலிவுதரும் என்பதனைத் தமிழின் துறைவாய் நுழைந் தனையோ என்ற திருக்கோவை வினவால் உய்த்துணரலாம்.

8. காந்திக் கவிதை தனக்குவமையில்லாத காந்தியைப் பொருளாகக் கொண்டது. இது ஒரு சிறப்பே என்றாலும், கவிதையின் நீடித்த வழிவழி வாழ்வுக்குப் புலமைச்சிறப்பு

வேண்டும். இலக்கிய வனப்புக்கள் இன்றேல், கவிதை பலர் படிக்கும் கவர்ச்சி இழக்கும்; உப்பின்றியிருக்கும்; ஓட்டமற்ற குட்டையாகும். ராய. சொ. அவர்கள் தமிழ்க்கடல்; கவிதைக் கடலாடி; நூறாயிரக்கணக்கான செய்யுட் செல்வர். ஆதலின் இந்நூலுக்குப் பொருட் சிறப்பு வாய்ந்ததுபோலப் புலமைச் சிறப்பும் வாய்ந்துள்ளது.

இலக்கியக் கூறுகளுள் ஒன்று எடுத்துக்காட்டு நடையாகும். இந்நடையால் ஏற்றமும் இறக்கமும், வாழ்வும் தாழ்வும், பெருமையும் சிறுமையும் தெள்ளிதின் விளங்கும். "கீழ்த்திசை வாயில் கணவனொடு பெயர்ந்தேன், மேற்றிசை வாயில் வறியேன் பெயர்கென" என்று கண்ணகி நல்லாள் முன்னை நிலையைப் பின்னை நிலையோடு இணைத்துக் காட்டும் போது, அவலம் பொள்ளெனப் பிறக்கின்றது. உணர்ச்சி கிளர்ந்தெழ வேண்டுமெனின், பாடலில் இருநிலை அல்லது பன்னிலை வேண்டும். ஒருநிலைப் பாடல் தன்மை காட்டுமேயன்றி உணர்ச்சிமுடி காட்டாது.

மெத்தையினில் கண்வளர்ந்த மேலோர் எல்லாம்
மிதிப்பதற்கும் தகுதியில்லாக் கயிற்றுப் பாயில்
கைத்தலைக்கு வைத்துறங்கும் காட்சி யொன்று
கனவினிலும் காண்பதுவோ காந்தி வள்ளால் (217)

புத்துருக்கு நெய்யன்றி வேறு காணுப்
பொருவரிய பெருவாழ்க்கை பூண்டோர் எல்லாம்
கைத்துணைஎண் ணெயுமறியா மிடிகூர் வாழ்வைக்
கடனுகக் கருதிடுதல் தரையில் உண்டோ (218)

சிறைவாழ்வு என்ற தலைப்புப் பாடல் பத்தும் இரு நிலைப் பாடலாகும்; அவல வுணர்வுப் பாடலாகும்.

9 சொல்நயம் பொருள்நயம் சான்ற பாடல்களே கவிநயம் உடையனவாகக் கற்கப்படும். இவையில்லாச் செய்யுட்கள் பட்டையடிக்கும் எழுதுகோலை ஒக்கும்; மழுங்கற் செய்யுட்களாகும்.

வேர்மாளத் தீண்டாமை வேண்டியவாறு உரைத்தருளி
ஏர்வாடாச் சிறையிருந்த எம்மானும் நீதானே (238)

என்ற தாலாட்டில், தீண்டாமை என்ற மரத்தின் இலை, தழை, கிளைகளை வெட்டினுற் போதா; என்றும் தளிராதபடி வேரும் மாளவேண்டும் என்று அழுத்தமாகக் கழறுவர். காந்தி ஓராடை ஆண்டி. நம்மை அடிமைப்படுத்திய ஆங்கிலேயரோ ஆடை பல அணியும் நாகரிகர். ஆனுலும் ஓராடையுடனே இலண்டன் சென்று அரசரையும் அந்நாட்டு மக்களையும் கண்டு இந்திய உரிமையை எடுத்து விளம்பினுர் காந்தியண்ணல்.

**ஒன்னுர்கள் கண்டஞ்சும் ஒற்றைக் கத்தர்**
**உடுத்துஆடை பலசுமக்கும் ஓரார் நாட்டும்**
**எல்நாட்டி மீண்டபெரும் எழிலோன்** (207)

காந்தி உடுத்திய ஒரு கதர் பகைவர்க்கும் படையாய்த் தோன்றிற்றும். அழகு என்பது ஆடை மென்மையிலும் எண்ணிக்கையிலும் இல்லை என்பதனை 'எழிலோன்' என்ற சொல்லால் அறியலாம்.

10 இலக்கிய நயம் பலவகைப்படும். அறிவு தித்திக்கு மாறு சொல்வது பொருள் நயம் எனப்படும். இதனுல் கருத்தின் அருமையையும், புலவனின் சிந்தனையையும் புரிந்து கொள்கின்றோம். இம்மை மறுமை என ற பிறப்புக் கொள்கைகள் பல சிந்தனையைப் புலவர்கட்குத் தூண்டியுள்ளன. இம்மைப் பிறப்பில் பிரிய மாட்டோம் என்று தலைவன் ஆறுதல் மொழிந்த போது, அப்படியானுல் மறுபிறப்பிற் பிரிவான்போலும் எனத் தலைவி கலங்கினுள் என்பர் வள்ளுவர்.

**எந்திர பீரங்கி எங்கள்**
**உணர்ச்சி தன்னை என்செய்யும்–உடல்**
**வெந்து போயின் வேற்றுடலில்**
**வீறுகொள்வது உறுதியால்** (254)

உடலைக் கொல்லலாம், விடுதலையுணர்வுக்குக் கொல்லியில்லை. ஆசையுடையவர்கட்கு மறுபிறப்பு உண்டு. விடுதலை வேட்கை யுடைய நாங்கள் இந்த மண்ணில் மறுபிறப்பு எய்துவோம். எங்கள் உணர்ச்சி மறு உடம்பில் தொடரும் என்று உடலற் ருலும் உணர்ச்சி யருமையைப் பிறப்புக் கொள்கையில்

வைத்துக் காட்டுவர் புலவர். முருகன் வேல் ஏந்தியதற்கு ராய. சொ. மொழியும் கருத்துரை வேறு. குறவள்ளியை மணந்தான் வேலன். கோயிலில் அவ்வள்ளியைத் தொழுது பூசை செய்யும் மாந்தர் வள்ளி குலத்தாரைத் தீண்டாதார் என்று கோயிற்றடை செய்கின்றனர். இத்தடையாளர்களை வள்ளி கணவன் பொறுப்பானா? "தீதுடையார் தமை ஒறுக்க அன்றோ அந்தத் திருக்கோலம்?" (262)

11 பாடல் படிப்பவர்க்கு உணர்ச்சியையும் கிளர்ச்சியையும் எழுப்ப வேண்டுமெனின், ஆற்றொழுக்குப் போன்ற அணிநடைச் செய்யுட்கள் சாலா. வெள்ளம் நிகர்க்கும் வேகப்பா வேண்டும். சுறுசுறுப்பும் விறுவிறுப்பும் சொல்லிலும் சொற்றொடரிலும் சொன்முறையிலும் வேண்டும். கருத்தில் ஆழ மட்டும் போதாது. சுழிப்பாடும் வேண்டும். செவிச் சுவையறியா வாய்ச்சுவை மாக்கள் அவிந்தாலென்ன, அவிதலினின்றும் தப்பிப்பிழைத்து வாழ்ந்தாலென்ன? என்று வள்ளுவர் வேகப்படவில்லையா? வேகமில் கவிதைகள் இலக்கியப் பாகம் இல்லாதவை. காந்திக் கவிதையில் காட்டாறு போலச் சாடும் வேகத்தை உணர்கின்றோம். காந்திப் பெம்மானைக் கொன்ற கொடுசேய் ஊழிக்காலம் முழுதும் நரகடைவான் என்று சிலர் சொல்வது ராய. சொ. செவியிற் படுகின்றது. சினமும் அவலமும் பிறக்கின்றன புலவர் பெருமானுக்கு.

உய்யாது ஒருபாவி ஊழிநரகு உற்றலென்?
மெய்யான காந்திநமை விட்டானே—ஐயோ (110)

என்று துடிக்கிறார். பாவி நரகு அடைவான் என்பது நமக்கு ஆறுதலா? காந்தி நம்மைப் பிரிந்தாரே ஐயோ என்று கதறுகின்றார்.

பித்துக்கொண்டு ஒப்புயர்வில் பெண்மை தனைப்பழிப்போர்
செத்தஇடம் புல்முளைக்கச் செய்யுநாள் எந்நாளோ? (247)

இருவர் இணைந்துபெறும் இல்வாழ்வுக்கு அறிகுறியா
ஒருவர் பெறுந்தாலி ஒழியுநாள் எந்நாளோ? (248)

எனக்குத் தமிழ்வாராது என்றுரைக்கும் புன்தமிழர்
இனித்த தமிழ்பேசி எழிலுறுநாள் எந்நாளோ? (247)

இங்ஙனம் எந்நாட்கண்ணியிலும் கும்மியிலும் தாலாட்டிலும் கடுநடைப் பாடல்களைக் காண்கின்றோம்.

12 பெருமகன் ராய. சொ. பிறந்து மொழிபயின்ற நாள் தொட்டே சிறந்த தமிழின் சேவடி தொழுபவர். இனிப்பிறவி எடுக்கும்போது என் அருமைத் தமிழ் நாட்டில் எளியேன் பிறத்தல் வேண்டும் (20) என்று தமிழ்ப் பிறவியை வேண்டுபவர் அரசியலில் இருந்த போதும் அதனைத் துறந்த போதும் தமிழையே மூச்சும் பேச்சும் எழுத்தும் எல்லாமாகக் கொண்டவர். தமிழுக்கெனத் தோன்றி தமிழுக்கென வாழ்ந்துவரும் தமிழ்த்தகை. அருந்தமிழன் என்று தம்மைச் சொல்லிக் கொள்ளும் பெருந்தகை.

வானவர் மண்ணவர் மற்றவரும் தொழ
வான் செயல் பலசெய்த
வண்தமிழ், கன்னி வளர்த்த செழுந்தமிழ்
வரம்பமை தித்திக்கும்
தேன்சொரி தெய்வத் தீந்தமிழ் (13)

சங்கமிருந்து வளர்ந்த பசும்
தனிய இனிய தமிழ்க்கோமான் (15)

என்தன் இனிய இருந்தமிழ் (125)

எம்மையுலகத்தும் ஈடில் தமிழ்ப்பா (202)

அமிழ்தும் புளிக்குதடி—சகியே
அதனிலும் மிக்க சுவைத்
தமிழும் கசக்குதடி (257)

இவ்வண்ணம் தமிழின் அருமை பெருமை உரிமைகளை உள்ளம் உணர்ந்து அறிவு தோய்ந்து பாராட்டுகின்றார் தமிழ்க்கடலார். கடமையிற் பிரியும் தலைவன், எக்கோவையும் இதுவரைக் கூறாத முறையில், தலைவிக்கு ஆறுதல் மொழிகின்றான். "நான் வரும்வரை நீ நம் இனித்த தமிழ் நண்ணும் இலக்கியத் தேன் குடித்து ஆறுக நாயகியே" (163) என்று தமிழிலக்கியம் காட்டிப் பிரிவுத் துயரைத் தணிக்கின்றான். வள்ளுவரைப் பெற்றுப் புகழ் கொண்ட தமிழ்நாடு என்று பாரதியார் கூறிநிற்கவும்,

**வள்ளுவனென்று ஒப்புயர்வில் மாட்சிமிக்க புலவனுல்**
**கொள்ளைநீதி குவலயத்துக்கு உரைத்ததெங்கள் இந்தியா (255)**

என்று இந்தியப் பிறப்பாளனுகக் காண்கின்றுர் ராய. சொ. ஏன்? வள்ளுவரே காந்தியாகப் பிறந்தார் என்பது அவர் கருத்து.

13. ராய. சொ. கல்விப் பெருமையாலும் கவிதைப் பயிற்சியாலும் சொற்பொழிவுத் திறத்தாலும் தமிழிலக்கியங் களின் நுழைபுலம் கண்டவர். அக் காட்சி காந்திக்கவிதை யிலும் மிளிரக் காண்கின்றேம். இலக்கிய நுணுக்கங்கள் பிறங்கக் காண்கின்றேம். இவற்றைத் திறனுய்வுத்துறையாக எண்ணலாம்.

**சேக்கிழார் நூலிலுள்ள சீர்திருத்தக் கொள்கையெலாம்**
**வாக்கினுல் உரைத்துலகை வளர்த்தருளக் கண்வளராய் (232)**

பெரியபுராணம் சீர்திருத்த நூல் என்பது தமிழ்க்கடலாரின் இலக்கியத் திறன். அவர்தம் கல்விப் பயிற்சியிற் கண்டு காட்டும் முடிபு.

**கல்வி தனிற்பெரிய கம்பனுர் பெற்றெடுத்த**
**செல்வத் தமிழ்ச்சீதை செம்பொருள் நீதானே (234)**

வான்மீகியில் வரும் சீதைக்கும் கம்பர் தமிழ் நாகரிகத்திற்கு ஏற்ப உருவாக்கிய சீதைக்கும் உள்ள வேறுபாட்டை எண்ணி, கம்பர் பெற்றெடுத்த தமிழ்ச்சீதை என்று சீதையின் புதுப் பிறவி காட்டுவர் ராய. சொ. கண்ணகியைப் பாண்டியன் மகள் என்று இளங்கோ கூறுவதை ஒப்பு நோக்குக.

**செவிக்குத்தேன் என இராமன் கதைதிருத்திச் செய்தமைத்த**
**கவிக்கு நாயகன் என்னும் கம்பவள்ளல் நீ தானே (238)**

கவிக்கு நாயகன் என்ற தொடர் இராமாயணத்தில் அநுமனைக் குறிப்பது. ராய. சொ. கம்பரைக் கவிக்கு நாயகன் என்பர். இது எங்ஙனம் பொருந்தும்? இராமனது புகழைத் திருத்தினுன் என்றுவரும்போது கவிக்கு நாயகன் என்ற தொடர் குரங்கிற்சிறந்த அநுமனைச் சுட்டும். இராமனது கதையைத் திருத்தினுன் என்றபோது அத்தொடர் புலவரிற்

சிறந்த கற்பனைக் குறிக்கும் என்று தெளிக. இராமன் புகழைத் திருத்த வேண்டும் எனின், அதற்கேற்பக் கதையின் போக்கைத் திருத்தியாகவேண்டும். கதை திருந்தினாலல்லது புகழ் திருந்தாது என்பது இதனால் உணரப்படும். "செவிக்குத் தேனென இராகவன் புகழினைத் திருத்தும்" என்ற கம்பர் வாக்கு ஆராயத்தக்கது. புகழைத் திருத்துதல் என்றால் பழியாக மாற்றுதல் என்றன்றோ பொருள்படும். சரிதிருத்தம் என்று சொல்லுகின்றோமா? பிழை திருத்தம் என்று சொல்லுகின்றோமா? ஒப்பிட்டுக் காண்க. ஆதலானும், "காசில்கொற்றத்து இராமன் கதை" என்று வருதலானும் 'இராமன் கதை திருத்தி' என்று கம்பரைத் திருத்தினார் தமிழ்க்கடலார் என்பது என் கருத்து.

காந்திக் கவிதை என்னும் இப்படைப்புநூல் செய்யுள் வடிவில் தோன்றிய பெறலரும் வரலாற்றிலக்கியம்; வருங் காலத்தார்க்கு ஓராயிரம் உண்மைக் குறிப்புக்களைக்காத்து வைத்திருக்கும் தமிழ்ப்பேழை; சால்பியம், புரட்சியம், பொது வியம், மக்களியம் என எண்ணப்படும் பல்லியங்களும் உள் அடங்கிய காந்தியத்தின் வழிகாட்டி. காந்திப்பொருளும் தமிழ்க்கடலார் புலமையும் இரண்டறக் கலந்துபிறந்த இக் காந்திக் கவிதை இந்தியமொழிகளில் எல்லாம் மொழி பெயர்க்கப்படல்வேண்டும் என்பது என் விழைவு.

காரைக்குடி.
16—9—69

**வ. சுப. மாணிக்கம்.**

# காந்திக் கவிதை

# காந்தி பிள்ளைத் தமிழ்

## பாயிரம்

(நூலாசிரியன் பாடியவை)

பேர்படைத்த இவ்உலகில், 'எவன் பெரியோன்'
என, எங்கும் பெரிதும் ஆய்ந்து,
சீர்படைத்த தன்மையினால் தெரிந்துஎடுக்கப்
பெற்றஉயர் திருஆர் செல்வன்;
நார்படைத்த நல்தவன்;பூ நலம் படைக்கப்
பிறந்துஅருளும் நல்லோன்; ஞானி;
கார்படைத்த கரதலத்துக் கத்தூரி
காதல்எழில் கணவன் காந்தி. 1

செயல்கண்டும், அவன்ஒழுகும் நெறிகண்டும்,
அப்பெரியோன் சிந்தை கண்டும்,
மயல்கொண்ட இவ்உலக வாழ்வை,மதி-
-யாதுஅன்னான் வாய்மை கொள்ளப்
புயல்கண்டு மனமகிழ எதிர்நோக்கும்
மயிலேபோல் பொழுது பார்க்கும்
செயல்கொண்டார் எண்ணற்றார்; இப்புதுமை
உலகில்இன்று தெரிகின் றேமால். 2

இன்னபுகழ், செய்கை,குணம் இனிதுஉடையான்,
எவ்உலகும் இன்றும் அன்றும்
நன்னார்நிரல் ஆய்ந்திடினும், 'என்றும்இலை
நம்பிபொரு நல்லோன்' என்று
மன்னும்உயர் அறிஞர்எலாம் மனமகிழ்ந்து,
பெருமிதமாய் வாய்ம ணக்கச்
சொன்னமொழி ஆயிரம்ஆ யிரம்என்றால்,
அவன்தூய்மை சொல்லல் ஆமோ! 3

அப்பெரியோன் அடி,முடியில் அணிந்து,உவகை
யோடு,அன்னுன் அறத்தை ஆற்றிச்
செப்பரிய துன்பம்அடை திறமைஉளார்
பலமக்கள்; செயல்ஒன்று இன்றி,
மைப்படிந்தோன் ஆனுலும் அவன்புகழை
வாயார வாழ்த்து வானேல்
ஒப்பரிய உயர்பதத்தை உறுவன்,எனும்
ஓர்எண்ணம் உள்ளம் கொண்டும், 4

பாருள்ள மொழியில்எலாம் சிறந்தமொழி
என்று,மொழி பலவும் கண்ட
சீர்உள்ள பெரும்புலவோர் செப்பிய,தீந்
தமிழ்மொழிதேர் திருநாடு உற்ற
நாருள்ள மக்கள்எலாம் நல்தவத்தோன்
புகழ்,தமிழில் நயந்து பாட,
ஏர்உள்ள இனியதமிழ் எம்பெருமான்
புகழ்தாங்கி இன்னும் ஓங்க, 5

வேண்டும்எனும் நசைகொண்டும், மெய்அன்றி
வேறுஅறியா விமலன் ஆன
ஆண்தகைஏர்க் காந்திஎனும் அண்ணல்அவன்
திருப்புகழை, அறத்தாறு ஆக,
மூண்டபெரும் காதலொடு முன்மொழிந்த
தமிழறிஞர் முறையைப் பற்றிக்
காண்தகுசீர் உடையான்மேல் காந்திபிள்ளைக்
கவிஎனும்இக் கவின்ஆர் நூலை, 6

ஏர்ஆரும் வளப்பாண்டி மண்டலத்தில்
இயற்கைவளம் இனிதின் ஈண்டிச்
சீர்ஆரும் மலைஅருவி தினம்வீழும்
சீதளம்ஆர் திருக்குற் றாலக்
கார்ஆரும் பதிதன்னில், காற்று,அருவி
யொடு,பருவ காலம் துய்த்து,
நார்ஆரும் உயிர்க்குஇனிய நண்பரொடு
வாழ்ந்தஉயர் நன்னாள் தன்னில், 7

எய்துசகம் ஆயிரத்துஎண் ணூற்றுநாற்-
-பத்துஏழாம் எழில்ஆர் ஆண்டில்,
செய்யஇரத் தாட்சிதனில், சேர்ஆடி
தனில்,இறைவன் அருளே கூட்ட,
மெய்அறங்கள் மிகமலிந்து மேன்மையொடு
விளங்குதமிழ் விருத்தப் பாவால்
செய்தவன்,சீர்க் காரைநகர் ராயசொக்க-
-லிங்கன்எனும் சிறியோன் அம்மா! 8

## அவையடக்கம்

கற்றுஉணர்ந்த பல்பெரிய கவிவாணர்
வாழ்ந்திடும்இக் கவின்ஆர் நாட்டில்,
முற்றறிவு படைத்தமுனி, முனிவுஅறியா
மேதகவோன், மொழிபொய் யாதான்,
நல்தவன்சீர்க் காந்திஎனும் நல்லோனின்
புகழ்பாட நயந்த, இந்தச்
சிற்றறிஞன் செயல்கண்டு சிரித்திடும்இவ்
உலகம்எனும் திறம்கொள் ளாமல், 1

தமிழ்பாட எழுந்தஎனது அறியாமை
தனைப்பொருளாத் தாங்கி, ஈதை
உமிழாமல், உத்தமன்பேர் ஓங்குபுகழ்
கொண்டதுஎனும் ஒன்று கொண்டே,
அமிழ்தான உரைபகரும் அண்ணல்அவன்
தனைஉளத்தில் அழுந்த ஏற்றுத்
தமிழ்வாணர் பொறுத்துஅருளல் சாலும்எனச்
சாற்றிடவும் வேண்டும் கொல்லோ. 2

## காப்பு

சாந்தம், பொறை,கருணை,
தண்மை, புனிதம்,நிறை
காந்திக்குப் பிள்ளைக்
கவிபுகல,—மாந்தர்
நினைத்தவடி வோடுஎவர்க்கும்
நேர்ந்தவா ஈயும்
தனித்தபொருள் தாளே சரண்.

# காந்தி பிள்ளைத் தமிழ்

## I. காப்புப் பருவம்

நீபடைத்த உயிர்காத்தல் நின்இயல்பே!
அதினும்உயர் நெறியே பற்றி,
நேர்மைதனில் எள்துணையும் நீங்காமல்
அறம்வளர்க்கும் நேயம் மிக்க

தாய்படைத்த உயிர்அனைத்தும் தனிபுரக்கும்
தண்அளியை, தரும வாழ்வை,
சாந்தநிறை பெருங்கடலை, சத்தியத்தின்
தனிஉருவை, சமம்வேறு இல்லா

ஆய்படைத்த அருமணியை, அருள்காந்திப்
பெருமானை, அடைவே காத்தல்
ஐயமில்லை; ஆனாலும் என்ஆசை-
யால்உரைத்தேன்; ஐயனைக்காத்து அருள்கவே!

பூபடைத்து, விண்படைத்து, புங்கம்உறும்
எரிபடைத்து, பொருகாற் றோடு
புனல்படைத்துப் பிறபொருள்எ லாம்படைத்துப்
புரக்கின்ற புனித மூர்த்தி! 1

புகழ்சேர்சுக் கிலஆண்டு, புரட்டாதித்
திங்கள்பதி னெட்டாம் நாளில்,
புண்ணியநம் திருநாட்டைப் பிடித்தசனி
அகன்றோட, சனிவா ரத்தில்

மகிழ்கூர மக்களெலாம் மகம்வந்த
பெரியோனை, மகித லத்தில்
மற்றொருவர் ஒப்பில்லா மாண்டகுணம்
வாய்ந்தானை, வள்ளல் தன்னை,

இகழ்செய்கை எள்ளளவும் இல்லானை,
என்எளிய இதயம் தன்னில்
என்றும்உள எம்மானை, எழிற்காந்திப்
பெம்மானை இனிது காக்க!

செகம்அனைத்தும் ஆக்கி,அளித்து, அழித்து,மறைத்து,
அருள்ஐந்து செயலும் வல்ல
திண்மையனே! சீலம்உளார் திருமனத்தில்
தினம்உறையும் தேவ தேவே! 2

அகழ்வாரைத் தாங்குகின்ற அம்புவிபோல்
அவமதிக்கும் அவர்ப்பொ றுக்கும்
அறிவுடையார் தலையாயார் ஆவர்என,
அறம்உரைத்தோன் அறைந்த வாபோல்,
இகழ்வாரைப் பொறுத்து,அவர்க்கும் இன்மொழியால்
உய்யவழி இயம்பும் மேலாம்
ஏழையரைத் தோழமைகொள் எம்காந்திப்
பெருமானை என்றும் காக்க!
திகழும்உலகு உயிர்தொறும்அவ் உயிர்க்குயிராய்
உள்உறைந்து, திண்மை கொண்டு,
செய்கைமுழு வதும்நடத்திச் சிக்கெனவே
பிடித்தஅன்பர் சிந்தை நன்றாய்
நெகிழ்கூர, என்றென்றும் அவர்உள்ளம்
குடிகொண்ட நேய வாழ்வே!
நித்தியமே! நின்மலமே! நிர்க்குணமே!
என்இதயம் நிற்கும் கோவே! 3

பூதலத்தில் அறம்பொலிய, மறம்தொலைய,
பிறந்துஅருளும் புனிதன்; புண்ய
பூமிஎனும் பாரதநம் திருநாட்டில்
போர்ப்பந்தர் பிறங்க வந்தோன்;
காதல்,அற வேஅறுத்தான்; கலங்காதான்;
கடமையே கருத்துள் கொண்டான்;
கருணையே உருவான, எம்பெருமான்
காந்திதனைக் காக்க! காக்க!!
மாதலத்து வாழ்மக்கள் வீடுஅடைய
வகுத்தசம யங்கட்கு எல்லாம்
வழித்துணையாய், அண்டமெலாம் வகுத்து,உலகில்
வாழும்உயிர் ஆக்கிக் காத்துச்
சாதல்உற வேஅழித்துச் சங்கைஅறச்
சாற்றரிய விளையாட்டு ஆர்ந்து,
சராசரமாய்ப் பிறபலவாய்த் தத்துவங்கள்
கடந்தபரம் பொருளாம் ஈச! 4

நின்மக்கள் தம்முள்ளே ஒருசாரார்
மற்றவரை நேய மோடு
நெருங்கிஉறவு ஆடாமல், நிகழ்பிறப்பின்
தன்மைகொடு நிந்தை கூறித்
தன்மநெறி சாராமல், சான்றாண்மை
நோக்காமல், 'சாதி தன்னில்
தாழ்ந்தவரே நீர்'என்னச் சாற்றும்அநி
யாயத்தைச் சகிக்கல் ஆற்றாது,
அன்னபிழை தனைஅகற்ற அகங்கொண்டுஆ-
-வனபுரியும் அம்மான், ஐயன்,
அருள்வடிவம் ஆ,உதித்த அறக்காந்திப்
பெருமானை அன்பால் காக்க!
பன்னரிய பல்உலகும் பல்உயிரும்
பல்பொருளும் பகலும் அல்லும்
பல்உருவும் பல்பெயரும் பல்வேறு
சமயமும்ஆம் பரம நாத! 5

அமைச்சன்என அவனிமுறை அரசுஆண்ட
அறம்திறம்பா அறிஞன் அந்நாள்
அரசற்கும் அஞ்சாத ஆற்றல்படைத்து
உயர்ச்சிபெறும் அண்ணல் ஆன
சமர்த்தன்,உத் தமசந்த்ரன் மகன்மகனை,
தந்தைதொழில் தன்னைத் தாங்கித்
'தந்தையினும் சதமடங்கு தநயன்'எனும்
புகழ்கொண்டு,அம் மன்னன் தந்த
அமைப்புடைய பெருநிலத்தை அடையமறுத்-
-திட்ட,கரம் சந்த்ரன் ஈந்த
அருமகனை, திருமகனை, அவனிக்கே
ஒருமகனை, காந்தி என்னும்
எமைப்புரக்கும் பெருமகனை, எல்லாமாய்,
அல்லதுமாய், இணையில் லாத
இன்பமதாய், துன்பமதாய் இருந்திடும்ஓர்
இறையவனார் இனிது காக்க! 6

மத்துஎறிந்த தயிர்போல வல்அடிமை
வலிஅழிய, மறங்கள் மாள,
வந்த,மகாத் மாஎன்னும் மாதவனை
மணிவயிறு வாய்த்த மங்கை.
நத்திஅயல் நாடுசெலும் நன்மகற்குஅந்-
நாட்டார்கொள் கள்,ஊன், நங்கை
நசைவயிற்றை நண்ணுது, நல்ஒழுக்கம்
நாட்டிவர நவின்ற நன்மைப்
புத்திரிபாய் அருமந்த புத்திரனை,
காந்திதனை, புவிக்குத் தோன்றுப்
புகழ்த்துணையா இருந்தாட்டும் பொருளாகி,
பழமையாய், புதுமை ஆகி,
சத்துவமாய், பிறகுணமாய், குணம்கடந்த
தத்துவமாய், மறைதான் ஆகி,
தமிழ்ஆகி, இசையாகி, சமயங்கள்
ஆனபரன் சார்ந்து காக்க! 7

வள்ளுவர்சீர் மனைவிஎனும் வாசுகிநேர்
மாண்கற்பு மடந்தை; மாற்றம்
மறுத்துஉரைக்க மாட்டாதாள்; வள்ளுவர்சொல்
மனைமாட்சி வாய்த்த மங்கை;
எள்ளுகுணம் இறையும்இலாள்; எழில்கணவன்
இன்பதுன்பம் எல்லாம் ஏற்பாள்;
இதயம்தான் இனையாமல் எந்நாளும்
ஏவல்செயும், ஏதம் இல்லாள்;
கள்உலவு கரும்கூந்தல் கத்தூரி
காதல்எழில் கணவன், கார்நேர்
காந்திஎனும் கண்ணியனை, கடலாகி,
கல்லாகி, கருவாய், காலாய்,
தள்அரிய தரையாகி, தனிவிண்ணுய்த்
தழலாகி, தண்ணீர் தானுய்,
சான்றோர்கள் தம்மனத்தே சார்ந்துஉறையும்
தனிப்பெரிய தலைவன் காக்க! 8

தகப்பனைப்பெற் றவர்களிலே தரணிமுழுது
ஈடில்லா தவரே என்னைச்
சாற்றும்,அரி லால்,மணிலால், சாரும்இராம்-
-தாசோடு தந்தை சொன்ன
செகம்புகழும் தேவதாஸ் எனும்இவரின்
தந்தைதனை, சீர்த்தி மிக்க
திருவணிகர் மரபுஎன்றுஅந் நாள்வகுத்த
குலத்துஉதித்தும், திருமால் சீலம்
அகம்கொண்ட அன்பர்களின் வழிவந்தும்,
அவ்வளவோடு அமைந்தி டாமல்
அவனிஉறை பெருமக்கள் அனைவரும்கொண்
டாடுசெயல் காந்தி தன்னை,
அகரமுதல் எழுத்தாகி, அவைசேர்ந்த
சொல்லாகி, அச்சொல் தன்னால்
ஆனபொருள் முதலான அனைத்துமாம்
அண்ணல்அவன் அடைவே காக்க! 9

## வேறு

தென்ஆப் பிரிக்கா எனும்நாட்டில்
சீலம்நிறையும் மனைவியொடும்
சிறந்த மைந்தன் தன்னோடும்
சிறைவாழ்வு ஏற்று,அந் நியர்செய்த
இன்னா ஒன்றோ? அம்மம்ம!
எண்ணின், இதயம் ஊடுருவும்
எல்லாம் பொறுத்துஇன் செயல்புரியும்
எம்மான் காந்தி தனைப்புரக்க!
மன்னு அணுவுக்கு அணுவாகி,
மலையில் பெரிய மலையாகி,
மண்ணும், விண்ணும், பாதலமும்,
மதியும், ரவியும் தான்ஆகி,
தன்நேர் இன்றி எல்லாமாய்,
தரணி புகழ எங்கும்நிறை
தரும வடிவ மாய்த்திகழும்
தண்மை மிக்க பழம்பொருளே! 10

## 2. செங்கீரைப் பருவம்

போர்ப்பந்தர் தனில்பிறந்து புவனம்எலாம்
புகழ்படைத்துப் பொறுமை யோடு
பொல்லாத மறம்கொன்றே, அறம்ஓம்பி,
பரந்தபெரும் பூமி முற்றும்
நார்ப்பந்தர் இட்டு,அவற்றுள் நண்ணிடுவார்
தமைக்கூட்டி, நண்ணு தாரால்
நலிவுபல வந்துஉறினும், நாட்டம்அதிற்
செலுத்தாது, நன்றே நாடி,
வார்ப்பந்த மக்கள்,மனை, மாண்பொருள்எ-
-லாம்துறந்து, மக்கட்கு எல்லாம்
மன்அறம்,சத்- தியாக்கிரகம், மற்றபல
அறங்கள்எலாம் வகுத்துச் சொற்றுச்
சீர்ப்பந்த ஏர்வார்ச் சிறைவாழ்வே!
செங்கீரை ஆடி அருளே!
செயற்கரிய செயல்வல்ல சேவகனே!
செங்கீரை ஆடி அருளே! 1

தீஞ்சாலி விளைபழனத் திருநாட்டின்
ஓர்பகுப்பாய்த் திகழும், பண்டு
திருமலிய அரசுபுரி திண்ணம்உறு
பாண்டவர்சீர்ச் செல்வத் தேவி
பாஞ்சாலி எனும்அரிய பதிவிரதை
தனைஈன்ற பண்பு மிக்க,
பஞ்சநதம் பரவி,நலம் படிக்குஈயும்
பாங்கான பான்மை கொண்ட
பாஞ்சாலம் எனும்நாட்டில் பகர்அரிய
பாழான பாதகங்கள்
பலசெய்த அரசாங்கத்து ஒத்துழையா-
-மைபூண்டு, பண்பால் அன்று
தேன்சாலும் மொழிபகர்ந்து சிறைமேயாய்!
செங்கீரை ஆடி அருளே!
செயற்குஅரிய செயல்வல்ல சேவகனே!
செங்கீரை ஆடி அருளே! 2

பந்திரியின் வழிவழியில் வந்துஉதித்தும்,
அவ்வாழ்வை மதியாது இந்த
மண்ணாசை முதலான மாயைஎலாம்
ஒழித்து,இறைவன் வகுத்து உனக்குத்
தந்தபெரும் பொருளைஎலாம் தாரணியின்
வாழ்விற்கே தந்த செல்வா!
சத்தியமே கமழ்வாயும் தண்ணளியே
சார்மனமும் தாங்கும் ஐயா!
இந்திரிய வயப்பட்டே ஈடேற
வகைஅறியார்க்கு இனிய கூறி,
எல்லோரும் உயர்நிலையை எய்தஉப-
-தேசம்அருள் எழில்ஆர் எந்தாய்!
செந்தரளம் நந்துஈனும் செய்நாட!
செங்கீரை ஆடி அருளே!
செயற்குஅரிய செயல்வல்ல சேவகனே!
செங்கீரை ஆடி அருளே! 3

எல்லாமாய், அல்லதுமாய், எங்கும்நிறை
இறைபடைப்பில் ஏற்றத் தாழ்வாம்
என்றுபல கற்பித்தே இவ்உலகச்
செல்வத்தால் இறுமாப்பு உற்று,
பொல்லாத நெறிபற்றி, புண்ணியம்என்-
-பதைமறந்து, புன்மை கொண்டு,
புவிப்பொறையாத் திரிகின்றார் பலமக்கள்;
வேறுபலர் புந்தி இன்றி,
நில்லாத உடல்கொண்டு, "நான்பெரியன்;
சாதியினில் நீகிழ்" என்ன
நிலைஅறியாது உழல்கின்றார்; ஈதுஎன்ன
உலகியற்கை என்ன, மற்றோர்
செல்லாத பெருந்துறைசெல் சீராளா!
செங்கீரை ஆடி அருளே!
செயற்கரிய செயல்வல்ல சேவகனே!
செங்கீரை ஆடி அருளே! 4

## வேறு

ஞாலம் பெறினும் நடுநிலை தவரு
நல்லோய்! நாயேனை
நஞ்சாம் உலகத் தீநெறி அதனுள்
நண்ணுது ஆட்கொண்ட
சீல! அறத்தை வாயால் கூவிச்
செய்கை மாறுபட்ட
சிறியோர் தமக்கும் வீண்பேச்சு உரையீர்!
செய்து காட்டும்என
ஏல உரைத்தே உயர்நெறி பற்றி
இரும்சிறை புக்குஅருளி
இன்னல் அனைத்தும் இன்பம் எனக்கொள்
எந்தாய்! மோகனனே!
ஆல்அனை யார்க்கும் அருள்தரும் அமுதே!
ஆடுக செங்கீரை!
அருள்வடி வம்கொண்டு அவனியில் வந்தவ!
ஆடுக செங்கீரை! 5

'இருநிலம் அதனில் இருந்துஉயிர் வாழ்தல்
விருந்திட' என்றுஎவரும்
இணைஇலை எனுமாறு இசைபெறு புலவன்
எந்திரு வள்ளுவன்அன்று
உரைசெயும் மொழியைச் சிரமிசை ஏற்றே
ஒருபக லும்வீணு
ஒழியாது, உற்ற விருந்து புரந்து
வருவிருந்து எதிர்நோக்கும்
பெருமைகள் நிறையும் திருமலி மக்கள்
பெற்றுஉயர் புகழ்கொண்ட
பேசின் ஞாலத்து எந்நா டும்நிகர்
பெறுமோ எனத்தக்க
அருமைகள் மிகமலி திருநாடு உடையாய்!
ஆடுக செங்கீரை!
அருள்வடி வம்கொண்டு அவனியில் வந்தவ!
ஆடுக செங்கீரை! 6

மாநிலம் அதில்வரு மக்கள் பிறப்பின்
மாண்பயன் உணர்ந்துஅழியா
மன்பெரு வீடுஅடை வழியை வகுத்த
வல்லுநர் பலர்எனினும்
வானவர், மண்ணவர் மற்றவ ரும்தொழ
வான்செயல் பலசெய்த
வண்தமிழ், கன்னி வளர்த்த செழுந்தமிழ்,
வரம்புஅமை தித்திக்கும்
தேன்சொரி தெய்வத் தீம்தமிழ் மொழியில்.
திறம்பா அறம்உரைத்த
தெய்வப் புலமைத் திருவள் ளுவனார்
திறம்எவ ருக்குவரும்?
ஆன்றவர் உரைவழி செயல்புரி அறவோய்!
ஆடுக செங்கீரை!
அருள்வடி வம்கொண்டு அவனியில் வந்தவ!
ஆடுக செங்கீரை! 7

உலகவர் அவரவர் மதமத குருகுரு
எனஎன உன்னரிய
உயரிய ஒருதனி உறுசெயல் ஒண்புகழ்
ஒளிஎனும் உன்நாமம்
பலபல படிசொலி அனுதின மும்மகிழ்
பரிசுஎவர் அறியாதார்?
படிதனில் அனைவரும் ஒருபடி எனஉணர்
படிறில் பெருந்தகையே!
கலகல எனவெறும் உரைபல மொழிகுநர்
மிகமலி காசினியில்
கருதியது எதுஎது, அதுஅது புரிஎம்
காந்திப் பெருமானே!
அலைபுனை நிலமகள் துயர்களை அந்தண!
ஆடுக செங்கீரை!
அருள்வடி வம்கொண்டு அவனியில் வந்தவ!
ஆடுக செங்கீரை! 8

பிறப்பினில் எல்லா உயிர்களும் நிகர்எனப்
பேசிய பேரறிஞன்,
பெரியோன், வள்ளுவன் நல்உரை மறந்து
பேணத் தக்கஉயர்

சிறப்புஎதும் இலராய், தக்க தகாதன
சீர்தூக்கு அறிவுஇன்றி,
தீமை புரிந்து, நல்லன கனவிலும்
சிந்தனை செய்யாத

மறத்தொழி லவரும் பிறப்பினில் உயர்வுஎன
மனத்துஎணி மற்றதனால்
மாண்பின ரேனும் இழிவுப டுத்தும்
மதியில் கொடுஞ்செயலை

அறக்களைந்து அருள அவதரித் தவனே!
ஆடுக செங்கீரை!
அருள்வடி வம்கொண்டு அவனியில் வந்தவ!
ஆடுக செங்கீரை! 9

இன்னா செய்தார் நாண நன்னயம்
இயற்ற வேண்டும்என
இணையில் புலவன் இயம்பிய இன்உரை
ஏட்டுஅள வோடுஇன்றி,

தென்ஆப் பிரிக்கா ஆதிய இடங்களில்
செய்து காட்டியநின்
சீர்த்தி உரைக்க வல்லவன் இந்தச்
சிறுமதி உடையேனோ?

கொன்னே அந்தோ! முன்னற்கு அரிய
கொடுமையில் பல்உயிரைக்
கோறல் புரிந்த டயரும் வருந்தின்,
'கூர்வல் உதவி'எனும்

செந்நா உடையாய்! செய்கையும் வல்லாய்!
செங்கோ செங்கீரை!
திருமகள் உறையும் திருநாடு உடையாய்
செங்கோ செங்கீரை! 10

## 3. தாலப் பருவம்

அன்பால் உலகை வயப்படுத்தி
யாரும் செய்தற்கு அரியசெயல்
ஆற்றி, அருளை, அறத்தைஉயர்
ஆண்மை தன்னை, அகலாத
இன்ப வாழ்வை, எஞ்ஞான்றும்
இன்றி அமையாத் தைரியத்தை
எல்லா உயிரும் சமம்என்னும்
இனிய கருத்தை, ஏதும்இலா
என்போல் சிறிய ஏழையரின்
இதயம் பதித்தது அன்றிஎன்றும்
எளியேன் உள்ளம் கோவில்கொண்டு
இருக்கும் கருணை இருங்கடலே!
வன்பா தகர்க்கும் கதிஅளிக்கும்
வள்ளால்! தாலோ தாலேலோ!
மக்கள் உய்ய அவதரித்த
மகாத்ம! தாலோ தாலேலோ! 1

கன்னல், கண்டு, சருக்கரை,தேன்,
கனிஇன் அமுதம், கரும்புஅட்ட
கட்டிச் சுவையும் கசப்புஎன்னக்
கழறு மாறு கனிந்தபெரும்
தன்ஒப் பில்லாத் தனிமுதல்வன்
தலைமை இருக்க, அவன்அடிக்கீழ்,
சங்கம் இருந்து வளர்ந்தபசும்
தனிய இனிய தமிழ்க்கோமான்,
தென்னன், சோழன், சேரன்உயர்
செனகன், இராமன், தருமன்என்னும்
செங்கோல் வேந்தர் அரசுஆண்ட
திறம்பா முறையைத், தீநெறிகள்
மன்னும் உலகில் நிலைநாட்ட
வந்தாய்! தாலோ தாலேலோ!
மக்கள் உய்ய அவதரித்த
மகாத்ம! தாலோ தாலேலோ! 2

ஈசன் எந்தை இணைஅடியை
இதயம் பதித்தே, அவன்அருளால்
இடற விட்ட கரி,பணிய,
இணைத்த நீற்றின் அறை,இனிய
மாசில் வீணை, மாலைவரு
மதிய மோடு, மகிழ்காற்ருய்,
வசந்த கால மாய்த்திகழ,
மடித்தற் பொருட்டு வரிந்தசிலை
தூசில் உயர்ந்த தெப்பமதாய்,
துலங்க ஆழிக் கரைகண்ட
தூயோன்; நடைஅ ருத்துறவி;
துன்னு சத்தி யாக்கிரக
வாச மலிசீர் நாவரையன்
வரவே! தாலோ தாலேலோ!
மக்கள் உய்ய அவதரித்த
மகாத்ம! தாலோ தாலேலோ! 3

இந்நாள் இந்தி யாவில்உளார்
இன்றி அமையாத் தாய்மொழியை
இளமை தன்னில் பயிலாமே,
ஏதி லாரின் ஆங்கிலத்தை,
பன்ருள் பயின்றும் அமையாமல்
பரநாடு அணுகிப் படித்துஅங்குப்
பட்டம் தாங்கி வரஏகும்
பலர்போல் நீயும், பண்புஇன்றி,
இன்று நல்கும் பாதகங்கள்
இயையும் மேற்கு நாடுபுகுந்து,
இருந்தாய்! எனினும் அந்நாட்டார்
இன்பம் எனக்கொள் பாதகத்துள்
மன்ருது அன்னை பால்மொழிந்த
மாற்றம் புரந்தோய்! தாலேலோ!
மக்கள் உய்ய அவதரித்த
மகாத்ம! தாலோ தாலேலோ! 4

முன்னம் நமது திருநாட்டில்
முதிர்ந்த அறிவும், பலர்புகழும்
மொய்ம்பும் படைத்தே உலகுஉய்ய
மொழியும் பெருக்கி, முனிவுஅகற்றி,
பன்னற்கு அரிய பலபணிகள்
பண்பாய் ஆற்றிச் சமயம்எனும்
பாட்டை வகுத்துப் பற்றுஅறுத்து,
பரம கருணை நிதியாகி,
இன்னல் எய்தின் தாம்ஏற்று,
இனிய அனைத்தும் படிக்குஈந்தோர்
எண்ணற் றோர்கள் எனினும்,உனை
ஏய்ப்பார் ஞாலத்து எவர்ஐயா?
வன்னம் நிறையும் பாரதத்தாய்
மைந்தா! தாலோ! தாலேலோ!
மக்கள் உய்ய அவதரித்த
மகாத்ம! தாலோ தாலேலோ! 5

## வேறு

மெய்த்திரு வரினும், வெந்துயர் வரினும்,
விருப்பு, வெறுப்புஇன்றி
மேல்நாள் ஆன விதிவழி அன்றி
மேவாது யார்க்கும்என,
ஒத்த மனம்பெற்று உயர்வழி பற்றி
ஒழுகும் உரவோனே!
உண்மைக்கு ஒருவ! திண்மைப் பெரிய!
உறுதிக்கு உறையுள்ளே!
ஒத்துழை யாமைத் தத்துவம் அதனை
உலகுஅறி யச்செய்த
உத்தம! மோகன் தாசன் எனும்பேர்
உறுதவ! என்உயிரே!
தத்தலை வேலைத் தரணி விளக்கே!
தாலோ தாலேலோ!
தண்அளி உடைஎம் காந்திப் பெரும!
தாலோ தாலேலோ! 6

மக்கட் குள்ளே பாகு படுத்தின்,
மாண்செயல், குணம்ஆதி
வான்வழி பற்றி வகுக்கும் அதுவே
மரபாம்! அஃதன்றி,
தொக்க உடலின் தோற்றம் கொண்டு
சொல்லுதல் அறியாமை!
தோன்றிய யாவும் ஒக்கும் பிறப்பில்
தொழில்ஒவ் வாதுஎனவே,
பொக்கம் மிக்கவர் புந்தி அழுந்தப்
பொய்யில் பெரும்புலவன்
புகல்அற மொழியைப் பூஅறி யச்செய்
புண்ணியன் நீஅன்றே?
தக்கோர் போற்றும் தரணிப் பெரியோய்!
தாலோ தாலேலோ!
தண்ணளி உடைஎம் காந்திப் பெரும!
தாலோ தாலேலோ! 7

செல்வம், கல்வி, தொழில்,அதி காரம்
திண்மை முதலான
திருவுடன் இந்நாள் செகமதில் வாழும்
தேசத்து அறிஞருமே
மல்லல் மிக்க மாநிலம் அதனில்
யார்பெரி யார்என்ன
வகுத்து வகுத்து வான்அளவு ஓட
வண்புகழ் கொண்டுஅந்நாள்
அல்லல் கடலுள் இன்று கிடக்கும்
அறமலி திருநாட்டில்
அவதரித்து அருளும் காந்தியே பெரியார்
அவனியில் என்னநிறுத்-
தல்அறி யாதார் தரணியில் உளரோ?
தாலோ தாலேலோ!
தண்ணளி உடைஎம் காந்திப் பெரும!
தாலோ தாலேலோ! 8

அந்தணர் என்போர் அறவோர் என்றே
அறம்உரை வள்ளுவனார்
அணிபெற அருளிய அருமையின் உயர்வை
அறியாது இந்நாளில்
தந்திர மாகச் சாதி,சா திஎனச்
சாற்றிப் பொருள்இன்றித்
தாம்தாம் அந்தணர் எனப்பல பேசும்
தகுதிஇ லாமாக்கள்
சிந்தை நாணச் செயல்செய்து அந்தணச்
சீர்த்தியைத் தனிகொள்ளும்
சீல! உனைப்போல் யார்உளர்? பண்டு
சீர்பெற்று இருந்தஅரிச்-
சந்திரன் எனவே வாய்மை புரப்போய்!
தாலோ தாலேலோ!
தண்ணளி உடைஎம் காந்திப் பெரும!
தாலோ தாலேலோ! 9

'தன்னரசு அளிப்பது இராட்டினம் ஆகும்;
தரித்துஅத னைக்கையால்
தாழா நொடியும் சுழற்றுக!' என்னச்
சாற்றிய பெருமானே!
மன்னவர் ஆயினும் வானவர் ஆயினும்
மற்றவர் ஆனாலும்
வழிதடு மாறி, மறம்புரி வாரேல்
மதியாது அவர்பிழையை
என்வரி னும்அதற்கு இறையும் அஞ்சாது
இயம்பும் உரவோனே!
என்இரு கண்ணே! கண்உறு மணியே!
என்ஆர் இன்உயிரே!
தன்நிகர் இல்லாத் தரணிப் பெரியோய்!
தாலோ தாலேலோ!
தண்ணளி உடைஎம் காந்திப் பெரும!
தாலோ தாலேலோ! 10

## 4. சப்பாணிப் பருவம்

இனிப்பிறவி எடுக்கும்போது எம்பெருமான் உன்குணத்தை
இறைவிடாதுஎல் லாம்கொடு இந்த
இரும்புவியில் இனிமைசெறி என்அருமைத் தமிழ்நாட்டில்
எளியேன்பி றத்தல் வேண்டும்;
கனித்தமொழிக் காரிகையைக் கடிகொள்வ தானால்,நின்
காதலி,கத் தூரி ஒத்த
கவினமனை அறம்வளர்க்கும் காதலியைப் பெற்றுஅடியேன்
கடைத்தேற அருளல் வேண்டும்;
மனக்குஇனிய மகஉளவேல் வள்ளால்!நின் மக்களைப்போல்
அதில்தேவ தாச னைப்போல்
மகவுபல வேண்டும்ஐயா! மாட்சிபெற இத்துணையும்
வாய்த்தநீ பாக்ய வானே;
தனிப்பெரியன் இரும்உலகுக்கு என்னநிலை சார்ந்தவனே!
சப்பாணி கொட்டி அருளே!
தருமநெறி வாழவரு காந்திப்பெ ரும்தகையே!
சப்பாணி கொட்டி அருளே! 1

பிறர்குற்றம் பாராட்டாப் பெருந்தகையை உலகம்நனி
பிறங்கிடவே பேசு மானால்,
பிறர்குற்றம் அத்துணையும் தம்குற்ற மாக்கொள்ளும்
பெருமைபெறு நின்கு ணத்தின்
முறைமுறைகொண்டு உன்செயல்கள் மொழியுமாறு அறிகில்லேன்;
முழுமுடன் என்செ யவலன்?
மொழியும்அறம் தனைஆற்ற முடியாமல் பிறசெய்யும்
மொய்ம்பில்லார் தம்மை நோக்கி
இறையும்அவர்ச் சினந்துஉரையாது, 'எதற்குஇல்லைத் திறமை'என
இயம்பும்உனது இணையி லாத
எழில்ஆரும் திருமொழியை எம்மொழியால் எடுத்துஉரைப்பேன்
இந்தியர்கள் வாழ வந்தோய்!
தறைஉய்ய உயர்சாந்தம் ததும்பும்உரை பகர்எந்தாய்!
சப்பாணி கொட்டி அருளே!
தருமநெறி வாழவரு காந்திப்பெ ருந்தகையே!
சப்பாணி கொட்டி அருளே! 2

தீண்டாமை ஒழிகஎனத் திருவாயால் மொழிந்திடுவார்;
செயல்புரிய அஞ்சி அந்தோ!
தெருவழியே அவர்வரினும், 'செல்!அப்பால்; நில்லாதே!
சீச்சீ,போ!' என்றுஉ ரைப்பார்;
தீண்டாமை ஒழிவதற்கு மொழிபுகல்தல் அமைந்திடுமோ?
செயல்இன்றி மேடை ஏறிச்
செகநடுங்கக் கலகலெனப் பலபலசொற் புகலுவதால்
பயன்உண்டோ? செய்து காட்ட
வேண்டாவோ? அதுகாட்ட அக்குலத்தில் பிறந்ததிரு
மாமகள்பேர் மேவு பெண்ணை
விரும்பிவளர்த்து எடுக்கும்அருள் பழுத்துஒழுகு மேதகவோய்!
மேன்மைஉறு நீதி தன்னைத்
தாண்டாத தண்ணளியே! தனிஆடைப் பெருமானே!
சப்பாணி கொட்டி அருளே!
தருமநெறி வாழவரு காந்திப்பெ ரும்தகையே!
சப்பாணி கொட்டி அருளே! 3

'எதிர்கால வாழ்விற்குப் பொருள்தேடாது அன்றன்று
கிடைப்பவைஉண்டு இனிய செய்தே
இரும்புவியின் நலம்நாடி அறம்புரியும் பெரியோரே
எவ்உயிரும் ஒப்ப நோக்கும்
கதிகாணும் அந்தணராம்!' எனமேலோர் உரைத்தபடி
காசினியில் எவ்வி டத்தும்
காண்பார்ஆர், உனைஅன்றி அந்தணரை? இதுசரதம்;
கனத்தநினது உடைமை யெல்லாம்
மதியாமல் அறவழியில் வாரிவிட்டே இன்றுஉலக
மக்கள்அற வழியில் நிற்க
மாதவமே செய்கின்ற நின்குணத்தை, ஒண்புகழை,
மகிமையுடைஅத் தேவ நாட்டும்
சதியாதார் செய்ந்நன்றி கொன்றாரே; சங்கைஇலை;
சப்பாணி கொட்டி அருளே!
தருமநெறி வாழவரு காந்திப்பெ ருந்தகையே!
சப்பாணி கொட்டி அருளே! 4

கொன்னேநம் இந்தியரைக் கூலிஎனப் பெயர்தந்து,
　　கொடியஉடல் நிறம்பி ரித்துக்
　கொண்டுகுணம் செயல்ஆதி கூர்ந்துஆயாது இறுமாந்து
　　கூசாமல் இழித்துஉ ரைத்த
அன்னியர்கள் செய்கொடுமை அறிந்தவுடன் ஆற்ருதே
　　அவர்அன்பிற்கு எளிய ருகி
　அங்குஉற்றுஅன் னியர்செயலுக்கு இலக்குஆகி, அடியும்பட்டு,
　　அந்தோஎன் சொல்வன்! அந்தத்
தென்ஆப்பி ரிக்காவில் திருமகள்நேர் மனைவியொடு
　　சிறைப்பட்டு நீகி டந்த
　செயல்உரைத்தற்கு எளிதாமோ? இதுசெய்தார் பெரியர்எனச்
　　செப்புவதற்கு ஐயம் என்னே?
தன்னேரில் லாதவனே! என்இதயம் உள்ளவனே!
　　சப்பாணி கொட்டி அருளே!
　தருமநெறி வாழவரு காந்திப்பெ ரும்தகையே!
　　சப்பாணி கொட்டி அருளே! 5

## வேறு

இனிமை செறிந்திடு தமிழ்மொழி
　　அதனை ஏற்கா தம்மக்கள்
　இருநிலம் அறிய இழித்துஆங்-
　　-கிலமொழி ஏற்றுத் திரிவதுபோல்
தனிமொழி ஆகிய தாய்மொழி
　　பேணும் தன்அறிவு இல்லார்க்குத்
　தாரகம் ஆவது தாய்மொழி
　　யேஎனத் தாட்டிக முடன்கூறும்
கனிவு பொருந்தச் சோதரர்
　　யாரையும் கட்டித் தழுவாதே
　கண்டிடில் தீண்டத் தகாதவர்
　　என்னக் காவத வழிஓடும்
குனிவுறு மாந்தர் கோளரி
　　அனையாய்! கொட்டுக சப்பாணி!
　கோதறு குணமுள கூர்ஜர
　　நாட! கொட்டுக சப்பாணி! 6

தன்உயிர் நீப்பினும் செய்யேல்
தான்பிறிது இன்உயிர் நீக்குவினை
தன்னைஎன்று அந்த வள்ளுவர்
அன்று சாற்றிய உரைப்படியே
பன்னற்கு அரியநின் சபர்மதி
ஆச்ரமப் பாங்குஉறை பாம்புகளைப்
பாறிட வேண்டிய பத்தரைத்
தடுத்துப் பரமன்எவ் உயிர்களிலும்
மன்னுதல் கண்டும், மரபுஅல
கோறல் மாற்றுக இக்கருத்தை
மாசுநம் பாலிலை எனில்நமைச்
செய்வதென்? மற்றவை இன்உயிரைக்
கொன்னே போக்குதல் அவம்என
உரைத்தவ! கொட்டுக சப்பாணி!
கோதறு குணமுள கூர்ஜர
நாட! கொட்டுக சப்பாணி! 7

ஏழைபங் காளன், எம்மான்
நீஎன இயம்புதல் என்குற்றம்!
ஏழையர் பொருட்டா எந்தைநீ
செய்த இருஞ்செயல் யார்வல்லார்?
காழுடன் அந்நாள் ஆலையின்
தொழிலோர் கருதிய கூலிபெறக்
கருமம் விடுத்துப் பட்டினி
கிடந்த காலத்து அவர்க்காக,
வாழிஎம் பெருமான்! உணவுகொள்-
-ளாமல் வருந்திச் சின்னுளில்
மகிழஅ வர்க்குஅருள் மாண்செயல்
ஏழை வகுக்கும் தரமாமோ?
கோழை தவிர்க்கப் பிறந்துஅருள்
குருவே! கொட்டுக சப்பாணி!
கோதறு குணம்உள கூர்ஜர
நாட! கொட்டுக சப்பாணி! 8

மேனாள் செய்த வினைவழி
இந்த மேதினி தனில்இறைவன்
மிகுபொருள் சிறுபொருள் அவரவர்க்கு
ஏற்ப, மேவிடத் தரும்என்றும்
ஆனவப் பொருளில் பிறர்பொருள்
ஒருவன் வெளவுதல் களவுஎன்றும்
அறம்உரை நூலும் பிறபெரி-
யோரும் அறையக் கேட்டனமால்;
கானமர் மொழிசேர் காந்திப்
பெரும! கடல்சூழ் காசினியில்
காரியம் ஆற்றத் தகுபொருள்
தவிரக் களவே மற்றதுஎன,
கோனே! நின்பால் அன்றிக்
கேட்டிலம்; கொட்டுக சப்பாணி!
கோதறு குணமுள கூர்ஜர
நாட! கொட்டுக சப்பாணி! 9

## வேறு

இத்தரை செழிக்க இன்றே
இணையிலா இராட்டை எடுத்தே
எழில்மிகு பஞ்சைக் கதிரில்
ஏற்றியே நூற்றநூலைக்
கைத்தறி கொண்டு நெய்வீர்!
கடைத்துஏறும் மார்க்கம் இதுவே;
கண்ணியம் இன்றி வீணே
கனதனப் பட்டம் தாங்கிப்
பித்தரைப் போல்அலைந்து அந்தோ!
பேசுவ தில்பயன் என்னே!
பேச்சைச் சுருக்கி இன்றே
பெருக்குக செய்கையை என்று
சத்திய உரைஅருள் சான்றோய்!
சப்பாணி கொட்டி அருளே!
சற்குரு மணியே! காந்தி!
சப்பாணி கொட்டி அருளே! 10

## 5. முத்தப் பருவம்

சிந்தை இனிக்கும்; செவிஇனிக்கும்;
தேகம் புளகாங் கிதம்எய்தும்;
திருவாய் இனிக்கும்; கண்களிக்கும்;
தெவிட்டா இன்பம் சேர்ந்திடும்;பின்
முந்தை வினைகள் முறிந்தோடும்;
முனிவு,'இங்கு இடம்ஏது இனி'என்று
முதுகு காட்டும்; மொழிநன்றும்;
முத்தி கிடைக்கும்; பெருங்கருணை
வந்து பொருந்தும்; காந்திஎனும்
வள்ளால்! நினது திருப்பெயரை
மனத்தில் பதிக்க, செவிமடுக்க,
வழுத்த, காணப் பெறுவார்க்கு,
சிந்தும் சாந்தக் கனிவாயால்
தேவா! முத்தம் தருகவே!
செல்வா! நின்தன் மெய்மணக்கும்
திருவாய் முத்தம் தருகவே. 1

இகத்தில், பரத்தில் உறும்இன்பம்
யாவும் நல்கும்; இருவினையை
இல்லாது அழிக்கும்; இணையில்லா
என்றும் உலவாப் பேரின்பம்
அகத்துஉண் டாக்கும்; ஆணவத்தை
அறவே அகற்றும்; அறிவுஅளிக்கும்;
அழியாப் புகழை ஆக்கிடும்;பின்
ஆன்ம ஞானம் அதைஈயும்;
முகத்தில் திருமான் நடம்ஆக்கும்;
முடிவில் புகழான், மூதறிஞன்,
முனிவுஒன்று உண்டுஎன்று அறியாத
மோகன் தாச காந்திஎனும்
செகத்தில் உயர்ந்த பாரதத்தாய்ச்
சேயே! முத்தம் தருகவே!
செல்வா! நின்தன் மெய்மணக்கும்
திருவாய் முத்தம் தருகவே! 2

மரணம் வரினும் பிறவரினும்
மதியாது அவற்றை, மயிர்நீப்பின்
வாழாக் கவரி மாஎன்ன
மானம் புரந்து, மாற்றார்பால்
சரணம் புகுந்தே மற்றவரின்
தயவை நாடி, இரந்துஉண்ணும்
தன்மை கொண்ட தேசீய
சபையைச் சகத்தார் யாவரும்இத்
தருணம் மதிக்க நிறுத்திஅதில்,
சத்யம், பொறுமை, கருணைஎனும்
தக்க பொருள்கள் தமைவிரவித்
தரணி இன்ப வாழ்வுஅதனைத்
திரணம் எனவே கொள்காந்தித்
தீரா! முத்தம் தருகவே!
செல்வா! நின்தன் மெய்மணக்கும்
திருவாய் முத்தம் தருகவே; 3

செங்கோல் செலுத்தும் முறைதிறம்பின்
செய்யத் தக்கது இதுஎன்னும்
செம்மை அறத்தை உலகிற்குச்
செப்பி, அதனால் சிறைக்கோட்டம்
துங்கம் உற,நீ புகுந்துஉறைநாள்
தொழுதுஉன் அருளைப் பெறவந்த
தூய நின்தன் நல்வாழ்க்கைத்
துணைவி, தூரிசுஇல் திருமனத்தாள்,
எங்கள் அன்னை கத்தூரி
இனிய முகத்தை நோக்கி,'நீ
இன்னும் சிறைஏன் ஏகவில்லை'
என்ன மொழிந்த கனிவாயால்
தெங்கு மலியும் திருநாட்டுத்
திருவே! முத்தம் தருகவே!
செல்வா! நின்தன் மெய்மணக்கும்
திருவாய் முத்தம் தருகவே! 4

தேறூர் மொழிசேர் பாஞ்சாலச்
சீரார் செல்வப் பாவையரைச்
செய்யா தனசெய்து, அவமதித்து,
சிறுவர், பெரியோர் பல்லோரை
வான்நாடு ஏற்றி, எந்நாளும்
மறக்க முடியாப் பழிகொண்ட
வண்ணம் கண்டும் அவர்ச்சினந்து
மாற்றம் ஒன்றும் உரையாது,
தானே அரசு வந்துஎய்தும்
சத்யாக் கிரக நெறிபிடித்தால்,
சரதம் இதுவே என்றுஉரைத்த
தண்மைக் காந்தி! சாந்தம்எனும்
தேனே ஒழுகு செம்பவளத்
திருவாய் முத்தம் தருகவே!
செல்வா! நின்தன் மெய்மணக்கும்
திருவாய் முத்தம் தருகவே! 5

பாரார் புகழ்சேர் பார்த்தன்,அபி—
-மன்னன், வீமன், பகல்மைந்தன்,
பண்பு மிக்க இராமன்,அவன்
இளவல் ஆதி பலஅரசர்
சீரார் வலியோடு அந்நாளில்
சீர்த்தி நாட்ட இனிதுஇருந்த
செல்வத் திருநாடு இன்று,ஏழைத்
தேச மாகிச் செயல்இழந்தே
ஆரார் வரினும் அரசுமுதல்
அனைத்தும் கொடுத்தே அவர்வாய்பார்த்து,
அண்ணுந்து இரங்கி, அழியும்அதற்கு
ஆற்றுது உரிமைப் போராடும்
தீரா! காந்தி! செம்பவளத்
திருவாய் முத்தம் தருகவே!
செல்வா! நின்தன் மெய்மணக்கும்
திருவாய் முத்தம் தருகவே! 6

## வேறு

இறைமனம் இன்புற, அறம்புரி
நின்னை, இப்புவி மக்கள்சிலர்
எங்குஇருந் தோவந்து இங்குசெய்
சட்டம் கடந்தனை எனச்சொல்லி,
சிறைசெய்து, நீதி மன்றத்து
ஏற்றி, செப்புக மொழிஎன்னச்
சீல! நீ அரங்கத்து அன்று
மொழிந்த திண்மைகொள் திருமொழியை,
தறை,மதி, இரவி தாம்உள
வரையும் தங்கத்து ஏடுசெய்து,
சாலப் பதித்தே அநுதின-
-மும்அது சாற்றற்கு அரிய,தகு
முறையுளது அண்ணல்! அத்திரு
வாயால் முத்தம் அளித்துஅருளே!
மொழிவழி உறையும் மோகன
தாச! முத்தம் அளித்துஅருளே! 7

நின்வழக்கு அதனில் தீர்ப்புஉரை
அதிபர் நின்வய மேஆகி,
நிலவிய ஆங்கிலச் சட்டப்
படியே நினைச்சிறை புகல்வதற்குத்
தன்மனத்து எணி,உன் தகுதியை
நோக்கி, சஞ்சலம் மிகஉற்றுச்
சாலப் பலப்பல மாற்றம்
உரைத்துத் தண்டிக் கும்பொழுதும்
என்னினும் மிக்க இரும்களிப்பு
உடையார் எவரும் இரார்நீங்கள்
எழில்பெற விடுதலை ஏற்றுல்
எனஅன்று இயம்பிய இன்உரையை
முன்னி மகிழ்ந்தேன், முனிவுஅறி-
-யாதாய்! முத்தம் அளித்துஅருளே!
மொழிவழி உறையும் மோகன
தாச! முத்தம் அளித்துஅருளே! 8

'இந்தியர் ஆர்உயிர் நீ'என
இயம்பல், இம்மியும் மிகைஇல்லை;
இத்தகை உயிர்,உடல் நீங்கிடு-
-மோஎன்று, எண்ணத் தக்கநிலை
வந்த பெரும்பிணி யால்அன்று
உன்உடல் வாள்கொண்டு அறுக்குமுன்னர்,
மருங்குஅமர் ஒருவர் நாட்டிற்கு
என்ன, மாற்றம்ஐ யா!என்ன,
சிந்தைகொண்டு ஏதும் செப்பம
றுத்து, 'சிறைஆள் ஆகும்நான்,
செய்தி உரைத்தல் தகாது'என
மொழிந்த செய்கையை என்என்பேன்!
முந்தி விரைந்துஅம் மொழிபகர்
வாயால் முத்தம் அளித்துஅருளே!
மொழிவழி உறையும் மோகன
தாச! முத்தம் அளித்துஅருளே! 9

இருமூன்று ஆண்டு சிறைவாழ்வு
ஏற்றே ஏர்வா டாத்தலத்தில்
இனிதுஅமர் நாளில், இரும்பிணி
உறவே எம்மான் உனைப்பூனைப்
பெருநகர் கொடுபோய்ச் சாசூன்
வைத்ய சாலை பிறங்கவைத்துப்
பெரும்புகழ் கொண்டார் "மாடாக்"
ஆண்டு; பெரியோய்! நீபெற்ற
அரும்உப சாரம் யாரே
பெற்றார்? அரசரில் வந்தாலும்
அடைதற்கு அரிதே, சிறையாள்
ஆன ஐய!நீ பெற்றஅது;
முருகுஅமர் செயலோய்! முன்னிய
புரிவோய்! முத்தம் அளித்துஅருளே!
மொழிவழி உறையும் மோகன
தாச! முத்தம் அளித்துஅருளே! 10

## 6. வருகைப் பருவம்

அய்ய வருக! பாரதநாட்டு
அரசே! வருக! உலகிற்குஓர்
அணியே வருக! அடியேனை
ஆண்டாய் வருக! அவனிஎலாம்
உய்ய வருக! உயிர்க்குஎல்லாம்
உயிரே வருக! உத்தமரின்
உணர்வே வருக! ஓர்ஆடை
உடுத்தாய் வருக! உண்மைஉரை
செய்ய வருக! பூமிக்குஓர்
திலக வருக! தெருள்அளிக்கும்
செல்வ வருக! நெறிதிறம்பாச்
செம்மல் வருக! சீர்மருவு
கய்ய வருக! கருணைபுரி
காந்தி வருக! வருகவே!
கருத்திற்கு இசைந்த கத்தூரி
கணவா! வருக! வருகவே! 1

காந்தி வருக! கருணைபுரி
கடலே வருக! ஏழையேன்
கண்ணே வருக! இந்தியரின்
கருத்தே வருக! என்அன்னை
மாந்த வருக! மக்கள்உய
வந்தாய் வருக! பழஅறத்தை
வகுத்தாய் வருக! வடிவுடைய
வள்ளால் வருக! மண்முழுதும்
சாந்தி நிலவ உரைஅருளும்
சான்றோய் வருக! தண்அளிசேர்
தலைவ வருக! தார்மன்னர்
தருமச் செங்கோல் தாங்கஅருள்
காந்தி வருக! அருள்பழுத்த
கனியே வருக! வருகவே!
கருத்திற்கு இசைந்த கத்தூரி
கணவா! வருக! வருகவே! 2

எந்தாய் வருக! எழில்ஆரும்
எம்மான் வருக! எனைஆளும்
இறைவா வருக! ஏழையேன்
இதயம் கொளநின் இணைஅடியைத்
தந்தாய் வருக! சன்மார்க்கம்
சார்ந்து தமியேன் கடைத்தேறத்
தண்மை ஒழுக அருளுபெரும்
தகையே வருக! சாந்தத்தின்
மைந்தா வருக! எந்தன்இரு
கண்ணே வருக! கண்ணின்உறு
மணியே வருக! ஆர்உயிரே
வருக! சிறியேன் பாட்டுக்குஉ-
கந்தே வருக! கருதரிய
காந்தி வருக! வருகவே!
கருத்திற்கு இசைந்த கத்தூரி
கணவா! வருக! வருகவே! 3

பெரும வருக! அறம்மலியப்
பிறந்தோய் வருக! பீடுடைய
பெம்மான் வருக! புவிக்குள்ளே
பெரியோய் வருக! பிறர்பொருட்டா
அருமை உறுநின் உடல்,பொருளும்
ஆவி, மக்கள், மனைஆதி
அனைத்தும் விடுத்து,ஓர் கதர்ஆடை
அணிந்தே ஏழ்மை நிலைகொண்ட
தரும உருவே வருக!எலாம்
சாற்றல் எளிய அவ்வண்ணம்
சாதித் திடுதல் அரியஎனும்
சான்ற புலவன் உரைமறுத்துக்
கருமம் ஆற்றிப் பின்புசொலும்
காந்தி! வருக! வருகவே!
கருத்திற்கு இசைந்த கத்தூரி
கணவா! வருக! வருகவே! 4

சாதி சமயச் சண்டைஎனும்
சுழியில் பட்டுத் தடுமாறி,
சத்தி யத்தை அறமறந்து
தருக்கி, 'குலத்தால் பெரியோன்,நான்,
பேதை, சிறியன் நீ,பிறப்பில்'
என்னப் பிதற்றிப் பெரியாரைப்
பிழைப்பது அன்றிப் பொருளாலும்,
தொழிலால் பிறவால் பெருமைசொலும்
ஏதி லார்க்கும் இனியமொழி
இயம்பி, அவர்கள் கொள்கைஎலாம்
இருள்போல் ஏக, பேர்ஒளியை
எங்கும் பரப்பும் இணைஇல்லாய்!
காதல் கொண்டுஉன் அடிசேர்ந்தேன்;
காந்தி! வருக! வருகவே!
கருத்திற்கு இசைந்த கத்தூரி
கணவா! வருக! வருகவே! 7

சாந்தம் என்னும் பெருங்கடலில்
சத்யம் என்னும் தூண்நாட்டி,
தகைசால் பொறையை மத்தாக்கி,
தருமம் என்னும் நாண்போக்கி,
வாய்ந்த அவற்றின் இருமருங்கும்
மல்லல் மிக்க இந்து,முசல்-
-மான்கள் என்னும் இருவேறு
மதத்து ளாரும் வலிந்துஇழுக்க,
ஈந்த பயனாய் எழுந்தபெரும்
இன்பம் என்னும் ஆர்அமுதை
இறைமால் ஒப்பாய்! இவ்உலகில்
எல்லா உயிரும் உயஅருளிக்
காந்தம் எனவே அன்புஇழுக்கும்
காந்தி! வருக! வருகவே!
கருத்திற்கு இசைந்த கத்தூரி
கணவா! வருக! வருகவே! 8

ஞாலம் மதிக்கும் பெருங்கொள்கை
நாட்ட வருக! கதர்ப்பெருமை
நவில வருக! தீண்டாமை
நலிய வருக! ராட்டுஏந்தச்
சீல! வருக! ஐம்பாவம்
தேய வருக! சிறுதகையேன்
திருந்த வருக! தீமைஎலாம்
திறம்ப வருக! திருக்கருணை
சால வருக! தனிஆடை
தரிக்க வருக! சாந்தநிலை
ததும்ப வருக! தருக்குஅனைத்தும்
சாகவருக! தாரணிஇக்
காலம் உய்யப் பிறந்துஅருளும்
காந்தி! வருக! வருகவே!
கருத்திற்கு இசைந்த கத்தூரி
கணவா! வருக! வருகவே! 5

வள்ளால் வருக! பாரதத்தாய்
மைந்தா வருக! மண்முழுதும்
மதிக்க வாழும் மாண்புடைய
மணியே! வருக! மறுமைஎனும்
தள்ளாப் பொருள்ஒன்று உளதுஎன்னும்
தன்மை அறியாது, அறம்கொன்று
தாய்நாடு ஆளும் தனிஉரிமை
தகைசால் மக்கட்கு இல்லைஎன
எள்ளா எவர்க்கும் அதிபர்எனும்
இறுமாப்பு உற்று நனிஉழல்வோர்க்கு
இனிய உரைதந்து ஈடேற்ற
எண்ணும் பெரியோய் வருகவே!
கள்ளார் மகர்க்கும் அறிவுஅளிக்கும்
காந்தி! வருக! வருகவே!
கருத்திற்கு இசைந்த கத்தூரி
கணவா! வருக! வருகவே! 6

செந்நெல் விளையும் திருநாடு
செழிக்க, உலகம் தீநெறியில்
செல்லாது உய்ய, சிறுமைஎலாம்
சென்று தேய, அறம்தழைக்க,
மன்னர் செங்கோல் வழுவாது
மாண்பில் செல்ல, மதுஅருந்தும்
மடமை ஒழிய, மக்கள்தமை
மதியாது ஒதுக்கும் மருள்அகல,
இன்னல் நல்கும் சாதி,மத
இறுமாப்பு ஏக, என்அனையார்
இதயம் களிக்க விளையாட,
இம்மா நிலத்தில் பிறந்துஅருளும்
கன்னல் அனைய திருமொழிசேர்
காந்தி! வருக! வருகவே!
கருத்திற்கு இசைந்த கத்தூரி
கணவா! வருக! வருகவே! 9

## வேறு

அறம்மலி திருநாடு அவனியில் உயர
அணிபெற வருக! வருகவே!
அடியவர் உளமகிழ் தர,மொழி பகரும்
ஆண்தகை வருக! வருகவே!
மறம்அறப் பிறந்த வடித்துத் தெளித்த
மாண்குண வருக! வருகவே!
மன்அறம் நிலைபெற வகுத்துஇனிது அருளும்
வள்ளால் வருக! வருகவே!
உறுதியின் ஒப்புஉயர் ஒருவரும் இல்லா
உரவோய்! வருக! வருகவே!
உண்மை, பொறுமை, வீரம்,அஞ் சாமை
உறுதவ! வருக! வருகவே!
திறமையின் அளிமிகு செயல்செயும் அந்தணச்
சீல! வருக! வருகவே!
திண்மைகொள் அன்பர் மனத்துஉறை காந்திச்
செல்வா! வருக! வருகவே! 10

## 7. அம்புலிப் பருவம்

விண்உறையும் மாமதியே! மேதினிக்குக்
கைம்மாறு வேண்டாமல், வெண்மையான
மென்மைஉறு பால்அனைய நிலவுஎனும்நின்
மெய்ஒளியை, விரும்பிநனி ஈயும்மேலாம்
தண்ணளிமிக்கு உடையாய்நீ, எனஉலகம்
சாற்றிடுமால்; சத்தியமே சாரும்வாயும்
சாந்தநிறை திருமனமும் சகத்திலுள
தண்ணளிகள் எல்லாம்ஓர் உருஎடுத்து
மண்ணுலகம் நனிவாழ, மழைஎனவே
அருள்ஒழுக, மாண்ஆடை ஒன்றுஉடுத்து,
வருகாந்தி அடிகள்எனும் வள்ளல்அளி
யோடுஉன்தன் வளர்அளியை ஆயவேண்டும்;
அண்ணல்நிகர் இல்லாத அருமைமிகு
காந்தியினோடு அம்புலீஇ ஆடவாவே!
அன்பதனால் உலகுஆளும் ஐயன்,உயர்
காந்தியினோடு அம்புலீஇ ஆடவாவே! 1

மக்கள்உயர் வழிபற்றிக் கொலைஆதி
பாதகத்துள் மன்னுமல் வாழவைத்தல்
மரபுஆகும் பெரியோர்க்கு;அவ் வழிபார்க்கின்,
காந்திஎனும் மாதவனின் மாண்புநோக்கின்,
ஒக்கமுழு வதும்அன்னான் ஒளிமுன்னர்,
கொலை,களவு, கள்,காம மோடு,பொய்யும்
ஓடிடும்;ஈது உலகுஅறிந்தது ஒன்றேகாண்!
உம்பர்உறை உன்தோற்றத்து உறுவதுஅந்தோ!
அக்கம்ஒரு மூன்றுஉடையான் காய்ந்தவன்என்று
அவனிசொலும் அருவமதாய் நின்றமாரன்
அணிவிழவே! ஆதலினால் அவன்ஆடான்
உடன்,என்றே ஐயம்நீ கொள்ளவேண்டாம்;
அக்கணமே உனைப்புனிதம் ஆக்கிஉடன்
ஆடிடுவான்; அம்புலீஇ ஆடவாவே!
அன்பதனால் உலகுஆளும் ஐயன்உயர்
காந்தியினோடு அம்புலீஇ ஆடவாவே! 2

'நாம்விண்ணில் உறைகின்றோம்; அவன்மண்ணில்
உறைகின்றான்; நாம்அவனோடு ஆடநேரல்
நம்பெருமைக்கு அழகுஅன்று'என்று எண்ணுவையோ!
மாமதியே! நன்றுநினது எண்ணம்;நீதான்
போம்நாட்டில் யாண்டுஇல்லைப் புண்ணியனின்
புகழ்;உண்மை புவிஅறியப் புகலுவாயே!
புந்திவிரிவு இல்லாமல் இல்அன்றிப்
பிறிதுஅறியார் போன்றவன்நீ அல்லையோ!
தாம்அதிகம் உலகில்எனத் தருக்கோடு
வாழ்ந்திடுவார் தாங்களுமே பெரியர்என்னச்
சாற்றியதன்று யாரை?அவர் யாண்டுஉறைந்தால்
என்னகுறை? தக்கவர்பார்த்து அடைதலேமேல்
ஆம்என்பர் அறிவுள்ளார்; ஆதலினால்
தாழாமல் அம்புலீஇ ஆடவாவே!
அன்பதனால் உலகுஆளும் ஐயன்,உயர்
காந்தியினோடு அம்புலீஇ ஆடவாவே! 3

திங்களோ! உனைஅரவம் தீண்டிவருத்-
-திடுதுயரைத் தீர்த்துஉய்ய எண்ணம்உண்டேல்,
சென்றுஉலகம் எங்கும்தி ரிந்தாலும்
ஆகாது; செப்பிடுவேன் அதற்குஉபாயம்;
எங்கள்உயர் நாயகன்!இவ் இரும்புவியில்
ஈடில்லான்! எல்லாம்பொ றுக்கும்எம்மான்!
இடர்அகலச் சபர்மதியில் எழுந்தருளி,
இனிதுஇருக்கும் இணையில்சீர் கொண்டஎந்தை!
பொங்குதிருக் கமலமலர் போதர,இப்
பழிதீரும்: புயங்கன்அவன் அன்பன்;அன்னான்
புயத்தினொடு மடிதனினும் ஏறிவிளை
யாடுகதை புவிஅறியும்; ஆதலாலே,
அங்கண்வந்து இன்புபெற அண்ணல்எம்
காந்தியினோடு அம்புலீஇ ஆடவாவே!
அன்பதனால் உலகுஆளும் ஐயன்,உயர்
காந்தியினோடு அம்புலீஇ ஆடவாவே! 4

நீகலைகள் ஈர்எட்டே தாம்உடையாய்!
நேயன்அவன் நெய்தஒற்றைக் கலையொடுஎண்ணில்
நேரான பல்கலைகள் தாம்உடையான்;
நினக்குமறு உண்டு;அன்னான் மறுவிலாதான்;
வாகுஉடைய மழைமறைத்தால் ஒளிகுறைவாய்;
அவன்ஒளியை வலிகொண்டு மறைக்கவல்லார்
மண்ணகத்தும் வானகத்தும் யாண்டும்இலை;
மாமதியே! நீநாளும் வரிசையாகத்
தேகம்தான் தேய்ந்துஅழிவாய்; ஒளிகுறைவாய்;
பின்மிகுவாய்; திண்மைநிறை எங்கள்ஐயன்,
சீரான நிறைவுள்ளான்; நின்தோற்றம்
இரவில்தான்; சீலன்ஒளி இறையும்நீங்காது,
ஆகஉளது; ஆதலினால் அப்பெரிய
அண்ணலினோடு அம்புலீஇ ஆடவாவே!
அன்பதனால் உலகுஆளும் ஐயன்உயர்
காந்தியினோடு அம்புலீஇ ஆடவாவே! 5

சத்தியத்தை, தருமத்தை, சாந்தத்தை,
தைரியத்தை, தனிப்பொறையை, கருணைதன்னைச்
சத்யாக்கி ரகம்என்னும் தரணிபுகழ்
இயக்கத்தின் தத்துவத்தை, சாற்றிஅன்பாய்க்
கத்தர்உடை உதவிடுவான்; கட்டிமகிழ்வு
எய்திடலாம்; கணக்கிட்டு உரைக்கஒண்ணாக்
கண்ணியமி குந்ததது; கைராட்டு
நூல்கொண்டு கைத்தறியில் நெய்ததாமால்;
நத்திஉனை நனிஏற்று, நாடுஅறிந்த
நின்களங்கம் நலிந்துஓட, ஞானம்எய்த,
நாட்டம்அது வைத்திடுவான், எம்காந்தி;
அன்னவனை நாடிவர, நல்ஒழுக்கம்
அத்தனையும் எய்திடலாம்; ஆதலினால்
அன்னோனோடு அம்புலீஇ ஆடவாவே!
அன்பதனால் உலகுஆளும் ஐயன்,உயர்
காந்தியினோடு அம்புலீஇ ஆடவாவே! 6

ஒழுக்கமது விழுப்பத்தைத் தருதலினல்
அவ்வொழுக்கம் உயிரதினினும் உயர்ந்ததாக
ஓம்புதகை மிக்கதுஎன உரைத்ததிரு
வள்ளுவனர் உண்மைஉரை கொண்டுசெய்கை
இழைத்தவருள் இணையில்லை ஏஞேர்என்று
எடுத்துஏத்தும் ஏதமிலா எந்தைஎம்மான்;
இன்னத எண்ணுதான்; மறுமாதர்
இன்முகத்தை எந்நாளும் நோக்கிலாத
விழுப்பம்உளான், எம்காந்தி; மேனுள் நீ
குருமனையை விழைந்து,அல்லல் உற்றைஎன்ப;
மேதகவோன் முனிவானே எனஅஞ்சி,
விளையாடல் ஒழியாமல் மேவுவாயே!
அழுத்தம்உற மதிபுகல்வான்; முனிவுஅறியான்;
ஆதலினல் அம்புலீஇ ஆடவாவே!
அன்பதனல் உலகுஆளும் ஐயன்,உயர்
காந்தியினேடு அம்புலீஇ ஆடவாவே! 7

மறைபுகலும் நெறிஅதனை வடிகட்டி,
இனிதுஎடுத்து, மண்உலக மாந்தர்உய்ய,
மாண்புமிகும் அறநெறியை மாசில்லா
ஒழுக்கத்தை, மன்னத உடலைநோக்கிப்
பறையர்என ஒருசாரார் பரிதவிக்க
ஒதுக்குகின்ற பாதகம்,மாள் வழியை,இப்
பாராளும் உரிமைஇந் நாட்டார்க்கே
உளதுஎனும் பண்பை,கட் குடிவிலக்கை,
அறைகூவும் மாண்புசெறி அருட்கடலைக்
குணக்குன்றை, அடியாரின் மனத்தகத்தில்
அணிபெறவீற்று இருந்தருளும் அண்ணலை,இந்
நிலையில்லா அரசியலின் வாதிஎன்னல்
அறியாமை! அறியாமை! ஆதலினல்
அஞ்சாமல் அம்புலீஇ ஆடவாவே!
அன்பதனல் உலகுஆளும் ஐயன்,உயர்
காந்தியினேடு அம்புலீஇ ஆடவாவே! 8

இழைஆயி ரம்பெற்ற எழில்ஆடை
பண்டைநாள் ஈன்றுபெரு மிதம்அடைந்த
இணையில்சீர் சேர்நம்நாடு இன்றுஆடை
ஏதும்இலாது இரங்கிப்பல் இன்னல்உற்று,
தழைஆடை யாக்கொண்டு, தருமநெறி
அறியாது, தருசூழும் கானகத்தில்
தாய்த்திரியும் விலங்குகள்போல் சஞ்சரித்தே,
இந்நாளில் தருக்குஆதி கொண்டுசீறும்
குழையாத பிறநாட்டை, உடல்மறைக்க
எதிர்பார்த்தல் குற்றம்;அதனுல்உயர்ந்த
கோதுஇல்லாக் கதர்ஆடை குவலயத்தே
பெருக்கும்எனக் கூறும்,எழில் கூர்ஜரம்வாழ்
அழையாமல் அவனிக்கே அருள்புரியும்
அண்ணலினேடு அம்புலீஇ ஆடவாவே!
அன்பதனுல் உலகுஆளும் ஐயன்,உயர்
காந்தியினேடு அம்புலீஇ ஆடவாவே! 9

இழுக்காக அடிமைஎனும் படுகுழியில்
வீழ்த்துவது, எழில்ஆடை கொண்டு,தேச
இரும்பொருளைப் பிறநாட்டுக்கு அனுப்புதலே;
ஆதலினுல் இஃதுஓர்ந்து நமதுமக்கள்
பிழைக்கவழி கதர்ஆடை பேணுதலே
ஆகும்,எனப் பிறங்கிடவே மொழிந்தபின்னும்
பெருமைமிகு நாட்டிற்காப் பிறபலசெய்-
யாவிடினும் பீடுபெறு கதர்உடுத்தும்
ஒழுக்கத்தைக் கொள்ளாதார் மனம்திருந்த
வேண்டுமென, ஒப்பற்ற பொருளைநாடி
உறுதவமே செய்கின்ற ஒண்புகழான்;
தண்ணளியான்; ஒன்னலர்என்று எவரும்இல்லான்;
அழுக்காறு, அவா,வெகுளி, இன்னுச்சொல்
இல்லானேடு அம்புலீஇ ஆடவாவே!
அன்பதனுல் உலகுஆளும் ஐயன்,உயர்
காந்தியினேடு அம்புலீஇ ஆடவாவே! 10

## 8. சிற்றில் பருவம்

குற்றம் புரிந்தாய் நீஎன்னக்
கொண்டு, நீதித் தலத்திட்டு,
'கூறு வாக்கு மூலம்'எனக்
கோணுது உள்ளம் பெருங்கதையாய்ச்
செற்றம் இன்றி நீமொழிந்த
திருவா சகத்தின் சுருக்கத்திண்
செய்தி தன்னைச் சிறுதகையேன்
செப்ப விழைந்தேன் இத்தமிழில்;
" இற்றை அரசாங் கத்துடனே
இனிய அன்பு கொண்டிருந்த
என்தன் உள்ளம் மாறியதற்கு
ஏற்ற அதனை எல்லோரும்
தெற்றென்று அறிய உரைப்பன்"எனும்
தீரா! சிற்றில் சிதையேலே!
சிறியேன் உள்ளத்து அமர்காந்தித்
தேவா! சிற்றில் சிதையேலே! 1

"தென்ஆப் பிரிக்கா சென்று,அங்கு
சிறுமை உற்ற இந்தியரைத்
தேற்ற எண்ணிச் செயல்புரிந்து
செகத்தில் பிறந்த எவரும்அடை
மன்னு உரிமை இந்தியனுய்
வந்த அரிய காரணத்தால்
மறுக்கப் பட்டேன்; அதுகொண்டு
மயங்காது அந்த ;க
இன்னுப் பழுதாம் இந்தியரை
இவ்வாறு இகழ்தல் எனஇதயத்து
எண்ணி அவரோடு ஒத்துஉழைத்தேன்"
என்ன மொழிந்த எம்மானே!
தென்னுர் காந்தி! புத்திரிபாய்
சிறுவா! சிற்றில் சிதையேலே!
சிறியேன் உள்ளத்து அமர்காந்தித்
தேவா! சிற்றில் சிதையேலே! 2

"போயர் அமர்க்குப் படைதிரட்டிப்
பிறங்கக் கொடுத்தேன்; ஜூலுஎன்போர்
புரட்சிக்கு உதவி நனிபுரிந்தேன்;
புகழ்ந்தார் அந்த ஆப்பிரிக்கா
ஆய தீவை அரசுஆள்வோர்
அறிக்கை அதனால் அந்நாளில்;
அரசப் பிரதி நிதிஎன்பார்
அளித்தார் பொன்னின் பதக்கம்அதை;
மேய ஜெர்மன் பெரும்போர்க்கு
விரும்பிப் படையைச் சேர்த்துஅளித்தேன்;
விழைந்துஇவ் ஆறு உதவிசெய்தால்
மேன்மை பெறலாம்" என்றுஎன்று
தேயம் மதிக்க உரைசெய்த
செல்வா! சிற்றில் சிதையேலே!
சிறியேன் உள்ளத்து அமர்காந்தித்
தேவா! சிற்றில் சிதையேலே! 3

"நன்று கிடைக்கும் என்றுஎண்ணி,
நான்இவ் வாறு உதவிசெய
நாவை அடைக்கும் பெரும்பூட்டாய்
நவிலும் ரௌலட் சட்டம்அது
மன்றம் ஏறி வந்தது;அந்த
மறத்தைப் போக்க ஓர்இயக்கம்
வகுக்க வேண்டி யானது;பின்
மாபாஞ் சாலம் தனில்அந்தோ!
கொன்று மலையாக் குவித்தபெரும்
கொடிய கொலையும் தோன்றியதால்;
குருவைக் காக்கத் துருக்கர்க்குக்
கொடுத்த வாக்கைக் காக்காமல்
தின்று விட்டார் மந்த்ரி;"எனும்
தீரா! சிற்றில் சிதையேலே!
சிறியேன் உள்ளத்து அமர்காந்தித்
தேவா! சிற்றில் சிதையேலே! 4

"இன்ன செய்கை கண்டபினும்
எதிர்க்க உள்ளத்து எண்ணாமல்
எந்தன் உயிரின் துணைவர்பலர்
இயம்பும் மொழியும் கொள்ளாமல்
பின்னும் ஒத்தே உழைக்கஎனப்
பேசி, தந்த திருத்தத்தைப்
பெரிய தேச சபைமுன்னர்ப்
பெற்றுக் கொளமன் றாடினன்;அப்
பன்னற்கு அரிய பாஞ்சாலப்
பழிக்கும் முஸ்லீம் குருவுக்கும்
பரிகா ரங்கள் கிடைக்கும்எனும்
பண்பைக் கொண்டே" எனமொழிந்த
சென்னி உலகுக்கு எனத்திகழும்
திருவே! சிற்றில் சிதையேலே!
சிறியேன் உள்ளத்து அமர்காந்தித்
தேவா! சிற்றில் சிதையேலே! 5

"நீள்பாஞ் சாலப் படுகொலைக்கு
நீதி ஏதும் கண்டிலேன்;
நீக்கம் பெறவும் பெற்றிலராய்
நிற்கின் றார்அன் னார்சிலவர்;
மூளும் காதல் கொடுசிலர்க்கு
முன்னிப் பரிசும் ஈகின்றார்;
மொழிபொய்த் ததற்கும் ஒன்றும்இலை,
முடித்துக் கொடுத்த சீர்திருத்தம்
வாளா அன்றி மற்றுஇல்லை;
வறுமைப் பிணியால் வாட்டம்உறும்
மக்கள் உய்ய வழிஇல்லை;
மனத்துள் கொண்டேன் இவை"எனும்புத்-
தேளிர் பரவும் திருநாட்டுச்
செல்வா! சிற்றில்சிதையேலே!
சிறியேன் உள்ளத்து அமர்காந்தித்
தேவா! சிற்றில் சிதையேலே! 6

"இந்தயர் எய்தும் துயர்தன்னை
எடுத்துப் புகல்வோர் எல்லோரும்
ஏதம் சாரும் சிறைஎய்தி
இன்னல் ஏற்றங்கு உறைவதையும்
நொந்து துன்பம் அடைவதையும்
நோக்கி, அவரோடு ஒத்துழையா
நுவலர்க்கு அரிய கருணைசெறி
நோன்மை மக்கள் எளிதாகச்
சிந்தை கொள்ளத் தந்தனனல்;
சீற்றம் இறைபால் என்தனக்குச்
சிறிதும் இல்லை" எனமொழித்த
செம்மை மிக்க சீர்நம்பி!
செந்தா மரையாள் திகழ்நாட்டுச்
செல்வா! சிற்றில் சிதையேலே!
சிறியேன் உள்ளத்து அமர்காந்தித்
தேவா! சிற்றில் சிதையேலே! 7

"ஆன இந்த அரசாட்சி
அடியேன் கொள்ளேன்; அதில்வெறுப்பை
அடைதல் மேலாம் குணம்என்ன
அணிந்தேன்; ஆண்மை தனைஅழிக்கும்
ஈனம் கொண்ட ஆட்சியதை
ஏற்றல் பாபம் எனஉணர்ந்தேன்;
இழிக்கும் தீதோடு உறவாடேன்;
எழிலார் நன்மை பற்றுங்கால்
நானே அடைவேன் எதுவரினும்;
நன்கு பொறுப்பேன் துயரைஎலாம்;
நலிய மாட்டேன்; எற்குஇவையே
நல்ல கடமை" எனநவின்ற
தேனே ஒழுகு திண்மைசெறி
தீரா! சிற்றில் சிதையேலே!
சிறியேன் உள்ளத்து அமர்காந்தித்
தேவா! சிற்றில் சிதையேலே! 8

"கடமை யாக நான்கொண்ட
காரி யத்தைக் குற்றம்எனக்
கணிக்கும் சட்டம் தனைஅறிந்தே
கருதும் தண்டம் தனைஏற்க
அடைந்தேன், ஈண்டு;அச் சட்டமுறை
அதுவே ஒழுங்குஎன்று அகம்கொண்டால்
ஆற்றத் தண்டித் திடுக!அன்றி
அடியேன் செயலை இனிதுஓர்ந்து
கொடுமை சட்டம் என்னுடைய
கொள்கை சரிஎன்று அறிவீரேல்
கோது பொருந்தும் நும்பதவி
கொள்ளாது இன்றே விடுக"எனத்
திடமாய் நீதி பதிமுன்உரை
செல்வா! சிற்றில் சிதையேலே!
சிறியேன் உள்ளத்து அமர்காந்தித்
தேவா! சிற்றில் சிதையேலே! 9

நியாயம் வகுக்கும் அதிபதிஅந்-
-நாள்நிற் பார்த்தே, "என்முன்னர்
நின்னை அனைய தகுதியுளார்
நின்றது இல்லை, இதுகாறும்;
அயா!உனைப்போல் இனிமேலும்
அடையப் போவது இல்லை;உனை
அறிவேன் நன்றாய்; நீஉரைக்கும்
அஹிம்சை ஆதி அறத்தை"என
வயாவோடு உரைத்துப் பற்பல்புகழ்
வழுத்தப் பெற்றாய் என்றால்உன்
மாட்சி உரைக்க வல்லேன்இம்
மதியில் ஏழைச் சிறியேனோ?
தியாக உருவே! அன்புசெறி
தீரா! சிற்றில் சிதையேலே!
சிறியேன் உள்ளத்து அமர்காந்தித்
தேவா! சிற்றில் சிதையேலே! 10

## 9. சிறுபறைப் பருவம்

தென்ஆப்பி ரிக்காவில் நின்செயற்குத் துணைநின்ற
சீலமிகு கின்ற எங்கள்
திருமலிய அறம்வளர்த்த பலபெரியோர் அவதரித்த
சீர்த்தியுடைத் தமிழ்பி றந்த
தென்னாட்டு நாகப்பன், வள்ளியம்மை, சீர்நாரா-
-யணன்இவர்கள் செய்கை தன்னைச்
செகம்அறியப் பலப்பலகால் செப்பிமகிழ் உத்தமனே!
சிறந்ததமிழ் மொழியில் அந்நாள்
எந்நாடும் எம்மதமும் எம்மொழியும் எம்மனித-
-ரும், என்றும் இதயம்ஏந்த
இனிதுஅறத்தை வகுத்துஅருளும் எம்திருவள் ளுவர்குறள்கட்கு
இலக்காகி ஈண்டு வந்த
செந்நாவாய்! உண்மையினில் ஜெகத்குருவே! சீர்க்காந்தி!
சிறுபறை முழக்கி அருளே!
செல்வக்க ரம்சந்த்ரர் புத்திரிபாய் திருமகனே!
சிறுபறை முழக்கி அருளே! 1

சீர்மலியும் தமிழ்நாட்டில் திருமலியும் தனவணிகர்
தெருமலிய அறம்வ ளர்க்கும்
சீர்த்திமலி வளப்பாண்டி மண்டலத்தில் திகழ்காரைக்
-குடிஎன்னும் சீர்ப்ப திதனில்
நார்மலிய, பொறைமலிய, நல்உண்மை தாம்மலிய,
நண்ணும்அறம் ஆதி யாவும்
நனிமலிய, உரைபகர்நாள், "நாட்டுஅன்பு சிறிதுஇன்றி
நண்ணுதார் நாடு நன்றாய்
ஏர்மலியப் பொருள்ஈந்தே இழுக்குஉடைய மகஉணவை
ஈந்துமகார் வளர்த்தல் தன்னில்
இறந்துபட விடுதல்மேல்" என்அன்பால் உரைவிரித்த
எழில்மலியும் காந்தி என்னும்
தேர்மலியும் திருவீதித் தென்னாட்டார் திருஉளமே!
சிறுபறை முழக்கி அருளே!
செல்வக்க ரம்சந்த்ரர் புத்திரிபாய் திருமகனே!
சிறுபறை முழக்கி அருளே! 2

பொன்புரையும் திருமேனி பொன்றப்புன் சிறைபுக்க
போதும்,ஒரு துயரும் இன்றிப்
பொருமிஅழுது உளம்நொந்த புண்ணியஇத் திருநாட்டுப்
புதல்வர்தமை இனிது நோக்கி,
அன்புஉரையால் கதர்கதர்என்று அறைந்து,ஏகி அணிபெறவீற்று
இருந்தருளும் அறக்கொ ழுந்தே!
"அடியேனின் இப்பிறப்பின் பயன்,கதரைப் பெருக்குதலே
ஆகும்"எனும் அண்ணல் ஏறே!
"மன்பெரிய பயன்அடையும் நூல்பயிலல் அதனினும்யான்
மாராட்டின் நூலை நூற்றல்
மாண்புஎனவே மதிக்கின்றேன்" என்றுஉரைக்கும் மாமணியே!
மாநாடு வாழ வந்தோய்!
தென்பொதியும் திருநாட்டில் திகழ்காந்திச் செம்மலே!
சிறுபறை முழக்கி அருளே!
செல்வக்க ரம்சந்த்ரர் புத்திரிபாய் திருமகனே!
சிறுபறை முழக்கி அருளே! 3

ஊன்ஒடுக்கி ஒளிபெருக்கும் உத்தமன்என்று உலகுபுகழ்
ஒருவன்உளன் உலகில் ஆனால்
உனைஅன்றி வேறுஇல்லை; உன்உணவின் அருமையினை,
ஒண்புகழாம் ஒளியை ஓர்ந்து
நான்அடுக்கி நவிலுதற்கு வல்லவனோ? நாப்பலபெற்-
-றாலும்அவை நண்ணல் ஆமோ?
நாகரிகம் என்றுஇந்நாள் நனிஆடை பலசுமந்து
நண்ணும்அவர் நாண, அன்பாய்
வான்உடுக்கும் புகழ்கொண்ட மாண்புசெறி ஒருசிறிய
கதர்உடுத்தும் வள்ள லே!இம்
மண்மதிக்கும் தனிப்பெரிய மகத்சப்தம் இனிதுஏற்ற
வண்மைமிகு காந்தி மன்னா!
தேன்அடுக்கும் மலர்ப்பொழில்சூழ் திருப்பழன நாட்டவனே!
சிறுபறை முழக்கி அருளே!
செல்வக்க ரம்சந்த்ரர் புத்திரிபாய் திருமகனே!
சிறுபறை முழக்கி அருளே! 4

ஐம்பெரிய பாதகத்துள் மதுஅருந்தல் ஒன்றுஎனவே
அறம்சொன்ன புலவன் அந்நாள்
அறைந்தஅதை மனம்கொண்டே, அவ்வினையால் மக்கள்பலர்
அழிந்துசெயல் இன்றி அந்தோ!
தம்பம்எனத் தெருக்கிடக்கச் சாற்றரிய இவ்இழிவாம்
தன்மையால், தார மோடு
தனயரெலாம் தரித்திரத்தை நனிஏற்றுத் தளர்ந்துபல
தாங்கஒண்ணாத் துன்பம் எய்தி,
வெம்ப,இவை உள்ளம்அதில் விரைந்துஎணிஇந் நாட்டுஅறிவு
மேவியிட வேண்டு மானல்,
விரும்பஒண்ணா இக்கள்ளை விட்டுவிட வேண்டுமென
விதியினொடு சேர்த்துஅ மைத்த
செம்பதுமத் திருமகிழச் செயல்புரிகாந் திச்செம்மல்!
சிறுபறை முழக்கி அருளே!
செல்வக்க ரம்சந்த்ரர் புத்திரியாய் திருமகனே!
சிறுபறை முழக்கி அருளே! 5

"தக்கதகா தனஓர்ந்து தருமத்தின் வழிச்சென்று
தாரணிஎந் நாளும் வாழத்
தகுகடமை தனைஆற்றிச் சாற்றரிய இன்பநிலை
சாருதலே தலத்து வந்த
மக்கள்உயர் கடன்;அதற்கு மாசற்ற அறிவுதரு
மாண்புடைக் கல்வி வேண்டும்;
வாழும்முறை பயிற்ருத, சீலம்ஒரு சிறிதும்இலா
வல்அடிமை கொளப்ப யிற்றும்
மிக்கவர்வேறு இல்லைஎன விளம்பு,தகை மேவா,மேல்
வீடுஅடைய அறிவி யாத
வெறும்கல்வி பயன்இல்லை; வேண்டாம்அப் பள்ளிதனை
விட்டு,இன்னே விலகும்" என்ற
செக்கர்நிறப் பொன்மேனிச் செகம்புகழ்காந் திப்பெரியோய்!
சிறுபறை முழக்கி அருளே!
செல்வக் ரம்சந்த்ரர், புத்திரியாய் திருமகனே!
சிறுபறை முழக்கி அருளே! 6

## வேறு

சட்டச பைகளில் சார்வதில்
பயனிலை; சார்ந்துஅவண் செய்வதெவன்?
சான்றோர் அங்குஇலை; சனநலம்
எனச்சில சாதித் திடினும்அவர்
இட்டப் படிசெய எல்லா
உரிமையும் ஏற்றிருக் கும்பொழுதில்
என்செய வல்லீர்? அங்குசென்று
அந்தோ! ஏன்இவ் இடர்ப்பாடு?
திட்டம் உடன்பிற செயல்புரி
வதில்நாள் செலவிட் டால்தேசம்
செழிக்கும்; பயன்தரு செயல்செயும்;
வீணே சென்றுஉயர் குன்றுஅதனில்
முட்டிய குரீஇஎன மொய்ம்பழி-
யீர்,என முழக்குக சிறுபறையே!
மோகன தாஸ்கரம் சந்திர
காந்தி! முழக்குக சிறுபறையே! 7

பாரில் பாதகத் தொழில்எது
என்னின், பள்ளியில் பயில்சிறிய
பச்சைக் குழந்தையும் பகரும்,
பொருளைப் பகற்கொளை அடிப்பதுபோல்
நேரில் பறித்துஉண் நியாய
வாதியாம் நெறியில் தொழில்,என்றே;
நின்றுஅவ் வினையால் பாதகப்
பொய்க்கு நெஞ்சத்து அச்சம்இலா
நார்இல் மக்கள் நலம்பெற்று
உய்ய, நாடுசெ ழித்தோங்க,
நல்லன மலிய, அல்லன
நலிய, நல்அறிவு எங்குமிக
ஊரிப் பெரிய முளரிக்
கையால் முழக்குக சிறுபறையே!
மோகன தாஸ்கரம் சந்திர-
காந்தி! முழக்குக சிறுபறையே! 8

பண்டுஇந் நாட்டில் பஞ்சா
யத்துஎனப் பண்புள்ள மக்கள்தமைப்
பார்த்துஊர் தோறும் அமைத்தனர்;
அவரும் பாங்காய் வழக்குகளை
விண்டுஅற நெறியே விளக்கினர்;
அன்னூர் மிகுதுலை நாஅன்ன
மேதகு நடுநிலை தவறு
வாய்மையர்; மேவும்இந் நாள்நிலையை
மண்டலம் அறியும்; வாயால்
கூறினும் மாசே மாசுஎனவே
மதிமிக உடைய வள்ளால்!
கருணை மாபெரு வாரிதியை
மொண்டே பொழியும் மொய்ம்புடை
மழையே! முழக்குக சிறுபறையே!
மோகன தாஸ்கரம் சந்திர
காந்தி! முழக்குக சிறுபறையே! 9

கதிஅடை பவர்போல் களிப்பொடு
வீணே கண்ணியம் எனக்கொடுக்கும்
கருதின பொருள்எதும் இல்லா
எழுத்தின் கணமாம் பட்டம்அதை
நிதிஎன ஏற்பதில் பயனெதும்
இல்லை; நிந்தனை ஒடுநம்மை
நினைப்பரும் இடரில் அழுத்திடும்
அவரொடு நேர்ந்துஉற வாடிடுதல்
மதிஅல! மான வாழ்க்கையை
எண்ணி, வாழுதல் மேல்அன்றி
மானம் துரந்தும் பட்டம்
தாங்குதல் மரபுஅல; எனும்உயர்ந்த
முதுபுல வோர்கள் மொழிகளை
ஓதி முழக்குக சிறுபறையே!
மோகன தாஸ்கரம் சந்திர
காந்தி! முழக்குக சிறுபறையே! 10

## 10. சிறு தேர்ப்பருவம்

இந்துமுசல் மான்வேற்று மைஎன்னும் கொடியபிணி
இறந்துபட்டு ஓட இந்த
இணையில்சீர்த் திருநாட்டில் பிறநாட்டின் ஆடையெலாம்
எரிக்குஇரைய தாகி வீழப்
புந்தியில்லாக் கள்அருந்தும் புன்செய்கை அகன்றுஓட,
பிள்ளைகளை அடிமை ஆக்கும்
பெரும்பள்ளிக் கூடங்கள் பெருமைஇழந்து ஒழிய,நெறி
பேசா வழக்கு மன்றம்
முந்திஅழிவு எய்திட, மொய்சட்ட சபைவைத்த
மோகம் பறந்து மாள,
மொய்ம்போடு பொருளும்இலா வீண்பட்ட ஆசைகள்
மோதுபெற்று ஓடி ஒழியச்
சிந்தைநிறை அறியாமை சிதறுண்டு சென்றுஉருளச்
சிறுதேர் உருட்டி அருளே!
செகத்தில்உயர் தனிக்காந்தி! திகிரிபுனை செங்கையால்
சிறுதேர் உருட்டி அருளே! 1

இந்துமுக மதியர்எனும் இருவேறு மதத்தில்உறை
யாவரும் ஒன்று பட்டே
ஏதில்லார் தம்தீதை மோதி,உயர்வு எய்தாமல்
இவர்க்குளே மாறு பட்டால்
வந்தபெரும் துன்பங்கள் மாளாஎனும்உண்மை
மனத்துளே கொண்டுஎ நாளும்
மாறுமல் இவ்ஒற்று மைநாடி மாற்றம்உரை
வள்ளலே! மாண்கு ணத்தோய்!
எந்தஉயி ரும்நோவ இறையும்பொ றுக்காத
இணையிலாக் கருணை மூர்த்தி!
எதுவரினும் அஞ்சா இருமலையே! பொறுமையாம்
எழில்உடைத் தீம்செ ழுந்தேன்
சிந்துதிரு வாய்ச்செம்மல்! செயல்வல்ல சீர்க்காந்தி!
சிறுதேர் உருட்டி அருளே!
செகத்தில்உயர் தனிக்காந்தி! திகிரிபுனை செங்கையால்
சிறுதேர் உருட்டி அருளே! 2

வள்ளுவரும் நீயும்பல் வகையினுல் ஒப்புஎன்ன
வகுக்கலாம்; அந்த ஞான
வள்ளல்உயர் நெய்தொழிலின் மாண்புஅறிந்து கைக்கொண்டார்,
நீயும்அத் தொழிலை ஏற்ருய்;
எள்ளுகுணம் இல்லாத மனைவிஉளார் அவர்;அதினும்
இம்மியும் தாழ்வு ருத
எழில்மனையை நீஉடையாய்; அவர்,அந்நாள் மக்கள்உய
ஏதம்இலா அறம்உ ரைத்தார்;
தள்ளரிய அவ்அறத்தைத் தாழாமல் இற்றைநாள்
தகவுஅறிந்து இனிது நீயும்
சாற்றுகின்ருய்; ஆதலினுல் தகுதிஉடை நீ,எங்கள்
தண்மையோடு இனிமை சாரும்
தெள்ளுதமிழ் வள்ளுவனுர் திருவரவுஎன்று இயம்பிடலாம்;
சிறுதேர் உருட்டி அருளே!
செகத்தில்உயர் தனிக்காந்தி! திகிரிபுனை செங்கையால்
சிறுதேர் உருட்டி அருளே! 3

'நின்னுடைய தொழில்எது'என்று அறைந்தபொழுது அண்ணல்! நீ
நெய்தல்,விவ சாயம் என்றும்,
'நீஎந்தக் குலம்'என்ன வினவ,'குடி யானவன்நான்'
என்றுமே நேர்மை யோடு
சொன்னமொழி கண்டும்வீண் சோம்பேறி ஆனபலர்
தூய்மைசேர் ஞானம் இன்றித்
தொழில்ஒன்றை ஆற்றித்தொல் பிறப்பதனுல் சாதிசொலும்
தூசுநீங் கிடுவது என்றோ?
என்னபொருள் ஒன்றுஇயற்றி மற்ருென்றன் பெயர்குறித்தற்கு
என்பதை அறிந்தி லேனுல்;
ஏன்இந்த அறியாமை! இதுசாக எழில்இறைவன்
என்றுஉளம் கொள்ளு வானே!
சென்னிமிசை நின்சரண கமலமலர் சேர்த்தினேஎன்
சிறுதேர் உருட்டி அருளே!
செகத்தில் உயர் தனிக்காந்தி! திகிரிபுனை செங்கையால்
சிறுதேர் உருட்டி அருளே! 4

பொன்மணக்கத் திருவீதி புகழ்மணக்க வான்அளவும்
பொருவிலா அறங்கள் எல்லாம்
புவிமணக்கச் சைவநெறி பொலிவுஎய்தி மிகமணக்கப்
புகலரும் சீர்த்தி போதம்
நன்மணக்க வாழ்ந்துஅந்நாள் நல்தனவை சியர்எனப்பேர்
நவிலவே இனிதுஉ றைந்த
நல்லதொரு சமூகத்தின் நவைகளைந்து பழம்பெருமை
நாட்டவே ஞாலம் வந்த
எல்மணக்க நெறிமணக்கும் எழில்காரைத் தனவைசிய
ஊழியர் சங்கம் அன்போடு
இனிதுஅளித்த பத்திரத்தில் நின்பெயரை உளம்கொண்டால்
எய்தலாம் சாந்தம் என்று
தென்மணக்க உரைத்தமொழி திறம்பாத வாய்மையே!
சிறுதேர் உருட்டி அருளே!
செகத்தில்உயர் தனிக்காந்தி! திகிரிபுனை செய்கையால்
சிறுதேர் உருட்டி அருளே! 5

## வேறு

பால்மதி அரவம் சூடிய
உமையாள் பதிபர மேசுரனும்,
பச்சை நிறம்திகழ் இலக்குமி
கொழுநன் பாற்கடல் உறைவோனும்,
மான்விழி மங்கை வெண்தா-
மரையாள் மகிழ்நனும், அசுரர்களின்
வாழ்வு தொலைத்த வள்ளிம-
-ணாள வள்ளலும், வான்ஆளும்
தேன்சொரி தருவின் இனிதுஉறை
செல்வத் தேவர்க்கு இறையவனும்,
தினமும் விரும்பும் திருவாழ்
நாட்டில் செனித்துப் புகழ்படைத்தோய்!
ஊன்வழி அறியா உண்மைக்
காந்தி! உருட்டுக சிறுதேரே!
ஒப்புஉயர்வு இல்லா உத்தமர்
ஏறே! உருட்டுக சிறுதேரே! 6

இந்நில மாந்தர் இன்புற்று
உயர, எழில்மட வார்எல்லாம்
ஏந்தக் கற்பை, ஏழை
அடிமை எவ்உல கத்தும்இன்றி,
தன்அரசு ஓங்கித் தாரணி
வாழத் தருக்கா தீயாவும்
சாகத் தீமைகள் சட்டென்று
அழியத் தருமமெ லாம்வளர,
பன்னரு போர்த்தொழில் பறக்கக்
கருணைப் பார்புகழ் அமர்வினையே
படர்ந்துஇஞ் ஞாலம் பரிசுத்-
-தம்பெறப் பார்வை புரிந்துஅருளி,
ஒன்னலர் இல்லாய்! ஊனம்இல்
காந்தி! உருட்டுக சிறுதேரே!
ஒப்புஉயர்வு இல்லா உத்தமர்
ஏறே! உருட்டுக சிறுதேரே! 7

முழுதுஉல கினும்நின் மொய்ம்புஅறி
யாதார் முன்னின்இ ரார்என்றே
மொழிவது சிறிதும் மிகைஇலை;
அறிஞர் மொழிவழி ஒழுகி,உனைத்
தொழுகுவர்; உணர்வில் துரிசு
பொருந்தும் தொல்வினை உடையாரே
சூடாது உன்அடி வேறாய்
வீழ்வர்; தோம்அறு நல்லோரின்
வழுஅறு மனங்கள் மோகிக்
கும்நலம் வாய்த்தமை கொண்டுஉனக்கு
வழுத்தினர் போலும் மோகனன்
என்னும் மாண்புத் திருநாமம்!
ஒழுகுதல் கல்வி ஒருங்குஉடைக்
காந்தி! உருட்டுக சிறுதேரே!
ஒப்புஉயர்வு இல்லா உத்தமர்
ஏறே! உருட்டுக சிறுதேரே! 8

"அன்னை எனினும் அத்தனே
ஆயினும் அறம்தவிர் ஆறுஉரைத்தால்
அதனைக் கடந்தே அறம்காத்து
உயர்தல் அணிஉயர் மாந்தர்அவர்க்கு,
என்னைப் பெற்றோர் இழிதொழில்
ஒன்றை இயற்றுஎன்று இயம்புவரேல்
ஏற்காது அவர்மொழி தன்னைத்
தள்ளி, என்கடன் செய்வ"னென
உன்உயிர் மகற்கு நீசிறை
உறுநாள் ஓலைத் தூக்குவிட்ட
உண்மை, திண்மை, உறுதி
சாந்தம் ஓங்கிய புகழ்மிக்க
உன்னைத் தொழுதேன் ஒண்தவ!
காந்தி! உருட்டுக சிறுதேரே!
ஒப்புயர்வு இல்லா உத்தமர்
ஏறே! உருட்டுக சிறுதேரே! 9

## வேறு

ஏராரும் புகழ்க்காந்தி! யாங்கள்உயச் சிறுதேரை
இனிதே உருட்டி அருள்க!
இணைஇல்லாக் கத்தூரி எழில்கணவ! சிறுதேரை
இனிதே உருட்டி அருள்க!
சீராரும் தேவதாஸ் திருத்தந்தாய்! சிறுதேரைச்
சீக்கிரம் உருட்டி அருள்க!
செல்வமலி பாரதத்தாய் திருமகனே! சிறுதேரைச்
சீக்கிரம் உருட்டி அருள்க!
நாராரும் நன்மக்கள் நாயகனே! சிறுதேரை
நன்றாய் உருட்டி அருள்க!
நன்மைக்கு நண்புடையாய்! நாடுஅறியச் சிறுதேரை
நன்றாய் உருட்டி அருள்க!
பாராரும் பண்புநிறை பாவலனே! சிறுதேரைப்
பாங்காய் உருட்டி அருள்க!
பழஅறத்தை உலகிற்குப் பகர்எந்தாய்! சிறுதேரைப்
பாங்காய் உருட்டி அருள்க! 10

# காந்தியும் வள்ளுவரும்

## தற்சிறப்புப் பாயிரம்

### அறுசீர் விருத்தம்

யாரும்நிகர் இல்லாத
காந்திதனைத் திருக்குறளோடு
இசைவு கண்டு,
நேரிசைவெண் பாஒருநூற்
றிருபத்தைந் தாஅமைத்து,
நெஞ்சில் அன்னான்
சீருருவை அகலாது
சிறைவைத்த ராய.சொக்க
லிங்கன், காந்தி
பாருறும்ஆண்டு எழுபத்தொன்
பதில்மாசி முதல்பகுதி
பகர்ந்திட் டானல்.

இந் நூல் பாடியது 1948 பிப்ரவரி (சர்வசித்து, மாசி)

## 1

உலகத்தில் எல்லாருந்தான் படிக்கிறார்கள். வரவரக் கல்வி பெருகித் தான் வருகிறது. ஆனால் அக் கல்வியின் பயன் கண்டவர் மிகச் சிலரே. படிப்பின் பயனை நன்றாகக் கண்டு உணர்ந்த உண்மை ஞானி காந்தியடிகள்.

கற்றான், பயன்கண்டான்; காந்தி கடவுள்அருள்
வற்றாப் பெருஞ்செல்வன்; வள்ளுவரே! -நற்சேயே!
கற்றதனால் ஆய பயன்என்கொல் வாலறிவன்
நல்தாள் தொழாஅர் எனின்?

தெய்வப் புலமைத் திருவள்ளுவரே! காந்தி படித்தான்; அதன் பயனைக் கண்டான்; தெய்வ அருள் வற்றாத ஊற்றுடைய பெரும் செல்வம் பெற்றான்.

ஆம்! எனது அருமை மகனே! மெய் உணர்வு உடைய பரம் பொருளின் திருவடி பணியாரானால் எவ்வளவு படித்தும் என்ன பயன்? அக் கல்வியெல்லாம் விழலுக்கு இறைத்த நீரே.

## 2

காந்தி, உலகத்தில் உள்ள மக்கள் உள்ளத்தில் எல்லாம் உள்ளுக்கு உள்ளாக உறைகின்றான். காரணம் அவன் பெற்ற தெய்வத் தன்மையே.

கடவுள் நிலைபெற்ற காந்திப் பெருமான்
வடிவுதொறும் வள்ளுவரே! வாழ்வான் - தடைஎன்?
மலர்மிசை ஏகினான் மாண்அடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்.

வள்ளுவரே! கடவுள் தன்மையை எய்திய காந்தி எம்மான் உலகத்தில் உலாவும் எல்லாருடைய வடிவங்களுள்ளும் வாழ்ந்தான்; வாழ்கின்றான்; இனியும் வாழ்வான்.

தடை என்ன, மகனே! உள்ளத் தாமரைகளிலே விரைந்து குடியேறிய எல்லாம் வல்ல ஒருவனின் பெருமை மிக்க திருவடிப்பேறு பெற்றவர், உலகத்திலே மிக நீண்ட காலம் வாழ்வார். காந்தியைத் தவிர இத் தகுதியைப் பெற யாரே வல்லவர்?

## 3

''அறந்தான் இயற்றும் அவனிலும் கோடி அதிகம் இல்லம் துறந்தான்; அவனில் சதகோடி உள்ளத்துறவு உடையான்'' என்றுர் பெரியார். மனத் துறவு அவ்வளவு பெரிது. வீடு, வாசல், மனைவி மக்களைத் துறந்தவனைவிட நூறுகோடி பங்கு உயர்ந்தவன் மனத் துறவி. அவன் பெருமையைத் தன்ஞலேயே சொல்லமுடியாது என்கிறுர் புலவர் பெருமான்.

காந்தி பெருமை கணக்கிட்டு உரைக்கஉம்மால்
வாய்ந்தால் வழுத்துவீர்! வள்ளுவரே! -மாந்த!
துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்து
இறந்தாரை எண்ணிக்கொண் டற்று.

வள்ளுவஞரே! உம்மால் முடியுமாஞல் காந்தியின் பெருமைகளை அளந்து சொல்லும்; பார்க்கலாம்.

மகனே! நன்றுய்ச் சொன்னுய்! யாரால் ஆகும் அது? இந்த உலகம் தோன்றிய காலம்தொட்டு இன்றுவரை அவனியிலே பிறந்து இறந்தவர் களையெல்லாம் கணக்கிட்டு நீ சொல்லிவிடுவாயா? அது உன்ஞல் முடியு மாஞல் முற்றுந் துறந்த காந்தியின் பெருமையை நான் சொல்வேன். இரண்டும் முடியாத காரியங்கள்.

## 4

தான் நுகரும் ஐம்புல ஆசையை எவன்விட்டு அகலுகின்றுனே அவன் வழிப்படி உலகம் ஆடும். தனக்கென்று ஒன்றும் வேண்டாதவன் எல்லார்க்கும் நன்றே செய்வான். அவன் சொல்லை உலகம் ஏற்பது இயற்கை.

காந்தி உரையதனைக் காசினியெ லாம்மறையா
ஏந்தல் எதஞல் இயம்புவீர்? -ஏந்தால்!
சுவைஒளி ஊறுஓசை நாற்றம்என்று ஐந்தின்
வகைதெரிவான் கட்டே உலகு.

பெருமையில் சிறந்தவரே! காந்தி பேச்சை உலகம் முழுதும் வேத வாக்காக ஏற்றுக்கொள்வதற்கு என்ன காரணம்?

அதுவா? அவன் நாவின் சுவைக்காக உண்ணமாட்டான்; கண்டதை யெல்லாம் பார்க்க ஆசைப்படமாட்டான்; உடம்பை இன்பத்தில் தோய விடமாட்டான்; இசைக்குக் காது கொடுத்துவிட்டு லயித்து உட்கார்ந்து அனுபவிக்க மாட்டான்; நறுமணம் முகர்ந்து இன்புற மாட்டான். ஐந்தின் ஆசையையும் அறுத்த அவன்வழி உலகம் ஆடுவதில் ஆச்சரியம் என்ன?

## 5

வானை எட்டும் புகழைக் காந்தி அடைந்ததற்குரிய காரணத்தை அறியச் சிரமப்பட்டு வேறு எங்கும் போய்த் தேடவேண்டாம். அவனுள்ளே தேடினால் கண்டு கொள்ளலாம்.

ககனத்து உறுபுகழைக் காந்தி அடையத்
தகவென்? தனிப்புலவீர்! சாற்றும்! -மகனே!
நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டிவிடும்.

வேறு எவரும் ஈடு இல்லாத புலவரே! தேவலோகம் வரை ஏறிய கீர்த்தியைக் காந்தி பெற்றதற்கு உரிய தகுதி என்ன? கொஞ்சம் சொல்ல மாட்டீரா?

சொல்லுவதென்ன, மகனே! இதைக் கூடவா சொல்லித் தெரிந்து கொள்ள வேண்டும்? இதைத் தெரிந்துகொள்ள அங்கும் இங்கும் நீ அலைய வேண்டாம். காந்தி சொல்லுக்குள் நுழை. அவன் உபதேசம் அவன் தகுதியைக் காட்டும். அவனுடைய நிறைமொழியை ஆராய்ந்து பார். அவன் பெருமையை அவன் சொன்ன வேதமந்திரம் அறிவிக்கும்.

## 6

காந்தி பிறந்தது வைசியர் என்று கூறப்படும் வகுப்பில். ஆனால் காந்தியை வைசியன் என்று சொல்லலாமா? வணிகர் தொழிலுக்கும் காந்திக்கும் என்ன சம்பந்தம்? அவன் செய்ததெல்லாம் பிராமணர்க்குரிய செய்கைகள்.

வணிகர் மரபினிலே வந்துதித்த காந்தி
அணிமறையோன் என்றுரைத்தல் ஆமோ? -துணிவுஅதுவே
அந்தணர் என்போர் அறவோர்மற்று எவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுக லான்.

வணிகர் குலத்திலே தோன்றிய காந்தியை மறையவன் என வழுத்துதல் பொருந்துமா? வள்ளுவரே!

ஓ! சந்தேகம் என்ன? அதுதான் முடிவு. எல்லா உயிர்களையும் ஒன்றாகப் பார்க்கும் கருணையறம் காப்பானே அந்தணன். காந்தியைத் தவிர வேறு யாரைத்தான் அந்தணன் என்று சொல்வது?

## 7

கடமையை இன்ன இடத்தில் இன்ன வகையில் இப்பொழுதுதான் செய்ய வேண்டும் என்பதில்லை; இடையறுது எப்பொழுதும் எல்லா வகையாலும் செய்யத்தக்கதே கடமை என்பதற்குக் காந்தி எடுத்துக் காட்டு.

எல்லா வகையும் இயற்றினுன் நல்லறத்தை
வல்லான் தனிக்காந்தி வள்ளுவரே! -நல்லோனே!
ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே
செல்லும்வாய் எல்லாம் செயல்.

வள்ளுவப் பெருந்தகையே! வல்லமை வாய்ந்த ஒப்பற்ற காந்தி, நல்ல கடமையை எல்லா வகையாலும் செய்தான்.

ஆம்! நல்ல மகனே! இயன்ற வழியிலெல்லாம் அறத்தைச் சலிப்பில்லாமல் செல்லும் இடங்கள்தோறும் செய்தல் வேண்டும். அதனைச் சரியாகச் செய்தான் காந்தி.

## 8

காவி வேட்டி கட்டவில்லை; சடையை வளர்க்கவில்லை; இம்மாதிரியான தவவேடம் எதுவும் இன்றியே உண்மைத் தவசியாக விளங்கினுன் காந்தி.

காவி உடைஅணியான்; காந்தி சடைமுடியான்;
மேவு தவம்இதுவோ? மெய்ப்புலவீர்! —ஓ!ஓ!!
மனத்துக்கண் மாசுஇலன் ஆதல்; அனைத்துஅறன்;
ஆகுல நீர பிற.

உண்மைப் புலவரே! காந்தி செங்காவி தோய்த்த ஆடை கட்டவில்லை; சடையை நீட்டிச் சுருட்டிவைக்கவில்லை. அவனைப் பெரிய தவசி என்கிறீரே! இதுதான் தவமோ?

ஓகோ! இவ்வளவுதானு உன் சாமர்த்தியம்? உள்ளத்திலே குற்றமற்று விளங்கல் வேண்டும். அவ்வளவே கடமை. காவியும் சடையும் பிறவும் ஆடம்பரங்கள்! அவை வெளி வேடங்கள்!

## 9

கடமைக்காகத் துன்பத்தையெல்லாம் இன்பமாகக் கொண்டு வலிந்து ஏற்றான் காந்தி. சிறை வாழ்வு, உண்ணுமை நோற்றல் முதலியன இன்பச் செயல்களல்ல. அவைகள் வேண்டும் என்றே கடமைக்காக மேற்கொள்ளப் பட்டவை.

துன்பமே இன்பம்எனச் சூழ்ந்தான் அறங்காக்க
மன்பெரிய காந்திமகான் வள்ளுவரே! -அன்ப!
அறத்தான் வருவதே இன்பம்மற் றெல்லாம்
புறத்த புகழும் இல.

வள்ளுவனுரே! நிலைபெற்ற புகழ்வாய்ந்த காந்தி மகாத்மா, கடமை காப்பதற்காகத் துன்பத்தையெல்லாம் இன்பமாக மேற்போட்டுக் கொண்டான்.

அன்பனே! இன்பம் என்ருல் என்ன என நினைத்தாய்? இன்பம் இதுதான் என வரையறுத்துச் சொல்வது கடினம். என்ருலும் ஒன்று மட்டும் சொல்லலாம். கடமையைச் செய்யும்பொழுது என்ன என்ன வருகின்றனவோ அவை எல்லாம் இன்பங்கள் எனக்கொள். அறத்திற்கு மாருகப் பெறப்படுவனவெல்லாம் துன்பங்கள். அவைகளால் கீர்த்தியும் அழியும்.

## 10

தெய்வங்கள் என்ருல் ஏதோ நமக்கு எட்டாத ஒரு மேல் உலகத்தில் அவைகள் இருக்கின்றன என நினைக்க வேண்டாம். தெய்வத்தை இங்கேயே காணமுடியும்.

செய்தற்கு அரியசெயல் செய்து புகழ்பெற்றுத்
தெய்வமே ஆயினுன் சீர்க்காந்தி -பொய்யறியீர்!
வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்.

பொய் அறியாப் புலவரே! பிறர் செய்வற்கு அருமையான காரியங் களையெல்லாம் செய்து அது காரணமாகப் பெரும் புகழ் அடைந்து முடிவில் கடவுள் நிலையையே அடைந்து கடவுளாகவே ஆகிவிட்டான் சிறந்த காந்தி மகான்.

ஆமப்பா! இந்த உலகத்திலேயே வாழவேண்டிய முறைப்படி வாழும் ஒருவன் அந்த உலகத்திலே இருக்கும் தெய்வ வரிசையில் வைத்தே எண்ணப்படுவான்.

## 11

காந்தி அமர வாழ்வு அடைந்து விட்டான். உடலைத் தீக்கடவுள் தீண்டிப் பேறு பெற்றான். காந்தியின் எலும்பு உலகம் முழுவதும் பரவி எல்லா மக்களுக்கும் அறத்தை நினைப்பூட்டும் அன்புக் கருவியாக அமைந்ததைக் கண்டோம்.

என்றும் உலகிலுள்ள எல்லோர்க்கும் ஈகாந்தி
அன்புரைக்க யாவரே ஆற்றுவார்? - நன்புலவீர்!
அன்பிலார் எல்லாம் தமக்குரியர்; அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு.

நல்ல புலவரே! தன் எலும்பைக்கூட உலகத்திலுள்ள எல்லார்க்கும் கொடுத்தருளிய காந்தியின் அன்பை யாரால் சொல்லமுடியும்?

அன்பு இல்லாதவர் எல்லாம் தமக்கே உரிமை பூண்டவர்; அவர்கள் சுயநலவாதிகள்; பிறருக்கு உதவி செய்வதென்றால் என்ன என்பதே அன்பு அகத்து இல்லார்க்கு விளங்காது. அன்புடையவர் தம் எலும்பைக்கூடப் பிறர்க்கு உதவுவர்.

## 12

அன்பு அறஞ் செய்யத்தான் உதவும் என்பது ஓர் பழைய கொள்கை. அதனை மறுத்திருக்கின்றார் ஆசிரியர் வள்ளுவர். அறம் செய்வதற்குமட்டு மன்றி மறம் போக்குவதற்கும் அன்பு பயன்படும் என்பது வள்ளுவனார் கொள்கை. சுமார் இரண்டாயிரம் ஆண்டுகட்குமுன் சொன்ன வள்ளுவனாரின் இக் கருத்தைக் காந்தியார் நடத்திக்காட்டிவிட்டார் "அன்பு மறத்தை அறுக்கும் என்ற அரிய காந்தி கொள்கையை, முன்பு பொய்யில் வள்ளுவன்வாய் மொழிந்தது எங்கள் தமிழ்மொழி" என்பது ஒரு தற்காலத் தமிழன் பாட்டு.

அன்பால் பகைமை அடக்கி அரசாண்ட
மன்புலவன் எங்காந்தி வள்ளுவரே! - என்சேய்!
அறத்திற்கே அன்புசார்பு என்ப அறியார்;
மறத்திற்கும் அஃதே துணை;

வள்ளுவரே! அன்புகொண்டு பகை அடக்கி அரசுசெலுத்திய நிலை பெற்ற புலமை மிக்கவனுவான் எம்முடைய காந்தி, தெரியுமா?

என் மகனே! நான் முன்னரே சொல்லிவைக்கவில்லையா? அறத்திற்குத் தான் அன்பு தொடர்புடையது என்று கூறுவார்கள் அறியாதவர்கள்; பாபங்களைப் போக்கவும் அந்த அன்புதானப்பா துணை. நல்ல வேளையாகக் காந்தி வந்து என் சொல்லைக் காப்பாற்றினான்.

## 13

சொற்கள் இரண்டுவகை. ஒன்று இன்சொல்; இன்னொன்று வன்சொல். இனிமைதரும் சொற்கள் மொழியுள் நிறைய இருக்கின்றன; அச் சொற்கள் நன்மையும் பயக்கின்றன. இது காந்தியின் அனுபவ உண்மை.

சொல்லின் இனிமையால் தொல்காந்தி எங்குமே
அல்லல் அறுத்தேஆட் கொண்டிட்டான் - வெல்லஉயர்
இன்சொல் இனிதீன்றல் காண்பான் எவன்கொலோ?
வன்சொல் வழங்குவது.

பழைமையான காந்தி இனிமைவாய்ந்த சொற்களைக்கொண்டு எல்லா இடத்தும் துன்பம் போக்கி எல்லாரையும் ஆளாக அடிமை கொண்டான்.

வெல்லம் போன்ற உயர்ந்த இனிய மொழிகள் இன்பத்தையே எல்லார்க்கும் செய்வதைப்பார்த்தும் கொடுமையான வலிய பேச்சுக்களை ஏன் பேசவேண்டும்?

## 14

ஒரு மா மரத்தில் காய்களும் கனிகளும் தொங்குகின்றன. இனிக்கும் மாம்பழங்களைப் பிடுங்கி உண்டு மகிழாமல் புளிக்கும் மாங்காய்களைக் கவர்ந்து தின்று பல்லுக்கூச்சம் அடைந்து இடர்ப்படுவரோ அறிஞர்?

இன்பம் பெருக்கும் இனியவே சொல்காந்தி
அன்பென்? அருளுவீர்! அந்தணரே! - துன்பென்?
இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று.

அந்தணராகிய வள்ளுவரே! இன்பத்தை எல்லோர்க்கும் பெருகச் செய்கின்ற இனிய சொற்களையே பகர்கின்ற காந்தியின் அன்பின் பெருக்குத்தான் என்னே, சொல்லும்?

இனிய சொற்கள் இருக்கும்போது அவற்றைவிட்டுத் துன்பம் தரும் சொற்களைப் பேசுவது! பக்குவமான பழங்களை விடுத்து முதிராத காய்களைப் பிடிங்கித் தின்பது மாதிரி.

## 15

எந்த நலத்தை ஒருவன் மறந்தாலும் உய்யப் பிராயச்சித்தம் உண்டு. ஒருவன் செய்த நன்றியை மறந்தவனுக்கு உய்வே இல்லை. "ஒருவன் செய்தி கொன்றோற்கு உய்தி இல் என அறம் பாடிற்றே" என்பது பழந் தமிழ்ப் புலவன் வாக்கு.

இந்தியர்க்கு வாழ்வளித்த எங்காந்தி சீர்மறந்த
அந்தகற்குச் சோறுண்டோ? அந்தணரே! - செந்தமிழா!
எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்; உய்வில்லைச்
செய்ந்நன்றி கொன்ற மகற்கு.

அந்தணப் பெரியாரே! இந்தியாவில் வாழ்வாரையும் மக்கட் கூட்டத்துள் சேர்த்து வாழவைத்த எங்கள் காந்தியின் சிறப்பை மறந்த குருடனுக்குத் தின்பதற்குச் சோறுவது கிடைக்குமா?

செந்தமிழ் மகனே! எந்த நன்றியை மறந்தவர்க்கும் பிழைக்க வழியுண்டு; செய்த நன்றியை மறந்த மகாபாதகன் என்றும் கதிகாணாது இடர்க் கடலிலேயே கிடந்து தவித்து உழல்வான்.

## 16

நல்லதையே தந்து ஒருவனுக்குச் சுகபோகங்களை ஈவதாயினும் நியாயம் கடந்து பெறும் செல்வத்தை அறிவாளன் கருதான்.

விடுதலையே வந்திடினும் தீவழியில் வேண்டாம்!
வடுஎன்றான் வள்ளுவரே! காந்தி-கெடுதலின்றி
நன்றே தரினும் நடுவிகந்தாம் ஆக்கத்தை
அன்றே ஒழிய விடல்.

வள்ளுவரே! தகாத முறையில் நாட்டிற்கு விடுதலை வருவதாயிருந்தாலும் அது எனக்கு வேண்டாம். அம்மாதிரி விடுதலை பெறுதல் குற்றம் என்று கூறினான் காந்தி.

கெடுதலில்லாத நன்மையே கொடுப்பதாயினும் நடுத்தவறிப் பெறும் செல்வத்தை அப்பொழுதே கைவிட்டுவிடல் வேண்டும்.

## 17

வேண்டியவர்க்கொருமாதிரி வேண்டாதவர்க்கு இன்னொருமாதிரி நியாயம் சொல்வர் சாதாரண மக்கள். காந்தி, நண்பனாயினும் பகைவனாயினும் ஒரே நாவோடு பேசும் பேரியல்பினன்.

நட்புப் பகைநோக்கி நாவை வளையாத
திட்பமுளான் எங்காந்தி செம்புலவீர்!-பெட்பச்
சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்து ஒருபால்
கோடாமை சான்றோர்க்கு அணி.

செம்மை மிக்க புலவரே! நட்பு என்றும் பகை என்றும் வேறுபடுத்திப் பார்த்து நாவை வளைத்துப் பேசாத வல்லமை வாய்ந்தவன் எங்கள் காந்தி.

ஒழுங்காகச் சமநிலையில் சீராகத் தூக்கி நிறுக்கும் தராசுக்கோல் போல நின்று ஒரு பக்கமாகக் கோணுதிருப்பதுதான் பெரியமனிதர்களின் அழகு.

## 18

நிற்கவேண்டிய நிலைமையினின்றும் மாறுபடாது ஒருவன் அடங்கி நின்றானுல் இமயமலையைவிட அவன் உலகத்திலே விளங்கித் தோன்றுவான்.

தொல்உலகைக் காந்தியைப்போல் தொட்டான் ஒருவன்உண்டோ?
வல்லீரேல் விள்ளுவீர் வள்ளுவரே!-இல்லை,
நிலையில் திரியாது அடங்கியான் தோற்றம்
மலையினும் மாணப் பெரிது.

வள்ளுவனாரே! பழம் பெரிய உலகத்தைக் காந்தியைப்போல ஆட்கொண்டவன் வேறு எவனையாவது நீர் பார்த்திருக்கிறீரா? முடியுமானால் சொல்லுமையா!

இல்லையப்பா; நிச்சயமாக இல்லை. நிற்கவேண்டிய நிலைமையின்றும் இம்மியும் பிசகாமல் அடங்கிய காந்தியின் பொலிவு மலையைவிட எத்துணையோ மடங்கு பெரிது.

## 19

பெரிய மனிதர்கள் கெட்டபேச்சுக்களை வாயினால் பேசவே மாட்டார்கள்.

தீச்சொல் ஒருபோதும் செப்பான்; உயர்காந்தி
வாய்ச்சொல் மதுவெள்ளம்; வள்ளுவரே!-பேச்சென்?
ஒழுக்கம் உடையவர்க்கு ஒல்லாவே, தீய
வழுக்கியும் வாயால் சொலல்.

திருவள்ளுவரே! உயர்ந்த காந்தி தீமையான சொல்லை ஒரு சமயங்கூட வாயினால் சொல்லமாட்டான்; அவன் வாயினின்றும் புறப்படும் வார்த்தைகள் எல்லாம் தேனூற்றுப் பெருநீர்.

ஆம்! வேறு பேச்சு ஏன்? ஒழுக்கம் உடையவரால் தகாத பேச்சைத் தவறிக்கூட வாயால் கூற எப்படி முடியும்?

## 20

பிறன் மனையை இச்சித்துத் தவறான பாதையில் செல்லுதல் பாவம் என்றான்

மற்றோன் மனைநயத்தில் மாபா தகம்எனவே
சொற்றான் புகழ்க்காந்தி; தொல்புலவீர்!-மற்றென்?
அறன்கடை நின்றாருள் எல்லாம் பிறன்கடை
நின்றாரில் பேதையார் இல்.

தொன்மை அறம் சொற்ற புலவர் ஏறே! இன்னொருவன் இல்லாளை எளிதென எண்ணி விரும்புதல் மகா பாதகம் எனச் சொல்லினன் புகழுடைக் காந்தி.

வேறு என்ன? நீ அது சாதாரணம் என்று நினைத்துக்கொண்டாயா? அறங்களிலே வழுவியவர்களுள் எல்லாம் பிறன் மனைவியின் சமயம் பார்த்து அவ் வீட்டு வாயிலிலே காத்து நின்றவனைப் போன்ற அறிவீனன்

## 21

பிறர் செய்யும் தீமைகளையெல்லாம் அவை உலகியல்பு என்ற உண்மை ஓர்ந்து பொறுத்தான் காந்தி.

செய்த பிழைகள் எலாம் செம்மல் எமகாந்தி,
வையம் எனப்பொறுத்தான்; வள்ளுவரே?-ஐய!
ஒறுத்தார்க்கு ஒருநாளை இன்பம்; பொறுத்தார்க்குப்
பொன்றும் துணையும் புகழ்.

வள்ளுவனாரே! பெருமைமிக்க எங்கள் காந்திப் பெருமான், பிறர் செய்த தவறுகளையெல்லாம் பூமியானது, எல்லாரையும் எல்லாவற்றையும் தம்மைத் தோண்டிக் குழி பறிக்கின்றவரைக்கூட எவ்வாறு பொறுத்துத் தாங்குகின்றதோ அதுபோலப் பொறுத்தான்.

ஐயனே! ஒருவர் செய்த தவறுகண்டு கோபிக்கின்றவனுக்கு அன்றைக்குத்தான் இன்பம். பொறுக்கின்றவனுக்கு இறக்கும் துணையும் கீர்த்தி. அவனுக்கு இறப்பே இல்லை. எனவே அவன் புகழுக்கும் அழிவில்லை.

## 22

பாரத நாட்டைப் பற்றிக்கொண்டு ஆண்டு நம்மை அடக்கிப் படாத பாடுபடுத்திய வெள்ளைக்காரரைக்கூட வென்று, விடுதலை பெற்று எவரும் செய்யாத காரியத்தைச் சாதித்தான் காந்தி.

நம்பி அருங்காந்தி, நாடுகொண்ட பொல்லாத
வம்பரையும் வென்றிட்டான்; வள்ளுவரே! -தம்பி!
மிகுதியால் மிக்கவை செய்தாரைத் தாம்தம்
தகுதியால் வென்று விடல்.

வள்ளுவரே! சிறப்புமிக்க அருமைக் காந்தி நம் நாட்டைக் கவர்ந்து கொண்ட கொடிய வம்புக்காரரையும் வெற்றிகொண்டான்.

தம்பி! செருக்கினால் தகாத காரியங்கள் செய்வாரைத் தங்கள் தகுதியாலேயே வெல்ல வேண்டும். அத்தகுதி காந்திக்கே இருந்தது.

## 23

உண்ணாது விரதமிருந்து உடல் சுருக்கல் மிக அருமையான செயல். பிறர் வையும்போது பொறுத்து ஆற்றுதல் அதைவிட அருமை. இரண்டிலும் தேர்ச்சி பெற்றவன் காந்தி.

உண்ணுமை கொண்டிட்டான்; ஓராது உரைத்தஉரை
எண்ணுன்; தனிப்பெரியோன் எங்காந்தி, - கண்ணுவீர்!
உண்ணுது நோற்பார் பெரியர் பிறர்சொல்லும்
இன்ஞச்சொல் நோற்பாரில் பின்.

எங்கள் கண்ணுன வள்ளுவரே! ஒப்பற்ற பெரியோனுகிய எமது காந்தி, உண்ணு விரதத்தை எத்துணையோ முறை மேற்கொண்டான்; ஆராயாமல் பிறர் தூற்றிய பேச்சுக்களை மனத்தில் கொள்ளமாட்டான்.

உண்ணுது தவம்செய்வார் பெரியவரே. எப்படி? பிறர் தூற்றுகின்ற கொடுஞ் சொல்லைத் தாங்குகின்றவர்க்கு அடுத்தபடியில். எனவே காந்தி இரண்டாலும் பெரியவனே.

## 24

பொருமை மகா கொடியது. பிறர் வாழ்வுகண்டு வயிற்றில் அடித்துக் கொள்வோரே உலகில் பலர். பிறர் வாழ மகிழ்பவன் காந்தி.

மாற்றுன் நலத்தில் மகிழும் மனம்படைத்த
ஏற்றமுளான் எங்காந்தி, வள்ளுவரே! - ஆற்ற
அழுக்கற்று அகன்ருரும் இல்லை;அஃது இல்லார்
பெருக்கத்தில் தீர்ந்தாரும் இல்.

வள்ளுவரே! எங்கள் காந்தி, மற்றவன் நலத்தில் களிப்படையும் பெரிய உள்ளம் கொண்டவன்.

மிகவும் அழுக்காறு என்னும் பொருமைப்பட்டு அதனுல் நல்ல வாழ்வு அடைந்தார் இல்லை. பொருமை இல்லாமையினுலே குறைவுபட்டாரும் கிடையாது.

## 25

நொடிப் பொழுதில் அழியும் சிறிய இன்பங்கட்கும் காந்திக்கும் நீண்ட தூரம்.

பேரின்பத்து ஆழும் பெரிய உயர்காந்தி
நாரின்மை நாடானே நற்புலவீர்! - ஏருலகில்
சிற்றின்பம் வெஃகி அறன்அல்ல செய்யாரே,
மற்றின்பம் வேண்டு பவர்.

நல்ல புலவரே! பேரின்பத்திலேயே ஆழ்ந்த பெரிய சிறந்த காந்தி, அன்பற்ற எதையும் விரும்பமாட்டான்.

அழகிய உலகில் சிறிய இன்பத்தை விரும்பி அறன் அல்லாதவற்றைப் பெரிய இன்பம் நாடுவோர் செய்ய மாட்டார்.

## 26

தான் தவறே செய்ய மாட்டான். பிறர் தவறு செய்யுங்கால் அதனைத் தடுக்க வேண்டுவன செய்வான் காந்தி.

தான்தவறு செய்யாதான்; மற்றோர் தவறுகொல
என்றஉரை அருள்வான் எங்காந்தி - ஆன்றீர்!
பிறன்பழி கூறுவான் தன்பழி உள்ளும்
திறன்தெரிந்து கூறப் படும்.

ஆன்ற புலவரே! எங்கள், காந்தி, தான் தவறு செய்ய மாட்டான். பிறர் தவறு போக்கப் பொருத்தமாகப் பேசித் திருத்துவான்.

பிறன் பழி கூறுதல் திருத்தும் நோக்கத்தோடு இருக்கலாம். ஆனால் தன்னிடம் அத்தகையது இல்லையா என்பதை யோசித்துச் சொல்ல வேண்டு மல்லவா? காந்தியைப் பொறுத்தவரை அந்தக் கவலைக்கு இடமில்லை.

## 27

ஒவ்வொருவனும் பிறர் குற்றம் காண்பது போலத் தன் குற்றத்தைக் காண முயல்வானுனல் உலகத்தில் தீமையே இல்லையாகிவிடும். தன் குற்றத்தைக் கருதுவதே இல்லை; அதே காரியத்தைப் பிறர் செய்தால் குற்றம் காண்பது; இதுவே பெரிதும் உலக இயல்பு ஆகிவிட்டது. காந்தி இதற்கு மாறுபட்டவன். மற்றவர் செய்யும் குற்றங்கட்குரிய பொறுப்பையும் தன் மீது போட்டுக்கொள்வது காந்தியின் இயல்பு.

மற்றையோர் செய்பிழையைத் தன்மேல் வலிந்தேற்றும்
குற்றமற்ருேன் கோக்காந்தி; கோதற்றீர்! - பெற்றியே;
ஏதிலார் குற்றம்போல் தங்குற்றம் காண்கிற்பின்
தீதுண்டோ மன்னும் உயிர்க்கு.

குற்றம் அற்ற வள்ளுவனுரே! பிறர் செய்த தப்பிதங்களை எல்லாம் தன் மீது வலியச் சுமத்திக்கொள்ளும் பிழையற்ருேன் காந்தித் தலைவன்.

அது அவனுக்குப் பெருமைதான். இன்னெருவர் குறையைக் காண்பது போலத் தங்கள் குற்றத்தை ஒவ்வொருவரும் காண்பாராளுல் உயிர்க்குத் தீங்கே இராதல்லவா?

## 28

சிலர் சளசளவென்று பேசிக்கொண்டே இருப்பர். ஒன்றும் பொருளே இராது. பொருளற்ற ஒரு உரைகூடக் காந்தி வாயில் நின்றும் புறப்படாது.

பூம்புகழ் காந்தி புகன்றிடான் வீண்பேச்சு;
மாமறையே வாய்மொழிகள், வள்ளுவரே! - ஆமாம்!
அரும்பயன் ஆயும் அறிவினர் சொல்லார்
பெரும்பயன் இல்லாத சொல்.

உலகமெலாம் புகழுகின்ற காந்தி வீண்பேச்சுப் பேசவே மாட்டான்; அவன் திருவாயினின்று எழும் சொற்களெல்லாம் சிறந்த வேத மந்திரங்களாகவே விளங்குகின்றன; வள்ளுவனுரே!

ஆம்! அருமையான பயனை ஆராய்ந்து பேசும் அறிஞர்கள் பெரிய பயனை நல்காத பேச்சைப் பேசவே மாட்டார்கள்.

## 29

பயன் தராத சொல்லைப் பேசவே கூடாது. எதையாவது உளறிக் கொட்டிக்கொண்டிருக்கவா கடவுள் வாயைக் கொடுத்தார்?

ஆய்தந்த நல்ல அரிய உரைகளையே
வாய்தந்தான் காந்திமகான், வள்ளுவரே! - தோய்தந்து
சொல்லுக சொல்லில் பயனுடைய; சொல்லற்க
சொல்லில் பயனிலாச் சொல்.

வள்ளுவரே! காந்தி மகாத்மா ஆராய்ந்து பார்த்து, நன்மை பயக்கக் கூடிய அருமையான சொற்களையே வாயினால் கூறினான்.

ஒரு சொல்லைச் சொல்லும்போது அதை நன்றாக அனுபவித்து, பயன் எவ்வளவு விளையும் என்பதைத் தெரிந்து சொல்லல் வேண்டும்; பயனற்ற பேச்சை உரைக்கவே கூடாது.

## 30

தீய பொருள்கள் தீமையைத்தான் தருமே அன்றி நன்மையைத் தரவே தரா. தீயவை காந்தியைத் தீண்டா.

மோகனனைக் கொண்டஉளம் முன்னுமோ தீயவற்றை;
வேகவைப்பன் அப்பொருளை மெய்க்காந்தி- பாகனையீர்!
தீயவை தீய பயத்தலால் தீயவை
தீயினும் அஞ்சப் படும்.

பாகனைய புலவீர்! மோகனதாஸ் காந்தியைக் குடிவைத்த உள்ளம், தீயவற்றை நினைக்கவே மாட்டாது. தீமைப் பொருள்களை யெல்லாம் பொசுக்கிச் சாம்பலாக்கி விடுவான் உண்மைக் காந்தி.

தீய பொருள்கள் தீமை செய்ய உதவுமேயன்றி நன்மைக்கு ஒருபோதும் உதவா. ஆதலினாலே தீயவற்றைக் காணும்போது தீயைத் தொடப் பயப்படுவதைவிட அதிகமாக அஞ்ச வேண்டும்.

## 31

எதிரிக்கும் தீமை செய்யாதிருப்பதே பேரறிவு பெற்றதன் பயன்.

தீய புரிந்தோர்க்கும் தீய,நினை யாஅறிஞன்;
தூய பெருங்காந்தி; தொல்புலவீர்!- மேய
அறிவினுள் எல்லாம் தலையென்ப; தீய
செறுவார்க்கும் செய்யா விடல்.

தொன்மைப் புலவரே! பரிசுத்தமான பெருங் கொள்கை கொண்ட காந்தி, தனக்குத் தீங்கு புரிந்தவர்க்கும் தீமை கருதாத அறிவு கைவரப் பெற்றவன்.

அது சரிதானே! தம்மைக் கோபிப்போர்க்கும் கேடு சூழாதிருப்பதே பெற்ற அறிவுகளுள் எல்லாம் தலைசிறந்த அறிவு என்று பெரியோர்கள் சொல்லுவார்கள்.

## 32

ஒருவற்கு உதவி செய்வதைவிடப் பெருமை தரக்கூடியது வேறு எதுவும் இல்லை. உபகாரம் செய்யவே உருவு பெற்றவன் காந்தி.

பிறருக்கு உழைத்திடவே காந்தி பிறந்தான்;
அறமே உருவெடுத்த அண்ணல். -நிறைபுலவீர்!
புத்தேள் உலகத்தும் ஈண்டும் பெறல்அரிதே
ஒப்புரவின் நல்ல பிற.

நிறைந்த புலமை வாய்ந்த வள்ளுவனாரே! தர்மமே வடிவமான அண்ணல் காந்தி, மற்றையோர்க்கு உழைப்பதற்காகவே தோன்றினன்.

தேவலோகத்தினும் இப்பூமி எங்கணுமே உபகாரம் செய்தலை விட நல்ல இன்னொரு பேற்றை ஒருவன் அடைதல் அருமை.

## 33

உதவி செய்யுங்கால் ஒருவனுக்குக் கேடுவருமானுல் தன்னைப் பணயமாக வைத்துக்கூட அக்கேடு விலைக்கு வாங்கத்தக்கது. காந்தி பிறர் வாழ்வுக்காகவே தன்உயிரையும் கொடுத்தான்.

தன்உயிரும் தந்திட்டான் காந்தி பிறர்வாழ
என்னே! அருள்தான் இருந்தவா! -மன்புலவீர்!
ஒப்புரவி ஞல்வரும் கேடெனில் அஃதொருவன்
விற்றுக்கோள் தக்கது உடைத்து.

பெற்ற புலவரே! மற்றவர் வாழ்விற்காகக் காந்தி தனது அருயிரையும் கொடுத்து விட்டான்; கருணை இருந்த வகைதான் என்னே!

உபகாரம் செய்வதனுல் என்ன கெடுதல் நேர்ந்தாலும் அந்தக் கேட்டை ஒருவன் தன்னைக் கொடுத்துக்கூட வாங்கலாம். ஒப்புரவு அவ்வளவு பெருமை உடையது.

## 34

ஒரு மனிதன் வெளியிலே தோன்றுவதானுல் புகழோடு புறப்பட வேண்டும். புகழ்பட வாழ அறியார், தன்னை எவர்க்கும் காட்டிக்கொள்ளாமலேயே அடங்கிக்கிடந்து மாண்டு ஒழிதலே நலம் தோன்றிப் புகழ் பெற்ருேரில் காந்திக்கு இணை யாருமே இலர்.

காந்தி தனைஒழியக் காசினியில் வேறெந்த
மாந்தர்நிகர் இக்குறட்கு வள்ளுவரே !- ஆய்ந்திடும் நும்
தோன்றில் புகழொடு தோன்றுக! அஃதிலார்
தோன்றலில் தோன்ருமை நன்று:

ஐயா! வள்ளுவரே! 'புறப்பட்டால் புகழோடு புறப்படுக! புகழ், இல்லாதார் வெளியில் வருவதைவிடப் பேசாமல் இருந்து விடுவதே சிறப்பு'

என, ஆராய்ந்து நீர் கூறிய இவ் அரிய குறட்பாவுக்கு இப்பேர் உலகத்தில் காந்தியைத் தவிர வேறு எவரை ஈடு சொல்ல முடியும்?

## 35

வாழும் முறை என்ன? வசைபோக்கி வாழ்தலே. இசையாகிய புகழைப் போக்கிவிட்டால் அவன் வாழவேண்டியதே இல்லை.

புகழே பொறுத்துஇப் பூமியுள்ள மட்டும்
மிகுவாழ்வு மேவினன் காந்தி - தகவீர்!
வசைஒழிய வாழ்வாரே வாழ்வார்; இசைஒழிய
வாழ்வாரே வாழா தவர்.

தகவுடைய வள்ளுவரே! புகழையே பூண்டு இத்தரையுள்ள வரையும் நிலைபெறும் பெருவாழ்வைப் பொருந்தினன் காந்தி.

வசைநீக்கி வாழ்க்கை நடத்துவோரே இறந்த பிறகும் வாழ்வார். கீர்த்தியைத் தள்ளிவிட்டு வாழ்கின்றவர் இருக்கும்போதே செத்தவரோடு ஒப்பார்.

## 36

கருணைகாட்டிய காரணமாகவே காந்தியின் உயிர் உடலை விட்டுப் பிரிக்கப்பட்டது. எதிர்பாராத விதமாகத் திடீரென நம்மையெல்லாம் தவிக்க விட்டுத் திருநாட்டை அலங்கரித்தான்; அல்லது இறைவனோடு இரண்டறக் கலந்தான் காந்தி.

கருணைச் செயல்புரிந்து காந்திப் பெருமான்
பரம பதம்புக்கான்; பாரீர்! - தெருளும்
அருள்சேர்ந்த நெஞ்சினார்க்கு இல்லை இருள்சேர்ந்த
இன்னா உலகம் புகல்.

பாருங்கள்! என்ன விந்தை! காந்தி எம்பெருமான் முஸ்லிம்கள் மீது கருணை செலுத்தியதனால் இவ் உலகு விட்டுப் பரமபதம் பெற்றான்.

ஆம்! வேறு என்ன, காந்தி அஞ்ஞானம் நிறைந்த துன்ப உலகத்துக்கா போயிருப்பான்? ஞானத்தோடு கூடிய அருள் உடைய உள்ளம் வாய்ந்த அவனுக்கும் இருள் சேர்ந்த இன்னா உலகத்துக்கும் தொடர்பு ஏது?

## 37

மரணத்திற்கு அறிஞர் அஞ்ச மாட்டார். என்றைக்கேனும் இறப்பது உறுதி. இவ் உண்மையை உணர்ந்த காந்தி, மரணத்தை ஆனந்தமாகத் தழுவினன்.

சாவைத் துரும்பாகத் தான்கொண்டு காந்திமகான்
தேவானன் எவ்உலகும் செந்தமிழீர்!-ஆவதுகேள்!
மன்னுயிர் ஓம்பி அருள்ஆள்வார்க்கு இல்என்ப
தன்னுயிர் அஞ்சும் வினை.

செந்தமிழ்ப் பெரியீர்! காந்திப் பெரியோன் சாதலைத் திரணமாக மதித்து எல்லா உலகத்தும் போற்றப்படும் தெய்வமாக ஆய்விட்டான். அவன் உயிர், உடலைவிட்டுப் பிரிந்ததும் அவனது இயல்பான கடவுள் தன்மை, முன் உணராதாரையும் உணரச் செய்து உச்சநிலையை அடைந்து விட்டது,

ஆவதைக் கேட்பாயாக! உலகத்துள்ள நிலைபேறுடைய உயிர்களை யெல்லாம் பேணி, அருளையே கடைப்பிடிக்கும் அறிஞர்களிடம் தன் உயிரைக் கொடுக்கப் பயந்தோடும் காரியம் இல்லவே இல்லை. இது நானகச் சொல்வதில்லையப்பா! அறிஞர்கள் கண்ட முடிபு.

## 38

இந்த உலகத்தில் இணையற்ற செல்வாக்கோடு வாழ்ந்தான் காந்தி. தனது பெருமைகண்டு சலித்துவிட்டான் போலும்! 'இனி இவ் உலக வாழ்வு போதும்; அவ் உலகையும் பார்த்துவிடுவோம்' என்று கருதி விட்டான்.

இவ்உலகைக் காந்திஎம் ஏந்தல் தனிஆண்டே
அவ்உலகம் ஆள அமைந்திட்டான் - தெவ்ஊர்
அருள்இல்லார்க்கு அவ்உலகம்இல்லை; பொருள்இல்லார்க்கு
இவ்உலகம் இல்லாகி யாங்கு.

ஏந்தலாகிய காந்தி, இந்த உலகத்தை ஒப்பற ஆட்சி செலுத்தி, மேல் உலகை ஆளச் சென்றுவிட்டான்.

பொருள் இல்லார்க்கு இந்த உலகம் இல்லாதது போலப் பகை கொன்ற கருணையில்லார்க்கு அந்த உலகம் இல்லை. கருணையே உருவான காந்தி அவ் உலகை ஆள்வதில் தடை என்ன?

## 39

ஓர் உயிரையும் கொல்லாமை மேற்கொண்ட ஊன் உண்ணாப் பெரியோனை உலகுயிர் அனைத்தும் போற்றுவது இயல்பே.

மன்உயிர்கள் எல்லாம்நம் மாகாந்தி வள்ளல்தனை
என்றும் வணங்குவதேன்? எம்பெருமான்! - இன்தமிழா!
கொல்லான், புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிரும் தொழும்.

எம்பெருமான் வள்ளுவரே! நம் பெரிய காந்தி வள்ளலை நிலைபெற்ற உயிர்கள் எல்லாம் நாள்தோறும் வணங்குவது எதனால்?

இனிய தமிழ் மகனே! ஓருயிரையும் உடல்விட்டுப் பிரிக்காதவனும் மாமிசத்தைப் புசிக்காதவனும் ஆகிய ஒருவனை எல்லா உயிரும் தாழ்ந்து தொழவே செய்யும்.

## 40

பெருந்தவம் உடையார்க்கு அடையாளம் என்ன? தவம் என்பதற்கு வடிவந்தான் எது?

உண்ணாது நோற்றான்; உயிர்கள் அனைத்தையுமே
கண்ணாகக் கொண்டிட்டான்; காந்திமகான்.-பண்ணவரே!
உற்றநோய் நோன்றல், உயிர்குறுகண் செய்யாமை,
அற்றே தவத்திற்கு உரு.

பண்ணவராகிய செந்தமிழ்ப் புலவீர்! உண்ணாமை நோன்பு மேற்கொண்டான்; எல்லா உயிர்களையும் தன் கண்களைப்போலக் கருதினான் காந்திப் பெரியோன்.

ஆம்! அவன் தவசியல்லவா? உண்டி வெறுத்து உடம்பை வருத்திக் கொள்ளுதல்; ஓர் உயிர்க்கும் துன்பம் செய்யாமை; அவ்வளவே தவத்தின் உருவம்.

## 41

அப் பெரும் தவத்தால் எதையும் சாதிக்க முடியும்.

பகைமை தணிஅடக்கிப் பண்பைநனி யூட்டும்
தகவுத் தவம்உடையான் காந்தி - மகனே, கேள்!
ஒன்னார்த் தெறலும் உயந்தாரை ஆக்கலும்
எண்ணில் தவத்தால் வரும்

காந்திப் பெருமான் பகையை அடக்கி நற்குணங்களை நன்றாக உண்டாக்கும் பெரும் தவம் கைவரப் பெற்றவன்.

மகனே! எதிரிகளை வெல்லலும் சேர்ந்தாரைக் காத்தலும் கணக்கில்லாத் தவமுடையவராலேயே முடியும்.

## 42

சுகம் குறைத்துத் துன்பம் பெருக்கும் தவமுடையார், புடம் செய்யப் பெற்று அழுக்கு நீங்கிய பத்தரைமாற்றுத் தகட்டுத் தங்கத்துக்குச் சமம் ஆவார்.

சோற்றைத் துறந்துஉள சுருக்கி, ஒளிபெருக்கி
மாற்றுயர்ந்த பொன்னானான் மாகாந்தி. - ஏற்றிச்
சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடும், துன்பம்
சுடச்சுட நோற்கிற் பவர்க்கு.

பெருமை மிக்க காந்தியானவன், உணவை விட்டு, உடம்பைச்சுருக்கி, உள்ளே இருக்கும் ஒளியைப் பெருக்கி, உயர்ந்த மாற்றுடைய சொக்கத் தங்கமாகவே ஆகிவிட்டான்.

பசி முதலிய துன்பம் கொளுத்தக் கொளுத்தத் தவம் செய்வார், நெருப்பிலே ஏற்றிச் சுடச்சுட, மாசு நீங்கிப் பிரகாசம் பெறும் தங்கத்தைப் போல விளங்கித் தோன்றுவர்.

## 43

இவ் உலகத்தில் எல்லாவற்றுக்கும் மேலாக ஒருவன் காதலிப்பது தன் உயிரைத்தான். உயிருக்கு மேலான பொருள் ஒன்றுமே இல்லை. உடலில் உயிர் தங்கத்தான் மனிதன் எல்லாக் காரியமும் செய்கின்றன். தன் உயிர்மேல் கொண்ட ஆசையை விட்டவனே பெரியோன்.

கொள்கைக்கு உயிரைக் கொடுத்த உயர்காந்தி
வள்ளல் பெருமைசொலும் வள்ளுவரே!-விள்ளுவதென்?
தன்னுயிர் தான்அறப் பெற்றானை, ஏனைய
மன்னுயிர் எல்லாம் தொழும்.

வள்ளுவப் பெருந்தகையே! கொள்கைக்காகவே உயிரையும் கொடுத்த உயர்ந்த காந்திக் கொடையாளியின் பெருமையைச் சொல்லுமே.

சொல்லுவதற்கு என்ன அப்பா இருக்கிறது? சொல்லிலெல்லாம் அடக்க முடியாது அவன் புகழை. தன் உயிர் தனக்கென்று எண்ணாத தருமனை, உலகத்துள்ள எல்லா, உயிர்களும் வணங்கும். காந்தியை எல்லா உயிர்களும் போற்றுவதே அவன் பெருமைக்குச் சாட்சி.

## 44

இவ்வளவு பெருந்தவம் பெற்றிருந்தும், தவத்தின் வெளிவேடம் எதையும் அணிந்தானல்லன் காந்தி.

உள்ளத் துறவோன்; உலகினைஏய்க் கும்வேடக்
கள்ளம் அறியான்;நம் காந்திமகான். - பிள்ளாய்!
மழித்தலும் நீட்டலும் வேண்டா; உலகம்
பழித்தது ஒழித்து விடின்.

உள்ளத்திலே துறவுபூண்ட நம் காந்திப்பெருமான், பிறபலரைப்போல உலகத்தை ஏமாற்றும் கள்ள வேடம் போடும் வஞ்சம் அறியமாட்டான். தவ வேடம் கரவு ஒழுக்கத்தை மறைக்கும் கருவியாகவே கொள்ளப் படுவது கண்டுதான் போலும், காந்தி அதனைக்கைக் கொண்டான் அல்லன்.

ஆம்! குழந்தாய்! அவைகள் எற்றுக்கு? தலையைக் காம்பு அற மழுங்கச் சிரைத்தாலும் வேண்டாம். தரையைக் கூட்டுமாறு சடையை வளர்க்கவும் வேண்டாம். வேண்டுவது என்ன? உலகப் பழிப்புக் குரியது ஒன்றுகூடச் செய்யக் கூடாது. அதுவே தவம்.

## 45

உலகத்துள்ள ஒவ்வொருவர் உள்ளத்திலும் ஓயாது காந்தி தங்கியிருக்கின்றான்.

வள்ளல்மகாத் மாகாந்தி மாநிலத்து மக்கள்உயர்
உள்ளத்து உறைவதெவன்? ஓதுவீர்! -வள்ளுவரே!
உள்ளத்தால் பொய்யாது ஒழுகின் உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம் உளன்.

வள்ளலாகிய மகாத்மா காந்தி பெரிய பூமியில் உள்ள மக்களின் உயர்ந்த மனங்கள் தோறும் தங்கியிருப்பது எதனால்? சொல்லும் வள்ளுவரே!

தம்பி! சொல்லவா வேண்டும்? எவன் ஒருவன் மனத்திலும் பொய் நினையாது ஒழுகுகின்றானோ, அவன் எல்லா உலகத்தார் மனங்கள் தோறும் குடி ஏறி விடுவானன்றோ?

## 46

பொய்யை வாயினால் பேசாதிருப்பது மட்டும் போதாது. மனத்தினாலும் அதனை நினைத்தல் ஆகாது. நினைப்புச் சொல்லவும் தூண்டிவிடும். வாய்மையோடு உண்மையும் கொண்டவன் காந்தி. வாயால் பொய் சொல்லாமை வாய்மை. உளத்தால் பொய் கருதாமை உண்மை.

பொய்யறியாக் காந்திஅடை பொன்றாப் புகழ்இந்த
வையத் தெவர்பெற்றார்? வள்ளுவரே! - மெய்யே
மனத்தொடு வாய்மை மொழியில் தவத்தொடு
தானஞ்செய் வாரில் தலை.

வள்ளுவரே! பொய்யே அறியாத காந்தி பெற்ற இறவாத கீர்த்தியை இந்த உலகத்தில் எவர்தாம் பெற்றார்?

உண்மை! மனமார வாய்மை பேசும் ஒருவன், தவம் செய்வான், வரையாது கொடுக்கும் கொடைவள்ளல், இருவரையும்விடத் தலைசிறந்தவன்.

## 47

உள்ளும் புறமும் ஒரே மாதிரியான புனிதம் உடைமை மிக அருமை. இரண்டும் ஒருங்கே பெற்றவன் காந்தி. அவன் உள்ளம் மாசு அற்றது. அது போல அவன் செம்மேனி ஒரு மருவும் இல்லாதது.

தூய்மை உடற்காந்தி, சொல்போல் செயல்உடையான்;
வாய்மை தவறுதான்; வள்ளுவரே!- ஆமாம்!
புறந்தூய்மை நீரால் அமையும்; அகந்தூய்மை
வாய்மையால் காணப் படும்.

வள்ளுவரே! பரிசுத்தமான உடம்பு பெற்ற காந்தி, சொல்வது போல் செய்வான்; வாய்மை தவறவேமாட்டான்.

ஆமப்பா! புறப்பரிசுத்தம் நீரால் ஆகக் கூடியது; அகப்புனிதத்தை வாய்மையால் அறியலாம். இரண்டிலும் தூயோன் காந்தி என்பது மெய்யே.

## 48

எவ்வளவோ விளக்குகளைப் பார்க்கிறோம். பொய்யாத காந்தி விளக்கைப்போலப் பிரகாசமான மலைமேல் இட்ட விளக்கைக் காணமுடியாது. மலைவிளக்கு, அதிலும் இமயமலை போன்ற பெருமலையில் இட்ட விளக்குத் தான் எல்லாத்திக்குகளிலும் ஒளிவிடும். "நால்திசைக்கும் விளக்காய நாத போற்றி" என்றார் அப்பர் சுவாமிகள்.

கோடி இரவிஒளி கூடுவிளக் கானாலும்
வீடுகண்ட காந்தி விளக்காமோ?- பீடுடையீர்!
எல்லா விளக்கும் விளக்கல்ல; சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு.

பெருமை மிக்க திருவள்ளுவரே! கோடி சூரியப்பிரகாசம் கொண்ட விளக்காக இருந்தாலும் கொள்கைக்கு உயிர் கொடுத்துப் புகழ் சூடி விடுதலை பெற்ற காந்தி விளக்குக்கு ஈடு ஆகுமா?

எல்லா விளக்கும் விளக்கு ஆகா; பெரிய மனிதர்க்குப் பொய்யாமை கொண்ட விளக்குத்தான் விளக்கு,

## 49

வாய்மையைவிட நல்லது எதுவுமே கிடையாது என்பது பெரியார் துணிவு. வாய்மைக்காக உயிர்விட்ட, இன்னல் பல தாங்கிய மகான்கள் சரித்திரம் கொண்டது இந்த நாடு.

தூய்மைஅரிச் சந்திரன்போல் தொன்மைத் தயரதன்போல்
வாய்மையுளான் காந்திமகான்; வள்ளுவரே!-சேய்கேளாய்!
யாம்மெய்யாக் கண்டவற்றுள் இல்லை, எனைத்தொன்றும்
வாய்மையின் நல்ல பிற.

புனிதமான அரிச்சந்திர மன்னனைப்போல, பழைய தயரதச் சக்கரவர்த்தியைப்போல வாய்மை கொண்டவன் காந்தி மகாத்மா, வள்ளுவனாரே!

மகனே! கேள்! நாம் எவ்வளவோ பொருள்களை ஆராய்ந்து பார்த்திருக்கிறோம். நாம் அலசிப் பார்த்த எல்லா அறங்கள் உள்ளும் வாய்மையைப்போல நல்லது இன்னொன்று உண்மையாக இல்லை.

## 50

உள்ளத்திலே சினத்தை நினையாதவன்; நினைத்ததையெல்லாம் முடிப்பான்.

யாரும் வியக்க அரிய செயல்புரிந்தான்,
பாருள் உயர்காந்தி; பண்ணவரே!- சீருடனே
உள்ளியது எல்லாம் உடன்எய்தும், உள்ளத்தால்
உள்ளான் வெகுளி எனின்.

பண்ணவரே! யாவரும் அதிசயிக்குமாறு அருமையான பல காரியங்கள் செய்தான் உலகத்திலே உயர்ந்த காந்தி.

மனத்திலே கோபம் கொள்ளானுல் அவன் நினைத்தது எல்லாம் உடனே முடியும்.

## 51

தனக்கு என்ன ஊதியம் கிடைப்பதானாலும் பிறருக்குத் தீங்குசெய்தல் கூடாது.

ஞாலம் பெறினும் நலிவுபிறர்க்கு எண்ணாத
சீலன் அருங்காந்தி, செந்தமிழீர்! - சாலச்
சிறப்புஈனும் செல்வம் பெறினும் பிறர்க்குஇன்னா
செய்யாமை மாசற்றார் கோள்.

செந்தமிழ்ப் பெரியவரே! உலகம் முழுதுமே தனக்குக் கிடைப்பதாயினும் அதன் பொருட்டுப் பிறருக்குத் துன்பம் செய்ய நினையாத நல் ஒழுக்கம் வாய்ந்தவன் அருமைக் காந்தி.

சாலவும் நன்மை தரும் செல்வம் பெறுவதாயினும் அதற்காக மற்றோர்க்குக் கேடு செய்யாமையே குற்றம் நீங்கிய பெரியோர் கொள்கை.

## 52

ஒருவன் கெடுதல் செய்கின்றான். அவனைத் தண்டிக்க வேண்டுவதுதான். எப்படி? அவனுக்கு அவன் வெட்கித் தலைகுனியுமாறு நன்மையைச் செய்து விடுவது. அதுதான் தண்டனை.

துன்பம் புரிந்திட்ட துட்டர்க்கும் நன்றுஆற்றும்
தன்மதுரை காந்தி, தனிப்புலவீர்! - என்மகனே!
இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்துவிடல்.

தனக்கு இடுக்கண் செய்த கொடியவர்க்கும் நல்லது செய்யும் தரும துரையாவர் காந்தி, ஒப்பற்ற வள்ளுவரே!

என் மகனே! துன்பம் செய்தவரைத் தண்டித்தல் என்பது, அவர் வெட்கப்படும்படி நல்ல நயத்தை அவர்க்குச் செய்வதுதான்.

## 53

*பிற உயிர்கள் அடையும் துன்பங்களைத் தான் அடையும் நோயாகக் கருதுபவனே அறிவாளன்.*

*பேரறிவு பெற்ருன்; பிறிதின்நோய், தானேற்ற*
*வீரன்; பெருங்காந்தி, மேலவரே! - பேர!*
*அறிவினல் ஆகுவது உண்டோ? பிறிதின்நோய்*
*தன்நோய்போல் போற்ருக் கடை.*

*பேர் அறிவு பெற்றவனுகிய, பிறிதின் வருத்தத்தைத் தன்னதாகக் கொண்ட வீரம் மிக்கவன் பெரிய காந்தி, மேலவராகிய வள்ளுவரே!*

*பேரப் பிள்ளாய்! அப்படி வேறு பிராணிகளின் நோவுகளையெல்லாம் தன் நோயாகக்கொண்டு பரிகாரம் செய்யாவிட்டால் அறிவு பெற்றதனுல் ஆய பயன்தான் யாது?*

## 54

*கேடு செய்தல் என்பது காந்தியின் அகராதியிலேயே இல்லை.*

*ஏதானும் எக்காலும் ஏவர்க்கும் கேடுசெயா*
*மேதாவி மெய்க்காந்தி, மேற்புலவீர்! - வாதென்?*
*எனைத்தானும் எஞ்ஞான்றும் யார்க்கும் மனத்தானும்*
*மாணுசெய் யாமை தலை.*

*மேலான புலமை நிரம்பிய புலவரே! எந்த வகையானும் எந்தச் சமயத்திலும் எவர்க்கும் தீங்கு செய்யாத மேதகை ஞானியாவான் உண்மையே உருவெடுத்த காந்தி.*

*அதில் விவகாரத்திற்கே இடமில்லையே. எவனெருவன் எக் காரணம் கொண்டும் எந்தக் காலத்திலும் எந்த மனிதனுக்கும் எண்ணத்தினுல் கூட கேடு சூழமாட்டானே அவனே தலைசிறந்த மகன்.*

## 55

காந்தியின் முக்கியக் கொள்கைகள் எவை? எவ்வளவோ அறங்களை இயற்றினும், கொல்லாமை, பொய்யாமை என்ற இரண்டையுமே அவன் உயிர்க்கொள்கையாகக் கொண்டான். அஹிம்சை, சத்தியம் என்று ஓயாமல் பறையடித்தான் காந்தி என்பதை யாரே அறியார். நமது செந்தமிழ்த் திருவள்ளுவனும் எவ்வளவோ அறங்களை வகுத்தாலும் இந்த இரண்டைத்தான் சிறப்பாக எடுத்துக்கொள்கின்றன். திருவள்ளுவனைப் போய் ஒருவன் கேட்டான்:- 'என்ன ஐயா! எதை எடுத்தாலும் அது சிறந்தது என்றுதானே அந்தந்த இடங்களில் பேசுகிறீர்! எல்லாவற்றுள்ளும் சிறந்தது எது? வெட்டு ஒன்று துண்டு இரண்டாகப் பதில் சொல்லும்!' என்றான்.

பதில் சொல்லுகின்றான் வள்ளுவன்:— 'சரி, தம்பி! நீ அறங்களைக் கேட்டுச் சலித்துப்போய் விட்டாப்போல் இருக்கிறது; சொல்கிறேன்; முதலாவது சிறந்த அறம் கொல்லாமை; இரண்டாவது பொய்யாமை, என்று இயம்பினான். காந்திக்கும் வள்ளுவனுக்கும் அடிப்படையில் அவ்வளவு ஒற்றுமை.

> கொல்லாமை பொய்யாமை கொள்கையா எங்காந்தி
> வல்லாளன் கொண்டதெவன்? வள்ளுவரே! - சொல்வேம்கேள்!
> ஒன்றாக நல்லது கொல்லாமை; மற்றதன்
> பின்சாரப் பொய்யாமை நன்று.

வள்ளுவனாரே ஓர் உயிரையும் கொல்லாதிருத்தல், பொய் பேசா திருத்தல் என்ற இரண்டையுமே எங்கள் வலிமை வாய்ந்த காந்தி கொள்கையாகக்கொண்டது எதனால்?

சொல்வோம், கேட்பாயாக! முதலாவது நல்லது கொல்லாமை; அதற்கு அடுத்தபடியாக நன்மை வாய்ந்தது பொய்யாமை.

## 56

வாலை முறுக்கிக்கொண்டு புலியானது தன்னை நோக்கி ஓடிவந்தாலும் அதைக் கொல்லமாட்டான்; தான் உயிர்கொடுப்பான் காந்தி. அப்படியே ஒரு கேள்விக்கு விடை அளித்தான் காந்தி.

'ஓர் புலி உங்களைக் கொல்ல வருமானால் நீங்கள் அப் புலியைக் கொல்ல ஏற்பாடு செய்வீர்களா? மாட்டீர்களா?' என்பது வினா.

'மாட்டேன்; கொல்லவேமாட்டேன்; ஓ புலியே! நான் இந்த உலகத்தில் இனி இருக்கவேண்டுவதில்லை என நீ நினைத்தால் என்னைக் கொல் என்று கூறுவேன்; கடவுள் சித்தம் அதுவானால் புலி என்னைக் கொல்லும்' என்பது காந்தியின் விடை.

கொல்லு புலிதனையும் கொல்லாது உயிர்கொடுக்கும்
வல்லமையான் காந்திமகான் வள்ளுவரே! - நல்மகனே!
தன்னுயிர் நீப்பினும் செய்யற்க தான்பிறிது
இன்னுயிர் நீக்கும் வினை.

கொல்லக்கூடிய புலியே வந்தாலும் அதனைக் கொல்லாது தன் உயிரையும் கொடுக்கத் துணியும் வன்மை கொண்டவன் காந்தி மகான்; வள்ளுவப் பெரியீர்!

தன் உயிரை இழப்பதாயினும் அதற்காக அஞ்சி மற்றொரு பிராணியின் இனிய உயிரைத் தான் போக்கும் காரியத்தில் தலைப்படலாகாது.

## 57

ஏகசக்கராதிபதிபோல் தேசத்தையாண்ட காந்தி விரைவில் நம்மை விட்டு ஓடிவிட்டான்.

கட்டி உலகாண்ட காந்திப் பெருமானார்
சட்டென்று அகன்றதெவன்? சான்றோரே!- சிட்ட!
நெருநல் உளன்ஒருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்துஇவ் உலகு.

சால்புடைய வள்ளுவப் புலவரே? உலகத்தைக் கட்டி அரசாண்ட காந்தியடிகள் மிக விரைவாக இவ் உலகை நீத்தது என்ன விந்தை?

சிரேஷ்டமானவனே! இதை உணரவில்லையா நீ? நேற்று இருந்த ஒருவன் இன்றைக்கு இலன் என்ற பெருமையைத்தானே இவ் உலகம் உடையதாக இருக்கின்றது.

## 58

பெரிய தவம் செய்து உயர்ந்த மறக்க முடியாத உடல், ஒரு நொடியில் உயிரற்றதாகி விட்டதே; அந்தோ!

பல்லாண்டு வாழ்ந்த பழைய தவஉடலை
ஒல்லை விடுத்தகன்ருன் ஒண்காந்தி- நல்லீர்!
குடம்பை தனித்தொழியப் புட்பறந் தற்றே;
உடம்போடு உயிரிடை நட்பு.

நல்லவராகிய வள்ளுவரே! பல ஆண்டுகள் கூடி வாழ்க்கை நடாத்திய பழைய தவ வடிவத்தை விரைவில் விட்டு நீங்கிவிட்டானே ஒளிபொருந்திய காந்தி மகாத்மா.

முட்டையானது தனியாகக் கிடப்ப அதனுள் பொருந்தியிருந்த பறவைக் குஞ்சு பறந்து போவது போன்றதுதான் உடம்புக்கும் உயிருக்கும் உள்ள தொடர்பு.

## 59

காந்தியடிகள் உடல்கூட இப்படி மறைக்கப்படும் இந்த உலகத்தில், தான் எவ்வளவோ காலம் வாழப்போவதாக நினைத்து மனிதன் பல மாயங்களைச் செய்கின்ருன்.

கண்இமைக்கும் முன்னரே காந்திஉடல் விட்டதெவ்ன்?
விண்தமிழ்தேர் வள்ளுவரே! விள்ளுவீர்!- கண்ணே!
உறங்கு வதுபோலும் சாக்காடு; உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு.

மேலான தமிழ் தேர்ந்த வள்ளுவரே! கண் மூடித் திறப்பதற்குள்ளே காந்தி உடல் விடுத்தது எதனுல்? சொல்லும்!

கண்ணே! சாவது உறங்குவது போல; அதற்கு அதிக நேரமா வேண்டும்? பிறப்பும் அப்படித்தான். அது உறங்கி விழிப்பது போல.

## 60

எல்லா ஆசையையும் விட்டு ஜோதியில் கலந்தான் காந்தி.

ஆசை அறவிட்டு அருள்வடிவம் ஆயினான்,
தேசுதிகழ் காந்தி; செழும்புலவீர்!- பாசமின்றி
யாதனின் யாதனின் நீங்கியான்; நோதல்
அதனின் அதனின் இலன்.

செழுமை மிக்க புலவரே! ஆசையை முழுதும் நீக்கி அருளே வடிவமாக அமைந்து நின்றான் ஒளி விளங்கும் காந்திமகான்.

பாசத்தைவிட்டு எந்தெந்தப் பொருளில் கருத்தைச் செலுத்தாது விடுதலையை ஒருவன் மேவுகின்றானோ அந்தந்த வரையும் அவனுக்கு நோய் இல்லை.

## 61

நாமெல்லாம் நாவின் சுவைக்காகவே சாப்பிடுகிறோம். காந்தி அப்படி அல்ல.

நாவுக்கா உண்ணான்; நசைஎதினும் வையாதான்;
பாவலரே! காந்திப் பரந்தாமன்- மேவ
அடல்வேண்டும் ஐந்தன் புலத்தை; விடல்வேண்டும்
வேண்டிய எல்லாம் ஒருங்கு.

பாவில் வல்ல புலவரே! காந்திப் பெரியோன் நாவுக்காகப் புசிக்க மாட்டான்; அவனுக்கு எதினுமே விருப்பம் இல்லை.

ஐந்து இந்திரியங்களின் ஆசையைக் கொல்லவேண்டும்; தேவையான எல்லாவற்றையும் ஒன்றாக விட்டுவிடல் வேண்டும். இதுதானப்பா பெரியோனுக்கு இலக்கணம்.

## 62

யான், எனது என்ற அகங்கார மமகாரங்களை அகற்றவேண்டும். இதை நான் செய்தேன் என்ற செருக்குக் கூடாது. இது என்னுடையது என்ற இறுமாப்பும் கொள்ளக்கூடாது. இவ் இரண்டையும் விட்டவனுக்கே வீடு.

தனக்கென்று எதுவுமில்லை; தான்என்பது இல்லை;
மனக்கினிய நம்காந்தி வள்ளற்கு- எனக்கினியீர்!
யான்எனது என்னும் செருக்கறுப்பான் வானோர்க்கு
உயர்ந்த உலகம் புகும்.

எனக்கு இனிய புலவரே! மனத்துக்கு இனிமைவாய்ந்த நம் காந்தி வள்ளலுக்கு அவனுக்கென்று, வீடு, வாசல், சொத்து ஊர் முதலிய எதுவுமே கிடையாது; ''யாதும் ஊரே யாவரும் கேளிர்.'' தான் என்ற அகந்தையே அவனிடத்து இல்லை.

யான் எனது என்ற செருக்கை அறுப்பவன் வானவர்களும் அடைதற்கரிய பெரிய உலகத்தை அடைவான்.

## 63

எதினும் சந்தேகம் தெளிதல் வேண்டும். தெளிந்தவனே மெய்ப் பொருள் காண்பான்.

தேறினான் மெய்ப்பொருளை; செய்தான் உயர்கடமை;
ஏறினான் கீர்த்திஎல்லை; எங்காந்தி.-பேறுடையீர்!
ஐயத்தின் நீங்கித் தெளிந்தார்க்கு வையத்தின்
வானம் நணியது உடைத்து.

தவப்பேறுதாங்கிய தமிழ்ப் புலவர் பெருமானே! உண்மை பொருளைத் தெளிந்தான்; சிறந்த கடமையைச் செய்தான்' புகழின் எல்லை உச்சி வரை ஏறிவிட்டான் எமது காந்தி.

சந்தேகம்விட்டுத் தெளிவுகண்டவர்க்கு இவ் வையகத்திலேயே வானுலகம் நெருங்கிய தொடர்புடையதாகி விடுகிறது.

## 64

காமம் வெகுளி மயக்கம் விட்டார்க்கு நோயே இல்லை.

பிறவிப் பிணிகொன்றுன்; பேறுடைய பெம்மான்,
அறிவாளன் காந்தி அறவோன். - துறவுடையீர் !
காமம், வெகுளி, மயக்கம் இவைமூன் றன்
நாமம் கெடக்கெடும் நோய்.

துறவுகொண்ட தூயோரே! பேறுபெற்ற பெருமாளுகிய அறிஞன் காந்தி என்றும் தர்ம சொருபி; பிறவி நோயை மாய்த்து விட்டான்.

விருப்பம் கோபம் அறியாமை என்ற முப்பொருளின் பெயரே இல்லாமல் அடித்துவிட்டால் பிணி அகன்றேவிடும்.

## 65

இவ் எல்லாவற்றுள்ளும் பொல்லாதது விருப்பந்தான். இச்சையைக் கொல்வதே இன்பம்.

இச்சைநோய் மாய்த்தே,நல் இன்பப் பெரும்பேற்றில்
நிச்சலும் நின்றிட்டான் நீள்காந்தி;-மெச்சறிவீர் !
இன்பம் இடையருது ஈண்டும்; அவாஎன்னும்
துன்பத்துள் துன்பம் கெடின்.

மெச்சத்தக்க அறிவு கைவந்த புலவரே! விருப்ப நோயைக் கொன்று இன்பம் என்ற பெரும் பதவியில் நாள்தோறும் நின்றுன் நீண்ட புகழ்க் காந்தி.

ஆசை என்று சொல்லக்கூடிய துயரத்துக்குள் எல்லாம் பெரிய இடுக்கண் தொலையுமாளுல் இன்பமானது இடையீடின்றி நெருங்கும்.

## 66

என்னதான் இருந்தாலும் ஊழ்வினையை வெல்லல் முடியாததே.

கோடி உயிரைக் கொடுத்தாலும் ஈடாகா,
நாடாண்ட காந்திதனை நாம்இழந்தோம்-பீடுடையீர்!
ஊழில் பெருவலி யாவுள? மற்றொன்று
சூழினும் தான்முந் துறும்.

பெருமை உடையவரே! கோடிபேர் உயிர்கொடுத்தாலும் சமம் செய்ய முடியாத பெருமையுடைய காந்தியின் உயிரை - அரசன் என்ற பட்டம் சூடாமலேயே நமது நாட்டை அரசாண்ட காந்தியின் உடலை நாம் இழந்து விட்டோம்.

ஊழை விடப் பெரிய வலிமை வாய்ந்தது என்னப்பா இருக்கிறது? எவ்வளவு தான் நாம் முயன்றாலும் ஊழ் நம்மை வென்று விடும்.

## 67

நாடு ஆளும் மன்னர்க்கு, அல்லது அமைச்சர்க்கு, அன்றி அமைச்சரை ஆட்டுவிப்போர்க்கு வேண்டுவ யாவை?

அஞ்சாமை, கல்வி, அயராமை ஆயவற்றால்
துஞ்சாது நாடாண்டான் தொல்காந்தி.- வஞ்சமிலீர்!
தூங்காமை, கல்வி, துணிவுடைமை இம்மூன்றும்
நீங்கா நிலன்ஆள் பவற்கு.

வஞ்சம் அறியா வள்ளுவரே! தைரியம், படிப்பு, சோர்வு இன்மை ஆகிய வற்றைக் கொண்டு உறங்காமல் நாட்டை ஆண்டான் பழைய அறங்காத்த காந்தி.

நிலத்தை ஆளும் வேந்தற்கு உறங்காமையும் கல்வியும் துணிவும் நீங்காமல் இருக்கவேண்டிய இன்றியமையாப் பொருள்கள்.

## 68

யாம் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம் என நினைப்பார் அறிஞர்.

தாம்பெற்ற இன்பமெலாம் தம்மோடு உறவுடைய
நாம்பெறவே நாடினன் நம்காந்தி- ஆம்மகனே!
தாம்இன் புறுவது உலகுஇன் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்.

தான் அடைந்த இன்பத்தை யெல்லாம் அவனோடு தொடர்பு கொண்ட நாமும் பெறவேண்டும் என்று எண்ணி எவ்வளவோ பாடுபட்டான் நம்முடைய காந்தி.

ஆம், மகனே! தாம் பெற்ற இன்பத்தை இவ் உலகம் முழுதும் பெறுதல் காண ஆசைப்படுவோரே படித்த அறிஞர்கள்.

## 69

தடுமாறும் உலகத்தை நல்வழிப்படுத்தி, ஒழுக்கப் பாதையிலே செலுத்தும் வழிகாட்டி, காந்தியின் திருவாய் மொழிகள்.

தீமைக் கடல்ஏறத் திண்மையுறு காந்திஉரை
மாமறையே நற்புணையாம்; வள்ளுவரே!- ஆமாம்!
இழுக்கல் உடையுழி ஊற்றுக்கோல் அற்றே,
ஒழுக்கம் உடையார்வாய்ச் சொல்.

வள்ளுவரே! வலிமை பெற்ற காந்தி சொல்லும் வாய்மொழி ஆகிய சிறந்த வேதமே துன்பமென்னும் கடலைக் கடக்கும் தோணியாகும்.

ஆம்! ஆம்! வழுக்கிவிடும் இடத்தில் ஊன்று கோலாக உதவுவது ஒழுக்கம் பெற்றவர் வாய் நின்றும் வரும் வார்த்தைகளே.

## 70

தனக்கென்று புற உடைமை எதுவும் வேண்டுவதில்லை நாஸ்திகட்கு. அவைகள் அழியும் தன்மையன.

சொத்திலாக் காந்திதனைத் தொல்உலகம் எல்லாமே
மெத்தநச்சிப் போற்றுவதென்? மேலவரே!- சுத்த
அறிவுடையார் எல்லாம் உடையார் அறிவிலார்
என்னுடையர் ஏனும் இலர்.

ஒரு பொருளுக்கும் சொந்தக்காரனல்லாத காந்தியைப் பொருள் உடையாரையே மதிக்கும் இப்பழைய உலகம் முழுதும் மிகவும் விரும்பிப் போற்றுதல் எதனுல் சொல்லும்; மேலான புலமை வாய்ந்தவரே!

மெய் அறிவு கைவரப்பெற்றவர் எல்லாமே உடையவராவார். அஃதி லாதவர் எவ்வளவு பல கோடிக்கு அதிபதியாயினும் ஒன்றுமே இல்லாதவர்.

## 71

மலைமலையாகக் குற்றங்களையே செய்து கொண்டு உதிர்த்துவிட்டுத் திரியும் மனிதர்கள் மல்கிய மாநிலத்தில் ஒரு சிறு குற்றம் எங்காவது நேர்ந்தால் மிகப் பெரிதாகக் கொண்டு வருந்தும் சில பெரியாரும் இருக்கத் தான் செய்கிறர்.

இம்மிப் பிழையை இமயமலை என்றிட்டான்,
நம்மை உடைக்காந்தி; நாவலரே!- அம்ம!
தினைத்துணையாம் குற்றம் வரினும் பனைத்துணையாக்
கொள்வர் பழிநாணு வார்.

ஒரு சிறு தவறுதலை இமயமலை அத்துணை பெரிது என்று சொன்னன், நம்மை ஆட்கொண்ட காந்திப் பெருமான்; நாவில் வல்ல நாயகரே!

ஐயோ! தினையளவு குற்றம் நேர்ந்தாலும் பனையளவு பெரிதாகவே கொள்வர் பழிக்கு வெட்கப்படுபவர்.

## 72

சிறந்த மனிதர்களைத் தம்மவராகப் பெறும் தகுதி எவர்க்கும் சாலப் பெருமை தருவது.

பேருலகில் ஈடில்லாக் காந்திதனைப் பெற்றெடுத்த
பாரதத்தாய் பேறுடையாள், பாவலரே!- சீரோய்!
அரியவற்றுள் எல்லாம் அரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கொளல்.

பெரிய உலகமெல்லாம் தேடினாலும் ஒப்புக் காணமுடியாத காந்தியைப் பெற்ற இந்திய மாதா பாக்கியசாலி; புலவரே!

சிறந்த மகனே! அருமையான பொருள் எல்லாவற்றுள்ளும் அருமையானது எது தெரியுமா? பெரியாரைப் போற்றித் தம்மவராக கொள்தல். அந்தப் பெரியார்க்குள் எல்லாம் பெரியோனைப் பெற்றவள் பேற்றைப் பற்றி பேசவா வேண்டும்?

## 73

பல மனிதர்களைப் பகைத்துக் கொண்டாலும் பரவாயில்லை. நல்ல மனிதன் உறவை விடக்கூடாது. என்ன துன்பம் வந்தாலும் அதன் பொருட்டுத் தாங்கத்தான் வேண்டும்.

துன்பம் உறவரினும் தூயபுகழ்க் காந்திசொலை
அன்புடனே தேசம் அணிவதெவன்?- நன்புலவீர்!
பல்லார் பகைகொளலில் பத்தடுத்த தீமைத்தே
நல்லார் தொடர்கை விடல்.

அவன் சொல்லைக் கேட்பதனாலே எவ்வளவு துயரம் அனுபவிக்க நேர்ந்தாலும் புனிதமான கீர்த்தியுடைய காந்தியின் ஆணையை நாடு அன்போடு தலைமேல் தாங்குவது எதனால்? நல்ல புலவரே!

பலர் பகைகொள்ளல் எவ்வளவு தீமை பயப்பதென்பது உமக்குத் தெரியுமே! அதைவிடப் பத்து மடங்கு கெடுதல் அப்பா, நல்ல மனிதர்களுடைய பந்தத்தை அறுத்துக் கொள்தல்.

## 74

நீருக்கு நிறமும் இல்லை; குணமும் இல்லை. நிலத்தின் தன்மைக்கேற்ப அது மாறுபடும். அது போலவே மனிதரும் சார்ந்ததன் வண்ணம் ஆகின்றார்.

அண்ணல்உயர் காந்தி அடிச்சுவடு பற்றுவோர்
உண்மையறிவு எய்திநனி உய்வரே- திண்ணம்;
நிலத்தியல்பால் நீர்திரிந்தற் றாகும் மாந்தர்க்கு
இனத்தியல்பது ஆகும் அறிவு.

பெருமைமிக்க சிறந்த காந்தியின் அடிச்சுவடு பற்றி நடப்போர் மெய்யறிவு கைவரப் பெற்று மிகுதியும் மேலோங்குவர்.

நிச்சயம் நிலத்தின் தன்மைக்கேற்ப நீர் வேறுபாடு அடைவது போல மனிதர் தாங்கள் சேர்ந்த இனத்தின் நீர்மைக்கேற்பவே உயர்வு தாழ்வு பெறுகிறார்.

## 75

ஒருவன் பெரியவனா சிறியவனா என்பதைப் பிறரைக் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டாம். அவன் செய்யும் காரியங்களைக் கொண்டே தீர்மானித்து விடலாம்.

தன்னை உயர்த்துவதும் தாழ்த்துவதும் தன்செயலே;
மன்காந்தி மாசற்றான் வள்ளுவரே!- பின்னென்?
பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல்.

வள்ளுவரே! தன்னைச் சிறப்பிப்பதும் கீழே தள்ளுவதும் தன் செய்கையிலேயே இருக்கிறது. நிலை பெற்ற காந்தி குற்றமற்றவன்.

வேறு என்ன? ஒருவன் பெருமைக்கும் ஒருவன் சிறுமைக்கும் அவனவன் செய்கின்ற காரியங்களே அளவு கருவிகள்.

## 76

மறவாமல் ஒருவன் கருமமே கண்ணாக இருப்பானானால் அவனுக்கு அரிய காரியமே இல்லை.

வெள்ளையரே நம்நாட்டை விட்டோடச் செய்திட்டான்,
வள்ளல் உயர்காந்தி; வள்ளுவரே!- பிள்ளாய்!
அரியஎன்று ஆகாதது இல்லை;பொச் சாவாக்
கருவியால் போற்றிச் செயின்.

வெள்ளைக்காரர்களையே நமது நாட்டை விட்டு ஓடும்படி செய்தான் வள்ளலாகிய சிறந்த காந்தி, வள்ளுவரே!

குழந்தாய்! மறவாத துணை கொண்டு சிரத்தையாகச் செய்தால் செய்ய முடியாதது எதுவுமே இல்லை.

## 77

ஒரு காரியம் முடியும் வரை, திரும்பத் திரும்ப நினைத்துச் செய்தால் நினைத்தது முடியும்.

ஓயாது அறத்தையெலாம் உள்ளிஉள்ளிச் சொற்றனனே
தாயான காந்தி; தமிழ்ப்பெரியீர்!- சேயோனே!
உள்ளியது எய்தல் எளிதுமன்; மற்றுந்தான்
உள்ளியது உள்ளப் பெறின்.

தமிழ்ப் பெரு வள்ளுவரே! நாட்டுக்குத் தாயாக இருந்து காத்த காந்தி, இடையறுமல் அறங்களை நினைத்து நினைத்துச் சொல்லிக் கொண்டேயிருந்தனனே.

ஆம்! மகனே! எண்ணியதை மறுபடியும் மறுபடியும் கருதுபவர் எண்ணியவாறே எளிதின் அடைவர்.

## 78

உலகத்துக்கு உபகாரமான ஒருவன் பிரிவு எல்லாரையும் துக்கத்தில் ஆழ்த்தும். எல்லாம் சொந்த நன்மை கருதித்தான். சுற்றத்தார் ஏன் அழுகிறார்? பிரிந்தவரால் தங்கட்கு ஏற்பட்ட நஷ்டத்திற்காக. காந்தி எல்லார்க்கும் உதவியாக இருந்தான். அவன் பிரிவு அனைவர் தலையிலும் இடி விழுந்ததுபோல் ஆகிவிட்டது.

காந்தி மறைவால் கடல்சூழ் உலகில்உள
மாந்தரெலாம் கண்ணீர் வடித்தனரே!- வாய்ந்த
கருமம் சிதையாமல் கண்ணோட வல்லார்க்கு
உரிமை உடைத்துஇவ் உலகு.

காந்தி பிரிவுக்குக் கடலால் சூழப்பட்ட புவனியில் உள்ள மக்கள் அனைவரும் கண்ணீர் பெருக்கினார்.

பொருந்திய காரியத்தைச் சிதறவிடாமல் கண்ணருள் செய்ய வல்லவர்க்கு இவ் உலகம் கடப்பாடு உடையது.

## 79

ஒவ்வொருவன் உள்ளமும் எப்படி அமைகிறதோ அவ்வளவே அவனவன் உயர்வு.

உள்ளத்து உயர்வே உலகைக் குலுக்கியது;
வள்ளுவரே! காந்திக்கு வாய்த்தபுகழ்- விள்ளுவீர்!
வெள்ளத் தனைய மலர்நீட்டம்; மாந்தர்தம்
உள்ளத் தனையது உயர்வு.

காந்தியின் எண்ணச் சிறப்புத்தான் உலகத்தையே ஒரு அசைப்பு அசைத்து விட்டது. காந்திக்கு வாய்த்த அந்தப் புகழை வாயாரப் பாடிப் பெருமையடையும் வள்ளுவரே!

நீர் எவ்வளவு உயர்கிறதோ அவ்வளவு தூரம் மேலோங்கித் தோன்றும் தாமரை, அல்லி முதலிய பூக்கள். அது போல மக்களின் உள்ளம் எவ்வளவு உயர்கிறதோ அவ்வளவு சிறப்பை அன்னார் அடைகின்றார்.

## 80

குடியை வாழ்விக்க வேண்டும் என்று எண்ணுபவன் - நாட்டை நாடாக்க வேண்டும் என்று கருதுபவன் - மனிதன் என்பவனை யெல்லாம் உண்மையாகவே மனிதனுக்க வேண்டும் என்று நினைப்பவன், மடி என்ற சோம்பலை முதலில் மடிக்க வேண்டும்.

சோம்பல்கெடுத்து இந்நாட்டுத் தொல்குடிகள் வாழவைத்தான்
தாம்பெரிய காந்தி; தனிப்புலவீர்!- ஆம்கேள்!
மடியை மடியா ஒழுகல் குடியைக்
குடியாக வேண்டு பவர்.

ஒப்பற்ற புலவரே! சோம்பலை விட்டு இந்த நாட்டுப் பழங்குடிகட்கு வாழ்வு நல்கினுன், தனக்குத்தானே நிகரான பெரிய காந்தி.

ஆம், கேட்பாயாக! குடும்பத்தைக் குடும்பமாக்க விரும்புபவர் சோம்பேறித்தனத்தைக் கொல்ல வேண்டும்.

## 81

திருமால் உடல் நீண்டு உலகை அளந்தான் என்று சொல்வர். காந்தி புகழ் நீண்டு பூஉலகை அளவிட்டான்.

எல்லா உலகும் இசைஏறி வாழ்ந்தனனே!
நல்லோன் நமகாந்தி. நன்றறிவீர்!- வல்லாய்!
மடியிலா மன்னவன் எய்தும் அடியளந்தான்
தாஅயது எல்லாம் ஒருங்கு.

நல்லறம் அறிந்த தொல்பெரும் புலவீர்! எல்லா உலகத்தும் புகழ் ஆட்சி செலுத்தி வாழ்ந்தனன் நன்மையே வடிவான நம்முடைய காந்தி.

வல்லவனே! சோம்பர் இல்லாத அரசன், அடியளந்த கடவுள் தாண்டிய உலகம் முழுதையும் அடைவான்.

## 82

தான் இன்பம் நாடாமல் கருமமே செய்பவன் தன்னை அடைந்தார் துயரம் கொல்வான்.

தாங்கரிய துன்பமெலாம் தான்ஏற்று நாட்டுக்கு
வாங்கரிய பேரரசு வாங்கினான்-தேங்காந்தி,
இன்பம் விழையான், வினைவிழைவான் தன்கேளிர்
துன்பம் துடைத்துஊன்றும் தூண்.

தாங்க முடியாத கொடுந் துன்பங்களையெல்லாம் தான் தாங்கி, வாங்குதற்கு முடியாத பெரிய அரசை நம் நாட்டுக்கு வாங்கித் தந்தான் தேனனைய காந்தி.

இன்பத்தை விரும்பாமல், காரியத்திலேயே கண்ணாக இருப்பவன், தன்னைச் சேர்ந்தவர்கட்கு நேர்ந்த இடுக்கண் நீக்கி, அத் துன்பத்தைத் தாங்கிக்கொள்ளும் தூணாகவும் ஆகின்றான்.

## 83

துயரம் இவ்வுலகில் எல்லார்க்கும் ஒரொருகால் தோன்றவே செய்யும். துன்பத்தைச் சிரித்து வெல்லவேண்டும். அப்படிச் செய்பவனே வீரன்.

கொல்லு படைவரினும் கொஞ்சமுமே அஞ்சிடான்,
வல்ல பெருங்காந்தி. வள்ளுவரே! - செல்வ!
இடுக்கண் வருங்கால் நகுக; அதனை
அடுத்துஊர்வது அஃதொப்பது இல்.

உயிர் வாங்கும் படைக்கலங்கள் திரண்டு வந்தாலும் சிறிதும் கலங்க மாட்டான், வன்மைமிக்க பெருமைக் காந்தி, வள்ளுவரே!

என் செல்வனே! துன்பம் வந்தால் அதைப் பார்த்துச் சிரித்தல் வேண்டும். அத் துன்பத்தை வெல்லச் சிரிப்பைப்போலச் சிறந்த பொருள் வேறு எதுவும் இல்லை.

## 84

எவ்வளவு துன்பமாக இருந்தாலும் ஞானி மனத்தே கருதிவிட்டானுனல் அவ்இடும்பை அழிந்தே தீரும்.

நாட்டைப் பிடித்தே நலிந்தபெரும் நோய்கொன்ற
பாட்டாளி நம்காந்தி பாவலீர்! தாட்டீக!
வெள்ளத்து அனைய இடும்பை, அறிவுடையான்
உள்ளத்தின் உள்ளக் கெடும்.

தேசத்தைப் பிடித்து வருத்திய பெரிய அடிமைப் பிணியைப் போக்கிய உழைப்பாளி நம்முடைய காந்தி, பா வல்லவரே!

திண்ணியனே! வெள்ளம் போன்ற பெருந் துன்பமெல்லாம் அறிவுடையவன் மனத்திலே நினைத்தானுனல் பறந்தோடமாட்டாதா?

## 85

இன்பத்தை விரும்புபவன்தான் "ஐயோ அது கிடைக்கவில்லையே" என்று வருந்துவான். இன்பத்தை இச்சியாதவனுக்குத் துன்பமே இல்லை.

ஊழி பெயர்ந்தாலும் உள்ளம் கலங்காதான்,
கோழை தவிர்காந்தி. கூர்மதியீர்! - வாழியரோ!
இன்பம் விழையான் இடும்பை இயல்பென்பான்
துன்பம் உறுதல் இலன்.

நுண்ணிய அறிவுடைய புலவரே! எல்லாம் அழியும் ஊழிக் காலம் வந்தாலும் மனம் தடுமாற்றம் அடையாதவனுகிய, அச்சத்தை நாட்டை விட்டு அகற்றிய காந்தி வாழட்டும்.

இன்பத்தை விரும்பாது இடுக்கண் இயற்கையே என்று கூறுகின்ற ஒருவனைத் துன்பம் ஒன்றும் செய்யமுடியாது.

## 86

துன்பத்தையே இன்பம் என ஏற்றவன் துன்புறுத்தியவராலேயும் போற்றப்படுவான்.

சிறையில் அடைத்தோரும் சேர்ந்து புகழும்
அறவோன் அருங்காந்தி அண்ணல்.-பிறிதென்னே?
இன்னுமை இன்பம் எனக்கொளின், ஆகுந்தன்
ஒன்னுர் விழையும் சிறப்பு.

அவனைச் சிறைபிடித்து வைத்தவர்கூடப் பிறருடன் கூடிப் பாராட்டக் கூடிய அருமையான குணம் வாய்ந்தவன் அறங்காக்கும் காந்தி அண்ணல்.

வேறு என்ன அப்பா! துன்பத்தையெல்லாம் ஒருவன் இன்பமாகக் கொண்டானுல் எதிரிகளும் இச்சிக்கும் பெருமை அவனுக்குத் தானுகவே உண்டாகிவிடுகிறது.

## 87

அமைச்சர் என்று சொல்லப்படும் மந்திரிகட்கு எவ்வளவோ பண்புகள் வேண்டியிருக்கிறது, மந்திரிகட்கும் மந்திரிகள் தலைவனுக்கும்கூட ஒருவன் மந்திராலோசனை கூறவேண்டுமானுல் அவனுக்கு எல்லையற்ற சிறப்புக்கள் இருக்கவேண்டும்.

அமைச்சர்க்கு அமைச்சனுய் ஆளாக நம்மைச்
சமைத்தான் தனிக்காந்தி. சான்றீர்! - அமைதி
தெரிதலும் தேர்ந்து செயலும் ஒருதலையாச்
சொல்லலும் வல்லது அமைச்சு.

மந்திரிகட்கெல்லாம் மந்திரியாகிய ஒப்பற்ற காந்தி, மண்ணுகக் கிடந்த நம்மை மனிதர்களாக ஆக்கினுன், சால்புடையவரே!

அமைதியாக எதையும் ஆராய்தலும் ஆராய்ந்தபடி செய்தலும் எதினும் அப்படியும் செய்யலாம் இப்படியும் செய்யலாம் என்னுமல் துணிவாகச் சொல்வதும் வல்லவனே மந்திரி.

புத்தி நுட்பம் வாய்ந்தவர் எதையும் சாதித்து விடுவர்.

யாராலும் எண்ணற்கு அரிய வினைமுடித்துப்
பார்ஏத்தக் காந்திவிண் பற்றினன். - சீரோய்!
மதிநுட்பம் நூலோடு உடையார்க்கு அதிநுட்பம்
யாவுள முன்நிற் பவை?

யாரும் நினைப்பதற்கே முடியாத காரியங்களையெல்லாம் செய்து முடித்து, பரந்த பெரிய உலகம் முழுதும் பரவக் காந்திமகான் அமர வாழ்க்கை எய்தினன்.

சிறப்புப் பொருந்தியவனே! நூல் அறிவோடு நுண்ணறிவும் உடையாரால் செய்ய முடியாத அரிய காரியங்களும் இவ் உலகத்தில் இருக்கின்றனவா?

## 89

வாய் எல்லாருக்கும் இருக்கின்றது. பலருடைய வாய், சாப்பாட்டைத் தவிர வேறொன்றையும் அறியாது. இன்னும் சிலர் வாய், எதையாவது உளறிக்கொண்டே யிருக்கும். உலகைப் பிணிக்கும் உயர்ந்த சொற்களைப் பொழியும் திருவாய், ஒரு சிலர்க்கே அமைகின்றது.

சீலத் துயர்காந்தி செய்ய மொழிபருக
ஞாலம் துடிக்குதே நாவலரே! - ஏலவே
கேட்டார்ப் பிணிக்கும் தகைஅவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாம் சொல்.

ஒழுக்கத்திலே உயர்ந்த காந்தியின் நல்ல உரைகளைக் குடிக்க உலகம் துடிதுடிக்கின்றதே, சொல்லில் வல்ல புலவரே!

கேட்டவரைப் பிடித்துக்கட்டும் தகுதியை ஏற்று, கேளாதவரும் கேட்காது தவறிவிட்டோமே என வருந்தி விரும்புமாறு பகர்வதே சொல் என்பது.

## 90

சொல் வல்லவனை வெல்லல் அருமை.

ஆய்ந்து தெளிந்த அரிய சிறப்புடைய
காந்திதனை வெல்லல் கடினமே. - ஏந்தால்!
சொலல்வல்லன் சோர்விலன் அஞ்சான்; அவனை
இகல்வெல்லல் யார்க்கும் அரிது.

எதையும் ஆராய்ந்து தேறிய அருமையான பண்பாடுடைய காந்தியை வெற்றி கொள்ளல் கடினமான காரியம், ஏந்தலே !

பேச்சு வல்லவன் - தளர்ச்சியே இல்லாதவன் - பயப்படவே மாட்டான் ஒருவன் என்றால் அவனை வெல்ல யாராலேதான் ஆகும் ?

## 91

எதையும் முறைப்படுத்திச் செவ்வையாக ஒருவன் சொல்லக் கூடுமானால் அவன் பேச்சை நொடியில் கேட்கும் உலகம்,

ஏவும் பணியாற்றும் இப்பேர் உலகமெலாம்;
தேவரே! காந்தி சிறப்பென்னே! - மேவி
விரைந்து தொழில்கேட்கும் ஞாலம் நிரந்துஇனிது
சொல்லுதல் வல்லார்ப் பெறின்.

தெய்வப் புலவரே! இப்பரந்த உலகமெலாம் காந்தி பணித்த தொழில் செய்கின்றதே ; என்னே அவன் சிறப்பு இருந்தவாறு!

பொருந்த முறையாகச் சொல்ல வல்லவரைப் பெற்றால் உலகம் விரைந்து அப்பணி கொள்ளுதல் இயற்கையே.

## 92

சில பேச்சுக்களால் விளங்க வைக்க முடியாதவர்தாம் சும்மா பேசிக் கொண்டே யிருப்பர்.

சுருங்கும் மொழியினுல் தொன்மையறம் சொற்ற
அருங்கலைஞன் காந்தி அமரன்! - நெருங்கப்
பலசொல்லக் காமுறுவர் மன்றமா சற்ற
சிலசொல்லல் தேற்ரு தவர்.

சுருங்கிய சொற்களினுல் பழைய அறங்களை எல்லாம் சொல்லிய அருங்கலை விநோதன் காந்தித்தேவன்.

குற்றமற்ற சில சொற்களால் நன்ருகத் தெளியவைக்க அறியாதவரே சுற்றி வளைத்துப்பேச ஆசைப்படுவர்.

## 93

புகழுக்கும் நன்மைக்கும் பொருந்தாதவற்றை ஒருபோதும் பேசுதல் கூடாது.

பொன்றவரும் செய்கை புரியான் ஒருபோதும்;
தென்தமிழீர்! காந்திச் செகப்பெரியோன் - என்தமிழா!
என்றும் ஒருவுதல் வேண்டும், புகழொடு
நன்றி பயவா வினை.

தென் தமிழ் வல்லீர்! அழிவுதரும் காரியத்தை எக்காலத்தும் செய்ய மாட்டான் உலகில் பெரிய காந்தி.

எனது தமிழ்மகனே! கீர்த்தியுடன் எந்த நலனும் தராத வினையை எப்பொழுதும் நீக்கவே வேண்டும்.

## 94

சொல்லுவதைப் போகும் போக்கிலேயே சொல்லிவிட்டுப் போவார் பலர்; சொன்னபடிமட்டும் செய்யமாட்டார். இதுதான் சாதாரண மக்களின் இயல்பு. காந்தி இதில் முற்றும் மாறுபட்டவன்; எதையும் செய்து பார்த்துத்தான் சொல்வது அவன் மரபு. தன்னால் செய்ய முடியாததைப் பிறருக்குச் சொல்லி என்னபயன் என்பது காந்தியின் எண்ணம். இவ் விஷயத்தில் திருவள்ளுவரையே திணர அடித்துவிட்டான் காந்தி.

செய்யாமல் சொல்லான்;நும் சீருரையை வள்ளுவரே!
பொய்யாகப் போக்கினன் மெய்க்காந்தி - மெய்யாமோ?
சொல்லுதல் யார்க்கும் எளிய; அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல்.

'சொல்லுவது எல்லார்க்கும் எளிமைதான்; சொல்லியபடி செய்வது தான் அருமை',

என்று நீர் சொன்னது உண்மையாகுமா வள்ளுவரே! நுமது அச் சீரிய உரையைப் பொய்யாகச் செய்து விட்டானே உண்மைக்காந்தி. அவன் செய்யாமல் எதையும் சொல்லுவதில்லையே.

## 95

திண்ணமாக மட்டும் ஒன்றை எண்ணிவிட்டால் நினைத்ததைப் பெறலாம்.

எண்ணாத எண்ணமெலாம் எண்ணி முடித்திட்டான்;
உண்ணாது உயர்காந்தி உத்தமரே! - கண்ணாவாய்!
எண்ணிய எண்ணியாங்கு எய்துப, எண்ணியார்
திண்ணியர் ஆகப் பெறின்.

உண்ணாமையினால் மாற்றுயர்ந்த காந்தி பிறர் எண்ணமுடியாத அரிய வினைகளையெல்லாம் நினைந்து நினைந்தபடி முடித்துவிட்டான், உத்தமராகிய புலவரே!

கண்ணான மகனே! எண்ணியவர் திண்மை உடையாராயின் எண்ணியவற்றை எண்ணியபடியே எய்துவதில் என்னே தடை?

## 96

வடிவத்தைப் பார்த்தால் மலை போன்ற பெரிய தோற்றம் இல்லாமல் சிறிய துரும்புபோலக் காணப்படுவர் சிலர். செய்கையைப் பார்த்தால் சொல்ல முடியாததாக அவ்வளவு பெரிதாக இருக்கும். உருளையின் கடைச்சாவி போன்றிருப்பர், இன்றியமையாதவராக.

அன்பால் பிணைத்தே அவனி முழுதாண்டான்;
மன்னன் நமகாந்தி. வள்ளுவரே! - சின்ன
உருவுகண்டு எள்ளாமை வேண்டும் உருள்பெருந்தேர்க்கு
அச்சாணி அன்னார் உடைத்து.

அன்புக் கயிற்றால் கட்டி உலகம் முழுதையும் ஆட்கொண்டான் நம்முடைய காந்தி மன்னன், வள்ளுவரே!

சின்ன வடிவத்தைப் பார்த்து எள்ளிநகைக்கக்கூடாது. உருண்டு செல்கின்ற பெருந் தேருக்கு அச்சில் போடப்பட்ட ஆணி எவ்வளவு அவசியமோ, உலகத்துக்கு அவ்வளவு தேவையுடையவராக இருப்பர் அச் சிற்றுருவினர்.

## 97

வினை வலிமை வேண்டும். அதில் நிகரற்றவன் காந்தி.

எந்த வினையும் எளிதில் முடித்திடவே
வந்து பிறந்தான் மணிக்காந்தி. - தந்தாய்!
எனைத்திட்பம் எய்தியக் கண்ணும் வினைத்திட்பம்
வேண்டாரை வேண்டாது உலகு.

எந்தக் காரியத்தையும் எளிதாக முடிப்பதற்கே தோன்றினான் மணி போன்ற காந்தி, தந்தையே!

எந்த வலிமை பெற்றிருந்த போதினும் வினைசெய்யும் வலிமை கொள்ளாரை உலகம் ஏற்று விரும்பாது.

## 98

கடமை தெரிய வேண்டும்; காலம் பார்க்க வேண்டும்; இடம் கருத வேண்டும்.

காலம் கருதினான்; கண்டான் கடமைதனை;
ஞாலத் தலைமைபெற்றான் நங்காந்தி. - மேலோய்!
கடனறிந்து காலம் கருதி இடனறிந்து
எண்ணி உரைப்பான் தலை.

காலம் பார்த்தான்; கடமையை உணர்ந்து செய்தான்; உலகத் தலைமையை அடைந்தான் நம்முடைய காந்தி, மேலவனே!

கடமை தெரிந்து தக்க சமயம் பார்த்து இடங்கண்டு ஆராய்ந்து பேசுபவனே தலைவன்.

## 99

சந்தேகம் நீங்கி, உள்ளே இருக்கும் மெய்ப்பொருளைக் கண்டவனே தேவன்.

சந்தேகம் விட்டுள்ளே சார்ந்த தனிப்பொருளை
வந்தித்து ஒளிபெற்றான் மாகாந்தி. - எந்தையே
ஐயப் படாஅது அகத்தது உணர்வானைத்
தெய்வத்தோடு ஒப்பக் கொளல்.

ஐயப்பாடு அகற்றி உள்ளே இருக்கும் ஒப்பற்ற ஒன்றை வணங்கிப் பிரகாசமடைந்தான் பெரிய காந்தி, தந்தாய்!

சந்தேகம் விட்டு அகத்தே இருக்கும் பொருளைக் காண்பவனைத் தெய்வத்துக்குச் சமமாகக் கொள்ள வேண்டுவதே.

## 100

உடம்பு, உள்ளே இருப்பதைக் காட்டும் ஒரு கண்ணாடி.

செல்லச் சிரிப்புச் சிறந்த உளங்காட்டும்;
தொல்லறம்சொல் காந்திக்குத் தூயவரே! - நல்லாய்!
அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம்
கடுத்தது காட்டும் முகம்.

தொன்மையான தர்மம் உணர்த்திய காந்திக்கு அவன் செல்லமான சிரிப்புப் புனித உள்ளத்தைக் காட்டுகின்றது ; வள்ளுவரே !

நல்லாய் ! உள்ளே பொருந்தியதைக் காட்டும் பளிங்கைப் போல நெஞ்சத்திலே மிக்கிருப்பதை முகம் காட்டியேவிடும்.

## 101

நாட்டை நாடாக்கப் பிறந்தான் காந்தி.

மிக்க விளைவுடனே மேற்செல்வ மும்தழைக்கத்
தக்கோன் தனிக்காந்தி தான்பிறந்தான். - மக்களே!
தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச்
செல்வரும் சேர்வது நாடு.

அதிக விளைச்சலோடு மேலான செல்வங்களும் பெருக, தக்கவனாகிய ஒப்பற்ற காந்தி அவதாரம் செய்தான்.

மக்களே! குறையா விளை நிலமும் தக்கவர்களும் சிறுநெறிச் செல்லாத செல்வரும் பொருந்துவதே நாடு என்று கொள்ளப்படும்.

## 102

பசியும் பிணியும் பகையும் இல்லாததே நாடு.

பசியும் பிணியும் பகையும் பறக்க
வசையில் புகழ்க்காந்தி வந்தான். - இசையீர்!
உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
சேராது இயல்வது நாடு.

பசியும் நோயும் பகைமையும் பஞ்சாகப் பறக்கவே வசையற்ற கீர்த்திக் காந்தி வந்துதித்தான், புகழுடையீர்!

பெரும் பசியும் பெயராத நோயும் அழிபகையும் சேராதிருப்பதே நாடு ஆகும்.

## 103

நாட்டில் எந்தவிதமான கலகமும் இருக்கக்கூடாது.

பிரிவு சதிபகைகள் பீடை எனவே
கருணைஉருக் காந்திமகான் கண்டான். - தெரியின்
பல்குழுவும் பாழ்செய்யும் உட்பகையும் வேந்தலைக்கும்
கொல்குறும்பும் இல்லது நாடு.

நாட்டில் பலவகைப் பிரிவும் சதிக் கூட்டங்களும் பகைகளும் தாண்டவமாடுவது பீடை என்று கருணையே வடிவெடுத்த காந்தி மகான் அறிந்தான்.

ஆராயின் பல கூட்டமும், பாழாக்குகின்ற உள்நாட்டுச் சண்டைகளும் அரசியலையே அலைக்கழிக்கும் கொலைகாரக் குறும்பர்களும் இல்லாததே நாடு.

## 104

படிக்கப் படிக்கத் தெவிட்டாது இனிக்கும் நூல்கள்; பண்பட்டவர் கேண்மை கள் நெருங்க நெருங்கத் தித்திக்கும்.

நெருங்கும் பொழுதெல்லாம் நெஞ்சில் இனிக்கும்
அருங்காந்தி கேண்மை அமுதம். - வருந்தி
நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்
பண்புடை யாளர் தொடர்பு.

நெருங்கிப் பழகும்தொறும் மனத்திலே களிப்பை உண்டாக்கும் அருமைமிக்க காந்தியின் நட்பாகிய தேவாமிர்தம்.

வருந்திப் படிக்கும் பொழுதெல்லாம் நூலில் தோன்றும் புது நயத்தைப் போன்றது, பழகும்போதெல்லாம் குணமென்னும் குன்றேறி நின்ருர் தொடர்பு.

## 105

நட்பு என்பது என்ன? குற்றத்தை எடுத்து நேரில் காட்டித் திருத்துதலே.

உற்றவரை யெல்லாம் ஒழுக்கம் கடைப்பிடிக்கக்
கற்பித்து இடித்துரைத்தான் காந்திமகான். - அற்றே
நகுதல் பொருட்டன்று நட்டல்; மிகுதிக்கண்
மேற்சென்று இடித்தல் பொருட்டு.

வந்தடைந்தோரையெல்லாம் ஒழுக்கத்தைக் கைக்கொள்ளும்படி இடித்துச் சொன்னுன் காந்தி எம்மான்.

அதுவே சரி, சிநேகம் கொள்வது சிரித்துப் பேசுவதற்காகவல்ல; தருக்கி விழும் போது மேல் விழுந்து இடிப்பதற்காகவே நட்புக்கொள்வது.

## 106

குற்றமற்ற பெரியோர் நட்பைப் பெறுவதை விட, மேலான பாக்கியம் வேறு ஒன்றும் இல்லை.

ஞானத் துயர்காந்தி நல்லுறவு கொண்டிட்டார்,
வானத்து அமிழ்தை மதிப்பரோ? - தேனீர்!
மருவுக மாசற்றார் கேண்மை; ஒன்றுஈத்தும்
ஒருவுக ஒப்பிலார் நட்பு.

அறிவினாலே மேம்பட்ட காந்தியின் நல்ல தொடர்பு பெற்றவர் தேவலோகத்து இன் அமுதைக்கூட மதிக்க மாட்டார். தேன் அனையீர்!

குற்றம் இல்லாதவர் நட்பை அடைக; பொருத்தமில்லாதவர் கேண்மையை எதையாவது ஒன்றைக் கொடுத்தாவது தொலைத்து விடுக!

## 107

வழிபாட்டுக் கூட்டத்தில் கொல்ல எண்ணிக் குண்டை எறிந்தான் ஒரு தூர்த்தன். அவனையும் மன்னித்துவிடல் வேண்டும் என்றான் மறைவதற்குச் சில நாட்கள் முன்னே காந்தி.

கொன்றுவிட எண்ணியே குண்டெறிந்த மூர்க்கனையும்
மன்னித்தல் வேண்டுமென்றான் மாகாந்தி. - ஒன்றி
அழிவந்த செய்யினும் அன்புஅறார், அன்பின்
வழிவந்த கேண்மை யவர்.

கொல்லக் கருதிக் குண்டு வீசிய கொடியவனையும் மன்னித்து விடல் வேண்டும் என மொழிந்தான் மகிமை பொருந்திய காந்தி.

பொருந்தி அழிவான காரியத்தை ஒருவன் செய்தாலும் அன்பு நீங்க மாட்டார், அன்புப் பரம்பரையிலே வந்த தொடர்பு உடையார்.

## 108

*பகையையும் நட்பாகக் கொள்ளும் பண்பாளன் காலடியிலே கிடக்கும்*

மேதகவோன் காந்திமகான் விள்ளுமொழி மேதினியோர்
வேதமெனக் கொள்வதெவன்? மெய்ப்புலவீர்! - மோது
பகைநட்பாக் கொண்டொழுகும் பண்புடை யாளன்
தகைமைக்கண் தங்கிற்று உலகு.

மேம்பாடுடைய காந்திப் பெரியோன் திருவாய் மொழியை உலகத்தார் மறையாகக் கருதுவது எதனால்? உண்மைப்புலவரே!

அதிர்ந்த பெரும் பகையையும் நட்பாகக்கொண்டு நடக்கும் பண்பாடு உடையவனின் தகுதி நிழலிலேயே உலகம் தங்கிக் கிடக்கின்றது.

## 109

*பெரியார்க்குப் பிழை செய்த பாவிக்குக் கதி ஏது?*

உய்யாது ஒருபாவி ஊழிநரகு உற்றுழல்என்?
மெய்யான காந்திநமை விட்டானே! - ஐயோ!
எரியால் சுடப்படினும் உய்வுண்டாம்; உய்யார்
பெரியார்ப் பிழைத்தொழுகு வார்.

உய்வே இல்லாமல் அந்த ஈடே இல்லாத பாவி ஊழிக்காலம் வரை நரகத்திலேயே கிடந்து உழன்றுல்தான் என்ன? உண்மையான காந்தி நம்மைப் பிரிந்து விட்டானே, ஐயோ!

நெருப்பு மூட்டி எரித்துக் கொளுத்தினாலும் தப்ப வழியுண்டு, பெரியார்க்குத் தவறு செய்யும் மாபாவிகட்கு உய்வு இல்லவே இல்லை.

## 110

அறிவை அழிப்பது கள். ஆதலின் அதனைப் பலமாக மறுத்தான் காந்தி.

கள்ஒழிக்கும் கொள்கைதனைக் காங்கிரசில் ஏன்கலந்தான்?
வள்ளுவரே! காந்தி மகாத்துமன். - பிள்ளைகாள்!
துஞ்சினார் செத்தாரின் வேறல்லர்; எஞ்ஞான்றும்
நஞ்சுண்பார், கள்ளுண்ணி பவர்.

வள்ளுவனாரே! காந்திப் பெரியோன், கள் ஒழிக்கும் கொள்கையை ஏன் காங்கிரசிலே புகுத்தினான்.

பிள்ளைகளே! தூங்குகின்றவர் அந்தச் சமயம் ஒன்றையும் உணர முடியாமையால் இறந்தவரோடு ஒப்பார்; அது போலவே கள் அருந்துவோர்க்கு அவ் அமயம் உலகமே சுழலுமாதலால் விஷம் உண்டவர்க்கும் அவர்க்கும் வேறுபாடே இல்லை.

## 111

உணவு உட்கொள்வதில் மிகவும் கணக்குடையான் காந்தி.

உணவை அளவாக்கி, ஓங்கினன்கத் தூரி
மணவாளன் நங்காந்தி வள்ளல். - குணமான
மாறுபாடு இல்லாத உண்டி மறுத்துண்ணின்
ஊறுபாடு இல்லை உயிர்க்கு.

உணவை அளவிட்டு உண்டு சிறப்புற்றான் கத்தூரி அன்னையின் கணவன் காந்தி வள்ளல்.

குணமுள்ள உடம்போடு ஒத்துழையாமை செய்யாத உணவை. உள்ளம் விரும்புமாறு உள்ளே தள்ளாமல் மறுத்து உண்பானானால் அவன் உயிர் உடம்போடு தங்குதலில் இடையூறே இல்லை.

## 112

காந்தி மறைந்த செய்தியைக் கேட்டு உயிர் விட்ட பலரை நாம் அறிகின்றோம். அவரே மெய்யான காந்தி பக்தர் என்றுதான் கொள்ள வேண்டியிருக்கிறது.

மெத்து புகழ்க்காந்தி விண்ணுற்றான் என்றவுடன்
செத்தவரே மெய்யடியார். செந்நாவீர்! - அத்தா
மருந்தோமற்று ஊன்ஓம்பும் வாழ்க்கை; பெருந்தகைமை
பீடழிய வந்த இடத்து.

புகழ்மிக்க காந்தி விண்புக்கான் என்று கேட்டவுடனே மாண்டவரே உண்மையடியவர்கள், செந்நாப் புலவரே!

அப்பா! பெருந்தகைமையின் பெருமைக்கு அழிவு வருமானால் இவ் ஊனைப் பாதுகாக்கும் வாழ்க்கை என்ன தேவாமிர்தமா?

## 113

வடிவத்தில் எல்லாரும் மனிதராகவே காணப்படுகிறார். செய்கையைப் பார்த்தால் கொடிய பிராணிகளை விடக் கேவலமானவரெல்லாம் இருக்கத் தான் செய்கிறார்.

புனிதமெய்க் காந்திஉடல் பொன்றுவித்த பாவி,
மனிதன்எனல் ஏற்குமோ? மாண்பீர்! - வினையே.
பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்; சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யால்.

பரிசுத்தமான உண்மைக் காந்தி உடலை அழித்த பெரும் பாவியை மனிதன் என்று சொல்லுதல் பொருந்துமா? வள்ளுவரே!

அவன் வினையப்பா அது. பிறப்பினாலே எல்லா உயிர்களும் ஒத்துத் தான் இருக்கின்றன. செய்கின்ற காரிய வேறுபாட்டினால் சிறப்பில் ஒவ்வவில்லை.

## 114

பெருமை உடையவர் அருமையான காரியங்கள் எல்லாம் செய்வர்.

யாரானும் ஆகாத அற்புதங்கள் ஆற்றினன்
சீராளன் காந்திமகான்; தென்மொழியீர்! - ஓரின்
பெருமை உடையவர் ஆற்றுவார்; ஆற்றின்
அருமை உடைய செயல்.

தென்மொழி வல்ல பெரியீர்! யாராலும் செய்யமுடியாத அற்புதங்களை யெல்லாம் செய்து முடித்தான், சீரையாண்ட காந்திப் பெரியோன்.

ஆராய்ந்து பார்த்தால் அருமையான காரியங்களை வழிப்படி ஆற்றுவார் பெருமையுடையவர்.

## 115

காந்தியின் உடலை உயிரைவிட்டுப் பிரிக்கும் ஒரு மாபாதகன், காந்தி பிறந்த இந்த மண்ணிலேயே தோன்றினனே! இதற்கு யாரை நோவது? அந்தோ!

காந்திஉடல் வீழ்த்தும்ஒரு கர்மசண்டா ளப்பாவி
வாய்ந்தானே நம்மண்ணில்; வள்ளுவரே! - தேய்ந்த
சிறியார் உணர்ச்சியுள் இல்லை; பெரியாரைப்
பேணிக்கொள் வேம்என்னும் நோக்கு.

காந்தியின் உடம்பையும் கீழே சுட்டுத் தள்ளும் ஒரு கர்ம சண்டாளப் பாவி நம் புண்ணிய பூமியில் வந்தானே, வள்ளுவரே!

அழிந்துபோன சிறிய மனிதர்கள் உணர்ச்சியுள்ளே, பெரியாரைப் போற்றவேண்டும் என்ற நோக்கம் இல்லையே.

## 116

யார் என்ன பொருள் பற்றிக் கேட்டாலும் எல்லாவற்றிற்கும் விடை சொன்னான் காந்தி.

யார்எதுதான் கேட்டாலும் எல்லார்க்கும் நல்லருள்செய்
கார்அனையான் காந்திக் கடவுளவன். - சீரீர்!
கடன்என்ப நல்லவை எல்லாம்; கடன்அறிந்து
சான்றாண்மை மேற்கொள் பவர்க்கு.

யார் எதைக் கேட்டாலும் அவர் அனைவர்க்கும் அருள் நலம் சுரக்கும் மேகத்தை ஒத்தவன், தெய்வத்தன்மை வாய்ந்த காந்தி. சிறப்புற்ற வள்ளுவரே!

கடமையைத் தெரிந்துகொண்டு சால்புடைமையை மேற்கொள்கின்றவருக்கு நல்லவை எல்லாமே கடமை என்று சாற்றுவர் அறிஞர்.

## 17

கொலையும் அலரும் நீத்தவன் காந்தி.

எவ்உயிரும் கொல்லான்; எவர்பழியும் தூற்றிடான்;
தெவ்,வென்ற காந்திமகான். தேவரே! - செவ்வியோய்!
கொல்லா நலத்தது நோன்மை; பிறர்தீமை
சொல்லா நலத்தது சால்பு.

எந்த உயிரையும் கொல்லமாட்டான்; யாருடைய இழிவையும் தூற்ற மாட்டான்; பகை வென்ற காந்திப் பெருமான்; தெய்வப் புலவரே!

செம்மை உடையவனே! கொல்லாத நலத்தை உடையதுதான் விரதம்; பிறர் தீமையைப் பேசாத நலத்தை உடையது பெருமை.

## 118

பாஞ்சாலத்திலே படுகொலை நடந்தது. அமிர்தசரஸ் நகரத்திலே ஜாலியன்வாலாபாக் என்னும் இடத்திலே பல்லாயிரம் மக்களைச் சுட்டு விழ்த்தினன் படுபாவி டயர் என்னும் சேனதிபதி. அந்தக் கொடிய டயர் என்பவனுக்குக்கூட ஆபத்தில் உதவ நான் தயங்கமாட்டேன் என்ருர் கருணைக்கடல் காந்தி.

கொன்று குவித்த கொடியோன் டயருக்கும்
நன்று புரிவன்என்ருன் நற்காந்தி. -என்புலவீர்!
இன்னுசெய் தார்க்கும் இனியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு.

மக்களை யெல்லாம் சுட்டு விழ்த்திய மகாபாதகன் டயருக்கும் உதவி செய்வேன் என்ருனே அந்த நல்ல காந்தி; அது என்ன புலவரே!

துன்பம் செய்தவர்க்கும் இன்பமே செய்யாவிட்டால் சால்பு என்ற பெருமையின் பயன்தான் என்ன?

## 119

பெருமைக் கடலை ஊழிக்காலங்கூடக் கொந்தளிக்கச்செய்ய முடியாது.

வானம் இடிந்தே மலைகள் புரண்டாலும்
ஊனம் அடையான் உயர்காந்தி. -ஞானமுளீர்!
ஊழி பெயரினும் தாம்பெயரார்; சான்ருண்மைக்கு
ஆழி எனப்படு வார்.

வானம் இடிந்து விழுந்து மலைகள் சரிந்துவந்து தலையில் விழ்ந்தாலும் கலக்கம் பெறமாட்டான் காந்திப் பெரியோன்; ஞானம் கை வரப்பெற்ற திருவள்ளுவரே!

ஊழி பெயர்ந்து உலகம் முழுதும் நிலை குலைந்தாலும் தாம் மாறுதல் அடையமாட்டார், பெருமைக்குக் கடல் என்று சொல்லப்படுபவர்.

## 120

*ஏன் உலகு காந்தியை இப்படிச் சுற்றித் திரிந்தது?*

தேனை,ஈ மொய்ப்பதுபோல் தேசமெல்லாம் காந்திஎனும்
மானபரன் தாள்வீழ்ந்த. வள்ளுவரே! - ஏனிதுதான்!
குற்றம் இலனுய்க் குடிசெய்து வாழ்வானைச்
சுற்றமாச் சுற்றும் உலகு.

தேனிலே வண்டு வீழ்வதுபோல, நாடு முழுதும் காந்தி எனும் மானத்தையே அணியாகப் பூண்டவன் காலில் வீழ்ந்தனவே! ஏன் வள்ளுவரே இப்படி?

ஒரு குற்றமும் இல்லாதவனுகவிருந்து குடியைக் குடியாக்கி வாழும் ஒருவனையே உறவாகச் சுற்றும் உலகு.

## 121

*உழுகின்றவரே உலகம் காப்பவர்.*

உண்டி கொடுத்தல், உயிர்கொடுக்கும் சீரென்றே
மண்டுபுகழ் மாகாந்தி வாய்மலர்ந்தான். - தொண்ட!
உழுவார் உலகத்தார்க்கு ஆணி;அஃது ஆற்ருது
எழுவாரை எல்லாம் பொறுத்து.

உணவு அளிப்பதானது உயிர்கொடுக்கும் சிறப்பாகும் எனப் புகழ் மண்டிய பெருங் காந்தி திருவாய் மலர்ந்தருளினன்.

தொண்டனே? உழுகின்றவரே உலகத்தாராகிய தேருக்கு அச்சு ஆணி ஆவர்; அந்த உழு தொழிலைச் செய்யாது வேறு தொழில் மேற் கொள்ள எழுகின்ற எல்லாரையும் உணவு தந்து தாங்குதலால்.

## 122

உழுவாரைத் தொழுவாரே பிறர்.

வேளாண்மை போன்றதொழில் வேறெதுவும் இல்லையென்றான்
தாளாளன் காந்தித் தனித்தலைவன். - கேளாய்!
உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்,மற் றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்.

உழுகின்றது போன்ற தொழில் வேறு எதுவுமே இல்லை என்று சொல்லிவிட்டான் முயற்சியில் வல்ல தனித் தலைவன் காந்தி.

கேட்பாயாக! உழுதுஉண்டு வாழ்பவரே வாழ்பவர்; மற்றவரெல்லாம் வணங்கி வயிறு நிரப்பிப் பின்னே செல்பவரே.

## 123

உழவர் ஏரை விட்டுவிட்டால் ஞானிகள் தவம்கூட இல்லை.

உழவுத் தொழிலே உலகுயர்த்தும் என்ற
பழைய அறம் காந்தி பகர்ந்தான். - பிழைஎன்?
உழவினார் கைம்மடங்கின் இல்லை, விழைவதூஉம்
விட்டேமென் பார்க்கு நிலை.

உழவுதான் உலகையே உயர்த்தும் என்ற தொல்லறத்தைக் காந்தி சொன்னான்.

தவறு என்ன? உழுகின்றவர் கை அதனைச் செய்யாது மடங்கி நிற்குமானால், பிறர் விரும்பும் எல்லாவற்றையும் விட்டோம் என்று சொல்கின்ற ஞானிகட்கும் இருப்பு இல்லை.

## 124

ஏற்பது இகழ்ச்சிதான், தனக்காக இருந்தால்; காந்தி இரப்பதில் கைதேர்ந்தவன், அவனுக்கு எதுவுமே தேவையில்லை. பிறப்பு அறுக்க லுற்ற அவனுக்கு அவன் உடம்புமே மிகை. அவன் ஏற்பதெல்லாம் பிறர் வாழ்விற்கு; பல்லைக் காட்டிக் கெஞ்சிக் கேட்பதில்லை அவன். அப் பெரியோன் கேட்கும்போது தவழும் மோகனப் புன்சிரிப்பு எவரையும் எதையும் கொடுக்கும்படி செய்துவிடும்.

புன்சிரிப்புப் பொங்கப் பொருளிரந்தான், போய்எங்கும்
மன்னவர்மன் காந்தி;ஏன்? வள்ளுவரே! - ஒன்றும்
கரப்பிலா நெஞ்சில் கடன்அறிவார் முன்நின்று
இரப்புமோர் ஏஎர் உடைத்து.

வள்ளுவனுரே! மந்தகாசம் தவழ, எல்லா இடத்துக்கும் போய்ப் பொருள் கேட்டான் காந்தி; சக்கரவர்த்தி போலப் போற்றப்பட்ட அவன் ஏன் இப்படிச் செய்தான்?

எதையும் மறையாமல் வழங்கும் மனமுடைய கடமை அறிந்தவர் முன்னே நின்று கேட்பதும் ஓர் அழகுடையதல்லவா? அதனுலேயே காந்தி அவ்வாறு செய்தான்.

## 125

காந்தியின் இரப்பு இரகசியமானதல்ல; இலட்சம் இலட்சமாகக் கூடும் அவையே அவன் ஏற்புக்களம். இறை சிவபெருமான் எங்கும்போய் ஏற்ருன் என்று படிக்கின்ருேமல்லவா? காந்தியின் ஏற்பு அந்தச் சிவனையே நமக்கு நினைப்பு ஊட்டுகிறது.

என்றும் அறத்திற்கு இரத்தல் தனைக்காந்தி
மன்றேறிக் கொண்டதெவன்? வள்ளுவரே! - நன்றுக்கு
இரப்பாரை இல்லாயின் ஈர்ங்கண்மா ஞாலம்
மரப்பாவை சென்றுவந் தற்று.

எப்பொழுதும் அறத்திற்கு ஏற்பதைச் சபை நின்று காந்தி கொண்ட தன் காரணமென்ன? வள்ளுவர் பெருமானே!

நல்ல காரியத்திற்கு இரப்பவர்கூட இல்லையாயின் இக் குளிர்ந்த பெரிய உலகத்தில் உயிருள்ள மனிதர்கள் உலவுவதாகவே தோன்ருது; உயிரற்ற மரப்பாவைகள் விசையால் ஆடுவதுபோலவே ஆய்விடும். கொள்வார் இன்றேல் ஈவார் இல்லையாகிவிடுவர் அல்லவா? ''ஈவாரும் கொள்வாரும் இல்லாத வானத்து வாழ்வாரே வன்கண்ணவர்.''

# காந்தி அந்தாதி

## பாயிரம்

*நிலத்தில்உயர் தனிக்காந்தி நிலைத்தபுகழ்*
*தனைநாட்டி, நெடுநீர் சூழ்இத்*
*தலத்தில்உயர் இனித்தசுவைத் தமிழ்மொழியில்*
*கட்டளைகொள் தனிப்பா தன்னில்,*
*கலித்துறைஅந் தாதியினைக் கட்டுரைத்தான்;*
*தண்ணளிசேர் காந்தி பாதம்*
*தலைக்கொளும்நல் காரைநகர் ராயசொக்க*
*லிங்கன்; அருந் தமிழன்; மாதோ.* 1

**கருத்து:-** *உலகத்தில் உயர்ந்த ஒப்பற்ற காந்தியடிகளின் நிலைபெற்ற புகழை எடுத்துக் காட்டி, கடல் சூழ்ந்த இந்த அவனியில் சிறந்த தித்திக்கும் தமிழ்மொழியிலே, அளவுகொண்ட நிகரற்ற கட்டளைக் கலித்துறைப் பாடலிலே, இவ்வந்தாதியைச் செய்தான்; கருணை உரு வெடுத்த காந்தியின் திருவடிகளைத் தலைமேற்கொள்ளும் காரைக்குடியில் பிறந்த, ராய. சொக்கலிங்கன் என்ற அரிய தமிழ்மகன்.*

*செய்துஅளித்த நாள்,சகம்ஆ யிரத்துஎண்ணூற்று*
*ஐம்பத்துஐந்து அதனில், சேர்ந்த*
*பெய்தவத்துப் பாரதத்தாய் விடுதலைக்குப்*
*போராடிப் பெரியோர் எல்லாம்*
*கைதவத்தார் சிறைஉறையும் கவின்ஆங்கி*
*ரச,ஆடி கடைசி வாரம்;*
*செய்தளித்த இடம்,வேலூர்ச் சிறந்தபெரும்*
*காவல்அமை சிறையே அம்மா.* 2

**கருத்து:-** *இந்த நூலைச் செய்து தந்த நாள், சாலிவாகன சகம் 1855 ஆங்கீரச ஆண்டு ஆடித்திங்கள் கடைசி வாரம். அந்தக் காலந்தான், பெருந்தவமுடைய பாரத அன்னையின் விடுதலைக்காகப் போராடிப் பெரியார் கள் எல்லாரும் வஞ்சகம் வல்ல ஆங்கிலத்தாரால் சிறை வைக்கப்பட்ட காலம். இந்த நூலை ஆக்கித்தந்த இடம், சிறப்பான பெரிய காவலுக் குட்பட்ட வேலூர்ச் சிறைக் கட்டிடம்.*

---

*ஆங்கீரச-ஆடி 25 (9-8-32ல்) தொட்டு, ஆங்கீரச-ஆடி 31 (15-8-32ல்) முடிக்கப்பெற்றது.*

## காப்பு

ஏய்ந்த பெருமை, இனிமை
செறிதமிழ் இன்னும்மிக,
வாய்ந்த அருள்உரு வாகி,
நிலம்வரு வள்ளல்புகழ்க்
காந்தி கலித்துறை அந்தாதி
பாடக் கருத்தில்உறை
ஆய்ந்த அறிவுஇறை யான
கடவுள் அருளுகவே.

**கருத்து:--** பெருமை பொருந்திய இனிமை நிறைந்த தமிழானது, மேலும் சிறந்தோங்க, கருணையே வடிவுகொண்டு இத்தரையில் வந்தருளும் காந்தி வள்ளலின் கீர்த்தியை, இக்கலித்துறை அந்தாதியிலே அமைத்துப் பாட, உள்ளத் தாமரையிலே தங்கியிருக்கும் ஆராய்ந்துகொண்ட அறிவான தெய்வம் அருள்புரிக. காப்பு, இறை வணக்கம். இங்கு, "சித்தமிசை குடிகொண்ட அறிவான தெய்வ"த்துக்கு வணக்கம் கூறப்பெற்றது.

## நூல்

அருளை, அறத்தை, அருமையை,
அன்பை, அணிபெறவே,
இருள்பொய் களவோடு இழிவு
கொலைகள் இணைஉலகில்
பெருக அருளு, பெரிய
புகழார் பெருமைசெறி
கருணை உருவெனும் காந்தி
பதத்தைக் கருதுவனே.

**கருத்து:-** கருணையையும் கடமையையும் அரிய அன்பையும் அழகாக, மயக்கமும் பொய்யும் திருட்டும் கொலையும் பிற இழிவுகளும் நிறைந்த உலகத்திற்கு நிறைய ஈடுத்தருளிய பெரும்புகழ் கொண்ட சிறப்பு நிறைந்த கருணை வடிவினனான காந்தியின் திருவடிகளை உள்ளத்திலே இருத்துவேன்.

கருது வனஉயர் காந்தி
அறம்எனில், காசினியில்
பெருகு வன நலம் யாவும்;
இலேதடை; பீடுடனே
உருகி, உளங்கசிந்து, ஒண்ணறே
நிலேபெற உத்தமனின்
மருவு செயல்வழி மன்னல்
பெருமித வாழ்வுஅதுவே. 2

**கருத்து:-** காந்தியின் அறத்தைக் கருதிவிட்டால் உலகத்தில் நன்மை முழுதும் பெருகிவிடும். அதில் ஐயம் இல்லே. பெருமையோடு அவன்பால் உருகி மனம் இளகி புனிதம் நிலேபெற அவ் உத்தமனின் பொருந்திய செய்கையைப் பின்பற்றி நிற்றலே பெருமிதமான வாழ்வு அளிக்கவல்லது.

மன்னும் உலகில் வலிய
அரசுஉற்று மன்னரையும்,
இன்னல் தரும்அவர் எண்ணில்
பரிசனர் யாவரையும்,
மின்னல் எனஎரி வீசு
படையையும், மேன்மைநிறை
கன்னல் மொழிபகர் காந்தி
அடியார் கருதிலரே. 3

**கருத்து:-** நிலேபெற்ற உலகத்திலே வலிமையான அரசாட்சி கொண்ட அரசர்களேயும் துன்புறுத்துதலேயே கொண்ட அம்மன்னர்களின் எண்ணற்ற அதிகார வர்க்கத்தினர் அனைவரையும், மின்னலேப் போல நெருப்பைக் கக்குகின்ற ஆயுதங்களேயும், சிறப்பு நிறைந்த, கரும்பின் சாறுபோல் இனிக்கப் பேசும் காந்தியின் அடியவர்கள் மதிக்கவே மாட்டார்கள்.

அடிமை எனும்குறை, ஆழி
கிடக்கும் அகன்றிடும்இப்
படியில் ஒழிந்திடப் பாரதத்
தாய்அரிப் பீடமுற்று,
முடிசுமந்து இன்னிசை மொய்க்க
அரசு முறைபுரியக்
கடுந்தவம் செய்திடும் காந்தித்
தொடர்பு கடன் அதுவே. 4

**கருத்து:-** கடல் சூழ்ந்த இந்தப் பரந்த உலகத்தில் அடிமை என்ற இழிவு இல்லாது ஒழியவும் இந்திய அன்னை சிங்காசனத்திலே ஏறி மகுடம் தாங்கி இனிய புகழ்பெருக அரசாட்சி செய்யவும் கடுமையான தவம்புரியும் காந்தியடிகளின் சேர்க்கையை மேற்கொள்ளல் ஒவ்வொருவருக்கும் கடமையாகும்.

## கடமையில் பிரிதல்

கடன்அறிந் தேன்;காந்தி கண்ட
அறப்போர் தனிற்கலந்து
திடனுடன் நின்று திருப்பணி
செய்வென்; சிறைபுகுவென்;
உடன்உறைந்து அன்பரொடு ஒன்றிய
காதல் புரிந்திடுதற்கு
இடன்இலை இந்நாள்; இதுபொறுப்
புக்கடன் ஏந்தலுக்கே. 5

கடமையில் பிரிதல்:- தாய் நாட்டுக்குச் செய்ய வேண்டிய கடமை காரணமாகக் கணவனைப் பிரியும் மனைவி கூறுவதாக இங்கு அமைகிறது.

**கருத்து:-** கடமையைத் தெரிந்துகொண்டேன்; காந்தி தோற்று வித்த அறச்சண்டையிலே சேர்ந்து உறுதியாக நின்று செயல் ஆற்று வேன்; சிறைக்கும் செல்வேன்; காதலரோடு ஒன்றாக இருந்து பொருந்திய காதல் வாழ்வு நடாத்த இந்த நாள் பொருந்தாது. இதனைப் பொறுத்துக் கொள்தல் ஏந்தலாகிய தலைவன் கடமை.

## கிளி விடு தூது

எந்தல் பணி, தலை ஏற்றனன்;
அன்னை இடர்துடைக்கப்
போந்தன், அருஞ்சிறை; புண்ணிய
வாழ்வுஇங்குப் பூணுகின்றேன்;
காந்தள் வளைக்கரக் காதல்
செயும்என் கரும்பினிடம்
ஏய்ந்த எனதுநல் இன்சுகம்
சொல்க! இளஞ்சுகமே! 6

கிளி விடு தூது:- கிளியைத் தூதாக விடுவது. இது சிறை சென்ற தலைவன் கூறுவதாக அமைகிறது.

**கருத்து:-** காந்தி அண்ணலின் பணியைத் தலைமேற் கொண்டேன்; தாய் துயர் நீக்குதற்காக அரிய சிறை புகுந்தேன்; சிறையில் புண்ணியமான வாழ்க்கை நடத்துகின்றேன்; வளையல் அணிந்த காந்தள் பூப்போன்ற கைகளையுடைய என் காதற் கரும்பாகிய மனையாளிடம் பொருந்திய என்னுடைய நல்ல இனிய நலத்தைக் கூறுவாயாக! இளமை வாய்ந்த கிளியே!

இளங்கிளி பாடிட, எம்மான்
பெரும்புகழ் இன்சுவைத்தேன்
அளைந்தசொற் பூவை அணிபெறக்
கேட்டிட, ஆடுமயில்
உளங்கனிந்து ஆடிட, ஒண்சிறை
வண்டுகள் "உம்"எனவே
வளம்கெழு மென்பாண் மிழற்றிடும்
நாட்டுஎழில் மல்குகவே. 7

**கருத்து:-** இளமை பெற்ற கிளிகள் எம்பெருமான் காந்தியின் பெரிய கீர்த்தியைப் பாடவும், இனிய சுவைமிக்க தேனிற் குழைத்த சொல்லையே பேசும் நாகணவாய்ப் பறவைகள், அக்கிளிகள் பேசும் காந்திப் பெருமான் புகழைக்கேட்கவும், அது கேட்டு மயில்கள் உள்ளம் உருகி ஆடவும், ஒளியுள்ள சிறகுகளையுடைய வண்டினங்கள் 'உம்' என்று ரீங்காரம்செய்து வளம்மிக்க மெல்லிய பண் பாடும் நம் நாட்டின் வனப்புப் பெருகுவதாக.

## வண்டு ஒச்சி மருங்கு அணைதல்

நாடு செழித்திட நண்ணும்
முரட்டுக் கதர்சுமந்து,
வாடிய சிற்றிடை நொந்து,அரும்
என்கண் மணிவருந்தக்
கூடி அவர்நறுங் கூந்தல்
மலர்மொய்த்துக் கொல்லுகின்றீர்;
கேடு வரும்இனி ஓடுமின்!
வண்டீர்! கிளிமொழிக்கே. 8

வண்டு ஓச்சி மருங்கு அணைதல்:- தான் விரும்பும் பெண்ணினது கூந்தலில் மொய்த்திருக்கும் வண்டுகளை ஒட்டிக்கொண்டு, அவள் பக்கமாக நெருங்குதல். இது காதலன் கூறுவதாக அமைகிறது.

**கருத்து:-** நாடு செழிப்பதற்காக வந்த தடித்த கதர் உடையைத் தாங்கி வருந்திய சிறிய இடை மேலும் வருந்துமாறு நீங்கள் கூட்டம் போட்டுக்கொண்டு அவளுடைய குழலில் சூடிய நல்ல பூக்களிலே மொய்த்து என் அருமையான கண்மணியைக்கொல்லுகின்றீர்கள்; வண்டுகளே! ஓடி விடுங்கள்; இன்றேல் என் கிளிமொழிக்கு கேடு வந்துவிடும்.

கிளிபோல் மொழியார், மழைநேர்
குழலார், கிளரும்எழில்
வளைபோல் மிடற்றார், மயில்நேர்
இயலார், வரைதனக்கும்
இளையார், கணக்கில் இளையார்,
சிறைக்குள் எழில்வருந்தி
ஒளியே! கடமை உணர்ந்து
பெருந்தவம் ஒன்றினரே. 9

**கருத்து:-** கிளிபோல் பேசவல்லவர், மேகத்தைப் போன்ற கூந்தலை யுடையவர், விளங்குகின்ற அழகான சங்கை ஒத்த கழுத்தைக் கொண்டவர், மயில் அனைய சாயலைப்பெற்றவர், மூங்கிலுக்கும் தோற்காத வாகான தோள்களை உடைத்தானவராகிய எண்ணற்ற இளம் பெண்கள், சிறைக் குள்ளே அழகு அழிந்து, காந்திப் பெருமானே! கடமையை அறிந்து பெரிய தவம் செய்கின்றனர்.

## தென்றலை விறுதல்

ஒன்றிக் கடமை உணர்ந்து
சிறைவாழ் ஒருசிறியேற்கு,
என்தன் இனிய இருந்தமிழ்ப்
பாண்டி தனில்உயர்ந்த
மன்றப் பொதியில் மலைச்சாந்து
அளைந்து மணம்பரப்பும்
தென்றல் சிறுகால் திருவே!
எமர்நலம் செப்புகவே. 10

தென்றலை விறுதல்: தென்றல் காற்றைப் பார்த்துக் கேட்டல். சிறையில் இருப்பவன் தென்றலை உறவினர் நலம் கேட்கும் முறையில் பாடல் அமைகிறது.

**கருத்து:-** ஈடுபட்டுக் கடமையை அறிந்து சிறைவாழ்வு கொண்ட சிறுவனாகிய எனக்கு, என்னுடைய இனிய பெரிய தமிழ்ப் பாண்டி நாட்டிலேயுள்ள வான்அளவு ஓங்கிய பொதிகை மலையில் சந்தனத்திலே கலந்து மணத்தைப் பெருக்குகின்ற தென்றல் சிறு காற்றாகிய செல்வமே! எம்மவர் சுகமா? சொல்வாயாக!

## தென்றலுக்குக் கட்டளை

செப்புக தென்றல்அம் செல்வா!
சிறந்த உடன்பிறந்த
ஒப்புஉயர்வு இல்லா ஒருதனி
ஒண்தீஞ் சுவைத்தமிழில்,
மெய்ப்புகழ் இப்புவி எங்கணும்
வீசிடு காந்திதனை
அப்புக; அன்பருக்கு ஆவி
அனைய அருமருந்தே. 11

தென்றலுக்குக் கட்டளை:- தென்றல் காற்றுக்கு ஆணை இடல்.

**கருத்து:-** அழகிய தென்றல் செல்வனே! காதலருக்கு உயிரை ஒத்த அருமையான அமிழ்தமே! சிறப்புப் பொருந்திய உன் உடன்பிறந்த ஒப்பும் மேலும் இல்லாத் தனித்தன்மை வாய்ந்த ஒளிமிக்க இனித்த சுவைத் தமிழ்மொழியில், உண்மைப் புகழை இவ் உலகு முழுதும் பரப்பும் காந்தி பெருமையைச் சொல்க; அவன் தகுதியை எங்கும் பூசுக.

அருமருந்து அன்னவன் அன்பின்
உலகம் அடைபிணிக்கு ;
பெருமகன் புத்திரி பாய்க்கு;உயர்
பாரதப் பேர்அனைக்கே
ஒருமகன் ; கத்தூரி ஒள்ளிய
காதலன்; என் அனையார்
கருதிட மன்னிடு கத்தரின்
கர்த்தன்,நம் காந்தியரே. 12

கருத்து:- அன்புகொண்ட உலகம் அடைகின்ற நோய்க்கு அருமையான மருந்தை ஒத்தவன்; புத்திரிபாய்க்குப் பெரிய மகன்; சிறந்த இந்தியப் பெருந் தாய்க்கு ஒப்பிலா மகன்; கத்தூரிக்குக் கண் நிறைந்த காதலன்; யார்? என் போன்றார் நினைத்தவுடன் மனத்தே குடிகொள்பவனும் கதரின் தோற்றத்துக்குக் காரணமானவனும் ஆகிய காந்தியாரே.

## கலைமான் வினுதல்

கத்தர் உடுத்தியே கைராட்டு
உருட்டும்நல் காரிகையீர் !
இத்தரை காண உளம்குடி
ஏறும்என் மோகனன்வாழ்
சித்தம் குலைப்பது ; நும்கண்
பழிப்பது ; சீர்பெறும்என்
முத்தம் பெறுவது ; மொய்கலை
மான்இங்கு வந்ததுஉண்டே ? 13

கலைமான் வினுதல்:- பெண்கள் கூட்டத்துள் புகுந்து தன்னுல் காதலிக்கப்பெற்ற கலைமாகுகிய பெண் இங்கு வந்ததா எனக் காதலன் கேட்டல்.

கருத்து:- கதர்க் கட்டிக்கொண்டு இராட்டினம் சுற்றுகின்ற நல்ல நங்கைமீர்? இந்த உலகம் அறிய எனது உள்ளத்திலே குடிபுகுந்த என் மோகனதாஸ் காந்தி வாழ்கின்ற மனத்தையே ஆட்டுவதும் உங்கள் கண்களைப் பழிப்பதும் சிறப்பான என் முத்தத்தைப் பெறுவதுமான அடர்ந்த கூந்தலையுடைய கலைமான் உங்கள் கூட்டத்துள் வந்தது உண்டா?

## கலைமான் வினுதல்

மான்நேர் விழியீர்! மயில்நேர்
எழிலீர்! மலைஉறையும்
தேன்நேர் மொழியீர்! புயல்நேர்
குழலீர்! திருவளரும்
தான்நேர் தமிழ்நேர் இயலீர்!
தனிஅருள் காந்திஎனும்
கோனே தலைவன் எனும்நீர்
எனமான் கொடுத்திலிரே. 14

இதுவும் முந்திய பாட்டைப் போன்ற கலைமான் வினுதல் துறையே.

**கருத்து:-** மான்விழியை ஒத்த கண்ணையுடையவர்களே! மயில் அனைய அழகைப் பெற்றவர்களே! மலைத் தேனைப் போன்ற பேச்சாளரே! மேகத்தை நிகர்த்த கூந்தல் உடையீர்! செல்வம் வளர்கின்ற தனக்குத்தானே சமமான தமிழ் அனைய தகுதியீர்! எதிரில்லாத கருணைகொண்ட காந்தியெனும் பெரியோனே தலைவன் எனுங் கொள்கைகொண்ட நீங்கள் என்னுடைய மானைத் தந்துவிடுங்கள்.

## மனத்திற்குக் கட்டளை

தலைவன்; தனிக்கதர் தாங்கும்
அழகினன்; தண்ணளியன்;
மலைகள் துளங்கினும் மண்கம்பம்
ஆகினும் வான்விழினும்
அலைகள் தமைஎறிந்து ஆழ்கடல்
பொங்கினும் யாதுஉறினும்
நிலையில் குலைதல்இல் நீள்காந்தி
தன்னை நினைமனமே. 15

மனத்திற்குக் கட்டளை:- மனத்தைப் பார்த்து ஆணையிடும் முறையில் கூறுவது.

**கருத்து:-** தலைவன்; ஒப்பற்ற கதர் உடுத்திய அழகன்; குளிர்ந்த கருணையே வடிவானவன்; மலைகள் அசைந்தாலும் பூமி கிடுகிடுவென்று ஆடினாலும் வானம் இடிந்து கீழே விழுந்தாலும் அலைகளைத் தாறுமாறாக வீசி ஆழமான கடல் பொங்கினாலும் மற்றும் என்னதான் வந்தாலும் நிலை தடுமாறாத பெருங் காந்தியை உள்ளத்தே கருது மனமே! "வானந் துளங்கில் என்" என்ற அப்பர் தேவாரம் ஈண்டுக் கருதத்தக்கது.

## மனத்திற்குக் கட்டளை

மனமே! உயரும் வழிகேள் !
அருந்தவக் காந்திபுகழ்
தினமும் துதித்துஅவன் செய்கை
அறிந்து,அவன் செப்புஅறத்தை
நனிஆய்ந்து எடுத்து,அந் நளிர்கடன்
தன்னை நடையினிற்கொண்டு
இனிதே புரியின் உயர்வாய் ;
இதுமெய் ; இடர்இலையே. 16

1 மனத்தைப் பார்த்துக் கூறுவதே.

**கருத்து:-** மனமே! நீ உயர வேண்டுமல்லவா? அதற்கு உரிய வழியைச் சொல்லுகிறேன்; கேட்பாயாக; அருந்தவக் காந்தியின் கீர்த்தியை நாள்தோறும் பாடு; அவன் செயலை எல்லாம் கூர்ந்து பார்; அன்னார் சொல்லும் அறத்தை நன்ருக ஆராய்ந்து எடுத்துக்கொள்; அவ் அறத்தைச் செய்கையில் கொள்; அவ் இனிமையையே செய்வாயாயின் உயர் நிலையை அடைவாய்; இது உண்மை; துன்பமே உனக்கு உண்டாகாது.

## பாலனைப் பழித்தல்

மெய்நொந்து உனைப்பெற்று யான்பெற்ற
இன்பம்இம் மேதினியில்
அய்யா ! பெரிதே ; எனினும்
அருந்தவக் காந்திகளத்து
எய்யாது உழைத்துஇன்று இனிய
பெருநலம் எய்தல்இன்றித்
துய்யாய் ! சிலநாள் வறிதே
கழித்திடத் தோன்றினையே. 17

பாலனைப் பழித்தல்:- மகனை ஏசுதல். குழந்தையைப் பெற்ற தாயானவள், குழந்தை பிறந்ததின் காரணமாகப் பேறு காலத்தில் நாட்டுக்குச் செய்யவேண்டிய பணியை ஆற்றமுடியாமையால் வருந்திப் பிள்ளையைப் பார்த்துக் கூறும் முறையில் பாடல் அமைகிறது.

**கருத்து:-** ஐயா! உடல் வருந்தி உனைப் பெற்றமையால் நான் அடைந்த இன்பம் இவ் உலகத்தில் எல்லாவற்றையும்விட அதிகமே; ஆனாலும் அருந்தவக் காந்தியின் போர்க்களத்திலே புகுந்து, சலியாமல் தொண்டாற்றி, இன்று பேரின்பம் எய்துதற்கு இடையூருக, தூமணியே! சில நாட்களை வீணுகப் போக்கப் பிறந்தாயே.

## நாணிக் கண் புதைத்தல்

தோன்று புகழ்உடைக் காந்தி
அறம்வளர் தோகையரே!
ஈர்ந்து விடும்எனை என்று
கருதிகொல்! எல்வளைகள்
சேர்ந்த கரம்கொடு தீய
விடம்சேர் சினவடிவேல்
போன்ற பெருவிழி பேணி
இறுகப் புதைத்ததுவே. 18

நாணிக் கண் புதைத்தல்:- வெட்கப்பட்டுக் கண்ணைப் பொத்திக் கொள்ளுதல். கண்ணை மூடிக்கொண்ட நங்கையைப் பார்த்துக் காதல் கொண்ட நம்பி நவில்கின்றான்.

**கருத்து:-** புகழொடு தோன்றிய காந்தி அறத்தை வளர்க்கின்ற நங்கையரே! தங்கள் கண்ணாகிய வேலாயுதம் என்னைப் பிளந்துவிடும் என்று நினைத்தா, கொடிய நஞ்சு தீட்டிய கோபம்கொண்ட கூர்மையான வேல் அனைய பெரிய கண்ணைப் பாதுகாத்து, ஒளிமிக்க வளைக்கையால் இறுக்கமாக மூடிக்கொண்டீர்கள்?

## நாணிக் கண் புதைத்தல்

பேணி அருந்தவக் காந்தி
அறம்புரி பெண்அணங்கீர்!
மாணும் அவன்அறம் போற்றும்
அடியனை, மாமழைக்கண்
காணில், உமக்குக் கருது
குறைஎது? கண்திறவீர்!
நாணிக் கருங்கயற் கண்புதை
கைஎடும் நாரியரே! 19

இதுவும் முன் பாட்டைப் போன்ற துறையே.

**கருத்து:-** அருந்தவக் காந்தியின் அறத்தைப் பேணிச் செய்யும் பெண் தெய்வமே! மாண்புடைய அப் பெரியோன் அறத்தைப் போற்றும் சிறியேனை, சிறந்த குளிர்ந்த கண் திறந்து காண்பதனால் உங்கட்கு வரத் தக்க குற்றம் என்ன? கண்ணைத் திறவுங்கள்; வெட்கிக் கரிய மீனனைய கண்ணைப் பொத்திய கையை விலக்குங்கள்; மாதரீர்!

## கலைமான் வினவுதல்

கருங்கயல் நீண்டகண் காரிகை
யீர்!உங்கள் கண்பொரும்என்
இருங்கண் மணிநிகர் என்உளம்
கொண்ட எனக்குஇனிய
அருங்கலை மான்,உங்கள் ஆயத்து
உளதோ ? அருள்வடிவப்
பெருங்காந்தி ஆணை! திருவாய்
மலர்ந்து உண்மை பேசுமினே. 20

*கலைமான் வினவுதல்:-* பெண்கள் கூட்டத்துள் சென்று, தனது காதற் கலைமானைக் கேட்டல்.

**கருத்து:-** கரிய கயல் மீனை அனைய நெடிய கண்ணைப் பெற்ற நங்கைகளே! உங்கள் கண்ணை ஒத்த கண் உடையது; எனக்குப் பெருங் கண் மணி போன்றது; எந்தன் உள்ளத்தைக் கொள்ளைகொண்டது; எனக்கு இனியது; இத்தகைய அருமையான கலைமான் உங்கள் கூட்டத்துள்ளே இருக்கின்றதா? அருளே வடிவெடுத்த பெரிய காந்தியின்மேல் ஆணை யிட்டு, திருவாயைத் திறந்து உண்மையைச் சொல்லுங்கள்.

## கிளியை வினவுதல்

திருவாய் திறந்து சிறகுஆர்
கிளியே ! சிறைஉறையும்
பெருவாழ்வு உடையேன்; பிறிதுஓர்
சிறைவாழ் எனக்குஇனிய
மருவார் குழல்என் மனையாள்
சுகமோ ? மதில்கடந்து
வருவார் நினையன்றி இலரே
எவரும்! வழுத்துவையே. 21

*கிளியை வினவுதல்:* கிளியைக் கேட்டல். சிறை உறையும் ஒரு காதலன் மற்றொரு சிறையிருக்கும் தன் காதலியின் சுகத்தைக் கிளியைப் பார்த்துக் கேட்கின்றான்.

**கருத்து:-** சிறகையுடைய கிளியே! உன் திருவாயைத் திறந்து சொல்க; நான் சிறையிலே பெருவாழ்வு வாழ்கின்றேன்; மற்றொரு சிறையிலே வாழ்கின்ற எனக்கு இனியாளாகிய மணம் நிறைந்த கூந்தலை யுடைய எனது மனையாள் நலமா? சிறை மதிலைக் கடந்து என்னிடம் வரத் தக்கவர் நின்னையன்றி எவரும் இலரே.

# வண்டு விடு தூது

எவரும் விரும்ப இசையிடு
வண்டே! எழுந்துஉயர்ந்த
சுவருள் இருக்கும்என் சுந்தரன்
தன்னிடம் தூதுசென்று,
"கவரும் நினது கரும்பு
சிறையில் கலைபயின்று
தவரும் வியந்திட வாழுகின்
றுள்"எனச் சாற்றுகவே. 22

வண்டு விடு தூது: வண்டைத் தூதாக அனுப்புவது. சிறையுறையும் தன் காதலனுக்கு இன்னொரு சிறைவாழ் காதலி வண்டு மூலம் கூறுகிறுள்.

**கருத்து:-** யாவரும் ஆசைப்படுமாறு இசை பாடுகின்ற வண்டே! ஓங்கி உயர்ந்திருக்கின்ற சிறைச் சுவரின் உள்பக்கத்தே இருக்கின்றுன் என் அழகன்; அவனை நீ அணுக வேண்டும்; என்ன சொல்ல வேண்டும் தெரியுமா? 'உன்னுடைய உள்ளத்தைக் கொள்ளைகொள்ளும் கரும்பு ரசம் போன்றவள், சிறையிலே கலை பல கற்று, தவசிகளும் பாராட்டத்தக்க வாழ்வு வாழ்கின்றுள்' எனச் சொல்.

சாற்றுக காந்தி அறத்தைத்
தரணி தழைப்பதற்கு;
போற்றுக அன்னுன் திருவடிப்
போதினைப் பூநிறைத்து;
மாற்றுக நோயினை; மாதா
உரிமை மணிக்கொடியை
ஏற்றுக; இந்திய நாட்டினில்
எங்கணும் ஏற்றுகவே. 23

**கருத்து:-** உலகம் செழித்துயருவதற்குக் காந்தியின் அறத்தைப் பறைசாற்றுக; மலர் தூவி அப்பெரியோன் திருவடித் தாமரையை வணங்குக; அடிமைப் பிணியை மாறுபடச் செய்க; தாயின் சொந்த மணிக் கொடியை ஏற்றுக; அக்கொடியை இந்திய நாடு முழுதும் பறக்க விடுக.

இந்தியத் தாய்சமம் எய்தாது
உலகில் இடர்அடைந்து
நொந்திடக் கண்டு,உடன் செய்கடன்
வேறுஇலே நுங்கட்குஎன
மைந்துடன் விண்டு, அவள்மக்களைச்
சேர்த்துஒரு மாபெரும்போர்
முந்தையர் காணு முறைவகுத்
திட்டவன் மோகனனே. 24

**கருத்து:-** பாரத அன்னேயானவள் உலகின் ஏனைய தோழிகளோடு சமம் அடையாமல் துயர் அடைந்து வருந்துவதைப் பார்த்து, உடனடியாகச் செய்யத்தக்க வேறு கடமை உங்கட்குக் கிடையாது; தாய் விலங்கு அறுத்தலே முதற் கடன் எனக் கூறி, வலிமையோடு அவள் மக்களை ஒன்று திரட்டி ஒப்பற்ற சிறந்த பெரிய போர் ஒன்றை முன் இருந்தவர் எவரும் செய்யாத ஒரு முறையிலே வகுத்தவன் மோகனக் காந்தியே.

மோகன தாசனைப் பாடுமின்,
மொய்த்திடு வண்டினங்காள் !
வேகம தாய்எறி, மாருத
மே!அவன் வீசுபுகழ்;
பாகுஅன வாய்மொழிப் பாங்குஇசைப்
பீர்,மணிப் பைங்கிளிகாள் !
மாகலை யான்அவன் மாண்நடம்
செய்,பொழில் மாமயிலே! 25

**கருத்து:-** மொய்க்கின்ற வண்டுக் கூட்டங்களே! மோகனனைப் பாடுங்கள்; காற்றே! அன்னுனுடைய வீசும் கீர்த்தியை விரைவாகப் பரப்பு; அழகிய பசிய கிளிகளே! வெல்லக்கட்டி போன்ற உங்கள் வாய்ப் பேச்சால் அப் பெரியோன் தகுதியைப் பகருங்கள்; சோலையில் உலாவும் சிறந்த மயில்களே! பெருங் கலைவல்லானுகிய அக் காந்தியின் மாண்பை இசைத்து நடனம் ஆடுங்கள்.

## நாணிக் கண் புதைத்தல்

மயிலே! மணியே! மணமே!
மருந்தே! மனத்தில்வளர்
குயிலே! கொடியே! குணமே!
கொழுந்தே! குழலொடுயாழ்
பயில்இன் மொழியே! விழிதிற
வாய்எனில் பாவிஏதும்
அயிலேன்! இதுமெய்! அருங்காந்தி
ஆணை; அறிகுவையே. 26

நாணிக் கண் புதைத்தல்:- வெட்கிக் கண் பொத்தியவளைக் கண் திறக்கப் பாடுதல்.

**கருத்து**:- மயிலே! இரத்தினமே! வாசனையே! அமுதமே! என் மனத்திலே வளர்கின்ற கோகிலமே! கொடியே! குணமே! கொழுந்தே! புல்லாங்குழலோடு யாழ் இசை பழகும் இனிய பேச்சே! நீ கண் திறக்க வில்லையேல், பாவியாகிய நான் ஏதும் உண்ண மாட்டேன்; இது உண்மை; காந்தி மீது ஆணையிட்டுச் சொல்கின்றேன்; தெரிந்துகொள்.

## நாணிக் கண் புதைத்தல்

ஆணை உரைத்தனன்; காந்தி
அறத்தை அநுதினமும்
பேணி வளர்ப்பன்; பெரிதும்
இதுமெய்; பிணைத்தநறும்
பாணி விலக்கிப் பருத்த
அருள்பொழி கண்திறந்து
காணல் புரிவாய்! கரும்பே!
விரும்புமென் காதலியே! 27

இதுவும் முன் பாட்டுப் போன்ற துறையே.

**கருத்து**:- அறுதியிட்டுச் சொல்லுகின்றேன்; காந்தியின் அறத்தை நாள்தோறும் போற்றி வளர்ப்பேன்; இது பெரிதும் உண்மை; மூடிய நல்ல கைகளை நீக்கிப் பெரிய கருணை சொரியும் கண்களைத் திறந்து என்னைப் பார்! என் கரும்பே! எனது ஆசைக்கிசைந்த காதலியே!

## கடமையில் பிரிதல்

காதலி யே! நாம் கலந்தது
காந்தி அறம்வளர்க்க;
ஆதலி னுல்இன்று அரிய
பெருவாழ்வு அவனிதனில்
மேதக நம்தாய் விளங்கப்
பிரிதலும் வேண்டும் எனில்,
பாதகம் இல்லை; வருந்தேல்
பழகிய நூல்அணங்கே! 28

கடமையில் பிரிதல்:- கடமையின் பொருட்டுக் காதலிக்குக் காதலன் பிரிவை உணர்த்திப் பேசுகின்றுன்.

**கருத்து:-** நாயகியே! நமது கூட்டுறவு ஏற்பட்டதே காந்தி அறம் வளர்ப்பதற்காகவல்லவா? ஆகையினுலே, இன்று நமது தாயானவள் இவ் உலகத்தில் அரிய பெரிய வாழ்வடைந்து மேம்படுதற்கு நாம் பிரிய வேண்டும் என்றிருக்குமாஞல் அதனுல் குற்றம் இல்லை; வருந்தாதே; நூலொடு பழகிய நங்கையே!

## அமுதம் கேட்டல்

நூலொடு நுண்அறிவு ஏறிய
நுண்ணிய நூல்இடையே!
வேல்அருங் கண்கொலும்; காந்தி
திருப்புகழ் மேவிடும்உன்
பாலொடு தேன்கலந் தன்ன
பணிமொழி வாய்அமுதம்
மால்அற நீதரின் வாழ்குவன்;
அன்றுஎனின் மாழ்குவனே. 29

அமுதம் கேட்டல்.- காதலியின் திருவாய் அமுதத்தை விரும்பிக் காதலன் கூறுவது.

**கருத்து:-** இலக்கிய நூல்களைக் கற்றதனோடு நுணுக்கமான அறிவையும் பெற்ற நுட்பமான நூல் போன்ற இடையையுடைய பெண்ணே! வேலை ஒத்த உன் அரிய கண் என்னைக் கொல்கின்றது; காந்தியின் அழகிய புகழைப் பாடும் உன் திருவாய் அமுதத்தை-பாலும் தேனும் கலந்ததைப் போல இனிக்கும் பணிந்த மொழி பயிலும் உன் வாய் அமிர்தத்தை- என் மயக்கம் தீர நீ தருவாயானுல் வாழ்வேன்; நீ தாரா விட்டால் மாண்டொழிவேன்.

"பாலொடு தேன்கலந் தற்றே, பணிமொழி
வால்எயிறு ஊறிய நீர்"

என்பது குறள்.

## திருமணம் வேண்டல்

நீதிகை யாதே! நெறியை
உணர்ந்தஎன் நெஞ்சுநிறை
காதலி யே!நல் கடன்உணர்
காந்தி அறஉலகில்,
சாதி சமயம் மொழிந்து
மணத்தைத் தடுத்திடுவோர்,
பேதையர் அன்றோ? இவைஇனிச்
செல்லல்இல் பெண்அரசே! 30

திருமணம் வேண்டல்:- திருமணத்தை விரும்பிக் காதலன் கூறுவது!

**கருத்து:-** வழியை அறிந்த என் நெஞ்சில் நிறைந்த காதலியே! பெண் அரசே! நீ திகைப்படையாதே; நல்ல கடமையை உணர்ந்த காந்தியின் அற உலகத்திலே வகுப்பையும் மதத்தையும் சாக்குச்சொல்லி மணம் புரிதலைத் தடைசெய்வோர் அறிவற்றவர்; இத்தகைய காரியங்கள் இனிச் செல்லமாட்டா.

## கடமையில் பிரிதல்

''செல்லாமை உண்டேல் எனக்குஉரை
மற்றுநின்'' சீர்த்திகெழு
''வல்வர வாழ்வார்க்கு உரை''எனச்
செங்கனி வாய்திறந்து
மல்குகண் ணீர்சொரி மாமருந்
தே!அனை மாப்பணியில்
செல்லுத லிற்பிரிவு ஆற்றுதல்
வேண்டும்; என் சேயிழையே! 31

கடமையில் பிரிதல்:- கடமையின் பொருட்டுப் பிரிவு உணர்த்தும் காதலன் பேச்சு.

**கருத்து:-** ''போகாதிருப்பதானால் என்னிடம் சொல்க, மற்றும் உன்னுடைய புகழ்மிக்க விரைந்த வருகைப் பேச்சை நீ திரும்பி வரும்வரை உயிர்வாழக்கூடிய மனைவி ஒருத்தி உனக்கு இருந்தால் அவளிடம் சொல்'' என்று சிவந்த கனிவாயைத் திறந்து பேசி, கண்ணீரை நிறையப் பெருக்குகின்ற சிறந்த அமுதமே! அன்னையின் பெரும் பணிக்கான பிரிவை நீ பொறுத்துக்கொள்ளத்தான் வேண்டும்; செவ்விய நகையை அணிந்தவளே!

''செல்லாமை உண்டேல் எனக்குஉரை; மற்றும்நின்
வல்வரவு வாழ்வார்க்கு உரை''

என்னும் குறள் இங்கு எடுத்தாளப்பட்டது.

## கடமையில் பிரிதல்

சேயிழை யே! நம தாய்ச்சீர்
 விடுதலை தேர்பணியில்
மேய்உயர் மேதினி மீதுஉயர்வு
 ஒப்புஇல்நல் மோகனப்பேர்
நாயகன் சொல்வழி நண்ணுவம்;
 ஏனை நலன்நுகர்தற்கு
ஏயின நாள்இது அல்ல;என்
 கண்உறை இன்அமுதே! 32

இதுவும் முன் பாட்டை ஒத்த துறை.

**கருத்து:-** செம்மையான அணியை உடையவளே! என் கண்ணுள் உறைகின்ற இனிய அமுதமே! நமது தாய்நாட்டிற்கு உழைக்கும் சிறந்த பணியில் மேலான உயர்ந்த எந்த உலகத்திலும், ஒப்பும் மேலும் இல்லாத நல்ல மோகனக் காந்தியின் சொல்லைத் தலைமேல் தாங்கி நிற்போம்; மற்றைய சுகங்களையெல்லாம் அநுபவிப்பதற்கு ஏற்ற காலம் இதுவல்ல.

## தலைவன் புகழ் வினுதல்

இன்அமு தே!எனது இல்லின்
 பெருவாழ்வு இயைந்தஎழில்
கன்னலும் தேனும் கனியும்
 புளிக்கும் கடற்பிறந்த
மென்மல ரே!உன் திருவாய்
 திறந்துஎழில் மேவும்மணி
சிந்திடு மோ?உயர் காந்தி
 பெரும்புகழ் செப்பிடினே! 33

தலைவன் புகழ் வினுதல்:- தங்கள் தலைவனின் கீர்த்தியைப் பேசுமாறு தன் காதலியைக் காதலன் கேட்டல்.

**கருத்து:-** இனிய அமுதமே! என்னுடைய இல்லறப் பெருவாழ்க்கைக்கு ஏற்ற அழகுகொண்ட, கரும்பும் தேனும் பழமும் புளிக்கும் என்று சொல்லத்தக்க இனித்த பேச்சுடைய, கடலிலே பிறந்த திருமகளை ஒத்த மென்மையான பூவே! உன்னுடைய அழகிய வாயைத் திறந்து உயர்ந்த காந்தியின் பெரிய கீர்த்தியைப் பேசினுல் வனப்பு மிகுந்த முத்துக்கள் உதிர்ந்தா போகும்?

பெரும்புகழ் ஆண்டுஇப் புவியில்
பிறந்தவர் யாவரினும்
அரும்புகழ் ஆண்டவன்; ஆமதப்
பாத்அணி ஆர்நகரில்
விரும்பும் சபர்மதி மேயவன்;
மேதினி வாழவந்தோன்;
கரும்பின் இனியன்;எம் காந்தி
பதத்தைக் கருதுமினே. 34

**கருத்து:-** பெரிய கீர்த்தியைக் கையாண்டு, இவ் உலகத்தில் தோன்றியவர் எல்லாருள்ளும் அருமையான புகழுக்கு உரியவனும் ஆமதாபாத் என்ற அழகு நிறைந்த ஊரில், விரும்பத்தக்க சபர்மதி ஆற்றங்கரையில் பொருந்தியிருப்பவனும், உலகம் உய்யப் பிறந்து அருளியவனும், கரும்பஞ் சாற்றைவிட இனிமையானவனுமான எங்கள் காந்தியின் திருவடியை நினையுங்கள்.

கருதுமின் காந்தி பதமலர்;
அன்னவன் காதல் அறம்
மருவிய கத்துரி மாதா
தனை,மணி வாய்திறந்து
பெருக உரையுமின்; பீடுஉடைக்
காந்தியைப் பெற்றுஎடுத்தே
அருளிய புத்திரி அன்னை
தனைத்துதித்து ஆடுமினே. 35

**கருத்து:-** காந்தியின் திருவடித் தாமரையை நினையுங்கள். அன்னாரின் காதல் வாழ்வில் பொருந்திய கத்தூரி அன்னையை, அழகிய வாயைத் திறந்து, பெருமிதமாகப் பாராட்டுங்கள். பெருமை மிக்க அக் காந்தியைப் பெற்றுத்தந்து அருள்புரிந்த புத்திரிபாய் என்ற தாயைத் தொழுது கூத்தாடுங்கள்,

ஆடுமின் ! பாடுமின் ! அண்ணல்
தனிக்கதர் ஆண்டிடுமின் !
வாடிய நற்பயிர் நீடிட,
மாமழை பெய்வதுபோல்,
வீடிய நாடுஉயர் மேன்மை
அடைந்திட, மெல்அமுதம்
கூடிய சொல்உரை காந்தியின்
செந்நெறி கூடுமினே ! 36

**கருத்து:-** ஆடுங்கள்; பாடுங்கள்; பெருமை மிக்க காந்தியின் கதராடையைக் கையாளுங்கள். வாட்டம் அடைந்த நல்ல பயிர், நீண்டு தழைக்க, சிறப்பாக மழை பொழிவதுபோல, வீழ்ச்சியடைந்த நம் நாடு, சிறந்து மேன்மையுற, மென்மையான அமுதம் குழைத்த மொழி பகர்கின்ற, காந்தியின் செம்மையான வழியைச் சேருங்கள்.

## கடமையில் பிரிதல்

கூடிய அந்நாள் குறித்தநல்
பேர்உரை கொல்வதுஎவன் ?
நீடிய காதல ! நேரிய
உள்உறை மாமருந்தே !
நாடுஇது நாட்படும் அல்லலைக்
கண்டுஇனி நாம்நலத்தில்
ஆடுதல் நன்றோ ? புறப்படு,
காந்தி அமர்க்களமே ! 37

தாய்நாட்டின் விடுதலைக்காகப் பிரியுமாறு தலைவனிடம் தலைவி கூறுதல்.

**கருத்து:-** நாம் சேர்ந்த அந்நாளில் குறிக்கோளாகக் கொண்ட நல்ல, பெரிய மொழியை அழிக்கலாமா? நீண்ட காதல் உடையவனே! நேர்மையான உள்ளத்திலே தங்கியிருக்கின்ற சிறந்த அமுதமே! நாடு, இந்நாளில் அடைகின்ற துயரத்தைக் கண்டும் நாம் இனியும் இன்பக் கடலாடுதல் நலமாகுமா? புறப்படு, காந்திப் போர்க்களத்துக்கு!

## கடமையில் பிரிதல்

நன்றுஅல; நாம்நமது ஆர்உயிர்த்
தாய்நேர் நலிவு அகற்றுது
இன்றுஉறை வோம்எனில், யார்உளர்
நம்போல் இழிவுஉடையார்?
ஒன்றிய காதல! உள்ளத்து
அமர்ந்த ஒருபெரியோய்!
சென்றிடு வோம்வா, திருவளர்
காந்தி திருப்பணிக்கே! 38

காந்திப் போர்க்களத்துக்கு இருவரும் செல்வோம் என்று தலைவி கூறல்.

**கருத்து:-** பொருந்திய காதல் உடையவனே! என் மனத்தே குடி கொண்ட ஒப்பற்ற பெரியவனே! தாய்நாட்டின் நிலையுணர்ந்தும் நாம் இன்பத்து அழுந்துதல் நலம் அன்று. நம் ஆருயிர் தாய் அடைகின்ற துயரத்தைப் போக்க முற்படாது இன்று வாழ்வோமானால் நம்மைப்போல் இழிதகையுடையார் எவர்? அருட்செல்வத்தை வளர்க்கின்ற காந்தித் திருப் பணியில் ஈடுபடச் செல்வோம், புறப்படு!

## நல்தாய் இரங்கல்

காந்தி அறம்எனும், கண்டார்
நடுங்கும் கடும்தவத்து,என்
ஏந்துஎழில் வாய்ந்த இனிய
ஒருமகள், எல்படைகொள்
வேந்தர் விறலும் மதியா,
வெறுங்கை அமர்க்களத்தே
சேர்ந்தன ளே;அருந் தோழி!
இனிநான் செய்வதுஎன்னே! 39

காந்திவழிச் சென்ற மகளுக்குத் தாய் வருந்துதல்.

**கருத்து:-** அருமையான தோழி! காந்தி அறம் என்று சொல்லுகின்ற, கண்டவர்கள் அஞ்சும் கடுமையான தவப்பணியில் என்னுடைய எழில் தவழும் இனிமையான ஒரே மகள், ஒளிமிக்க படைகளைக் கொண்ட மன்னவர் ஆற்றலையும் மதியாமல், படையற்ற வெறுங்கையோடு போர் செய்யும் களத்துக்குப் புகுந்துவிட்டனளே! இனி நான் என்ன செய்யப் போகின்றேன்?

## நல்தாய் இரங்கல்

சேரன் இசைத்த சிலம்புஅணி
வாள்;செழுந் தீங்கரும்பின்
சாரம் அனையாள்; சரம்எனக்
கம்பன் தமிழ்புனைவாள்;
மாரன் விரும்பும் வனப்புஉடை
யாள்;கண் மணிநிகர்வாள்;
சேர விழைந்தனள் காந்தி
அறத்தினில், செய்வதுஎன்னே! 40

இதுவும் முன் பாடல் துறையே.

**கருத்து:-** என் மகள் இளங்கோ செய்த சிலம்பைப் பூணுவாள்; செழுமையான இனிக்கின்ற கரும்பின் சுவைய ஒத்தவள்; மாலையாகக் கம்பனுடைய தமிழை அணிந்துகொள்வாள். காமனும் ஆசைப்படும் எழில் உடையவள். என் கண்ணின் உள் உறை மணியை ஒத்தவள். இத்தகைய அருமை வாய்ந்தவள், காந்தி அறப்போரில் சேர விரும்பிவிட்டாளே! நான் என் செய்வேன்?

சிலம்பு: 1. பெண்கள் அணியும் கால்அணி. 2. சிலப்பதிகாரம்.

## நல்தாய் இரங்கல்

என்னே! இனிய மகள்,இவ்
வழியில் எதிர்ந்தனள்கொல்?
அன்னே! அடியனின் ஆவி
அனையாள்; அவள் உணரச்
சொன்னேன்; மறுத்தாள்; தரித்தாள்
முரட்டுத் துணிக்கதரை;
பின்னே நடந்தாள்; பிடித்தனள்
காந்திஎன் பித்தனையே. 41

இதுவும் முன் பாடல் துறையே.

**கருத்து:-** என்ன கொடுமை இது! என் இனிய மகள் இவ் வழியில் எதிர்ப்பட்டனளா? அம்மா! எனது உயிரை ஒத்தவள்; அவள் அறியுமாறு எவ்வளவோ எடுத்துச் சொன்னேன்; மறுத்துவிட்டாள்; முரட்டுக் கதர்த் துணியை உடுத்துக்கொண்டாள்; காந்தி என்ற கிறுக்கனைப் பிடித்துக் கொண்டு, பின்பற்றி நடக்கத் தொடங்கிவிட்டாள்.

(எதிரில் வருகின்றவரைப் பார்த்துத் தாய் வினுதல்)

## நல்தாய் இரங்கல்

நடந்தாள் தனியே; தொடர்ந்தேன்
அடியனும்; நங்கைஉறை
இடந்தான் எதுஎன்று அறியேன்;
இனிஎன் செய்குவன்;நான்!
விடம்தாள் விழிஉடை மென்மகள்,
காந்திக் கிறுக்குமுற்றிக்
கிடந்தாள்; எழுந்தாள்; புகுந்தாள்;
அறிவிர்கொல்? கிள்ளைகளே! 42

கிளிகளைத் தாயார் கேட்டல்.

**கருத்து:-** கிளிகளே! என் மகள் தனியே சென்றாள்; நானும் பின் தொடர்ந்து வருகின்றேன்; அவள் இருக்கும் இடம் எது என்று தெரியேன். இனி என் செய்வேன்? நஞ்சு தங்கிய கண்களையுடைய மென்மை வாய்ந்த அவள், காந்திப் பைத்தியம் முதிர்ந்து, விழுந்தாள்; எழுந்தாள்; புறப் பட்டாள். அவள் எங்கு இருக்கிறாள் என்று அறிவீர்களா?

## நல்தாய் இரங்கல்

கிள்ளைக ளே!என் கிளிமொழி
இன்னிசை வேயொடுயாழ்
கொள்ளாள்; அழகை மறந்தாள்;
குழலில் மலர்முடியாள்;
அள்ளாள் அமுதும்; அணியாள்
இழையும்; அநுதினமும்,
"வள்ளால்! மறுஅறு காந்தி"என்
பாள்;இது மாதுயரே. 43

இப் பாடலும் கிளிகளைத் தாயார் வினுதல்.

**கருத்து:-** கிளிகளே! கிளி போன்ற பேச்சை உடைய என் பெண், இனிய ஓசையை எழுப்புகின்ற குழலொடு யாழைக் கொள்ள மறுக்கின்றாள்; ஒப்பனையை மறந்தாள்; கூந்தலில் பூச் சூடாள்; அமுதனையை உணவை உட்கொள்ளாள்; நகைகளை அணிய மாட்டாள்; நாள்தோறும் "வள்ளலே! குற்றமற்ற காந்தி" என்று கூறுவாள். இது எனக்குப் பெரும் துன்பமாக இருக்கின்றது.

## நல்தாய் இரங்கல்

மாதுஅவள் காந்தியின் போர்குறித்து
ஓடி, மதிஇலிகள்
தீதுஉடைக் கையடி, செம்மை
வடிவுபட்டு எய்த்தனளோ?
வேதனைச் சாக்கடை நீர்மணம்
மேனியில் மேவினளோ?
ஏது?இரும் வன்சிறை எய்தின
ளோ?என் தலைவிதியே! 44

தாயார் வருந்திக் கூறும் பாடல்.

**கருத்து:-** என் மகளாகிய அவள் காந்தியில் போர்க் களத்துக்குச் சென்று, அறிவு அற்றவர்களின் தீமை வாய்ந்த தடியடியைச் செவ்விய உடம்பிலே தாங்கி, எய்த்துப் போய்விட்டாளோ? துயரத்தைத் தருகின்ற சாக்கடை நீரை மணம் வாய்ந்த உடம்பில் வாங்கிக்கொண்டாளோ? பெரிய, வலிய சிறைச்சாலையை அடைந்துவிட்டாளோ? எவ்வாறோ அறியேன். இது என் தலைவிதியேயாகும்.

## மயில் வினுதல்

எந்தை இரும்புகழ் என்கிளி
பாடுதற்கு ஏற்பநடம்
'திந்திம்' எனஇடும் சீரிய
என்அரும் பச்சைமயில்,
சிந்தை களிக்கத் திருநடம்
செய்துஇங்கு சேர்ந்ததுஉண்டோ?
பந்து பயில்இளம் பாவைய
ரே!மெய் பகருமினே. 45

தான் விரும்பிய பெண் மயில் இக் கூட்டத்தில் உளதா எனப் பெண் குழுவுள் நுழைந்து தலைவன் கேட்டல்.

**கருத்து:-** பந்தாடுகின்ற இளைய நங்கையர்களே! காந்தி எம்மான் பெரிய இசையை என்னுடைய கிளி பாடுங்கால், அதற்கு ஏற்ப, 'திம்திம்' என நடம் ஆடும் என் சிறந்த, அரிய பச்சை மயில், நீங்களெல்லாம் உள்ளம் மகிழுமாறு திருநடம் புரிந்துகொண்டு இங்கு வந்ததா? உண்மையைச் சொல்லுங்கள்.

## கலைமான் வினுதல்

பந்து பயில்இளம் பாவைய
　　ரே! யான் பணிப்பதற்கு
முந்தி வருமான்; முனிமதி
　　மோகனன் பேர்உரைக்கில்,
என்தன் கதுப்பினில் முத்தம்
　　இடுமான்; எழில்நிறைமான்;
சிந்தைக்கு இனிய சிறுமான்;
　　உளதோ? சிறுமியரே! 46

பெண்கள் ஆயத்துள்ளே சென்று தான் காதலித்த பெண்ணாகிய கலைமான் வந்ததுண்டா எனத் தலைவன் கேட்டல்.

**கருத்து:-** பந்தாடுகின்ற இளம் பெண்களே! யான் அழைப்பதற்கு முன்னே ஓடிவரும் மான்; முனிவர்களும் பாராட்டும் மோகனதாஸ் காந்தியின் பெயரை நான் சொன்னேனானால் என் கன்னத்தில் முத்தம் தரும் மான்; அழகு நிரம்பிய மான்; உள்ளத்துக்கு இனிய சிறிய மான்: இங்கு உளதோ? சொல்லுங்கள், சிறுமிகளே!

## இயல் இடம் கேட்டல்

சிறுமான் விழியீர்! சிறிய
　　இடையீர்! திருமகள்போல்
இறுமாந்து இருப்பீர்! எளிய
　　கதரே இனிதுஉடுப்பீர்!
நிறையே அணிவீர்! நிறைந்திடு
　　நேயம்என் பால்செலுத்தும்
சிறியாள் இயலும்,அச் சீராள்
　　உறையுளும், செப்புமினே 47

தகுதியும் இடமும் வினுதல். இயல்: தகுதி. இடம்: இருக்கும் இடம்.

**கருத்து:-** சிறிய மானின் விழியை உடையீர்! சின்ன இடையை உடையீர்! இலக்குமியைப் போலச் செம்மாந்து வீற்றிருப்பீர்! எளிமை வாய்ந்த கதரை இனிமையாக அணிவீர்! கற்பையே ஆபரணமாகக் கொள்வீர்! நிறைந்த அன்பை என்னிடம் சொரியும் அந்தச் சின்னஞ்சிறு பெண்ணின் தகுதியையும், அச் சிறப்புடையாள் தங்கி இருக்கும் இடத்தையும் எனக்குச் சொல்லுங்கள்.

## நல்தாய் இரங்கல்

சீர்ஆர் எனது திருமகள்
என்னைத் தனிஇருத்திப்
பாராள் குலமும்;இவ் ஊரார்
பழிப்பும்; பரிபவமும்
ஓராள் சிறிதும்;என் உத்தமி,
காந்தி வழிஒழுகும்
யாரோ ஒருவனைப் பின்தொடர்ந்
தாள்;இஃது அதிசயமே. 48

*தாயார் வருந்திக் கூறுதல்.*

**கருத்து:-** சிறப்பு வாய்ந்த என் அழகிய மகள், என்னைத் தனியாக வைத்துவிட்டு, குலத்தை எண்ணுமல், ஊரார் பழிச்சொல்லை ஓராமல், ஏற்படும் இன்னலைச் சிறிதும் உணராமல், என்னுடைய உத்தமியாகிய அவள், காந்திவழியில் செல்லுகின்ற யாரோ ஒருவனைப் பின்தொடர்ந்து நடந்துவிட்டாள். இது வியப்பிற்குரியது அல்லவா?

## தோழி தூது உரைத்தல்

தமிழே பயின்று, கதரே
சுமந்து, தளரும்இடை,
அமிழ்தே அயிலாள்; அணையே
கிடந்தே அயருகிருள்;
கமழ்வாய் திறந்து"எழில் காதல"
என்றே கதறுகிருள்;
உமிழாது அவள்வயின் ஒன்று
பிணக்கை உடன்மறந்தே. 49

*தோழி தலைவியை அடையுமாறு தலைவனை வேண்டல்.*

**கருத்து:-** தமிழைப் படித்து, கதராடையைத் தாங்கி அதனுல் நொந்த இடையையுடைய என் தலைவி, அமிழ்தனைய உணவுஉட்கொள்ளாள்; படுக்கையில் புரண்டு சோர்கின்ருள்; மணம்பெறும் வாயைத் திறந்து, 'அழகிய காதல!' என்று அலறுகின்ருள். பிணங்குதலை உடனே மறந்து, அவளைத் தள்ளிவிடாமல் அவளிடத்திலே வந்து சேர்வாயாக!

## திருமணம் வேண்டல்

ஒன்றுஉரைப் பேன்;காந்தி உண்மை
அறத்தை உலகுஅறியச்
சென்று பரப்பும் செயல்உடை
யேன்;இதில் சேர்ந்துஉழைப்பல்
என்றுஅவன் மீதினில் ஆணை
இடுவாய்; எனில்உனை நான்
மன்றல் புரிவன்; விரும்பிடின்
வேறு வழிஇலையே. 50

தன்னை விரும்பிய தலைவனிடம் திருமணத்திற்கு மனைவி கூறும் நிபந்தனை.

**கருத்து:-** ஒன்று சொல்லுவேன் கேட்பாயாக! காந்தியின் மெய்யறத்தை உலகம் உணருமாறு எங்கும் சென்று பரவச் செய்யும் பணியுடையேன். அத்தொண்டில் என்னுடன் சேர்ந்து உழைக்கின்றேன் என்று அக் காந்தியின் மீது ஆணையிட்டுக் கூறுவாயாக! அப்படிச் செய்தால் உனை நான் மணம் செய்துகொள்வேன். நீ என்னை விரும்பினுல் வேறு வழியில்லை.

## வண்டு ஓச்சி மருங்கு அணைதல்

இலதென்று இடுவர், உளதென்று
உரைப்பர், இடைஇவட்கு,
பலசொல் லுவதுஎன்? அனிச்சம்
பெயில்நல் பறைஇலதுஎன்
கலைவள் ளுவர்சொல் நுசுப்புக்
கதர்பெறல் காண்கிலிரோ?
தொலைவீர் சுரும்பீர்! உயிர்போம்
இடைபடில் தோகையர்க்கே. 51

வண்டுகளை விரட்டி, தான் விரும்பிய காதலியின் அருகே அணுகுதல்.

**கருத்து:-** இந் நங்கைக்கு இடுப்பு இல்லை என்று இயம்புவர் சிலர்; உளது என்று பேசுவர் வேறு சிலர்; பல சொல்லுவதற்கு என்ன இருக்கின்றது? அனிச்சப்பூவைச் சூடினுல் நல்ல பறை உள ஆகாது என்று, கலைவல்ல வள்ளுவர் பெருமான் பேசும் இடுப்பு, கதரைச் சுமந்திருப்பதை நீங்கள் காணவில்லையா? தொலையுங்கள், வண்டுகளே! இடை ஒடியுமாறுல் இம் மாதர்க்கு உயிரே போய்விடுமே!

## வண்டு ஓச்சி மருங்கு அணைதல்

சுரும்பீர்! அகலுமின்; சுந்த
ரியைவிடுத்து ஓடிடுமின்;
கருங்குழற் கற்றையும் கத்தர்
உடையும் கனத்துஅழுத்த
மருங்குல் சகித்திட மாட்டாது;
இனிஅவள் காதலித்து,
நெருங்கப் பொறேன்நான்; நலியீர்!
நெடுவழி நீங்குமினே. 52

இதுவும் முந்திய பாடல் துறையே.

**கருத்து:-** வண்டுகளே! நீங்குமின்கள்! என் அழகியை விட்டு விட்டு ஓட்டம் பிடியுங்கள்! கருமை வாய்ந்த கூந்தல் கூட்டமும், கதராடையும் பாரமாக வருத்த, இடுப்புப் பொறுக்க மாட்டாது. இனி, நீங்களும் அவளை விரும்பி அணுகுதலை நான் பொறுக்கமாட்டேன். துன்புறுத்தாதீர்! நீண்ட தூரம் சென்று விடுங்கள்!

## வண்டு விடு தூது

நீங்கிய யான்,என்தன் நேயம்
கவர்உயர் காந்திஅறம்
தாங்கி, இனிய தமிழ்ச்சுவை
தான்குடித்து, அன்பருடன்
வாங்கு பெருஞ்சிறை வாழுகின்
றேன்,என வன்பிரிவால்
ஏங்கிடும் என்இன் இளங்கொடிக்கு
ஆறுதல் கூறுவண்டே! 53

தலைவிக்குத் தலைவன் வண்டைத் தூது விடுகின்றான்.

**கருத்து:-** பிரிந்த நான் என்னுடைய அன்பை ஈர்க்கின்ற உயர்ந்த காந்தி அறத்தைக் கடைப்பிடித்து, இன்பம் தரும் தமிழ்ச் சுவையைப் பருகி, அன்பர்களுடன் வளைந்த, பெரிய சிறையிலே வாழுகின்றேன் என்று என்னுடைய கொடிய பிரிவால் துயருறும் என் இனிய இளங் காதலிக்கு ஆறுதல் மொழிவாயாக, வண்டே!

## வண்டு விடு தூது

வண்டே! புகல்வாய்; பிரிவுப்
பிணிகொடு வாடிடும்என்
கண்டே தரும்மென் மொழியாள்,
கயல்நேர் விழியினட்கு,
கொண்டோன் பிரிதல் கொடுமை
எனினும், குழம்பும்அன்னை
தொண்டிற் பிரியின் துடைத்தல்
இனிது,என் தொகுத்துளளிதே. 54

இதுவும் முந்திய பாடல் துறையே.

**கருத்து:-** வண்டே! மொழிவாய். பிரிவுநோய் கொண்டு வருந்துகின்ற என்னுடைய, கற்கண்டை நல்கும் பேச்சையுடையாளும், மீனை ஒத்த கண்ணை உடையாளுமாகிய காதலிக்கு, மணம் செய்து கொண்டோன், பிரிந்து செல்லுதல் கொடுமைதான் என்றாலும், குழப்பம் அடைந்திருக்கின்ற இந்தியத்தாய்ப் பணி காரணமாகப் பிரிந்து சென்றமையின் அப்பிரிவைத் தாங்கிக் கொள்ளுதல் இனிமையைத் தரும் எனத் தெளியுமாறு தொகுத்துச் சொல்லுவாயாக!

## வண்டு விடு தூது

தொண்டிற் சிறந்தஅச் சுந்தரன்
தன்னிடம் தூதுசென்று,
வண்டுஇன மே!என் மணம்அதை
நீவிர் மதிக்கவலீர்;
கண்டுஅன யான்விழ் கரும்பிடம்
கூறுவிர்! காந்திஅறம்
கொண்டவள் நான்என் பதனைக்
,அவர்க் கூட( 55

இது தலைவி தலைவனுக்கு வண்டைத் தூது அனுப்புதல்.

**கருத்து;-** வண்டுக் கூட்டங்களே! பணியில் மிக்க அந்த என் சுந்தரனிடம் தூதாகச் சென்று, என் மணத்தை நீங்கள் மதிப்பிட வல்லவர்கள் ஆதலின், நான் விரும்புகின்ற கரும்பினை ஒத்த என் காதலரிடம் என்பால் நீங்கள் கண்ட இயல்பை எடுத்து உரையுங்கள், காந்தியின் அறத்தை நான் கடைப்பிடித்தவள் என்பதை அவருக்குச் சுட்டிக்காட்டி, அவரை என்னிடம் சேர்த்து வையுங்கள்.

## அன்னம் விடு தூது

கூட்டுவிர்; செங்கால் அனங்காள்!
குறித்துஎன் நடைஅழகைக்
காட்டுவிர்; யான்வீழ் கனியை,நல்
காந்தியைச் சேர்ந்தவள்அவ்
வாட்டம்இல் மங்கை எனச்சொலி
ஏழை வடிவுஅழகும்
தேட்டமும் மற்றைத் திறங்களும்
செப்பி,அச் செல்வனையே. 56

*அன்னத்தைக் காதலனிடம் காதலி அனுப்புதல்.*

**கருத்து:-** சிவந்த காலையுடைய அன்னங்களே! என் நடையின் எழிலை நீங்கள் நடந்து காட்டுங்கள். நான் விரும்புகின்ற பழத்தை ஒத்த, நல்ல காந்தியைச் சேர்ந்தவள், அந்தச் சோர்வில்லாத பெண் என அவருக்குச் சொல்லி, ஏழையாகிய எனது உருவத்தின் எழிலையும், என் ஊக்கத்தையும் ஏனைய திறங்களையும் இயம்பி, என் காதலனாகிய அச்செல்வனை என்னிடம் சேர்த்து வையுங்கள். "செல்வனையே கூட்டுவிர்" என முடிக்க. இது பூட்டு வில் பொருள்கோள் என்பர் இலக்கண நூலார்.

## மயில் விடு தூது

செல்வனை, என்உளம் சேர்தரு
செம்மலை, சீர்வடிவு
மல்கும் அழகனை, மன்னி
வழுத்துவிர்! மாமயில்காள்!
பல்கிய காதல்உன் பால்அடைந்
தாள்,காந்தி பாதம்உறை
எல்வளை, எங்களை வென்றாள்
இயலினில், என்றுஎடுத்தே. 57

*மயிலைத் தலைவி தலைவனுக்குத் தூது அனுப்புதல்.*

**கருத்து:-** செல்வனை, என் மனத்தே பொருத்திய செம்மலை, சிறந்த உருவு நிறைந்த அழகுடையவனை அடைந்து, "உன்பால் பெருகிய அன்பை அடைந்தாள்; காந்தி திருவடியைப் பற்றி ஒழுகுகின்ற ஒளியுள்ள வளைகளை அணிந்த அப்பெண்; சாயலில் எங்களை அவள் வென்றவள்" என்று எடுத்துச் சொல்லுங்கள், சிறந்த மயில்களே!

## குயில் விடு தூது

இயல்எடுத்து ஓதுமின்! ஏ,குயில்
காள்!என் இனித்தசுவைக்
கயல்விழி வாழ்தரு காதலற்கு;
என்னுடைக் காந்திவழி
முயலலில் ஒன்றும் கருத்துஉடை
யாள்,அவள்; மொய்குழல்தேன்
குயில்எனும் நாங்கள்அக் கொம்பைவெல்
லோம்எனக் கூறுமினே. 58

குயிலைத் தலைவி தலைவனுக்குத் தூது அனுப்புதல்.

**கருத்து:-** ஏ! குயில்களே! என் தகுதியை அவனுக்கு எடுத்துச் சொல்லுங்கள்! என் மீன் போன்ற கண்ணுள் வாழ்கின்ற, இனிமையான சுவை வாய்ந்த என் காதலனுக்கு, "காந்தி வழி பற்றி ஒழுகுதலில் பொருந்திய கருத்துடையவள் அவள்" என்பதையும், "அடர்ந்த கூந்தலில் படிந்த தேனும் குயிலாகிய நாங்களும் பேச்சில் அந்தக் கொம்பனையாளை வெல்லமாட்டோம்" என்றும் எடுத்துச் சொல்லுங்கள்.

## திருமணம் வேண்டல்

கொம்பே! அருமைக் கொழுந்தே!
மகாத்மனின் கொள்கைநிறை
வம்பே! மருந்தே! அடியனை
வாழ மணம்புணர்வீர்!
நம்பன் அறம்கொடு நாம்இரு
வேமும்நல் இன்புறலாம்;
செம்ப வளவாய் திறந்துநல்
சம்மதி செப்புமினே! 59

காதலியிடம் காதலன் திருமணத்திற்குக் கோரும் நிபந்தனை.

**கருத்து:-** கொம்பனையவளே! அருமையான கொழுந்தே! காந்தியின் கொள்கை நிறைந்த மணமே! அமுதே! என்னை வாழ்விக்க மணத்துக்கு உடன்படுவீராக! காந்தியின் அறத்தைப் பின்பற்றி, நாம் இருவரும் நல் இன்பம் துய்க்கலாம். சிவந்த பவளம் போன்ற வாயைத்திறந்து நல்ல ஒப்புதலைக் கூறுவீராக!

## திருமணம் வேண்டல்

நல்தவன் காந்தி அறம்வளர்
காதல் நலம்உடையாய்!
பெற்றவர், உற்றார் பிதற்றிடல்
கொள்ளேன்; பெரியவனே!
கற்றவர் போற்றிடும் நின்னொடு
வாழக் கருதுகின்றேன்;
ஏற்றிடல் இன்றி எடுத்துஅருள்
செய்வாய், இனியவனே! 60

இது காதலி காதலனைத் திருமணம் புரிய வேண்டல்.

**கருத்து:-** நல்ல தவத்தை உடையவனாகிய காந்தியின் அறத்தை வளர்க்கின்ற அன்புப் பண்பு உடையவனே! ஈன்றவர், உறவினர் பிதற்றுதலை நான் ஏற்றுக் கொள்ளேன். பெருமையுடையவனே! கற்றவர்களின் பாராட்டைப் பெற்ற உன்னுடன் வாழ்க்கை நடத்த எண்ணிவிட்டேன்; என்னைத் தள்ளி விடாமல் ஏற்று அருள்புரிவாய்! எனக்கு இனிமையுடையவனே!

இனியவன் எற்கும், எனைஅனை
யார்க்கும், எழில்அனைக்கும்;
தனியவன் இந்தத் தருங்கடல்
ஆடைநல் தாரணிக்கே;
கனிஅமு தோடுநல் கண்டுஎனச்
சொல்புகல் காந்தி,அரும்
பனிய அனிச்சமென் பாத
மலர்தலை சூடுவனே. 61

**கருத்து:-** எனக்கும் என்னை ஒத்த ஏனையோர்க்கும் அழகிய இந்தியத் தாய்க்கும் இனிமையை யுடையவன். இந்தக் கடலை உடையாக உடைய நல்ல உலகத்துக்கு ஒப்பற்ற ஒருவன். பழத்தையும் அமுதத்தையும் நல்ல கற்கண்டையும் போல மொழி பகர்கின்ற காந்தியினுடைய அருமையான, குளிர்ந்த அனிச்சப்பூப் போன்ற மெல்லிய பாத மலரைத் தலையிலே அணிவேன்.

## நல்தாய் இரங்கல்

அனிச்சமும் அன்னமென் தூவியும்
முள்என அஞ்சிடும்,என்
குனித்த புருவக் கொழுமதிச்
சீர்நுதல் கோதை,அந்தோ!
தனித்துஎனை விட்டுத் தனிவழிச்
சென்றனள், காந்திதனை
மனத்துஎணி; யாரும் நடுங்க
வயங்குஅவன் வன்களமே. 62

இது மகளுக்குத் தாயார் இரங்கிக் கூறும் துறை.

**கருத்து:-** அனிச்சப்பூவும், அன்னத்தின் மெல்லிய இறகும், முள் என்று சொல்லுமாறு அஞ்சுகின்ற அடியை உடைய, என் தன் வளைந்த புருவத்தையும், செழுமையான திங்கள் அனைய சிறந்த நெற்றியையும், உடைய மகள், ஐயோ என்னைத்தனியாக விடுத்து, தனிப்பாதையிலே சென்று விட்டாள், காந்தியை உள்ளத்து நினைந்து. அவள் சென்ற இடம் யாரும் அஞ்சுமாறு விளங்கும் அவனது போர்க்களமாகும்.

## கிளி விடு தூது

வன்களம் வாளொடு சென்று,
"மகன்புறம் தந்துஇறந்தால்,
அன்னவன் உண்டஎன் அங்கம்
அறுப்பன்"என்று, அப்பிணத்துள்,
பின்னும் உடல்கொடு, பெற்றஅந்
நாளிற் பெரிதுஉவந்த,
என்தமிழ்ப் பெண்ணின் இயலினைக்
காந்திக்கு இசைகிளியே! 63

மகள் இயல்பைக் காந்திக்குச் சொல்லுமாறு தாயார் சொல்லுதல்.

**கருத்து:-** வலிய போர்க்களத்துக்குக் கையில் வாளேந்திச் சென்று, "என் மகன் புறங்காட்டிச் செத்திருந்தால் அவன் பால் குடித்த என் தனத்தை அறுத்துவிடுவேன்" என்று சொல்லி, அந்தப் பிணக்குவியல் உள்ளே பின்னிக் கிடந்த தன் மகன் உடலைத் தேடி எடுத்து, மார்பில் அம்பு பட்டு இறந்த வடுவை அறிந்து, 'ஈன்ற பொழுதினும் பெரிது உவந்த' என்னுடைய தமிழ் மகளின் பண்பைக் காந்தியிடம் கூறுவாயாக! கிளியே!

## பெண் உயர்வு கூறல்

காந்தி அறம்தலை தாங்கிக்
கடுஞ்சிறை போந்தஉயர்
ஏந்துஎழில் மாதருக்கு ஆடவர்
என்று பெருமைசொலித்
தாம்தம காரியம் ஆற்றிடு
வோர்சமம் ஆவர்கொலோ?
காந்தையர் தாழ்ந்தவர் என்றே
கழறில் பொருள்உளதே. 64

பெண்ணின் பெருமையைப் பேசும்துறை

**கருத்து:-** காந்தி அறத்தைத் தலைமேல் தாங்கி, கடுமையான சிறைக் கூடம் சென்ற, உயர்ந்த அழகு சுமந்த பெண்களுக்குத் தங்களை ஆண்கள் என்று பெருமையாகச் சொல்லிக் கொண்டு, தங்கள் தங்கள் சொந்தக் காரியங்களைச் செய்து கொண்டிருக்கும் ஆடவர் ஒப்பு ஆவார்களா? பெண்கள் குறைந்தவர்கள் என்று பேசுவதில் பொருள் இருக்கிறதா?

## பெண் உயர்வு கூறல்

பொருள்எது, பெண்ணைப் பழிப்பதில்?
பூவில் இழிந்திடுவோர்
அருளொடு சேர்வ அறியா
தவர்;அவர் ஆண்பெண்எனும்
இருவகை யாரினும் உள்ளார்;
இதைஅறி யாமனிசர்,
இருநிலப் பாரம் தவிர
இலைக்காந்தி ஏர்நிலத்தே. 65

இதுவும் முந்தைய பாடல் துறையே.

**கருத்து:-** பெண்ணை இழித்துப் பேசுவதில் என்ன பொருள் இருக்கிறது? உலகத்தில் இழிந்தவர் அருளொடு பொருந்திய கொள்கையை அறியாதவர். அத்தகையவர் ஆண், பெண் என்ற இரண்டு இனத்தவரினும் இருக்கின்றார். இதனை அறியாத மனிதர் இந்தப் பெரிய தரைக்குப் பொறையைத் தவிர, காந்தியின் அழகிய உலகத்தே வேறு அல்லர்.

## மாதர் மறுமணம் வேண்டல்

"இலைஉமைப் போல்கொடும் வன்கணார்,
இப்பெரும் மாநிலத்தே;
தலைவிதி என்றுஒரு பேர்சொலிப்
பச்சைத் தனிக்கொடிநேர்
கலைமதி சேர்முகக் கட்டுஉடல்
கன்னி இளநலத்தைக்
கொலைசெயல் நன்றுஅல; காந்தி
அறம்உமைக் கொன்றிடுமே". 66

பெண்களது மறுமணத்தை விரும்பல்.

**கருத்து:-** "உம்மைப்போன்ற கொடுமை வாய்ந்த அஞ்சத்தக்க வற்றிற்கு அஞ்சாதவர் இந்தப் பெரிய உலகத்தே வேறுஇலர். தலைவிதி என்று ஒரு சொல்லை மொழிந்து, பசுமையான ஒப்பற்ற கொடியை நிகர்த்த கலைகள் பொருந்திய திங்கள் போன்ற முகமும், கட்டு அமைந்த உடலும் பொருந்திய இளம் பெண்ணின் இளநலத்தை அழித்தல் நன்றாகாது; அப்படிச் செய்தால் காந்தி அறம் உம்மை அழித்துவிடும்.

## மாதர் மறுமணம் வேண்டல்

காந்தி அறம்சேர் கருணை
உலகினைக் கண்டிலிரோ?
ஏந்தும் எழிலும், இளங்கட்டு
உடலும், இணைந்தகொடி,
வீழ்ந்து நிலத்தில் விடுத்தகண்
ணீர்,உங்கள் மெய்க்குலத்தைப்
போழ்ந்து தொலைக்கும் வடிவாள்;
பொருந்தும் அறிவிலிரே! 67

இதுவும் முந்தைப்பாடலின் துறையே.

**கருத்து:-** காந்தியின் அறத்தில் பொருந்திய அருள் உலகத்தை நீங்கள் கண்டதில்லையோ? சுமந்த அழகும், கட்டுறுதி வாய்ந்த உடலும் பெற்ற இவ் இளங் கொடியின்,தரையில் படுத்துக் கொட்டிய கண்ணீர், உங்கள் உண்மைக் குலத்தைத் அறுத்துத் தொலைக்கும் கூரிய வாளாகும். இதனை உணரும் அறிவு அற்றவரே!

## திருமணம் வேண்டல்

பொருந்தும் அறிவும், குணமும்,
நலங்களும், பூத்திடும்என்
மருந்தை மணக்கத் தடைபுரி
விர்!இது மாண்புஅல;நீர்
வருந்தி உரைக்கும் மதமும்
வகுப்பும்,நல் காதலின்முன்
எரிந்த துரும்பாம்! இரும்காந்தி
ஆணை! இழிவுஎதற்கே? 68

விரும்பும் பெண்ணை மணப்பதற்கு மதமும், வகுப்பும் தடையாகாது எனக் கூறல்

**கருத்து:-** ஒத்த அறிவும், பண்பும் நலமும் மலர்ந்திருக்கின்ற என் அமுதத்தை நான் மணந்து கொள்ளத் தடை செய்கின்றீர்! இது பெருமை யாகாது. நீங்கள் வருந்திக் கூறும், மதவகுப்பு வேறுபாடுகள் நல்ல காதல் உடையார்முன் எரிந்து போன துரும்பாகும். இதனைப் பெரிய காந்தி மேல் ஆணையிட்டுச் சொல்கின்றேன். இந்த இழிவு உங்களுக்கு எதற்காக?

## மதனைப் பழித்தல்

எரிந்தனை அந்நாள் எனச்சொலு
வார்;அதை யான்அறியேன்;
விரிந்தமெய்ச் சீர்த்திகொள் மேதினிக்
கேதனி மேன்மைதரும்
அருந்தவக் காந்தி அமர்குறித்
தேபிரிவு ஆற்றும்எனை,
வருந்திடில் மாளுவை; வள்ளலின்
ஆணை;மெய்; மன்மதனே! 69

ஆசையை எழுப்பும் மன்மதனை, தலைவன் அல்லது தலைவி இழித்துக் கூறல்.

**கருத்து:-** காமவேளே! அந்த நாள் நீ எரிந்து போய் விட்டாய் என்று சொல்லக் கேட்டிருக்கின்றேன். அதை யான் நேராக அறியேன். பரந்த உண்மையான புகழ் கொண்ட உலகத்துக்கே ஒப்பற்ற சிறப்பை அருள்கின்ற, அரிய தவம் வல்ல, காந்தியின் போர் கருதி, பிரிவைப் பொறுத்துக் கொண்டிருக்கின்ற என்னை, வருத்தப் படுத்துவாயானால் நீ அழிவாய். வள்ளலாகிய காந்தியின் மீது ஆணையிட்டுச் சொல்கின்றேன். இது உண்மை.

## அமுதம் கேட்டல்

வள்ளுவன் நூற்ற மதிதரும்
நூலும், மகாத்மன்எனும்
தள்அருங் காந்தி தருபெரு
நூலும், தவழும் உன்தன்
கொள்ளை நலம்ஆர் குமுதம்
திறந்து,அமுது ஈந்திடுவாய்!
பிள்ளை மொழி!என் பிணிக்குப்
பிறிது மருந்துஇல்லையே. 70

காதலியைத் திருவாய் அமுதம் அருளுமாறு காதலன் வேண்டல்.

**கருத்து:-** வள்ளுவன் செய்த அறிவை அருளும் தமிழ் மறையாகிய நூலும், மகாத்மா என்ற தள்ள முடியாத குணங்கள் கொண்ட காந்தி அருளிய மறையாகிய நூலும் தவழ்கின்ற, உன்னுடைய ஏராளமான நன்மை பொருந்திய, அல்லிப்பூப் போன்ற செவ்விய வாயைத் திறந்து அமுதத்தை அளித்திடுவாய். பிள்ளை போன்ற பேச்சையுடையவளே! என் நோய்க்கு அமுதத் தவிர வேறு மருந்து இல்லை.

## தென்றலைப் பழித்தல்

மருந்து தளர்ந்த உயிர்க்குஎன்
வழுத்துதல் மாத்திரமோ?
விரிந்த புலமையி னோர்,உனை
வேணமட் டும்புகழ்வார்;
பொருந்து புகழுடைக் காந்தியின்
போரிற் பிரிந்தஎனை,
வருந்தல் தகுமோ? மலையத்து
இழிந்ததென் மாருதமே. 71

பிரிவுத்துயரால் வாடும் பிரிந்த தலைவன் தென்றலைப் பழித்துக் கூறுதல்.

**கருத்து:-** பொதிகை மலையினின்றும் இறங்கி வருகின்ற தென்றல் காற்றே! உன்னைச் சோர்ந்த உயிர்கட்கு அமுதம் என்று சொல்கின்ற சிறப்பு மட்டுமா? நிறையப் படித்த புலவர்கள் வேண்டு மட்டும் உன்னைப் புகழ் கின்றார்களே. புகழடைந்த காந்தியின் போர்க்களம் செல்லப் பிரிந்த என்னை, நீ துன்புறுத்துதல் பொருத்தமாகுமா?

## திங்களைப் பழித்தல்

இழிவு பிறன்மனை எய்தல்
எனும்அறிவு இன்றி,உறு
பழியும் உணர்கிலை; பண்டு
குருபெரும் பன்னியைநீ,
அழிதல் வினைசெய்தை என்பர்;
அதுகொடு மோகனனின்
வழுஇல் தவம்உடை என்னை
மதியே சுடவலையே. 72

*பிரிந்த தலைவன் மதியை இழித்துக் கூறுதல்.*

**கருத்து:-** *திங்களே! பிறன் இல்லாளை அணுகுதல் இழிந்த செயல் என்ற அறிவு இல்லாமல், அதனால் உண்டாகும் பழியையும் உணராமல், முன்னாள், ஆசிரியனின் பெருமைக்குரிய மனைவியை நீ, தகாத செயல் செய்தாய் என்றுகூறுவர்; அது கொண்டு காந்தியின் குற்றமற்ற தவத்தில் முனைந்து நிற்கின்ற என்னை உன்னால் சுட முடியுமா?*

தவமே! தமியனின் வாழ்வே!
தனிஅருள் பூத்தகொம்பே!
அவமே உலகினில் ஆவது
அறியா, அறம் உணரா,
எவமே புரிந்திடும் ஏதிலர்
தம்மையும், இன்செயலால்
பவமே ஒழிக்கப் பணிக்கும்
அருள்திறம் பாடுவனே. 73

**கருத்து:-** *தவமே! அடியேனின் வாழ்க்கையே! ஒப்பற்ற கருணை மலர்ந்த கொம்பே! வீணாக உலகத்தினில் ஆமாறு அறியாமல் அறத்தை உணராமல், குற்றமே செய்திடும் பகைவரையும் இனிய செயல் கொண்டு, அவர் பாபத்தைப் போக்க முனைகின்ற நின் கருணைத் திறத்தைப் பாடி மகிழ்வேன்.*

பாட அறிகிலன் உன்னை
ஒழிய; பரந்திடுவிண்
மூடு புகழ்ச்சந் நிதியினில்
இன்றி முடிவணங்கேன்;
ஓடும் உளத்தினில் உன்வடிவு
அன்றிஒன் றும்இருத்தேன்;
நாடு மதிக்கும்நல் மோகன
னே!தனி நாயகனே! 74

கருத்து:- உன்னைத் தவிர வேறு எவரையும் பாட அறியேன்; விரிந்த விண்ணுலகத்தையும் மறைக்கின்ற உன் திருமுன்னர் அன்றி வேறு எங்கும் தலை தாழ்த்தேன்; ஓடுகின்ற என் உள்ளத்திலே உன்னுடைய திருஉருவைத் தவிர வேறுவடிவம் எதையும் பதிக்க மாட்டேன்; நாடு போற்றுகின்ற நல்ல மோகனதாசனே! ஒப்பற்ற தலைவனே!

நாயக னே!எனை நல்வழி
காட்டிய நல்தவனே!
தூயவ னே!ஒரு தூசும்
இலாத சுடர்மணியே!
பாய்ஒளி யே!எழில் பண்பே!
பழுத்த பசுங்கனியே!
தாய்அனை யாய்!நல் சபர்மதி
மோகன! தா,அருளே. 75

கருத்து:- தலைவனே! எனக்கு நல்ல ஆறு காட்டிய நல்ல தவமுடையவனே! புனிதமானவனே! ஒரு களங்கமும் இல்லாத ஒளி விடுகின்ற இரத்தினமே! பரந்து செல்கின்ற ஒளிப்பிழம்பே! அழகிய பண்பே! பழுத்த பசுமையான பழமே! தாயை ஒத்தவனே! நல்ல சபர்மதியில் மேவிய மோகனனே! எற்குக் கருணை புரிவாயாக!

அருளே! இனித்த கனியே!
கரும்பே!என் ஆர்உயிரே!
இருளே பிடித்த எனைஅனை
யாரும் இடர்அகலப்
பொருள்ஏர் அறங்கள் புகன்று
சபர்மதி போந்தபெரும்
திருவே! அடியேன் சிறுபணி
ஏற்றுஅருள் செய்குவையே. 76

**கருத்து:-** கருணையே! தித்திக்கும் பழமே! கருப்பஞ்சாறே! என் நிறைந்த உயிரே! இருள் படிந்த என்னை ஒத்தவரும் துயர் அகன்று உய்ய, பொருள் மிக்க அறங்கள் பேசி, சபர்மதியில் எழுந்தருளிய பெரிய செல்வமே! அடியேனின் சிறிய தொண்டை ஏற்று, எனக்கு அருள் செய்தல் வேண்டும்.

அடியேன் தனைப்பிற ஆம்துறைச்
செல்லாது, அருள்சுரந்து,
படியில் உயர்ந்தநின் பாதம்
பொருந்திடும் பாங்குஉரைத்த
மடியில் பெருந்தவம் மன்னு
மகாத்ம! மழைஅனையாய்!
பிடியில் தளராப் பெரும!
நினநாள் பெருகுகவே. 77

**கருத்து:-** அடியேனை வேறு வழியிலே செல்லாமல் தடுத்து, அருள் செய்து, உலகில் சிறந்த உன் திருவடியை அடையும் வழியைச் சொல்லிக் கொடுத்த, சோம்பரற்ற, பெரிய தவத்தில் நிற்கும் மகாத்மனே! மழையை ஒத்த கருணையுடையாய்! கொண்ட கொள்கையில் சோர்வு அடையாத பெருமானே! நின்னுடைய வாழ்நாள் பெருகுவதாக!

பெருகுக காந்திப் பெரியோன்
பெரும்அறம் பூமிமுற்றும்;
அருகுக காமம், களவு,
கொலை,பொய் அனைத்துஉலகும்;
கருகுக தீண்டார் எனவே
மனிதர்க் கழறுபுன்மை;
வருகுக பாரத மாதா
அரிஅணை மன்னிடவே. 78

**கருத்து:-** காந்திப் பெரியோனின் பேரறம் உலகமுழுதும் பெருகுவதாக! காமம், களவு, கொலை, பொய் ஆகியவை எல்லா உலகத்தும் இல்லாது அருகி அழிக! தீண்டத்தகாதார் என மனிதர்களைப் பார்த்துச் செப்புகின்ற இழிதகவு கருகி ஒழிக! பாரத அன்னை சிம்மாசனத்தில் வீற்றிருந்து அருள் புரிய வருவாளாக!

## மாதர் மறுமணம் வேண்டல்

மன்னு புகழுடைக் காந்தி
அறத்தை மனம் பதித்தே,
பன்னற்கு அருந்துயர் பட்டுத்
தவித்துப் பரிதவிக்கும்
சின்னஞ் சிறுசெல் வியர்க்கு
மறுமணம் செய்துவிடின்
என்ன குறைவரும்? ஐயோ!
மனந்தான் இரும்புகொலோ? 79

கணவனை இழந்த மங்கையர்க்கு மறுமணம் புரியுமாறு வேண்டும் துறை.

**கருத்து:-** நிலை பெற்ற புகழையுடைய காந்தியின் அறத்தை உள்ளத்தில் இருத்தி, சொல்ல முடியாத துன்பத்தில் தவித்து, பரிதாபத்துக்கு உரிமை உடையவராயிருக்கின்ற இளம் சிறு பெண்களுக்கு மறுமணம் செய்து வைத்து விட்டால், என்ன இழிவு வந்து விடும்? ஐயோ! உங்கள் மனம் இரும்பு தானோ?

## மாதர் மறுமணம் வேண்டல்

ஐயோ! மனந்தான் இரும்போ!
கருங்கல் அதுவுங்கொலோ!
வையம் முழுவதும் இல்லாக்
கொடிய வழக்குஅதனைக்
கையாண்டு அழிகிவீர்! காந்தியின்
ஆணை! நும் கன்னியரைச்
செய்வீர் மறுமணம்! சேரும்
இயற்கை தெரிந்திலிரே. 80

இதுவும் முந்தையப் பாடல் துறையே.

**கருத்து:-** ஐயோ! உங்கள் மனம் இரும்போ! அன்றி, கருங்கல்லோ! உலகம் எங்கும் இல்லாத கொடுமையான முறையைக் கைக்கொண்டு அழியாதீர்! காந்தியின் மீது ஆணையிட்டுச் சொல்கின்றேன். கணவனை இழந்த உங்கள் கன்னிப் பெண்களை மறுமணம் செய்யுங்கள். பொருந்தும் உலக இயற்கையை அறியாதவராக இருக்கின்றீரே!

## மாதர் மறுமணம் வேண்டல்

இயற்கை அறியீர்! எழிலும்
இளமையும் ஈண்டுஎவரும்
நயக்கும் நலத்திற் பொருந்தாது
அழித்து,நும் நங்கையரை
மயக்கி, வருத்தி,இம் மண்ணில்
புரண்டுஅழச் செய்திடுவீர்!
வியப்பே இது!எம் மெய்க்காந்தி
ஆணை! விடும்இதையே. 81

இதுவும் முந்தைய பாடல் துறையே.

**கருத்து:-** இயற்கை உங்களுக்குத் தெரியவில்லையே. அழகையும், இளமையையும் இவ் உலகத்தில் எல்லோரும் விரும்பும் இன்பத்தில் பொருந்த விடாது, பாழாக்கி, உங்கள் பெண்களை மயக்கமுறச் செய்து, துன்புறுத்தி, இந்த மண்ணில் கிடந்து புரண்டு அழுமாறு செய்கின்றீர்கள். இது வியக்கத் தக்கது. எங்கள் உண்மையான காந்திமீது ஆணை! விட்டு விடுங்கள் இச் செயலை.

## மாதர் மறுமணம் வேண்டல்

ஆணை அருந்தவக் காந்தியின்
　　மீதே! அருமையுடன்
பேணி உயிரிற் பெரிதா
　　வளர்த்தநல் பெண்மணிகள்
வீணே இளமை விடுத்துக்
　　குமுறி,உள் விம்மிஅழ,
நாணு கிலிர்அலிர்! நன்றும்துய்ப்
　　பீர்நீர்! நலம்இதுவே. 82

இதுவும் முந்தையப் பாடல் துறையே.

**கருத்து:-** அருமையான தவத்தையுடைய காந்தியின் மீது ஆணை யிட்டுச் சொல்கின்றேன். அரிதாகப் பாராட்டி, உங்கள் உயிரினும் மேலாக நீங்கள் வளர்த்த நல்ல பெண் மக்கள் வீணாக, இளமை துறந்து, உள்ளம் குமுறி, விம்மி, விம்மி அவர்கள் அழ, நீங்கள் வெட்கப்படுகின்றீரல்லீர். உங்கள் இளம் பெண்கள் இன்பின்றி விம்மி அழ, நீங்கள் உலக இன்பத்தை நுகர்வீர்! நன்றாக இருக்கின்றது உங்கள் செயல்!

## மாதர் மறுமணம் வேண்டல்

நலமோ மகப்பெறு நாரிய
　　ரே!காந்தி நண்ணுஉலகில்
இலைவயிற்று ஈரைந்து திங்கள்
　　சுமந்தே இரும்துயரம்
பலபட்டு, அரிதினில் ஈன்றநல்
　　பச்சைப் பசியஇளங்
குலையை உயிருடன் கூறு
　　படுத்தும்இக் கொள்கையதே! 83

இதுவும் முந்தையப் பாடல் துறையே.

**கருத்து:-** மகள்களைப் பெற்ற பெண்களே! காந்தி வாழும் இவ் உலகத்தில் ஆலிலை போன்ற உங்கள் வயிற்றிலே, பத்து மாதம் தாங்கி, பெரிய துயரம் பல அடைந்து, அருமையாகப் பெற்ற நல்ல பச்சைப்பசிய இளமையான குருத்தை உயிரோடு பிளக்கின்ற இக் கொள்கை நலமாகுமா? இது விற்பூட்டுப் பொருள்கோள்.

## மாதர் மறுமணம் வேண்டல்

உயிரினும் போற்றத் தகுவது
ஒழுக்கம்என்று ஒப்பில்புலச்
செயிர்அறு வள்ளுவன் செப்பினன்;
கொண்டனன் காந்தி;அதைக்
கயல்விழிக் கன்னிகள் காத்திட
வேண்டின், கடிபுரிந்து
துயர்புரி யாதவர் இல்நலம்
துய்க்கத் துணைசெய்விரே. 84

*கணவனை இழந்த மங்கையர்க்கு மறுமணம் புரியுமாறு வேண்டும் துறை.*

**கருத்து:-** உயிரை விடப் பேணத்தக்கது சீலம் என இணையற்ற அறிவு வாய்ந்த, குற்றத்தினின்றும் விடுபட்ட வள்ளுவப் பெருமான் வழுத்தினன்; அச்செயலை வாழ்க்கையில் மேற்கொண்டான் காந்தி; அவ் ஒழுக்கத்தை, மீன் போன்ற கண்ணேயுடைய கணவனை இழந்த இளம் பெண்கள் காக்க வேண்டுமானல், அவர்களுக்குத் துயரத்தை உண்டாக்காமல் திருமணம் செய்துவித்து, இல்லற இன்பத்தை அவர்கள் நுகர உதவி செய்யுங்கள்.

## கடமையில் பிரிதல்

இன்நல மே!எனது ஆர்உயி
ரே!கண் இருமணியே!
கன்னலும் கண்டும் கசக்கும்
அரும்சொற் கனி!அமுதே!
தன்நலம் பேணல் தகவுஅல;
காந்தி சமர்அதனில்
பின்னி வருவல்; பிரிவுக்கு
இரங்கிடல்; பெண்அரசே! 85

*தாய் நாட்டின் விடுதலைக்காகப் பிரிந்து செல்லும் தலைவன் தலைவியிடம் கூறுதல்.*

**கருத்து:-** எனக்கு இன்பம் தரும் அழகே! என் நிறைந்த உயிரே! என் இரு கண்ணின் மணியே! கருப்பஞ்சாறும் கற்கண்டும் கசக்கும் என்று சொல்லத் தக்கவாறு, அரிய சொற்களை வழங்கும் பழமே! அமுதமே! சொந்த நன்மையை நாம் விரும்புதல் தகுதியாகாது. எனவே, காந்தி போரில் கலந்து திரும்புவேன். என் பிரிவிற்கு வருந்தற்க; தையல்நாயகி!

## கடமையில் பிரிதல்

பெண்அர சே!என் பிரிவுக்கு
இரங்கல் பெருமைஅல;
கண்ஒளி யே!உயர் காந்தி
களத்தில் கலந்திடவே
எண்ணி யுளேன்;நான் வரும்வரை
நீநம் இனித்ததமிழ்
நண்ணும் இலக்கியத் தேன்குடித்து
ஆறுக, நாயகியே! 86

இதுவும் முந்தையப் பாடலின் துறையே.

**கருத்து:-** மங்கையர்க்கு இராணியே! என் பிரிவுக்கு நீ வருந்துதல் பெருமையாகாது. கண்களின் ஒளி போன்றவளே! உயர்ந்த காந்தி அடிகளின் அமர்க்களத்தில் பொருந்த நான் எண்ணிவிட்டேன். நான் திரும்பி வரும் வரை நீ நம்முடைய சுவைமிக்க தமிழில் இருக்கின்ற இலககிய மதுவை அருந்தி ஆறுதலடைவாயாக! தலைவியே!

## கடமையில் பிரிதல்

நாயக! நம்முடைக் காரியம்
ஆற்றுக! நான்நமது
தாயவள் தொண்டில் தலைமைகொள்
காந்தி சமர்க்களத்தே,
ஏயன ஆற்றி, இருஞ்சிறை
காணுவல்; என்பிரிவால்
நீஇரு வாட்டம் அடைந்திடல்!
மாசறு நேர்மையனே! 87

தாய் நாட்டின் விடுதலைக்காகப் பிரிந்து செல்லும் தலைவி தலைவனிடம் சாற்றுதல்,

**கருத்து:-** தலைவனே! நமது செயல்களை நீ சிறக்கச் செய்வாயாக! நான் நம்முடைய தாய் நாட்டின் பணியில் தலைமை தாங்கி நிற்கும் காந்தியின் போர்க்களம் சென்று, பொருந்துவ செய்து, பெரும் சிறையைக் காண்பேன். என் பிரிவினால் நீ பெரும் துயர் அடையற்க! குற்ற மற்ற நேர்மையாளா!

## கடமையில் பிரிதல்

மாசறு பொன்னே! வலம்புரி
 முத்தே! மணிமருந்தே!
காசறு தேனே! கரும்பே!
 விரையே! கனிஅமுதே!
ஆசறு காந்தி அமர்க்களம்
 சேர்வல்; அழுங்கலை நீ!
தேசுஉறு செல்வி! திகழ்கற்பு
 உடைஎன சிறுகொழுந்தே! 88

தாய் நாட்டின் விடுதலைக்காகப் பிரிந்து செல்லும் தலைவன் தலைவியிடம் கூறல்.

**கருத்து:-** குற்றமற்ற தங்கமே! வலம்புரித்து எழுந்த சிப்பியின் முத்தே! எழில் அமுதமே! தீதற்ற தேனே! கரும்பின் இரசமே! மணமே! கனிந்த அமுதே! பழுதில்லாத காந்தியின் போர்க்களம் சேர்வேன். நீ வருந்தற்க! ஒளிமிக்க தேவி! பொருந்திய கற்புடைய என் சிறிய கொழுந்தனையாய்!

## கடமையில் பிரிதல்

கற்பின் திருவே! கமழ்பூங்
 கொடியே! கருத்தில்வளர்
பொற்பின் கொழுந்தே! புனைமலர்க்
 கோதாய்! புவியில்உயர்
அற்புதக் காந்தி அமர்க்களம்
 சேர்வேன்; அருமருந்தே!
கற்பக மே!விடை ஈவாய்!
 கனிவாய் திறந்துஇனிதே. 89

இதுவும் முந்தையப் பாடலின் துறையே.

**கருத்து:-** கற்பின் அழகே! மணக்கின்ற அழகிய கொடியே! என் உள்ளத்தே வளர்கின்ற எழிலின் தளிரே! அணியத் தக்க பூமாலையே! உலகத்தில் உயர்ந்த அருமையான காந்திமகானின் போர்க்களம் செல்லுவேன். அரிய அமுதமே! கற்பகமே! விடை தருவாய், உன் கனி வாய் திறந்து, இனிமையாக.

## தோழியை விளுதல்

கனிவாய் திறந்துஎங்கள் காந்தியைப்
பாடும் கருத்துஉயர்ந்த
பனிவாய் மொழியாள்; பவள
நிறத்தாள்; பருவிழியாள்;
இனியாள் எனக்கே; இதுஎன்
உலகத்து இயற்கை! அந்தோ!
தனியே இருந்து நலம்கொலல்,
தோழி! சரிஅலவே. 90

*தலைவியைப் பிரிந்த தலைவன் தோழியிடம் சாற்றுதல்.*

**கருத்து:-** பழம் போன்ற வாயைத் திறந்து எங்கள் காந்தியைப் பாடும் சிறந்த உள்ளம் படைத்த சிறந்த பேச்சை உடையவள்; பவழம் போன்ற சிவந்த மேனியாள்; பருத்த கண்களையுடையாள்; எனக்கே இனிமையானவள்: (அவளின் பிரிவுச் செயல்) என்ன உலகு இயற்கை! ஐயோ! தனித்து இருந்து நன்மையை அழித்தல், தோழி! இது சரியல்ல.

## தோழியை விளுதல்

நலத்துறை நண்ணும், நளிர்கடல்
ஞாலம் நனிவியக்கும்,
கலைச்செறி மாதவக் காந்தி
அறம்கொடு கத்தர்தரி
கொலைத்துறைக் கூரிய வேல்புரை
ஆவி குடிக்கும்இந்த
வலைச்சிறு மான்விழி யால்,அழிவு
எய்தி மயங்கினனே. 91

*இதுவும் முந்தையப் பாடலின் துறையே.*

**கருத்து:-** *நல்ல வழியிலே பொருந்தி விளங்கும் கடல் உலகம் பெரிதும் வியத்தற்குரிய கலை மலிந்த சிறந்த தவத்தையுடைய காந்தியின் அறத்தை மேற்கொண்டு, கதர் உடுத்து, கொலை வழிச் செல்லும் கூர்மையான வேலை ஒத்த, என் உயிரைப் பருகுகின்ற இந்த வலையில் அகப்பட்ட சிறிய மான் விழி போன்ற அவள் கண்ணால் நிலை குலைந்து நான் மயங்கி நிற்கின்றேன்.*

மயக்கம் கெடுத்தே வலிந்துஎனை
ஆட்கொண்ட வள்ளல்;புவி
நயக்கக் கரும்பும் நலந்தரு
தேனும் நறும்கனியும்
கயக்கக் கருத்துஅமை சொல்அருள்
காந்தி; கருதரிய
இயக்கத் தலைமைகொள் ஏந்தல்
பதமலர் ஏத்துவமே. 92

**கருத்து:-** என் மயக்கத்தை அழித்து வலிய வந்து என்னை ஆண்டு கொண்ட வள்ளல்; உலகம் விரும்பக் கருப்பஞ்சாறும் இனிமையைத் தருகின்ற தேனும், நல்ல பழரசமும் கசக்குமாறு கருத்தமைந்த உரை அருளிச் செய்யும் காந்தி மகான்; எண்ண முடியாத இயக்கத் தலைமை ஏற்றுக் கொண்ட சிறப்புப் பெற்ற அவனுடைய பாதத் தாமரைகளைத் தொழுவோம்.

ஏந்தல் இருந்தவப் புத்திரி
பாயின் எழில்வயிறும்
தோய்ந்த துணைவிஎன் கத்தூரி
அன்னை நல் தோள்இணையும்,
வாய்ந்த சபர்மதி நீரும்,ஏர்
வாடா மணிச்சிறையும்,
பாய்ந்த எனதுஉள மும்குளிர்
வித்த பனிவடிவே. 93

**கருத்து:-** பெருமையில் சிறந்தவனாகிய காந்தியின் குளிர்ந்த திருமேனி, அவனை வயிறு வாய்க்கப் பெரும் தவம் புரிந்த புத்திரிபாயின் மணி வயிற்றையும், அவனை அடைந்த வாழ்க்கைத துணைவியாகிய கத்தூரி பாயின் நல்ல தோள்களையும் பொருந்திய சபர்மதி ஆற்றின் நீரையும், ஏர்வாடாத் தலத்தின் எழில் சிறையையும், அவனிடத்துப் பரவிய என் உள்ளத்தையும் குளிரச் செய்த.

## கிளி விடு தூது

பனிமலர்க் காவில் பயன்கனி
உண்டுஉறை பைங்கிளிகாள்!
கனிவுஉடைக் காந்தி கருத்தில்
கலந்தே கடன்புரிந்த
நனிஎனது உட்சிறை நன்மை,
வெளிச்சிறை நண்ணிடும்என்
இனியருக்கு, ஏல எடுத்துஉரைத்து
இன்நலம் எய்துவிரே. 94

*சிறையுறையும் காதலி காதலனுக்குக் கிளியைத் தூது விடுதல்.*

**கருத்து:-** குளிர்ந்த பூஞ்சோலையிலே பயன்தரும் பழங்களை உண்டு வாழ்கின்ற பசுமையான கிளிகளே! கனிவு உடைய காந்தியின் உள்ளத்தில் நண்ணிக் கடமையைச் செய்த, நான் பொருந்தியிருக்கின்ற உள் சிறையின் இனிமையை, வெளிச் சிறையாகிய அடிமை நாட்டில் தங்கியிருக்கும் எனக்கு இனியராகிய காதலருக்குப் பொருந்த எடுத்துக் கூறி, இனிய நன்மை அடையுங்கள்.

## கிளி விடு தூது

ஏலம் தருகுழல் எம்பெருங்
காந்தி இசைமறவாச்
சீலம் இதுஎன்று அருந்ததி
யாள்பெறச் செப்பிடும்,என்
கோல மயிலைக் குறுகி,
சிறையுள் கொழுநன்உயர்
ஞாலம் மதித்திட வாழுகின்
ருன்என் நவில்கிளியே! 95

*சிறையுறையும் காதலன் காதலிக்குக் கிளியைத் தூதுவிடுதல்.*

**கருத்து:-** மணம் மிக்க கூந்தலையுடைய எங்கள் காந்தியின் புகழ் மறவாத, ஒழுக்கம் இது என்று, அருந்ததியாள் அறியுமாறு சொல்லவல்ல, என் அழகிய மயிலனைய தலைவியை அடைந்து, "சிறையுள் உன் கணவன் சிறந்த உலகம் போற்றுமாறு வாழுகின்ருன்" என்று சொல், கிளியே!

## கடமையில் பிரிதல்

ஞாலம் மதித்திட நன்மணம்
ஆற்றிய நாள்முதல்,இக்
காலம் வரையும், பிரிவுஅறி
யாதுஉயர் காதல்அறம்
ஏல நடத்தினம்; இன்று
பிரிவுவந்து எய்தியதால்;
சால உரைத்துஎன்? தகுவது
காந்தி சமரம்அதே. 96

தாய்நாட்டின் விடுதலைக்காகப் பிரிந்துசெல்லும் தலைவன் தலைவியிடம் கூறல்.

**கருத்து:-** உலகம் போற்ற நாம் நல்ல திருமணம் செய்துகொண்ட காலம் தொட்டு, இன்றுவரையும் பிரிவு இன்னது என்று அறியாது, உயர்ந்த காதல் அறத்தைப் பொருந்தக் கடைப்பிடித்தோம்; இன்று பிரிவு வந்து சேர்ந்தது; பெருகச் சொல்லி என்ன பயன்? பொருந்துவது காந்தியின் போர்க்களமே.

காந்தி! கருணைக் கடலே!
கடல்சூழ் நிலம்முழுதும்
ஏய்ந்த அறிவினர் யாவரும்
ஏற்றும் எழிற்பெரியோய்!
சாந்த மலையே! தலமே,
பொறையில்! சபர்மதியில்
வாய்ந்த மணியே! மனம்புகு
மாதவ! வாழியவே. 97

**கருத்து:-** காந்தி! அருட்கடலே! கடலால் சூழப்பட்ட உலகம் முழுதும் பொருந்திய மதியினர் எல்லோரும் போற்றுகின்ற அழகுடைப் பெரியோய்! சாந்தத்தின் மலையே! பொறுமையில் பூமியே! சபர்மதியில் பொருந்திய மணியே! என் உள்ளத்தே குடிகொண்ட சிறந்த தவத்தை யுடையோனே! வாழ்வாயாக!

மனப்பிணி போக்கும் மருந்தே!
மதிக்கும்நல் மாண்புஉடையார்
இனத்தினில் ஈடுஇல் எழில்சீர்த்
தலைமை இயைந்தவனே!
சினத்தினை வென்ற செரு,இச்
செகத்தினுக் கேபுதிதா
நினைத்தவ! வான்வரை நீள்புகழ்
மோகன! வாழியவே! 98

**கருத்து:-** மனத்தின் நோயை நீக்கும் மருந்தே! பாராட்டுகின்ற நல்ல மாட்சிமையுடையார் கூட்டத்துள்ளே இணையற்ற அழகிய சிறந்த தலைமைதாங்கியவனே! கோபத்தை வெற்றிகொண்ட ஒரு போரை இந்த உலகத்துக்கே புதுமையாக எண்ணி உண்டாக்கியவனே! விண்ணுலகுவரை நீண்டு செல்லுகின்ற இசையையுடைய மோகனனே! வாழ்வாயாக!

வான்ஏற நீண்ட புகழாள!
காந்தி மணிவிளக்கே!
பால்நாறு செவ்வாய்ப் பரம!நல்
அன்புஎன் பகர்கயிற்றால்
நான்ஏற, நின்னை நலம்ஆர்ந்த
சொல்பூ நனிதொடுத்துத்
தேன்ஊறு தீஞ்சொல் தமிழ்மாலை
சேர்த்தினன்; வாழியவே. 99

**கருத்து:-** விண்ணளாவ நீண்டு செல்லும் புகழை ஆண்டவனே! காந்தி என்னும் அழகிய விளக்கே! பால் மணக்கும் சிவந்த வாயையுடைய மேலானவனே! நல்ல அன்பு என்று சொல்லத்தக்க, கயிற்றினால் நான் ஏற்றம் பெற, உன்னை. நன்மை நிறைந்த சொல் ஆகிய பூக்களை நன்றாக இணைத்து, தேன் பொருந்திய இனிக்கும் சொற்களையுடைய தமிழ் மாலையை உனக்கு அணிந்தேன்; வாழ்வாயாக!

வாழிய! மோகன தாஸ்கரம்
சந்திரன் வாழியவே!
வாழிய!இந்திய மாதா;
விடுதலை வாழியவே!
வாழிய!காந்தியின் மன்அறம்!
மாநிலம் வாழியவே!
வாழிய!இத்தமிழ் மாலைபல்
ஊழிநல் வாழியவே!

**கருத்து:-** மோகனதாஸ் கரம்சந்திரன் வாழ்க!
பாரதத்தாய் வாழ்க!
விடுதலை வாழ்க!
காந்தியின் நிலையான அறம் வாழ்க!
பெரிய உலகம் வாழ்க!
இந்தத் தமிழ்மாலை பல்லூழி காலம் வாழ்க! வாழ்க!

# 4. காந்தி நான்மணி மாலை

### பாயிரம்

#### அறுசீர்க்கழிநெடில் ஆசிரிய விருத்தம்

ஒடுக்கப்பட் டாரெனவே உரைக்குமொரு
பெருங்குழுவார் உரிமை பெற்றுஇன்று
இடுக்கண்தீர்ந் திடுவதற்கே ஏலாது
தனித்தொகுதி என்று கொண்டு,
நடுக்கின்றி அந்தமுறை ஒழியீரேல்
நான்ஆவி வாழேன் என்று
திடுக்கிட்டுஇவ் உலகமெலாம் என்வருமோ
என்றெண்ணித் தியங்கி நிற்க, 1

உண்ணாமை கொண்டநாள் உற்ற,சகம்
ஆயிரத்துஎண் ணூற்றைம் பத்தோடு
எண்ணான்கொன் றியைந்தஆங் கீரசவில்
புரட்டாதி எட்டாம் நாளில்
கண்ணான காந்திக்கு நான்குமணிக்
கவிமாலை கனிந்த ளித்தான்
மண்ணார்ந்த புகழ்வேலூர்ச் சிறையதனில்
ராயசொக்க லிங்கன் மாதோ. 2

### காப்பு—வெண்பா

வெண்பாக் கலித்துறை மேல்விருத்தம் ஆசிரியம்
பண்பாரும் நான்குமணிப் பாமாலை—கண்பார்க்கும்
நாயகன்எங் காந்திக்கு நல்குதற்குக் கட்புலனில்
நாயகத்தை வாழ்த்துவேன் நான்.

---

ஆங்கீரச-புரட்டாதி 8. 23—9—1932

## நூல்

### வெண்பா

நான்எனது என்னும் செருக்கறுத்த நல்தவனே !
ஏனையர்க்கே வாழுகின்ற எம்மானே !—வானவனே !
தீண்டாமை போக்கச் செகங்கலங்க ஆவிவிட
ரூண்டபுகழ் மோகன!வாழ் க ! 1

### கலித்துறை

வாழ்ந்திடு நாட்டினில் மக்களில்
ஓர்குழு வாரை,அந்தோ !
தாழ்ந்தவர் தீண்டத் தகாதார்
எனச்சொலிச் சண்டையிடும்
தாழ்ந்தவர் கூற்றைத் தகர்த்திடத்
தன்னுயிர் தான்கொடுக்க
வீழ்ந்தவ! காந்தி விறலோய்!
வியன்புவி மேலவனே. 2

### விருத்தம்

மேலவனே! மேதினியை மெய்யன்பால்
ஆண்டுபுகழ் மேவி னோனே!
நூலொடுநுண் அறிவுடையாய்! நுவலரிய
பெருங்காந்தி! நோயே செய்யும்
போலிகள்சொல் தீண்டாமைப் புன்மைதனைப்
புறங்காட்டில் புதைப்ப தற்கு
வாலுயிரும் வழங்குதற்கு வாய்த்தபுகழ்
மாமணியே! வாழபல் லாண்டு! 3

### அகவல்

பல்லாண்டு வாழ்க! பல்லாண்டு வாழ்க!
பொல்லா தாரால் புறக்கணிக் கப்படும்
பல்லோர்க்கு உயிர்விடப் பரிந்திடு காந்திநீ! 4

### வெண்பா

காந்திநீ வாழ்க,நுண்மைக் கார்த்துளியிற் பற்பலநாள்!
சேர்ந்தஇம் மாநிலத்தில் தீண்டாமை—மாய்ந்தொழிய,
ஆருயிரும் ஈய அமைந்துசெயல் பூண்டபுகழ்
வாரொளியே! மாதவவாழ் வே! 5

### கலித்துறை

மாதவ வாழ்வே! மருந்தே
பிணிக்கு! மகாத்மனெனும்
கோதில் குணத்தவ! கூர்ஜரம்
வந்தோய்! குவலயத்தோர்
காதற்குரியவ! தீண்டா
தவரெனக் கண்டொதுக்கும்
மாதுயர்க்கு ஈடா உயிரினை
வைத்தவ! வாழியவே! 6

### விருத்தம்

வாழியநீ! வாழியநீ! மன்னுமிந்த
மாநாட்டார் வளர்த்து வைத்த
பாழுடைய தீண்டாமைப் பழிதொலைக்க
நல்லுயிரும் பரிந்து நல்கும்
ஏழையர்தம் பெருவாழ்வே! இந்தியரின்
இன்னுயிரே! எந்தாய் காந்தி!
மாழைதரு நீர்த்துளியில் மணற்குவையில்
பன்னெடுநாள் மன்னி மாதோ! 7

### அகவல்

மன்னிய பரத மணித்திரு நாட்டில்
துன்னிய தீண்டாத் துயரை அகற்றத்
தன்னுயிர் தரவும் சமைந்த காந்தி
உன்எணம் முடிய!நீ ஊழிநாள் வாழ்கவே! 8

### வெண்பா

நாள்பெருக காந்தி,நிற்கு! நல்கியநம் அன்னையவள்
ஆள்க அரசுமுடி சூடியே!—தேள்பொருவு,
தீண்டாமை என்னும் சிறுமை சிதைந்திடுக!
மூண்டநினது எண்ணம்முடி க! 9

### கலித்துறை

முடிக நினதருள் முற்றிய
எண்ணம்! முறைஅறியா
மடியர், பிறப்பினில் கீழோர்
எனச்சொலும் மாண்பில்செயல்
இடிய! இந்நாட்டைப் பிரித்துப்
பிரித்தே இடும்பைசெயும்
கொடுமை யொழிந்திட; காந்தி,நின்
கொள்கை கைகூடுக வே! 10

### விருத்தம்

கூடிடுக காந்திஉயர் கொள்கையெலாம்!
தீண்டாமைக் கொடுமை யாவும்
ஓடிடுக! ஒடுக்கப்பட் டாரெல்லாம்
ஓங்கிடுக! ஒழிந்து வீழ்க,
நாடுதனைப் பிரித்தாள நல்குதனித்
தொகுதிமுறை! நானி லத்தில்
ஈடுடைய காந்திஉயிர் இலங்கிடுக
பன்னெடுநாள் எங்கட் காக! 11

### அகவல்

எங்கட் காகவே இப்புவி வந்தோன்!
எங்கட் காகவே இதுவரை வாழ்ந்தோன்!
எங்கட் காகவே இன்னும் பன்னுள்
துங்கக் காந்தியின் தூய நல்லுயிர்
மங்கள மாக வாழ்க வாழியவே! 12

### வெண்பா

மங்களத்துரர் வாடா மணியார் சிறையதனில்
தூங்கக் கொலுவிருக்கும் தூயபுகழ்—எங்கள்
பெருமான்! அருங்காந்திப் பெம்மான்! பெரியான்!
உரமார் உயிர்வாழ்க வே! 13

### கலித்துறை

உயிர்வாழ் திறமறி யாதுஉழல்
இந்த உலகமதில்
செயிரில்நல் வாழ்வைத் திணித்த
அருந்தவச் செம்மல், அலை
துயர்கொல் கடன்கொளும் தூயவன்,
தீண்டார் துணிஅகற்ற
உயிரையும் வீச ஒருப்படு
காந்தி, உயருகவே! 14

### விருத்தம்

உயர்கொள்கை நிறுவுவதற்கு உயிரினையும்
உதவுவதற்கு உரமே கொண்டு
தயிரியமாய் முன்வருவோர் மிகஅரியர்;
தீண்டாதார் தலை,த கர்க்க
அயர்வின்றி ஆக்கரிய ஆவிவிடத்
துணிந்துநிற்கும் அண்ணலே!உன்
செயல்வாழ்க! புகழ்வாழ்க! திண்மைஉயிர்
சேர்ந்திடுசிற் றுடலம் வாழ்க! 15

### அகவல்

சிற்றுடல் அதனில் சேர்ந்துள பேரொளி
நல்திருக் காந்தி நல்லுயிர் வாழ்க!
வெற்றிபெற் றிடுக விரும்பிய வாறு!
குற்றமே செய்யும் கூர்த்த மதியிலார்
சொற்றிடு தீண்டாத் துயர்தொலைந் திடுக!
பெற்றியில் மாக்கள் பித்துஒழிந் திடுகவே! 16

### வெண்பா

ஒழிந்திடுக தீமையெலாம்! ஓங்கிடுக நன்மை!
அழிந்திடுக தீண்டாமை ஆதி!—வழிந்த
கருணை பொறைவாய்மைக் காந்தி பெருமை
நிரந்தரமா வாழ்க நிலத்து! 17

### கலித்துறை

நிலத்துப் பெரியார் எவரென
நீள்நிலம் முற்றிலுமே
புலத்துப் பெரியார் பலரும்
துருவி, புவியிலெலாம்
நலத்துப் பெரியான் ஒருதனிக்
காந்தி,யென் நல்கியசீர்த்
தலத்துப் பெரியான் தனிஉடல்
நாள்பல தங்குகவே! 18

### விருத்தம்

தங்குபுகழ்ச் சத்தியமே! தண்ணளியே!
சபர்மதிவாழ் தவமே! தாவில்
எங்கள்அரும் இன்னுயிரே! ஏர்வாடா
எழில்வாழ்வே! எந்தாய்! எண்ணில்
புங்கவனே! புண்ணியனே! பொருவரிய
போர்த்தலைமை பூண்டோய்! பூ,நீர்,
திங்கள்அரி செங்கதிர்,விண், தீஉளநாள்
திருக்காந்தி திகழ்க சீரோய்! 19

### அகவல்

சீருடைப் பெரியோய்! தீண்டா மைதனை
வேரறக் களைய வேண்டிய வழியை
நாரொடு நவின்று, நடையினிற் காட்டி,
ஏருடை நாட்டை இரண்டு படுத்தச்
சாருதீப் பகுதித் தனிமுறை தகர்க்க,
ஆருயிர் அருள அமைந்திடு காந்தி!
பாருள மட்டும் பகல்வா னுளே! 20

### வெண்பா

வாழுநாள் பெருக மணலிற் பலவாக!
வீழுவார் தாங்களுமே மேலறிவு—பேண
ஒடுக்கப்பட் டாருக்கு உயிர்தாங்கு காந்தி!
வடுக்களிலா மாத்தும நிற்கு! 21

### கலித்துறை

நிற்கும் நிலையறி யாது
நிதிக்கு நிகழ்கருத்தை
விற்கும் கொடியவர், வேறு
நினைந்து வினைபுரிவோர்,
சொற்கும் செயற்கும் தொடர்பு
பொருந்தார், நிறைபுவியில்
நிற்கும் நெடும்புகழ்க் காந்தி!பன்
நாள்நீ நிலவுகவே! 22

### விருத்தம்

நிலவுதரும் தண்மதியைத் தண்ணளியால்
வென்றபெரும் நேயம் மிக்க
குலவுபுகழ்ச் சபர்மதியெங் கோவே!ஏர்
வாடாவிற் கொலுவி ருக்கும்
தலமதிக்கும் தனிப்பெரியோய்! தீண்டாமைத்
தவிடுபொடி யாக்கு தற்குப்
பலமுழுதும் ஆளுமுயர் பண்போய்!நீ
பல்லாண்டுஇப் பாரில் வாழ்க! 23

### அகவல்

பல்லோர் தம்மைப் பரந்தஇந் நாட்டில்,
பொல்லா மக்கள் பொருளெதும் இன்றிக்
கல்லார் ஆக்கிக் கண்டதும் மருண்டு
செல்லீர்!செல்லீர்! தீண்டார் நீரென,
வல்லிருள் தள்ளி, மாய்க்கும் கொடுமை,
கொல்ல உள்ளங் கொண்டு, தனது
நல்லுயிர் விடவும் நயந்துமுன் வந்த
எல்லார் காந்தி! என்றும்வா ழியவே! 24

### வெண்பா

என்றென்றும் வாழ்ந்திடுக! இந்து மதம்பிடித்தோர்
நன்றின்றித் தீண்டாமை நல்கியே—கொன்றன்ன
இன்னா மிகப்பலருக்கு ஈகொடுமை போக்குதற்குத்
தன்ஆவி தாக்கு,காந் தி! 25

### கலித்துறை

தன்ஆவி தீண்டார் தனிமுறைப்
போக்கைத் தவிர்ப்பதற்கே
எந்நாடும் ஏங்கிட ஈவதற்கு
ஏய்ந்த இருங்குணத்துத்
தன்னேர் இலாத தலைவன்எம்
காந்தித் தனிப்பெரியோன்,
எந்நாளும் வாழ்க! இருஞ்செயல்
வாழ்ந்தே இலகுகவே! 26

### விருத்தம்

இலகுபுவி தனில்முன்னாள் எண்ணற்றார்
அறம்வளர்த்தார், எனினும் உன்போல்
உலகறிஞர் திறமனைத்தும் ஒருசேரக்
கவருசெயல் உடைமை பூண்ட,
பலர்புகழும் பெருமையுளார் இலை;சரதம்!
பாரதர்தம் வாழ்வே! காந்தி!
நிலவிடுக நீஉலகில்! நெடுங்கடலோடு
இரவிமதி நிற்கு மட்டும்! 27

### அகவல்

மட்டில் புகழ்சேர் மணித்திரு நாடு,
கட்டழகு இழந்து கடமை மறந்து
பட்டினி யோடு பகைபிணி ஆதிய
கிட்டிப் பண்டைக் கெழுதகை எல்லாம்
விட்டுப் பிறப்பில் மேல்கீழ் என்னக்
கட்டிக் கதைபல, கையால் சிலரைத்
தொட்டால் முழுகித் தொலைந்திடும் குடியெனும்
வெட்டிப் பேச்சை, வீண்செய லோடு
வெட்டிக் காந்தி!நீ வேணநாள் வாழ்கவே! 28

### வெண்பா

வாழி. மணிப்பரத மாநாட்டார் மன்னுயிரே!
ஊழி உற,இவ் உலகதனில்;—வீழப்புன்
தீண்டாமை சேர்ந்த சிறுமைச் செயலெல்லாம்.
காண்தகுசீர்க் காந்தியடி கள்! 29

### கலித்துறை

காந்தி! உலகிற்குக் கண்ணே! அறிவே! கருத்தில்வளர்
சாந்த குணமே! சபர்மதி வாழ்வே! தனியமுதே!
வீழ்ந்த துணைவர் தமக்கா உயிரும் விடமுனைந்த
ஏந்தால்! எழில்திரு மேனியொடு இப்புவி வாழியவே! 30

### விருத்தம்

திருமேனி சிறியதுஎன்று எள்ளாமை
வேண்டும்;உயர் தேரைத் தாங்கி,
உருளுபெரும் ஆழியுறும் அச்சுஆணி
ஒப்பார்உண்டு உலகில் என்று
வருவாய்நீ எனஎண்ணியே வள்ளுவனுர்
வழுத்தினர்கொல்! வள்ள லே!உன்
அருமேனி தனைஇழந்தின்று ஆற்ருள்தாய்!
ஆண்டுபல வாழ்க காந்தி! 31

### அகவல்

பலபல வாகப் பரந்தஇவ் உலகம்
நலமிகு நின்னுடை நன்செயல் போற்றும்;
கலகமே புரிவோர், கயவரும் கூட
விலையிலா நின்செயல் வியவா தொழியார்;
புலையர்என்று ஒருகுழு பிறப்பினில் உண்டெனப்
புலையர்கள் கூறும் புன்பிரிவு என்றும்
நிலவிடச் செய்யும் நெடுந்தனித் தொகுதியைத்
தொலைத்திடக் கருதித் தொல்லுலகு அனைத்தும்
மலைத்திடு மாறு மன்னுயிர் வைத்த
புலம்நிறை காந்திப் புண்ணிய! வாழ்கவே! 32

## வெண்பா

*புண்ணியனே! புத்திரிபாய் புத்திரனே! பூவில்உயர்*
*கண்ணியனே! கத்தூரி காதலனே!—எண்ணில்புகழ்*
*மேயவனே! மேலவனே! மெய்க்காந்தி! மேலோர்தம்*
*நாயகனே! நண்ணுகபன் னுள்!* 33

## கலித்துறை

*நாயக! நற்புவி நண்ணிடு நன்றுஅறி நல்லவர்க்கே.*
*தூயவ! தூசு துளியும்இல் தூண்டாச் சுடர்விளக்கே!*
*ஏயநல் எண்ணம் இனிதே இயைந்திட இன்உயிரும்*
*காயக் கருதிய காந்திக் கதிர்,வாழ் கடலுலகே!* 34

## விருத்தம்

*கடல்ஆடைக் காசினியோர் கருத்தனைத்தும்*
*கவர்ந்தபுகழ்க் காதற் காந்தி!*
*மடங்கொன்று மறம்போக்கி மக்களுக்கு*
*வாழ்வுதர மண்ணில் வந்தோய்!*
*திடமறியார் செயல்வெள்கத் தீண்டாதார்*
*சீரடையச் சிறந்த சீர்த்தி*
*உடல்விடவும் உன்னியநின் உளம்வாழி!*
*உடல்வாழி! ஊழி! ஊழி!* 35

## அகவல்

*உடலினை உற்றோர்க்கு, உலகினில் உள்ள*
*மடமை மடித்து, மாண்பு வகுத்துக்*
*கடனெலாம் காட்டும் கருணைக் கடலே!*
*திடப்புத் திரிபாய்த் தேவிசீர்ச் செல்வா!*
*கடற்கண் கத்தூரி காதற் கனியே!*
*வடமலை மன்னும் வான்கேழ் மணியே!*
*அடல்அமர்க்கு அருளே ஆயுதம் ஆக்கொள்*
*விடத்தினும் மிக்க வெடிக்கும் வெருளாத்*
*தடப்போர்த் தலைவா! சபர்மதிச் சான்றோய்!*
*வடத்தினில் மருண்ட மதியில் மாக்களும்*
*உடன்பணி உரவோய்! ஊழிவாழ் ஊழியே!* 36

## வெண்பா

ஊழிநாள் வாழ்க! உலகந் தனில்என்றும்
ஆழி உருட்டுங்கை அண்ணலே!—நாழிகையில்
மோத வருவோர் முடிசாய்க்கும் மோகனனே!
ஏதமில்ஏர் வாடாவாழ் வே! 37

## கலித்துறை

ஏதும் அறியா எளைநேர் சிறிய இயல்பினரைத்
தீதில் வழியிற் செலுத்தி அருளு திறம்உடையாய்!
காதற் கனியே! கருத்தில் வளர்பெருங் கற்பகமே!
நாத! நலம்நிறை காந்தி! பெருகுக நாள்நினக்கே! 38

## விருத்தம்

நினக்கரிய செயல்இந்த நிலத்தில்இலை;
நீள்காந்தி! நீஇன்று உற்ற
மனக்கருத்து நிறைவேறி வாழ்ந்திடுக
பன்னெடுநாள் மண்ணின் மீதே!
உளைப்பயந்த பாரதத்தாய் உளைஇழந்தும்
உய்வாளோ? உச்சி மீது
கனத்தமணி முடிசூடும் கடன்கழியாது
தொழியவிடாள்! கருணை வள்ளால்! 39

## அகவல்

வள்ளலே வாழியபல் லாண்டு மண்ணில்!
தள்ளரும் சத்தியமே! தரும வாழ்வே!
எள்ளும் குணமில்லாய்! இனிதே செய்வாய்!
தெள்ளும் அறத்தைச் சீர்த்தமிழிற் செய்த
வள்ளுவர் நூற்குஇலக்கா வந்த மணியே!
கள்ளக் கருத்தினர்கள் காணு மலையே!
உள்ளத் தெளிவுடையார் உளம்மன் உத்தம!
எள்ளத் துணைதுயரும் ஏனோர்க்கு இயற்றுக்
கொள்ளை நலம்உடையாய்! கோதில் அறம்வாழ்க!
கிள்ளை மொழிவாழ்க! கேடில் கதர்வாழ்க!
அள்ளும் அமுதனைய அருமைச் செயல்வாழ்க!
வள்ளலே காந்திநீ பல்லூழி வாழ்கவே! 40

# 5. காந்தி திருப்பள்ளிஎழுச்சி

## பாயிரம்

### அறுசீர் விருத்தம்

கலங்காத திருவுளத்துக் காந்திக்குத்
திருப்பள்ளி எழுச்சி கண்டான்,
அலங்காரம் ஆங்கலி,ஐ ஆயிரத்து
முப்பத்து நான்காம் ஆண்டில்,
இலங்கும்ஆங் கீரசவில் எழில்ஆனி
பதினேழா இசைந்த நாளில்,
மலிந்தபுகழ் தருவேலூர்ச் சிறையதனில்
ராய.சொக்க லிங்கன் மாதோ.

## திருப்பள்ளி எழுச்சி

### எண்சீர் விருத்தம்

விரிகதிர் பரப்பி இரவியும் எழுந்தான்!
வியன்நிலம் இருள்கெட வெளுத்தது கீழ்பால்!
அருஞ்சிறைக் கதவம் திறக்க,நின் அடியார்
அறையினின்று எழுந்துவந்து அடிபணி கின்றார்!
பெருமித அன்னை விடுதலை விரைவில்
பெறுவதற்கு உன்மேல் விழிநிறைக் கின்றாள்!
ஒருதனி வள்ளால்! ஒண்தவ காந்தி!
உயிர்க்குயி ரே!பள்ளி எழுந்தரு ளாயே! 1

கோழிகள் கூவின! கொழுநகை முல்லைக்
கொடிகள் மலர்ந்தன! படிபுகழ் உழவர்
மேழிகள் ஏந்தினர்! மேதினி வாழ;
மேன்மை அறம்பொருள் மேலவர் விண்டார்!
ஏழிசை யோடுஇன்ப யாழ்குழல் இணைத்தே
ஏந்தெழில் மாதர் இயம்பினர் கீதம்!
வாழிகள் பாடினர் வந்தியர்! காந்தி
மாதவ னே!பள்ளி எழுந்தரு ளாயே! 2

ஆங்கிரச-ஆனி-17, 30—6—1932

விடிந்தது பொழுது! விளங்கியது உலகம்!
விட்டனர் உறக்கம்! தொட்டனர் தொண்டு!
மடிந்தது மடமை! வாழ்ந்தது நாடு!
மண்டினர் உரிமை மாபெரும் போரில்!
இடிந்தது காரிருள்! இரிந்தனர் மாற்றார்!
எழுந்தனன் விடுதலைப் பரிதி,அவ் வானில்!
முடிந்தது பகைமை! உயர்ந்தனள் நந்தாய்!
மோகன னே!பள்ளி எழுந்தரு ளாயே! 3

ஆடின மயில்கள்! கூவின குயில்கள்!
அரற்றின பறவை! அலர்ந்தன மலர்கள்!
மாடமும் மறுகும் வயங்கின ஓசை!
மாதரும் மைந்தரும் மொய்த்தனர் யாண்டும்!
கோடுயர் உதய மால்வரை யதனில்
கொழுங்கதிர் நிறைத்தே எழுந்தனன் பகலோன்!
பாடினர் புலவோர் நின்புகழ்! காந்திப்
பண்ணவ னே!பள்ளி எழுந்தரு ளாயே! 4

இளங்கதிர் ஞாயிறு எழுந்தது கிழக்கில்!
எழுந்தது சுதந்தரப் பெருமுழக்கு எங்கும்!
விளங்கொளி மேனிநம் மேதகு நற்றாய்
விழைந்தனள் பண்டைப் பெறல்அரும் வாழ்வை!
உளங்களி கூர்ந்துஅவள் உயர,நின் அடியார்
உன்அரும் பணி,தலை பார்த்துநிற் கின்றார்!
வளங்கெழு நாட்டை வாழ்வித் தருள
வந்தவ னே!பள்ளி எழுந்தரு ளாயே! 5

பூரண சுதந்தரப் பேரிகை முழங்குது,
பூமியும் வானமும் திசைகளும் குலுங்க!
மாரத அறப்போர் வீரர்க ளான
மைந்தரும் மாதரும் வல்அணி வகுத்தே
ஆரணர் உற்ற பாரத அன்னை
அருந்தளை தகர்க்க அமர்க்களஞ் சேர்ந்தார்!
போரதில் தலைமை பூண்டருள் காந்திப்
புண்ணிய னே!பள்ளி எழுந்தரு ளாயே! 6

நின்புகழ் பாடிநின்று ஏத்தினர் ஒருபால்!
நின்அருள் வாய்மொழி நோக்கினர் ஒருபால்!
அன்புரு வா,நின்று ஆடினர் ஒருபால்!
அடிமை தொலேக்கவந்து அடைந்தனர் ஒருபால்!
மன்பதை காப்போர் மாசு துடைக்க
வன்கொடுஞ் சிறையுள் வதிந்தனர் ஒருபால்!
என்புஒடிந் திடஅடி பட்டனர் ஒருபால்!
எம்பெரு மான்!பள்ளி எழுந்தரு ளாயே! 7

வாழ்ந்தது நல்லறம்! வாழ்ந்தது நாடு!
வாழ்ந்தனர் மேலோர்! வாழ்ந்தனம் யாமும்!
வீழ்ந்தது தீமை! வீழ்ந்த,பேர் ஆசை!
வீழ்ந்தனர் கீழோர்! வீழ்ந்தனர்! வீழ்ந்தார்!
ஆழ்ந்தநின் எண்ணம் அனேத்துமே கூடி
அவனிசீர் பெறும்நாள் அணேந்ததால் ஐய!
தாழ்ந்தவர் உயரத் தரணியில் வந்த
தண்ணளி யே!பள்ளி எழுந்தரு ளாயே! 8

கருணேயின் கடலே! பெருங்குணக் குன்றே!
கதிர்நிகர் ஒளியே! பெருமித முனியே!
தரைபொரு பொறையே! சபர்மதி வாழ்வே!
சத்திய நெறியே! உத்தமர் ஏறே!
வரும்அடி யோமின் கண்ணே! மணியே!
மணியுரை பாவாய்! மாநில விளக்கே!
அருமையில் உயர்வொப்பு ஒருவரும் இல்லாய்!
ஆருயி ரே!பள்ளி எழுந்தரு ளாயே! 9

பொய்கை மலர்ந்தன! மலர்ந்தன சோலே!
புள்ளினம் அலம்பின! அலம்பின சங்கம்!
பெய்மது உண்டிசை பாடின வண்டு!
பேசின நின்புகழ் பூவையும் கிளியும்!
வெய்யவன் தன்னிளம் செங்கதிர் நுழைத்து
விரிமலர்ச் சோலேயின் இடைபுகு கின்ருன்!
தையலர் மாமலர் கொய்வதற்கு உற்ருர்!
சபர்மதி யோய்!பள்ளி எழுந்தரு ளாயே! 10

# 6. காந்தி திருத்தசாங்கம்

## பாயிரம்

### அகவற்பா

சேண்புகழ் கொண்டஏர் வாடாச் சிறைஉறை
காண்தகு சிறப்பிற் காந்தி யடிகட்கு,
நாமம், நாடு, நகர், நதி, மலையே,
ஊர்தி, படை, முரசு, ஒண்தார், கொடியெனும்
அங்கம் பத்தும், வெண்பாப் பத்தில்
பாடினன்; காரைப் பதிவாழ், ராய
சொக்க லிங்கன்; தொல்கலி யாண்டு
ஐயா யிரத்துமுப் பத்து நான்காம்
ஆங்கி ரசவில் ஆனிபதி னெட்டில்;
வேலூர் அரண்மனை மேவிய நாளென்.

## திருத்தசாங்கம்

### நேரிசை வெண்பா

1. பெயர்

சிறையார் மணிக்கிள்ளாய்! தேசம் செழிக்க
இறையான ஏதமிலான் பேர்என்?—அரசாள்
முடிமன்னர் அஞ்சவரு மோகனதாஸ் காந்தி
அடிகள்அவன் பேர்என்று அறை! 1

2. நாடு

பச்சைப் பசுங்கிளியே! பாரில்உயர் காந்திமகான்
மெச்சுபுகழ் நாட்டை விளம்புவாய்?—நச்சு
தனிஇமயம் தொட்டுத் தமிழ்க்குமரி ஈறும்
முனிவரர்நாடு என்றே மொழி! 2

---

ஆங்கீரச- ஆனி- 18, 1—7—1932

3. ஊர்

கொஞ்சுமொழி அஞ்சுகமே! கோதறியா எங்காந்தி
விஞ்சும் அரும்பதிஎன்! விள்ளுவாய்!-அஞ்சுலகில்
யாதுமவன் தன்ஊரே! யாவரும் அவற்குஉறவுஎன்று
ஏதம்ஒன்றும் இன்றி இயம்பு! 3

4. ஆறு

வானார் மரகதமே! மாதவத்துப் புத்திரிபாய்
ஆறாத செல்வன்உயர் ஆறுநவில்?—தேன்நாறும்
கங்கை முதல்தென் கடல்வீழ் பொருநைவரை
இங்கிதப்பல் யாறுஎன்று இசை! 4

5. மலை

இன்மழலைச் சோலை எழிலார் இளந்தத்தாய்!
சொல்நயத்தாற்கு உற்றமலை சொல்லுவாய்?-தன்னேர்
இரும்பொன் இமயமுதல் எற்பொதிகை ஈறாப்
பெருமலைகள் எண்ணிலவாம் பேசு! 5

6. ஊர்தி

அஞ்சொல்இள மெல்லியலார் அங்கைவளர் அஞ்சுகமே!
செஞ்சொலான் செல்ஊர்தி செப்புவாய்?—விஞ்சுகலை
பூண்ட நலஞ்சேர் புகழார் பெருங்குணத்தில்
மாண்டார் மனமென்று உரை! 6

7. படை

அமிழ்த மொழிபடிப்பான் ஆயிழையார் அங்கை
கமழும் மரகதமே! காந்தி—இமிழ்படைகொல்?
குன்றுஎழுந்து வந்திடினும் கூறுபடுக்கும்இசை
குன்றாத உண்மையெனக் கூறு! 7

8. முரசு

சிறுகுதலைத் தத்தாய்! திருவாளன் முன்றில்
மறுகுமணி மாமுரசம் யாதோ?—அறமே!
இனிமை! கருணை! எளிமை!பொறை! வாய்மை!
புனிதம்!இவை என்றே புகல்! 8

9. மாலை

செம்பவள வாய்க்கிள்ளாய்! சீரார் சபர்மதியான்
வம்பவிழும் மாலை வழுத்துவாய்?—எம்பெருமான்
வான்கிண்டு உயர்ந்த வரைநேர் பெரும்புகழைத்
தான்கொண்டான் தார்என்றே சாற்று! 9

10. கொடி

ஏரார் இளங்கிளியே! எங்கள் உயிர்க்குயிரான்
காரேர் கொடிஎன்! கழறுவாய்?—பார்ஏத்தும்
மும்மை நிறத்து முதுராட் டமைத்தஉயர்
செம்மைக் கொடிஎனவே செப்பு! 10

# 7. காந்தி திருப்பொன்னூசல்

## பாயிரம்

### அகவற்பா

ஐயா யிரத்துமூப் பத்து நான்கென
எய்திய கலிஆங் கிரச யாண்டில்
ஆனித் திங்கள் அணிபத் தொன்பான்
பெருநாள் தன்னில் பீடார் காந்தி
திருப்பொன் னூசல், சீர்சால் தமிழில்
சொற்றனன் ராய. சொக்க லிங்கன்
வேலூர் அரண்மனை மேவிய நாளென்.

## திருப்பொன்னூசல்

### எட்டடித் தரவு கொச்சகக் கலிப்பா

உலகம் புகழும்உயர் ஒப்பில்சீர் உற்றிடும்எம்
தலைவன்! அறவாழித் தண்ணளியான்! சால்புடையான்!
மலைநேர் குணமுடையான்! மாநிலமே போல்பொறையான்!
கலைகள் முழுதுணர்ந்தான்! கடமையே தான்புரிவான்!
நிலையில் பொருளறிந்தான்! நேர்மைதனைப் போற்றுவான்!
அலகில் பெருங்காந்தி அண்ணலவன் சீர்அனைத்தும்
குலவிக் கொழுநருடன் கொஞ்சுதமிழ்ப் பாப்பாடிப்
புலமை எழில்அணங்கீர்! பொன்னூசல் ஆடாமோ! 1

தூண்நல்ல வயிரமாம்! தூத்தரளம் உத்தரமாம்!
ஆணிப்பொன் அழகுஒழுக ஆடுமருஞ் சங்கிலியாம்!
மாணிக்க விளிம்புஅமைத்து மரகதக்கால் வைத்திழைத்த
நாணப்பேர் ஒளிமுழுதும் நலந்திகழும் நீலமணி
பேணிச்செய் பீடாரும் பெரும்பலகை பிறங்கிடவே
பாணிக்கொள் அருங்கணவர் பாராட்ட இனிதுஅமர்ந்து
காணற்கே தவம்வேண்டும் காந்தி புகழ்பாடிப்
பூண்ஒத்த கற்புடையீர்! பொன்னூசல் ஆடாமோ! 2

---

ஆங்கீரச-ஆனி-19, 2—7—1932

ஞாலம் தனில்பெரிய நல்லோன்! நவையில்லான்!
சீலன்! அறிஞர்உரை தேவன்! திருவாளன்!
காலம் முழுதுணர்ந்தோன்! கடமை தவறுதோன்!
காலன் கொதித்துஎழினும் கலங்காதோன்! கத்தூரி
மாலை மகிழ்ந்துஏற்றோன்! மாதவத்துப் புத்திரிபாய்
பாலன்! எழில்மோகன்! பண்பார் பதம்பாடி
வேலை நிகர்த்தவிழி மென்மைச் சிறந்அன்னம்
போலும் மடநடையீர்! பொன்னூசல் ஆடாமோ! 3

கொங்கு விரிமலர்போல் குளிர்முகத்தீர்! கொழுங்குழவித்
திங்கள் நுதலுடையீர்! சிறுகும் திலகம்அதில்
தங்கும் எழிலுடையீர்! சரம்நேர் விழியுடையீர்!
சங்கு திகழ்கரத்தில் தங்கப் பிடிதடவிக்
கொங்கை குலுங்கப்பூங் கொடிநுண் இடைநுடங்க,
வங்கக் கடற்பவள வாய்முத்து அமுதுஉகுக்க
எங்கள் தவக்கொழுந்தின் இணையில் புகழ்பாடிப்
புங்கம் பெறவிழைந்து பொன்னூசல் ஆடாமோ! 4

மாசில் அரும்பொன்னீர்! வலம்புரிநல் முத்தனையீர்!
காசில் விரைஒப்பீர்! கரும்பாவீர்! தேன்பொருவீர்!
ஆசைக் கொழுநர்சீர் ஆகம்ஒரு கைஅணைத்து,
வீசும் ஒருகையால் மேவுபிடி தொட்டுஅசைத்துப்
பேசு கிளி,குழல்,யாழ், பேர்அமிர்தம் ஆர்ந்தமொழி
தேசு திகழ்மதுரச் செம்பவள வாய்திறந்தே,
ஈசன் இருங்காந்தி எம்மான் புகழ்பாடிப்
பூசல் புரிகண்ணீர்! பொன்னூசல் ஆடாமோ! 5

ஏரார் இளங்கொடியீர்! எங்கள் பெருமானார்
வாரார் திருமேனி யெங்கும் எழில்பாடிச்
சீரார் ஒளிவீசு திங்கள் முகம்பாடிக்
காரார் அருள்பொழியும் கருணை விழிபாடி
நாரார் அமிழ்தொழுகும் நல்வாய் நனிபாடி
ஓரார் உணர்வுஅரிய ஒற்றைக் கதர்பாடி
நேரார் அதிசயிக்கும் நேர்மைப் புதியமுறைப்
போரார் திறம்பாடிப் பொன்னூசல் ஆடாமோ! 6

"கம்ப மதயானைக் கழுத்தகத்தின்" மீதமரும்
பைம்பொன் முடியரசர் பணியும் பெருங்குணஞ்சேர்
நம்பன், அறம்வளர்க்கும் நல்லோன் திறம்பாடிக்
கொம்பர் வழிந்தொழுகு கொழுந்தேன் கொடுநலங்கொள்
உம்பர் அமிழ்துஅளைந்த ஒண்தீஞ் சுவைத்தமிழில்,
செம்ப வளமுத்தம் சிறிது புறம்பொசிய
வம்பார் கருங்குழலீர்! மணமாலை வாழ்வண்டு
"பொம்பொம்" எனமுழங்கப் பொன்னூசல் ஆடாமோ! 7

காதார் குழையாடக் கழைத்தோள் உயர்ந்தாட
மீதார் துகிலாட மேனி சிறிதாடத்
தூதார் துவண்டாடத் துடிநேர் இடையாட
வாதார் விழியாட மணிக்கை வளையாடத்
தாதார் அணியாடச் சதங்கைப் பதமாட,
வேதா வியப்பெய்த விளங்கும் இதழ்திறந்து,
மாதா மடிமேல் வளர்வோன் புகழ்பாடிப்
போதார் குழலாடப் பொன்னூசல் ஆடாமோ! 8

வானம் நனிபுதைப்ப வளர்ந்த புகழாளன்!
"தானம் தவமிரண்டும்" தங்கும் வனப்புடையான்!
ஞானம் மிகஉடையான்! ஞாலந் தனிற்பெரியான்!
ஊனம் சிறிதுமிலான்! ஒற்றைக் கதர்உடையான்!
மானக் குழலின்இசை வண்யாழ் மிழற்றோசை
கானக் குயில்ஒலியும் கரும்பும் விரும்பமுதும்
தேனும் குழைத்தமொழிச் சீரீர்! திசைகடந்து
போன புகழ்பாடிப் பொன்னூசல் ஆடாமோ! 9

சாந்தம், பொறை,கருணை, தண்மை,சீர், புனிதமிசை,
வாய்ந்த அறிவுஏந்தி, மாநாடு வாழவந்த,
வேந்தன் உயர்காந்தி மெய்சேர்ந்த புகழ்பாடி
ஏய்ந்த கருத்தறிவும் எழிலும்இணை காதலரைக்
காந்தள் வளைஅணிந்த கவவுக்கை நெகிழாமல்
தேய்ந்த இடைவருந்தச் செய்யகனி வாய்திறந்து
தோய்ந்த இளஞ்சாயல் தோகைமயில் தோற்கடித்துப்
போந்த தமிழ்இயலீர்! பொன்னூசல் ஆடாமோ! 10

# 8 காந்தி திருப்பல்லாண்டு

### பாயிரம்

#### அறுசீர் விருத்தம்

சகம்ஆண்டோர் ஆயிரத்துஎண் ணூற்றைம்பத்து
ஐந்தின்மேற் சார்ந்து நின்ற
மிகும்ஆங்கி ரசஆனி மேவுஇருபத்து
ஒன்பானுள் மேலோர் வாழப்
புகுகாந்தி அடிகட்குப் புனைந்தனன் நற்
பல்லாண்டு புனித வேலூர்த்
தகும்அரண்ஆர் தனிச்சிறையில் ராய.சொக்க
லிங்கன்அருந் தமிழன் மாதோ.

## திருப்பல்லாண்டு

#### அறுசீர் விருத்தம்

சீர்கெழு மாநிலம் யாங்கணும் ஈடில்லான் !
சீலத்தால் ஞாலம்ஆள்வான் !
நார்நிறை உரைஅலால் வேறுஉரை அறியாதான் !
நல்அறமே நவிலுநாவான் !
ஆர்கலி பொங்கியே ஆரவா ரஞ்செயினும்
அமைதிஇழ வாதஐயன் !
பார்புகழ் அருந்தவக் காந்தி அடிகட்குப்
பல்லாண்டு கூறுதுமே ! 1

மிடி,பிணி, படிறு,பொய், வெஞ்சினம், வீண்ஆசை,
மெலிவு,குடி கயமை,காமம்,
மடி,கொலை, மற்றோர் மண்ணுள் மடமையொடு
மாளாத அன்னயாவும்
அடியுடன் களைந்திட அவனியில் தோன்றிஉயர்
அறம்வளர்த் தருளும்எங்கள்
படிதனில் உயர்ந்தசீர்க் காந்தி அடிகட்குப்
பல்லாண்டு கூறுதுமே! 2

மாரதர், அதிரதர் முதலிய வல்லாண்மை
மன்னர்சீர் நீதிகண்ட
போர்அதில் இணையிலா வீரர் பலர்வாழ்ந்த
புரையில்நாடு இற்றைநாளில்,
பார்அதில் சமம்பெருது ஒன்னலர்க்கு உட்பட்ட
பாண்மைதொலை யப்பிறந்த
பாரதர் முடிமணிக் காந்தி அடிகட்குப்
பல்லாண்டு கூறுதுமே! 3

ஆவியே அனையான்! அவனி தனக்கென்ன
அறிஞரெனும் பெருமை மிக்க
நாவலர் பலர்உரை நம்பன்! நலந்திகழும்
நாட்டுவிடு தலையில்நின்று,
காவலர் கன்றினர் ஆயினும், அஞ்சாதே
கடமைபுரி கருணைகொண்ட
பாவிரி கீர்த்திஎம் காந்தி அடிகட்குப்
பல்லாண்டு கூறுதுமே! 4

எங்கள் உயிரனன்! இந்தியத் தாய்செய்த
எண்ணில்உயர் தவத்துதித்தான்!
தங்கும் அறிவினர் தனிமனம் அகலாத
சாத்வீகன் ஆனசீலன்!
பொங்கும் மங்களம் எங்கும் தங்கிடவே
புரியவரு மோகனப்பேர்ப்
பங்கம் இல்குணக் காந்தி அடிகட்குப்
பல்லாண்டு கூறுதுமே! 5

ஆடக வரைதொட்டே அழகார் குமரிவரை
அருள்ஒழுகு நாடுதன்னில்
நாடும் உயர்மக்கட் பிறப்பில் நடுவின்றி
ஞானம்ஒரு சிறிதும்இன்றிக்
கோடி, ஒருபிரிவார் தீண்டார் எனக்கூறும்
கொடுமையைக் கொலப்பிறந்த
பாடல் உடைச்சிறப்புக் காந்தி அடிகட்குப்
பல்லாண்டு கூறுதுமே! 6

துறவிக்கு வேந்தன் துரும்பென்று உரைத்தஉயர்
தொல்உரையை உலகமெங்கும்
அறிவிக்க வந்தவன்! அறந்தவிர் ஆறுஒன்றும்
அறியாதான்! அருமையாளன்!
குறைமிக்க ஆட்சியின் கொடுமை நனிஆய்ந்து
கூர்த்தமதியோர் உவப்பப்
பறைவிக்கும் எம்பெரும் காந்தி அடிகட்குப்
பல்லாண்டு கூறுமே! 7

மால்பெற்ற தீமை அனைத்தும் துறந்தபெரு
மாண்புமுழு தும்அடைந்து,
நூல்பெற்ற உண்மை நுணுகி, உணர்ந்து,அரிய
நோன்புதலை மேல்,தரித்து,
நூல்பெற்ற ஆழி கரங்கொண்டு உயர்ச்சிபெறு
நுவல்அரிய சீலனுன
பால்பெற்ற இன்உரைக் காந்தி அடிகட்குப்
பல்லாண்டு கூறுதுமே! 8

"பல்லாண்டு பல்லாண்டு பல்லாயி ரத்தாண்டு
பல்கோடி நூறுயிரம்"
சொல்லாண்ட தூய்மையன்! தொன்மை அறஞ்சொற்ற
துரிசிலாத் திருமனத்தான்!
வில்லாண்ட மெய்மையன்! மேவா இடத்திலூஉம்
விரிந்தபுகழ் வீசுமேலோன்!
பல்லாண்டு வாழ்கென்று காந்தி அடிகட்குப்
பல்லாண்டு கூறுதுமே! 9

வாழிய உலகெலாம் பல்லாண்டு! வாழ்க
நின்அறம் பல்லாண்டு!
வாழிய ஒருகதர் பல்லாண்டு! வாழ்க
நின்புகழ் பல்லாண்டு!
வாழிய இராட்டினம் பல்லாண்டு! வாழ்க
பெற்றதாய் பல்லாண்டு!
வாழிய அடியவர் பல்லாண்டு! வாழ்க
காந்தி,நீ பல்லாண்டு! 10

# 9. காந்தி திருநாமம் கேட்டல்

### பாயிரம்

#### அறுசீர் விருத்தம்

அறைசகம் ஆயிரத்தெண்ணூற்று ஐம்பதனோடு
ஐந்தின்மேல் அடைந்து நின்ற
நிறைஆங்கி ரசஆடி நேர்இருபத்து
ஆறும்நாள் நேயக் காந்தி
பொறையுடையான் திருநாமம், பூங்கிளியை
வினவுதமிழ்ப் பொற்பா, வேலூர்ச்
சிறையதனில் செய்தளித்தான்; ராய.சொக்க
லிங்கன்எனும் சிறுவன் மாதோ.

## திருநாமம் கேட்டல்

#### கலி விருத்தம்

நலம்ஆர்ந்த நற்பவள வாய்ப்பச்சை நறுங்கிளியே!
அலையாதே! இங்கேவா! அருந்தேனோடு அமுதூட்டுவேன்!
புலையான மனம்அதனைப் பொறிசெலுத்தா எந்தலைவன்
கலையாளன் திருநாமம், எனக்கொருகால் கழறுயே! 1

கொடிப்பவள வாய்க்கிள்ளாய்! இங்கேவா! கொழுந்தேனும்
வடித்தசுவைத் தீங்கரும்பும் மாங்கனியும் உணத்தருவேன்!
பிடித்தபுகழ்ப் போர்ப்பந்தர் பிறந்தருளும் தவக்கொழுந்தின்
மடுத்தஒளித் திருநாமம் எனக்கொருகால் வழுத்தாயே! 2

மாமயிலார் வண்கைவளர் மரகதமே! வா!வா!! நீ
காமுறுநல் உணவனைத்தும் கனிவுடனே தருவேன்நான்!
ஏமம்உறும் இணையில்லா ஏர்வாடாக் கோவில்உறை
தூய்மையுளான் திருநாமம், என்க்கொருகால் சொல்லாயே! 3

---

ஆங்கீரச-ஆடி உ௬ 10—8—1932.

கொஞ்சுமொழி அஞ்சுகமே! இங்கேவா! கொம்புத்தேன்
விஞ்சஅளைந்து இன்கனிகள் வேண்டுமட்டும் ஈந்திடுவேன்!
பஞ்சையர்க்கு வாழ்வுஅளிக்கும் பாரதத்தாய் பெருமகனும்
செஞ்சொல்வலான் திருநாமம், எனக்கொருகால் செப்பாயே! 4

குழலொடுயாழ் அமிழ்துஅளைந்த கொழுமழலைக் கிளவியர்தம்
அழகுஒழுகும் அங்கைவளர் அணிதத்தாய்! அருகேவா!
கொழுகொழுத்த அமுதுஈவேன்! கூர்த்தமதிக் கூர்ஜரத்தான்
பழகுபுகழ்த் திருநாமம், எனக்கொருகால் பாடாயே! 5

பச்சைநிறப் பைங்கிளியே! பாலொடுதேன் நான்தருவேன்!
இச்சைவழி நாடதனை இயக்குவிக்கும் எம்பெருமான்,
துச்சம்எனத் திருமுழுதும் துறந்தபெரும் திருவாளன்,
அச்சமிலான் திருநாமம், எனக்கொருகால் அருளாயே! 6

பேதைஎனப் பேதையர்சொல் பெண்மணிகள் பேச்சுஅறியக்
காதலிக்கும் கைக்கிள்ளாய்! கனிதருவேன்! கண்ணேவா!
மாதவத்துப் புத்திரிபாய் மணிவயிறு வாய்த்தபுகழ்
நாதன்உயர் திருநாமம், எனக்கொருகால் நவிலாயே! 7

பண்தேய்த்த மொழியுடையார் பங்கில்உறை மரகதமே!
விண்தேய்த்த மெல்லமிழ்தம் நான்தருவேன்! உண்டிடலாம்;
மண்தேய்த்த பெரும்புகழான் மாதவரும் நாள்தோறும்
கொண்டுரைத்தும் திருநாமம், எனக்கொருகால் கொஞ்சாயே! 8

பாவையர்தோள் மருவும்இளம் பசுந்தத்தாய்! வா!வா!! நீ
மேவி,விளை யாடுதற்கு வேணதெலாம் நான்தருவேன்!
ஆவலுடன் எம்பெருமான் அருள்ஒழுகு திருநாமம்
கூவிடுவாய்! கூவில்,உடன் கொன்றிடலாம் தீமையெலாம்! 9

ஆய்ந்தசொலார் அஞ்சுகமே! அள்ளிஉணவு ஈந்திடுவேன்!
மாந்தர்உய இவ்உலகில் வந்துதித்த மதிவல்லான்,
சேர்ந்தபுகழ்த் திருநாமம் செகமதிக்கும் "மோகனதாஸ்
காந்தி"யென மொழிந்திடுவாய்! கடல்அமுதம் ஆர்ந்தசொலால்! 10

# 10. காந்தி புகழ் பாடுமின்!

## வஞ்சித் தாழிசை

காந்திஇக் காசினி
வாழ்ந்திட வந்தனன்;
சாந்தனைச் சார்ந்திட
மாந்தர்காள் வம்மினே! 1

மோகனன் மொய்ம்பினன்!
ஏகன்இவ் இரும்புவிக்கு
ஆகலான் அடைந்திட
வாகுடன் வம்மினே! 2

அன்னைநோய் அகற்றுசீர்
வன்பெரும் மகாத்மனின்
பொன்னடி பொருந்திட
மன்னுவீர் வம்மினே! 3

தாயவள் தளைகொல
மேயவன்! மேலவன்!
நாயகன்! நல்தவத்
தூயனைத் துதிசெய்மின்! 4

வேதனை வீழ்த்திட
மேதினி மேவினோன்!
காதலன் காந்திசீர்ப்
பாதமே பாடுமின்! 5

தன்நிகர் தான்அவன்!
நல்நயன்! நலிவுஇலான்!
அன்னவன் அணிதிகழ்
பொன்னடி போற்றுமின்! 6

புத்திரி புத்திரன்!
வித்தகன்! மெய்அறம்
இத்தரை எங்கணும்
மெத்துவீர் வீரர்காள்! 7

அறிவுடை அந்தணன்!
செறிதரு சீர்அறம்
தறையெலாம் தங்கிட
நிறைசெய்வீர் நேயர்காள்! 8

செய்தவன்! சீர்த்தியன்!
கய்தவக் கருத்திலான்!
அய்யன்நல் அறந்தனைச்
செய்குவீர் தீரர்காள்! 9

கருணைகொள் காந்தியின்
பெருமைகொள் பேர்அறம்
அருமைகொள் அவனியில்
உரிமையா உணர்த்துவீர்! 10

எள்ளல்இல் எம்உடை
வள்ளலின் மன்அறம்
அள்ளியே அவனிசீர்
கொள்ளுமா கொளுத்துவீர்! 11

காந்தியின் கருத்துடைச்
சாந்தமார் தண்அறம்
வாய்ந்தஇம் மாநிலம்
மாந்துமா வழுத்துவீர்! 12

---

ஆங்கீரச ஆவணி 11உ 26—8—1932

# 11. காந்தி சொற் பெருமை

## வஞ்சி விருத்தம்

இழுக்கல் நிலத்தில் இடர்உரு,
வழுக்கும் ஞான்று, மகாத்துமன்
வழுத்தும் அரிய வாய்ச்சொலே,
ஒழுக்கம் தாங்கும் ஊன்றுகோல்! 1

வெந்த புண்ணில் வேல்கொடு,
உந்தும் உணர்வில் உலகைவீழ்
விந்தை மக்கள் வீழ்ந்திட,
முந்தும் எந்தை மொழிகளே! 2

வற்றல் மரமும் வளர்ந்திடப்
பற்றும்; அரிய பண்புடை
ஒற்றைக் கத்தர் உடுத்தவன்
பெற்றம் மிக்க பேச்சுஅரோ! 3

எள்ளல் இல்லா இருங்குண
வள்ளல் காந்தி வாயுரை,
கொள்ளை இன்பம் கூடி,பூ
அள்ளி உண்ணும் அமுதம்ஆம்! 4

வாடு பயிரை வளர்த்துஎழில்
நாடு செழிக்க நல்கிடும்,
பீடு கொண்ட பெருமழை;
கேடில் காந்தி கிளர்மொழி! 5

அமுதம் அன்ன தண்அளி,
நமைஉண் பிக்கும் நன்மதி;
அமைதி கொண்ட அந்தணன்,
குமுத வாயின் கூறுஉரை! 6

*ஆங்கீரச- ஆவணி 11உ 26—8—1932*

தமிழு டன்நற் சந்தனம்
கமழு தென்றல் காற்றதாம்;
அமிழ்தம் ஈயும் அறிவினன்,
மகிழ நல்கு வாசகம்! 7

உற்ற நோயை ஓட்டிடும்
பெற்றம் மிக்க பெருமருந்து
இற்றை உலகுக்கு ஈடிலா
வெற்றிக் காந்தி மெய்ம்மொழி! 8

இந்தி யத்தாய் இருந்தளை,
முந்த அறுக்கும் மூரிவாள்;
சிந்தை இருந்த சீரியான்,
பந்தம் விட்ட பண்புஉரை! 9

சாந்தம்! வீரம்! தண்ணளி!
ஏந்து பெருமை இலங்கிடும்,
காந்தி கூறும் கருத்துஉரை;
மாந்தர் வாழ வைக்குமால்! 10

# 12. அங்கங்களின் பயன்

*அறஆழி அந்தணனின் அணிஉலகம் எல்லாம்*
*உறநாடி ஒருபெரியோன் ஒருவனிவன் என்ன*
*அறநாட்டும் அம்மானின், அடிக்கமலப் போதில்,*
*தறைநாட்டிச் சாய்க்காத தலைஎன்ன தலையே!*
*சபர்மதியான் தனைவணங்காத் தலைஎன்ன தலையே!!* 1

*மாதவத்துப் புத்திரிபாய் மணிவயிறு வாய்த்த,*
*தீதில்உயர் சீர்அறத்தைச் செகமுழுதும் சேர்த்த,*
*நாதன்எழில் நல்வடிவும் நாகரிகம் நண்ணும்*
*காதல்அதும் மாந்தாத கண்என்ன கண்ணே!*
*காந்திதனைக் காணாத கண்என்ன கண்ணே!!* 2

*கோ,வியலை நம்அன்னை கொள்ளுதற்குச் சூழ்ந்து,*
*பூஉலகம் இன்றுவரைப் பூணாத கீர்த்தித்*
*தாவில்அறப் போர்வகுத்த, தண்அளியார் காந்திச்*
*சேவகன்சீர் கேளாத செவிஎன்ன செவியே!*
*செய்யவன்சீர் கேளாத செவிஎன்ன செவியே!!* 3

*காதல்நிறை கத்தூரி கணவன்;உயர் நம்தாய்*
*தீதில்அருஞ் சிறுவன்;சீர்த் திருஉலகில் பெரியோன்;*
*ஏதம்எதும் அறிகில்லான்; இருங்குணத்தின் குன்றுஅனோன்;*
*மூதறிஞன் மணம்முகரா மூக்குஎன்ன மூக்கே!*
*மோகனனை முகராத மூக்குஎன்ன மூக்கே!!* 4

*சொந்தஅரசு இந்தியத்தாய் சூடிமுடி தாங்க,*
*முந்தையோர் காணாத முறையில்ஒரு நல்போர்,*
*எந்தஉல கும்வியக்க இயற்றுபெருங் காந்தி,*
*நம்தலைவன் புகழ்பாடா நாஎன்ன நாவே!*
*நாயகனை ஏத்தாத நாஎன்ன நாவே!!* 5

*ஆங்கிரச-ஆவணி-15 30—8—1932*

தள்அரிய பெருநீதித் தனிஆற்றை மண்டும்
பள்ளம்எனும் தகையானை—பாரதத்தாய் ஈன்ற
எள்ளுகுணம் இல்லானை—எம்மானை—காந்தி
வள்ளல்தனை—வாழ்த்தாத வாய்என்ன வாயே!
மகாத்துமனே என்னுத வாய்என்ன வாயே! 6

மாந்தர்உய இப்புவியில் வந்துதித்த வள்ளல்!
சாந்தகுணன்! தண்அளியன்! சபர்மதிக்கோன்! தாவுஇலான்!
ஏந்துபுகழ் மோகனப்பேர் எம்பெருமான்! ஈடிலான்!
காந்திதிரு முன்குவியாக் கைஎன்ன கையே!
கழல்இணைகள் பற்றுத கைஎன்ன கையே!! 7

பொய்வளரும் நெஞ்சினர்க்குப் புறமானுன்! பூதம்
அவ்வகையும் நன்றுஅடக்கி ஆண்ட திருவாளன்!
உய்வுஅறியாச் சிறுதகையேன் உளம்இருந்த காந்தி!
மெய்யுடையான்! மெய்வணங்கா மெய்என்ன மெய்யே!!
மேதகவோன் தாள்வீழா மெய்என்ன மெய்யே!! 8

செயிர்தீரப் பண்டுஅரசு செய்துஉலகின் முடிபோல்
அயர்வின்றி ஒளிர்ந்தநமது அன்னைஇன்று மண்ணில்
துயர்தாங்கல் ஆற்றுமல் தூய்பணிமேல் கொண்ட
உயர்காந்தி தனை,நினையா உளம்என்ன உளமே!
உத்தமனைச் சிறைஇருத்தா உளம்என்ன உளமே!! 9

இருந்தகைமை இந்தியநாடு இன்றுஏழை யாகி,
வருந்துதுயர் தீர்த்திடவே, மாதவத்து,ஏர் வாடா
அரண்மனையில் கொலுவிருக்கும் அருமந்த சீர்த்தி
அருந்தவனை அணுகாத அறிவுஎன்ன அறிவே!
அறக்காந்தி சீர்அறியா அறிவுஎன்ன அறிவே!! 10

# 13. ஆடாமோ ஊசல்

தேர்ந்த அறம்தாங்கு செய்ய தமிழ்ப்பாவால்,
சாந்த குணம்படைத்தோன்! சபர்மதிவாழ் எம்மான்!
வேந்தர் விறல்படையும் வெறும்கை கொடுவீழ்த்தும்
காந்தி கழல்பாடி ஆடாமோ ஊசல்!
கருணைக் கழல்பாடி ஆடாமோ ஊசல்! 1

பாகு பொருவுநறும் பசிய தமிழ்ப்பாவால்,
மாகம் தனைப்போர்த்த மாண்குணத்துக் காந்தி!
போகம் துறந்தபெரும் புனிதன்! புகழாளன்!
ஏகன் எழில்பாடி ஆடாமோ ஊசல்!
எங்கோன் எழில்பாடி ஆடாமோ ஊசல்! 2

கற்றைப் புகழ்சேர்ந்த கனிந்த தமிழ்ப்பாவால்,
இற்றைப் படியைநனி ஈடேற்ற வந்த
செற்றம் தவிர்ந்ததிருச் சீராளன் காந்தி!
ஒற்றைக் கதர்பாடி ஆடாமோ ஊசல்!
ஒண்மைக் கதர்பாடி ஆடாமோ ஊசல்! 3

கொள்ளை நலம்ஆர்ந்த கொஞ்சு தமிழ்ப்பாவால்,
அள்ளி உயர்அறத்தை அவனி நனிவாழக்
கிள்ளைக் கனிமொழியில் கிளத்தும் அருங்காந்தி!
வள்ளல் வளம்பாடி ஆடாமோ ஊசல்!
மன்னன் வளம்பாடி ஆடாமோ ஊசல்! 4

திரட்டி வடித்தசுவைச் சிறந்த தமிழ்ப்பாவால்,
மருட்டு புலன்வென்ற மாகாந்தி! மண்ணில்
புரட்டும் உருட்டும்அறப் புக்குஒழிய ஆழி
உருட்டும் கரம்பாடி ஆடாமோ ஊசல்!
உதவும் கரம்பாடி ஆடாமோ ஊசல்! 5

ஆங்கீரச-ஆவணி-16, 31—8—1932

அருமை அழகுஇளமை ஆன நலன்யாவும்
பெருகும் இனித்தசுவைப் பெரிய தமிழ்ப்பாவால்,
உரிமை தனைப்பெறவே உழைக்கும் உயர்காந்திப்
பெரியோன் பெயர்பாடி ஆடாமோ ஊசல்!
பெம்மான் பெயர்பாடி ஆடாமோ ஊசல்! 6

மருவு கொழுநர்எழில் மழைக்கை, வளைக்கையால்
ஒருவா வகைபிடித்தே ஒப்பில் தமிழ்ப்பாவால்,
பொருவார் புவியில்இலாப் புனிதன் அருங்காந்தி!
ஒருவன் திறம்பாடி ஆடாமோ ஊசல்!
உண்மைத் திறப்பாடி ஆடாமோ ஊசல்! 7

சினவேல் விழியாடத் திகழ்முத்தம் சிந்தக்
கனிவாய் அமிழ்துஒழுகக் கன்னித் தமிழ்ப்பாவால்,
இனிய மொழிபகரும் எந்தைசீர் ஏய்ந்த
அணியார் அறம்பாடி ஆடாமோ ஊசல்!
ஐயன் அறம்பாடி ஆடாமோ ஊசல்! 8

எம்மை உலகத்தும் ஈடில் தமிழ்ப்பாவால்,
நம்மை உயர்த்துதற்கு நானிலத்தில் நண்ணினோன்!
அம்மை அரசுபெற அருளு பெருங்காந்தி!
செம்மைச் செயல்பாடி ஆடாமோ ஊசல்!
திண்மைச் செயல்பாடி ஆடாமோ ஊசல்! 9

ஆடாமோ ஊசல்! அருமைசெறி தமிழ்ப்பாப்
பாடாமோ! பாடிப் பரவாமோ! பண்பில்
கூடாமோ! கூடிக் கூர்ஜரனைக் கூறி
ஆடாமோ! பாடி ஆடாமோ ஊசல்!
அந்தணன்சீர் பாடி ஆடாமோ ஊசல்! 10

# 14. தோழிப் பேச்சு

## ஆசிரியத் தாழிசை. வினாவிடை

அன்பு கயிறு அவனிபிணி காந்தி
என்பு நெகிழ இனியஉரை பகரும்
நம்பன் புகழ்பாடி ஆடாமோ! தோழீ! 1

நம்பன் புகழ்பாடி நாம்அடைவது என்னே!
இம்பர் உலகியற்கை அறியாயோ ஏடி!
வம்பே அவன்பெயரை வழுத்துதலும் தோழீ! 2

வம்பின் பொருள்மணமே! வழுத்தியது வாய்மை!
செம்ப வளவாய்நாம் திறந்துஅவனைப் பாடின்
உம்பர் நமைமதிப்பர் உறுதியடி தோழீ! 3

உறுதி கடைபிடித்த ஓராடை ஆண்டி
விறலா இடும்பையே மேவும்அவன் பின்னே
உறின்இவ் உலகுஇன்பம் ஏதடியோ! தோழீ! 4

ஓராடை ஆண்டியையே உலகதனில் விரிந்த
பாராள்வோர் என்போரும் பரவி,அவன் தன்னைத்
தீராச்சீர் செய்தகதை கேட்டிலையோ! தோழீ! 5

தீராச்சீர் என்னே! சிறைபிடித்தார் அக்கணமே!
தேராதார் செய்திட்ட சிறப்பின் பொருள்தான்என்!
சீராணைச் சேர்ந்திடிலோ சிரமமே! தோழி! 6

அன்னை விலங்குஅறுக்க அரியபணி கொண்ட
மன்னன் தனைத்தொடர்தல் மகிழ்வோ! வருத்தமோ!
என்ன பொருள்அடிநீ இயம்புரைக்குத் தோழீ! 7

ஆங்கீரச ஆவணி 17 1—9—1932

பொருள்நீ அறியாயோ! புவிஇன்பம் வேண்டின்
அருளும் அவன்சீர் அடிச்சுவடு பற்றி
இருளு சிறைகிடக்க இயலுமோ! தோழீ 8

வேற்றார் அரசதனில் விளையுமோ இன்பம்!
ஏற்கா மொழிபகர்தல் என்னேடி! ஆட்சி!
ஏற்காமுன் இன்பம் ஏதடியோ! தோழி! 9

அம்மா சிறைத்துயரும் அறிவிலிகள் கையடியும்
நம்மாற் பொறுக்கரிது! நாடுஅரசு பெற்றால்
சும்மா நுகரலாம்! துன்பமிலைத் தோழீ! 10

காந்தி மிகமதிக்கும் கத்தருடை கட்டுவாய்!
மாந்தர் உயரநல வழிஅதுவென் றான்அஞுன்
ஏந்தும் எழில்வாய்ந்த எனக்கினிய தோழீ! 11

போடி!உன் கத்தர் பொறுக்குமோ! பூ,நுண்
வாடும் அருமருங்குல்! மாயம்நீ சொல்வதெல்லாம்!
ஏடி! இடைஒடியின் யார்பொறுப்புத் தோழீ! 12

# 15. ஏர்வாடாக் கோவில்

## திருத்தாண்டகம்

பாரதத்தாய் அருமந்த பாலன் கண்டாய்!
    பண்டைவாழ்வு அவள்பெறற்குப் பகரொணுத
ஆர்அருரே இன்பம்என அடைந்தான் கண்டாய்!
    அவனியெலாம் நனிவாழ அருள்வான் கண்டாய்!
பேர்அறிவு படைத்ததனிப் பெரியோன் கண்டாய்!
    பிறற்குஎனவே வாழுபெரும் தகையோன் கண்டாய்!
ஏர்உழவே என்தொழிலென்று இசைப்பான் கண்டாய்!
    ஏர்வாடாக் கோவில்உறை எம்மான் தானே! 1

புத்திரிபாய் பெற்றெடுத்த புனிதன் கண்டாய்!
    போர்ப்பந்தர் பிறந்தருளும் பகலோன் கண்டாய்!
மெத்துபுகழ்ச் சபர்மதியில் மேயோன் கண்டாய்!
    வேற்றுஅரசை வேர்கல்ல வல்லான் கண்டாய்!
வித்தகர்க்கெல் லாம்தலைமை பூண்டான் கண்டாய்!
    மெய்த்திருவா வெந்துயரே கொண்டான் கண்டாய்!
எத்தரையும் ஈடுஎவரும் இல்லான் கண்டாய்!
    ஏர்வாடாக் கோவில்உறை எம்மான் தானே! 2

மாதவத்துக் கத்தூரி மணாளன் கண்டாய்!
    மாண்டகுணம் அத்துணையும் வாய்ந்தான் கண்டாய்!
தீதுபுரி மாக்களுமே திருந்த நீதிச்
    சீர்அறத்தை உலகுஅறியச் செய்வான் கண்டாய்!
போதம்வளர் புந்தியினார்க்கு அணியன் கண்டாய்!
    பொல்லாத மாந்தர்க்குச் சேயான் கண்டாய்!
ஏதுஅருமை என்னவினை செய்வான் கண்டாய்!
    ஏர்வாடாக் கோவில்உறை எம்மான் தானே! 3

ஆங்கிரச ஆவணி 18உ 2—9—1932

சொல்ஆரும் செய்மேனித் தோன்றல் கண்டாய்!
சுக்கிலவில் புரட்டாதி பதினெட் டாநாள்,
எல்லாரும் இன்படையப் பிறந்தான் கண்டாய்!
என்அனேயார் இடர்களைந்தே எடுத்தாட் கொண்ட
நல்லார்கள் தினம்வணங்கும் நம்பன் கண்டாய்!
நல்தவத்தால் அவனை அடை பேறு பெற்ற
இல்ஆரும் கத்தூரி தோழன் கண்டாய்!
ஏர்வாடாக் கோவில்உறை எம்மான் தானே! 4

மக்கள்அன்று வகுத்தபல சமய பேத
மாக்கடலை நனிதுருவி, மணியே போன்ற
மிக்கசெயல் பேர்அறத்தை உலகம் ஏற்க
விரித்துரைக்கும் மேதகைகொள் ஞானி கண்டாய்!
பக்கம்உளார் இவன்இன்ன மதத்தான் என்று
பளிச்சென்று காண்பதற்குப் புறத்தே தீட்டும்
எக்குறியும் திருநெற்றி இடாதான் கண்டாய்!
ஏர்வாடாக் கோவில்உறை எம்மான் தானே! 5

மன்னவர்க்கும் அஞ்சாத வலியோன் கண்டாய்!
மகாத்மனெனும் புகழ்பூண்ட வள்ளல் கண்டாய்!
அன்னைதிருப் பணிஏற்ற அதனுல் ஐயோ!
அருள்வடிவத் திருமேனி எழில்வ ருந்தப்
பன்அரிய துன்பமெலாம் வலிய ஏற்றுப்
பன்னெடுநாள் சிறையிருந்த பரமன் கண்டாய்!
என்உளத்தே குடிஏறி இருந்தான் கண்டாய்!
ஏர்வாடக் கோவில்உறை எம்மான் தானே! 6

ஓங்குகடல் உலகில்உள உயர்ந்தோர் எல்லாம்
உலகினுக்கே ஒருவன்இவன் என்னும் மேன்மைப்
பாங்கதனைப் படைத்திட்டோன் கண்டாய்! ஆனுல்,
பாரில்உயர் நாகரிகர் தாமே என்னும்
ஆங்கிலத்தார் அரசதனில் குற்றம் செய்யும்
அவர்உறையும் சிறைக்கறுப்புக் குல்லாய் கண்டாய்!
ஏங்குகின்ற ஏழையர்பங் காளன் கண்டாய்!
ஏர்வாடாக் கோவில்உறை எம்மான் தானே! 7

உள்ளத்தால் பொய்யாதே ஒழுகி ஒரும்
உலகறிஞர் உள்ளமெலாம் உள்ளான் கண்டாய்!
கள்ளத்தார் காணரிய கடலான் கண்டாய்!
கருதரிய பெருங்குணத்துக் காந்தி கண்டாய்!
பள்ளத்தே பாய்நீர்போல் அறத்தை இந்தப்
படிநிறையப் பாய்ச்சுவோன் கண்டாய்! பாபம்
எள்ளத்தீ வினைஅறுக்கும் ஏந்தல் கண்டாய்!
ஏர்வாடாக் கோவில்உறை எம்மான் தானே! 8

தென்னாப்பி ரிக்காவில் உரிமைக் காகச்
சிறையிருந்தான்! பல்உடையும் பட்டான் கண்டாய்!
அந்நாளில் எங்கள்அருந் தமிழர் செய்த
அரியபணி ஏற்றருளும் அண்ணல் கண்டாய்!
ஒன்னார்கள் கண்டுஅஞ்சும் ஒற்றைக் கத்தர்
உடுத்து,ஆடை பலசுமக்கும் ஓரார் நாட்டும்
எல்நாட்டி மீண்டபெரும் எழிலோன் கண்டாய்!
ஏர்வாடாக் கோவில்உறை எம்மான் தானே! 9

நமைஅடக்க இராணுவமே துணையாக் கொண்ட
நம்நலமே நாடி,நமை ஆள்வோர் என்போர்
தமைஉடைக்கச் சத்தியமே படையாக் கொண்டு
தனிப்பெரிய போர்வகுத்த தக்கோன் கண்டாய்!
நமைப்புரக்கும் மோகனப்பேர் நல்லோன் கண்டாய்!
நல்பொருளெ லாம்ஒன்றாத் திரண்டான் கண்டாய்!
இமயமுதல் குமரிக்குஓர் மன்னன் கண்டாய்!
ஏர்வாடாக் கோவில்உறை எம்மான் தானே! 10

# 16. சபர்மதி

## திருத்தாண்டகம்

பேர்அறிவு முகப்பொலிவில் தோன்றும் தோன்றும்!
பெரியதிரு மனம்உரையில் தோன்றும் தோன்றும்!
வீரம்உயர் பெரும்செயலில் தோன்றும் தோன்றும்!
மேதகவு யாவினுமே தோன்றும் தோன்றும்!
ஏர்ஒழுகு செம்மேனி இலங்கித் தோன்றும்!
இனியகதர் உடையொன்றே இடையில் தோன்றும்!
போர்அருமை புவிவியக்கும் புகழில் தோன்றும்!
பூவில்உயர் சபர்மதிஎம் புனித னூர்க்கே! 1

கல்நாணும் கனிந்தஉளம் தோன்றும் தோன்றும்!
கருணைபொழி இருவிழிகள் தோன்றும் தோன்றும்!
எந்நாடும் புகழும்அருந் தோற்றம் தோன்றும்!
இன்னமுதை உகுத்திடுசொல் எதிர்ந்து தோன்றும்!
ஒன்னுரை அச்சுறுத்தும் ஒழுக்கம் தோன்றும்!
உருட்டுகின்ற இராட்டின்ஒலி ஓங்கித் தோன்றும்!
பொன்னும் திருமேனி பொலிந்து தோன்றும்!
பூவில்உயர் சபர்மதிஎம் புனித னூர்க்கே. 2

அன்றுஅலர்ந்த தாமரைபோல் முகமும் தோன்றும்!
அதன்நடுவே அமுதுஅருளும் இதழும் தோன்றும்!
மின்தயங்கு வெண்முத்தம் விளங்கித் தோன்றும்!
மென்முறுவல் வீழ்ந்தபல்லின் இடையே தோன்றும்!
மன்றல்புரி கத்தூரி மருங்கு தோன்றும்!
மாதேவ தேசாயும் அருகே தோன்றும்!
பொன்தயங்கு புகழ்மேனிப் பொலிவு தோன்றும்!
பூவில்உயர் சபர்மதிஎம் புனித னூர்க்கே. 3

---

ஆங்கீரச ஆவணி 19உ 3—9—1932

மெய்ம்மணக்கும் செம்பவளத் திருவாய் தோன்றும்!
மேலைநாள் முனிவர்தவ வடிவே தோன்றும்!
கய்யில்உயர் நூல்தோன்றும்! வட்டம் தோன்றும்!
கத்தர்உடை முழங்காற்கு மேலேதோன்றும்!
மெய்யினது தூய்மையெலாம் விளங்கித் தோன்றும்!
விண்மூடு விரிந்தபெரும் புகழும் தோன்றும்!
பொய்வளரா மனத்துஅடியார் புடையே தோன்றும்!
பூவில்உயர் சபர்மதிஎம் புனித ஞூர்க்கே. 4

நாவாழப் புலவர்புகழ் வடிவு தோன்றும்!
நளினமலர் பொருவும்ஒளி முகமும் தோன்றும்!
மேவாரை வீழ்த்துகுறு நகையும் தோன்றும்!
மெல்அமிழ்தம் ஒழுகஉரை தருநாத் தோன்றும்!
ஓவாதே இராட்டுருட்டு கையும் தோன்றும்!
ஒருபெரிய கதராடை இடையும் தோன்றும்!
பூவாழ நடந்துஅருளும் அடியும் தோன்றும்!
பூவில்உயர் சபர்மதிஎம் புனித ஞூர்க்கே. 5

பேர்ஆற்றல் படைத்ததனிப் பெருமை தோன்றும்!
பேரறிவும் பெருங்குணமும் பிறங்கித் தோன்றும்!
பார்ஏத்தும் அரியஉயர் கொள்கை தோன்றும்!
படிறுஇன்மை கபடமற்ற பேச்சில் தோன்றும்!
நாரால்தம் மக்கள்உய நல்ல வாய்மை,
நாகரிகம், தண்மைஇவை படையாக் கொண்ட
போர்ஆற்றல் புவிவியக்கத் தோன்றும் தோன்றும்!
பூவில்உயர் சபர்மதிஎம் புனித ஞூர்க்கே. 6

திருமுகத்தா மரைதோன்றும்! அதிலே பூத்த
செங்கனிவாய்ச் சேதாம்பல் பூவும் தோன்றும்!
கருணைவிழிக் கருங்குவளை இரண்டு தோன்றும்!
கனிந்தசுவைத் தேன்பிலிற்றும் முல்லை தோன்றும்!
பெரியஇரு கரதலப்பங் கயங்கள் தோன்றும்!
பெருமைதரும் அடிக்கமலத் துணையும் தோன்றும்!
பொருஅரிய பூமேனி பொலிந்து தோன்றும்!
பூவில்உயர் சபர்மதிஎம் புனித ஞூர்க்கே! 7

அக்கமதில் அருள்விளங்கித் தோன்றும் தோன்றும்!
அகம்புறமும் அருந்தூய்மை தோன்றும் தோன்றும்!
எக்கணமும் புன்சிரிப்பே இலங்கித் தோன்றும்!
இனிமைதரு செய்யவாய் எழிற்சொல் தோன்றும்!
பக்கம்எலாம் மெய்யடியார் கூட்டம் தோன்றும்!
படிமுழுதும் நனிவாழும் பான்மை சூழும்,
பொக்கம்இலாத் திருவுளமே தோன்றும் தோன்றும்!
பூவில்உயர் சபர்மதிஎம் புனித ஞூர்க்கே. 8

சிறியதுஒரு கத்தர்ப்பை பக்கம் தோன்றும்!
தினம்படிக்கும் ஒருகீதை அதனுள் தோன்றும்!
மறைஎழுதும் ஒருசிறிய குச்சி தோன்றும்!
வனப்புயர்ந்த இராட்டொன்று திருமுன் தோன்றும்!
கறைஏதுவும் இல்லாத கத்தர் மாலைக்
கயிற்றுடனே கடிகாரம் ஒன்று தோன்றும்!
பொறிஅடக்கி ஆண்டபெரும் தகைமை தோன்றும்!
பூவில்உயர் சபர்மதிஎம் புனித ஞூர்க்கே. 9

பாக்கியம்ஆர் உலகம்எலாம் வாழ நீதி
பகர்அரிய பவளவாய் தோன்றும் தோன்றும்!
ஊக்கம்நிறை ஓயாத சிரிப்பு மூரல்
உடைவினிடை ஒளிவீசி ஓங்கித் தோன்றும்!
மூக்கில்அணி காம்புடைக்கண் ணாடி தோன்றும்!
மொய்ம்புஎழிலார் சிறியதவ வடிவு தோன்றும்!
போக்குஅரிய தொல்அறத்தின் புதுமை தோன்றும்!
பூவில்உயர் சபர்மதிஎம் புனித ஞூர்க்கே. 10

# 17. கடவுளை வேண்டல்

## அறுசீர் விருத்தம்

உலகம்எலாம் படைத்தாய்நீ! உலகம்எலாம்
உள்ளாய்நீ! உலகில் உள்ள
அலகில்பொருள் அனைத்தையுமே ஆக்கினை நீ!
உலகுயிரை ஆட்டு விக்கும்
புலமுழுதும் நீ!என்பது உண்மைஎனில்,
கடவுளே! பொருவில் உன்னல்
தலைமகன்எம் காந்திஎனும் தண்ணளியின்
உயிர்புரக்கத் தவறி டாதே. 1

ஆற்றல்என்பர்; சக்திஎன்பர்; வலிமைஎன்றும்
அறைந்திடுவர்; அன்னே! உன்னை;
ஏற்றம்இழிவு இல்லாமல் எல்லோரும்
சமம்பெறவே எண்ணி, ஈடில்
சாற்றஅரிய பெருமையுடைத் தன்னுயிரும்
கொடுப்பதற்குச் சமைந்தான் காந்தி!
போற்றிஅவன் உயிர்காவாது ஒழிந்துபழி
பூணுதே; பொருஇல் தாயே! 2

"உடல்ஈவேன்; பொருள்ஈவேன்; உயிரினையும்
ஈந்திடுவேன்;" என்று பல்லோர்
மடமடஎன வழுத்திடுவார் வாயதனுல்;
செய்கைக்கு வாரார் அன்னுர்;
திடம்உடைய சீர்க்காந்தி செப்புமொழி
தப்பாதான்; தெய்வதங்காள்!
உடன்எழுந்துஅவ் உத்தமனின் உளமுடித்தே
உயிர்காப்பீர்! உயிர்காப் பீரே! 3

ஆங்கீரச புரட்டாதி 1௳ 16—9—1932

மண்ணில்நிகர் இல்லாத பாரதநல்
மாதாவே! மணியே போன்ற
எண்ணில்புகழ்ச் சான்றோரை ஈன்றனை,பண்டு,
ஆனாலும், ஈடி லாத
திண்ணம்உடைக் காந்தியைப்போல் பெற்றனையோ!
மூடர்புரி தீண்டா மைக்கா
அண்ணல்உயிர் விடநீதான் ஆற்றுவையோ!
தாயே!நீ அருளில் லாயோ? 4

பொறுமைதனில் நிகர்இல்லாய் நீயென்பர்
புலவர்எலாம்; பூமி தேவி!
அறியாமைப் படுகுழியில் வீழ்ந்திடுவோர்,
பாபங்கள் அனைத்தும் செய்வோர்,
குறையாளர், யாவரையும் சுமக்கின்ற
நீ,எங்கள் கோதி லாத
இறைகாந்தி பேர்ஒளிகொள் சிற்றுருவப்
பொறைஇழக்க இசைவாய் கொல்லோ! 5

நிலவுஅருளும் தண்சுடரே! நிலம்விளக்கும்
செங்கதிரே! நீவீர் எண்ணில்
பலகோடி நாளாஇவ் உலகறிவீர்;
என்றேனும் பரந்த இந்தத்
தலம்அதனில் தண்ணளியார் காந்திநிகர்
சான்றோனைக் கண்டது உண்டோ!
உலகுஅறிய உரைத்துஅன்னோன் உயிர்காப்பீர்!
தருணம்இது! உறங்கல் செய்யீர்! 6

மாநிலமே! வாள்எரியே! வருகாற்றே!
வயங்குபுகழ் வானே! நீரே!
மேல்நிலத்தின் வரைஉயர்ந்து விளங்குகின்ற
பெருமலைகாள்! மேலோர் போற்றும்
கானில்உறை பறவைகாள்! கடுவிலங்கீர்!
பெருமரங்காள்! ககனம் வாழும்
மீன்இனங்காள்! இருசுடர்காள்! காந்திஉயிர்
காப்பதற்கு மேவீர் கூடி! 7

அம்பலத்தே ஆடிடுவாய்; அரங்கத்தே
தனிகிடப்பாய்; என்பார் உன்னை!
நம்பிடுவார் துயர்களைவாய் என்றிடுவார்;
நல்அடியார் உள்ளம் என்னும்
செம்பதுமக் கோவில்உறை தேவே!தீத்
தீண்டாமை வேர்அறுக்கும்
எம்பெருமான் காந்திஎனும் இந்தியர்நல்
உயிர்புரப்பாய்! ஈசா! ஈசா! 8

காந்திஉயிர் காவேயேல், கடல்உலகம்
இன்றுவரைக் கண்டிடாத
சேர்ந்தபழி பூண்பாய்நீ! தேவே!'நீ
இல்லை'எனச் செப்புகின்ற
மாந்தரும்'நீ இருக்கின்றாய்' எனத்தெளிய
மனங்கொண்டாய் ஆனால், எங்கள்
சாந்தகுணப் பெருங்கடலைத் தலத்தில்உயர்
தனிப்பொருளைக் காப்பாய்! காப்பாய்! 9

உலகுயிர்கள் தொறும்கலந்தே உறைகின்ற
ஒருபொருளே! ஒருவன் இந்தத்
தலம்அதற்கே எனும்பெரியான்; சத்தியமே
கமழ்வாயான்; சாந்தம் என்னும்
அலகில்குணக் குன்றுஅனையான்; அருள்அன்றி
அறியாதான்; அறமே செய்வான்;
கலைமுழுதும் நனிஉணர்ந்தான்; காந்திஅவன்
ஆர்உயிரைக் காவாய்! காவாய்! 10

குறிப்பு:— கடவுளை வேண்டல் என்னும் தலைப்பின் கீழுள்ள இப் பாக்கள் காந்தியடிகள், தீண்டாதார் எனப்படுவோர் தனித்தொகுதி முறை ஒழிப்பான் கருதி, உண்ணாவிரதங் கொண்டு உயிர் விடவும் முன்னின்றதை முன்னிட்டுப் பாடப்பெற்றவை.

# 18. உண்ணாவிரத முடிவு

## அறுசீர் விருத்தம்

*பெரியோர்கள் திருவுள்ளம் பிழையாதுஎன்று*
*உலகுஉணரப் பிறங்கக் காட்டும்*
*அரியோனே! 'தீண்டாதார் பிரிவுமுறை*
*அகற்றீரேல் வாழேன்' என்றே*
*உரைகூறி, உண்ணாமை மேற்கொண்டு,*
*நாடுஎல்லாம் ஒன்று கூடிச்*
*சரிதான்என் றிட,வெற்றி சார்காந்தி!*
*பல்லாண்டு தலத்தில் வாழ்க!* 1

*"செயற்கரிய செய்வர்பெரி யார்" என்னப்*
*புலவர்பிரான் செப்பும் உண்மை,*
*மயக்கம்அற உலகுணரக் காட்டினை நீ!*
*மாகாந்தி! மண்ணின் மீது*
*தயக்கம்இன்றிக் கொள்கைக்காகச் சத்தியங்கொண்டு*
*உயிர்விடவும் சமைந்த சான்றோர்*
*சயக்கொடிநாட் டிடுவர்இதில் சற்றும்ஐயம்*
*இல்லைஎனல் சரியே அன்றோ?* 2

*அரியவினை யாதுஒன்றும் அவனியிலே*
*நினக்குஇல்லை! ஐயா! யாரும்*
*கருதரிய காரியத்தைக் கடிதினில்நீ*
*முடித்திட்டாய் காந்தி வள்ளால்!*
*பெரியஅர சாங்கத்தார் பெரிதுஆய்ந்து*
*முடித்தசெயல் பிளப்பது என்பது*
*அரிது!அரிது! அறவடிவாய் அவதரித்த*
*நினக்குஅன்றி யார்க்கும் அம்மா!* 3

ஆங்கீரச புரட்டாதி 15உ 30—9—1932

யார்வல்லார் ஆங்கிலத்தார் செய்தமுடிவு
அதைமாற்ற; அறமே பூண்ட
போர்வல்லாய்! புண்ணியனே! போர்ப்பந்தர்
பிறந்துஅருளும் புனித வாழ்வே!
பார்வல்ல மன்னவர்க்கும் பன்னரிய
செய்கைதனைப் படைஇ லாத
நார்வல்ல சிற்றுருவம் நண்ணுவித்தல்
காட்டினை நீ! நல்பு விக்கே! 4

மண்முழுதும் தனிஆளும் மன்னவர்க்கும்
ஆகாத வலிமை எல்லாம்
உள்நிறைய ஒளிபெருக்கி ஊன்ஒடுக்கிப்
புலனைஎலாம் ஒல்லும் ஆற்றல்
கண்அடக்கி மற்றவர்க்கே கடல்உலகில்
வாழுபெருங் கவின்அ மைந்த
எண்அறிஞர்க்கு எளிதெனஇன்று எல்லவர்க்கும்
காட்டினை நீ! எந்தாய் காந்தி! 5

தொடத்தகார் எனச்சொல்லும் நம்அரிய
துணைவர்தனின் தொகுதி, நாட்டைக்
கெடுத்திடும்;அச் சோதரரைக் கீழ்நிலைநின்று
உயர்த்தாது; கீழ்மேல் என்னும்
மடத்தைஅறப் போக்காது; வளர்த்திடும்மேல்
மேலும்,என மனத்துள் கொண்டு
திடத்துடன்நல் உயிர்விடவும் துணிந்துநின்று
சிறந்தவெற்றி சேர்ந்தாய் காந்தி! 6

வாய்கொண்ட மட்டும்தீண் டாதார்க்கே
வாழ்கின்றோம் என்று பல்லோர்
பேய்கொண்டார் போல்மேடைப் பேச்சிடுவார்!
செய்கைஎனில் பின்னே போவார்!
தாய்கொண்ட தளைநீக்கத் தனிச்சிறையைச்
சார்ந்தோனே! தீண்டா தார்க்கா
நீகொண்ட செயல்மறைக்க நிலத்தில்இனி
எவர்க்குஒண்ணும்? நேயக் காந்தி! 7

கோயிலிலே நுழைஉரிமை தீண்டார்க்கு
வேண்டும்எனக் கூட்டம் கூடி
வாய்அதனால் வகுத்துஉரைப்பார்! மாபெரிய
தீர்மானம் வரைவார்! ஆனால்,
ஏயசெயல் ஒன்றுஆற்றார்! இடர்என்றால்
ஓடிடுவார்! ஏந்தால்! நின்போல்
நேயம்உளார்க்கு அல்லாமல் நேர்வெற்றி
பெறல்எளிதோ? நீள்சீர்க் காந்தி! 8

நினக்குஅரிய செயல்இந்த நிலத்தில்இலை;
பிறர்வாழ்வே நிதம்வி ரும்பு,என்
மனக்குஇனிய மாமணியே! மாத்துமப்பேர்
வாய்த்தபுகழ் வள்ள லே!நம்
வனப்புஉடைய பாரதத்தாய் மணிமுடிபெற்று
அரசாள்நாள் சேணில் இல்லை;
தனக்குஎன,வா ழார்நினைப்புச் சமைந்திடுதல்
சரதம்;இதில் தடையும் உண்டோ! 9

மண்அனைத்தும் அறம்பெருகி மக்கள்எலாம்
வாழுதற்கும் மண்ம கட்குக்
கண்அனைய பாரதத்தாய் கைத்தளைபோய்ப்
பண்டைநாள் கவின்அ டைந்தே
எண்உடைய முடிசூடி இனியஅரசு
எய்துதற்கும் இந்நி லத்தில்
தண்ணளியே சார்ந்தொழுகு தனிக்காந்தி!
பல்லாண்டு தழைத்து வாழ்க! 10

குறிப்பு:— உண்ணா விரதத்தை வெற்றிகரமாக முடித்த பிறகு இப்பதிகம் பாடப்பட்டது

# 19. சிறை வாழ்வு

### எண்சீர் விருத்தம்

பெற்றுஎடுத்த தாய்நாட்டின் தொண்டு பூணல்
பெரியகடன் ஆனாலும், பெரியோய்! காந்தி!
நல்தவம்செய் நீதலைமை ஏற்றுப் பண்டை
நாளில்இலாப் புதுமுறையில் நடத்தாய் என்னில்,
கற்றவரும் மற்றவரும் இன்ப வாழ்வின்
கரைகண்ட திருவினரும் சிறைக்கூ டத்தைப்
பற்றிஇருந்து ஒழுகிஅங்குப் பற்பல் துன்பம்
பட்டுஅடங்கிக் கிடத்தல்இந்தப் பாரில் உண்டோ! 1

எத்தரையும் ஈடுஇல்லா இந்த நாட்டை,
ஏனோர்கை மீட்டல்கடன் எனினும், ஐயா!
மெய்த்தலைமை நீபூண்டு சமர்மு கத்தில்
மேலவனே! நின்றுதனி நடத்தாய் என்னில்,
மெத்தையினில் கண்வளர்ந்த மேலோர் எல்லாம்
மிதிப்பதற்கும் தகுதியிலாக் கயிற்றுப் பாயில்
கைத்தலைக்கு வைத்துஉறங்கும் காட்சி ஒன்று
கனவினிலும் காண்பதுவோ காந்தி வள்ளால்! 2

மட்டில்புகழ்ப் பாரதத்தாய் விலங்கு போக்கல்
மக்கள்கடன் ஆனாலும் வள்ள லே!நீ
கிட்டி,அறங் கொண்டதுஒரு போர்வ குத்து,இக்
கிழப்பருவம் தனில்முகத்து நில்லாய் என்னில்,
கட்டிலின்மேல், பூஅணையில், தென்றல் உண்டு,
கவின்உயர்ந்த மாளிகையில் துயின்றோர் எல்லாம்
எட்டுஅடிகொள் சிற்றறையில் பூட்டப்பட்டே
இருள்கிடத்தல் நிலத்துஉண்டோ ஏந்தால் காந்தி! 3

ஆங்கீரச-புரட்டாதி-22உ 7—10—1932

கொத்தடிமை நீக்குதற்கு முயலல் இந்தக்
குவலயத்தில் எல்லவர்க்கும் கடன்என் ருலும்,
புத்திரியாய் பெற்றெடுத்த புனிதக் காந்திப்
புண்ணியனே! நீதலைமை பூணுய் என்னில்,
புத்துஉருக்கு நெய்அன்றி வேறு காணுப்
பொருவுஅரிய பெருவாழ்க்கை பூண்டோர் எல்லாம்
கைத்துணை,எண் ணெயும்அறியா மிடிகூர் வாழ்வைக்
கடனுகக் கருதிடுதல் தரையில் உண்டோ! 4

சாற்றஅரிய பெருமைஉடைத் தாய்வி லங்கைத்
தகர்த்தல்கடன் ஆனுலும், சான்ருேய் காந்தி!
ஆற்றல்நிறை அருந்தவமே உருவெ டுத்த
அந்தண!நீ அமர்த்தலைமை அடையாய் என்னில்,
பாற்கடலும் தயிர்க்கடலும் பருகி வாழ்ந்த
பாங்குடைய மக்கள்எலாம், பரிய துன்பம்
ஏற்று,எளிய துளிமோரும் அறியா வாழ்க்கை
இயைந்திடுதல் நினைப்பதற்கும் எளிய தாமோ! 5

மகவுபல ஈன்றுபெரும் புகழ்அ டைந்த
மாதாவின் துயர்களைதல் கடன்என் ருலும்,
தகவுடையாய்! சபர்மதிஎம் தவமே! காந்தித்
தண்ணளியே! தலைமைநீ தாங்காய் என்னில்,
வகை,வகையாச் சுவைமிக்க உணவுஅ ருந்தி
வாழ்ந்தஉயர் மக்கள்பலர் சிறைக்கூ டத்தில்
மிகஎளிய புளிச்சாற்றில் குழைத்துச் சோற்றை
விழுங்கிஉயிர் வாழ்ந்திடுதல் உண்டோ! உண்டோ!! 6

சிறைப்பட்ட தாய்நாட்டை மீட்டல், மக்கள்
சிறந்தகடன் ஆனுலும், சீரார் காந்தி!
அறப்பெரிய அமரர்ஒன்றை அரிதிற் கண்டே
அதன்தலைமை நீபூணுய் ஆனுல்; ஐயா!
குறிப்புஅறிந்து பணிஆற்ற அருகே காத்துக்
கொண்டுநிற்கும் வினைஆட்கள் பலரை ஆளும்
பொறுப்புடையார், சிறைநடத்தும் கடமை பூண்ட
புன்மனித்தர் கீழ்இருத்தல் புவியில் உண்டோ! 7

மூன்உலகின் முடிமணியாய் மிளிர்ந்த தாயின்
மூண்டபிணி போக்கிடுதல் கடன்என் றாலும்,
தன்நிகர்நீ தலைநின்று நடத்தாய் என்னில்,
சபர்மதிவாழ் தவமுடைய காந்தி வள்ளால்!
மன்னவர்போல் பெருவாழ்வு வாழ்ந்து உயர்ந்த
மதிநிறைந்த புகழுடைய மக்கள் எல்லாம்
புன்சிறையுள் செயல்இழந்து, துன்பம் பூண்டு,
பூட்டுஅறையில் கிடந்திடுதல் பூவில் உண்டோ! 8

அருமைஉடை அன்னைக்கு வாழ்வு நல்கல்
அறிஞர்கடன் ஆனாலும், அவனிக்கு எல்லாம்
பெரியவன்என்று உலகுபுகழ் பெரியோய்! காந்தி!
பெருந்தலைமை பெற்றேநீ பிறங்காய் என்னில்,
பிரிவுஅறியாக் காதல்புரி துணைபி ரிந்து,
பெருவாழ்வை அறமறந்து, பெரியோர் பல்லோர்
இருளுசிறை எளிமைஉடைச் சிறிய வாழ்வை
இனிதுஎனக்கொண் டிடுதல்இந்தத் தலத்தில் உண்டோ! 9

பொறைஉடைய இந்தியத்தாய் துயர்து டைத்தல்
புதல்வர்கடன் ஆனாலும், புலவர் போற்றும்
நிறைஉடையாய்! நீண்டபுகழ் நேயக் காந்தி!
நீதலைமை பூண்டுபோர் நிகழத்தாய் என்னில்,
கறைஉடையார் தமக்காகக் காணப் பட்ட
காவல்அமை வறட்டுமலை சூழ்ந்த வேலூர்ச்
சிறையதனில் சிற்றறையில் இருந்து, ராய.
சொக்கலிங்கன் இப்பதிகம் சொல்லல் உண்டோ! 10

# 20. காந்தித் திருப்புகழ்

தனனு தனத்த தனனு தனத்த
தனனு தனத்த தனதானு

பெரியோய் அறத்தை உலகோர்க் கருத்து
பெருநேர் பிடித்த பெருமானே!
பிழையோர் மிடுக்கை அடியோ டறுத்தல்
புரிவான் அறங்கள் புகல்வோனே!
தருவார் மணிக்கை உறுதாய் விலங்கு
தகர்வான் சிறைக்குள் உறைவோனே!
தனைநேர் தலத்தில் இலரே எனச்சொல்
தகுவாய் மைபெற்ற அதிதீரா!
திருவே எழில்புத் திரிபாய் பயந்த
சிறுவா! புவிக்குப் பெரியோனே!
திகழ்கா தலுற்றுன் உடன்வாழ் நறுங்கத்
தூரிமான் சிறந்த மணவாளா!
தரைகா தலிக்கும் வடிவே! கருத்தில்
வளர்வாய் சகத்தின் குருநாதா!
தமியேன் தனைச்செந் நெறியே செலுத்து
தவமோ கனென்னும் பெருமாளே! 1

தான தந்தன தானு தனுதன
தான தந்தன தானு தனுதன
தான தந்தன தானு தனுதன தனதான

பூத லத்துயர் சீலா நமோநம
போகம் விட்டருள் நாதா நமோநம
போதம் மிக்கசெங் கோவே நமோநம புகழ்சேரும்
மாது புத்திரி பாலா நமோநம
மாத வத்துரு வானுய் நமோநம
மாது யர்க்குடல் ஈவாய் நமோநம மணமாரும்
தீதில் கத்தூரி தேவா நமோநம
தேச மக்களின் சாமீ நமோநம
தீயர் தம்மையும் ஆள்வாய் நமோநம செகவாழ்வை
மோது வித்தக ஞானீ நமோநம
மூடு மெய்ப்புகழ் வாழ்வே நமோநம
மோக னப்பெயர்க் காந்தீ நமோநம பெருமாளே!. 2

ஆங்கீரச- புரட்டாதி 29உ 14—10—1932

தாந்தா தாத்தன தனதான

சீர்சேர் வாழ்வது நமைஈன்ற
தீந்தா யார்பெற உறநாடி
நார்கூர் ஓர்பெரும் அறப்போரை
நாட்ட ார் சேர்வகை நனிகண்டே
தார்வேய்ந் தேர்க்களந் தனில்முன்னே
தான்போய் மாற்றலர் தவமேற்ற
ஏர்வா டாச்சிறை தனில்மேய
ஏர்சேர் காந்திஎம் பெருமானே! 3

தனதன தத்த தனத்த தானன
தனதன தத்த தனத்த தானன
தனதன தத்த தனத்த தானன தனதான

புலையரெ னச்சொல் உலுத்தர் வீணர்கள்
புலையயு டைத்துப் பிறப்பி னுலுறு
புலைமைகி ளத்தல் அறுக்கு சீருறு புலவோனே!
கலகல என்னப் பலப்பல் பேசிடு
பலருறை இந்த நிலத்தில் வீணொரு
சிலசொலு மின்றிச் செலுத்து காரியக் குருநாதா!
அலைகடல் உற்ற தலத்தில் யாவரும்
அருளொட றத்தை அகத்தி லேகொள
அரிதினு ரைக்கும் அறத்தின் பேருரு அடைகோவே!
மலையொடு மண்விண் அனைத்து மாறினும்
நிலைகுலை வின்றி உரத்தி னூடுறு
மனமதி லென்றும் இருக்கு மோகனப் பெருமாளே! 4

தானன தானத் தனதான

காதலில் ஏல அறிவாளர்
காசினி வீசு பெருங்கீர்த்தி
ஓதிட வாழும் உரவோனே!
ஓருரு வாக அறம்வாய்மை
ஆதிய யாவும் திரண்டோனே!
ஆதரம் பூமிக்கு ஆவோனே!
ஏதமில் நாத அருங்காந்தி
ஏழைபங் காளப் பெருமாளே! 5

தனதான தந்த தனதான தந்த
தனதான தந்த தனதான

முனைநாளு யர்ந்த முடிசூடி மண்ணின்
முழுதீட ழித்துத் தரையாண்ட
மொழியால டக்க முடியாத நன்மை
யொடுவாழ்ந்து யர்ந்த புகழ்சேர்ந்த
அனைதீங்க டைந்தின் றயலார்கை சிக்கி
அருவாழ்வி ழந்து பிணியாதி
அவமான முற்றும் அவள்கீர்த்தி மக்கள்
அடைகீழ்மை தன்னை அடியோடு
நனிபோக்கி நண்ணும் உலகோடு நல்ல
நவமாக உற்ற நடையாவும்
நமர்தாங்கக் கட்டு தளைபோக்கி ஒப்பில்
நமதாவி யன்ன தனிஅன்னை
இனமான செம்பொன் மணியார்ந்த ரத்ன
எழிலார்சி றந்த அரிதாங்கும்
இரும்பீடந் தன்னில் முடிதாங்கி நிற்க
இயைகாந்தி வள்ளற் பெருமானே! 6

தான தனதன தான தனதன
தான தனதன தனதான

ஞால முழுவது நாடி உயரிய
நாதன் இவனெனும் அரியோனே!
ஞானம் உடையவ! மான முடனம
நாடு தனைஅருள் உரவோனே!
சீலம் இதுஎன ஏலஉரைதரு
தேவ! வினைபுரி திறலோனே!
தேச விடுதலை நாடு செயலது
தீதில் அறமென அறிவோனே!
பாலை அமுதொடு தேனை எழிலுறு
பாவை உறுதமிழ் அதையாழைப்
பாடு கிளியினை வேயி னொலியோடு
பாகை நகுமொழி பகர்வோனே!
காலை எழுமொரு சூரி யனைநிகர்
காந்தி அடியவர் பெருவாழ்வே!
காத லுடையகத் தூரி கணவநற்
காசில் உளமுறை பெருமானே! 7

தனனதன தான தனனதன தான
தனனதன தான தனதான

சபர்மதியில் வாழும் அறவடிவ மான
தனிநிகரி லாத பெருமாள்காண்

தரைபுகழு சீல நிறைஅறிய ஞானத்
தவமுதல்வ னான பெருமாள்காண்

அபமெதுமி ருத அருளொழுகு மேனி
அமுதுகுசொல் ஆளு பெருமாள்காண்

அவனிதனில் யாரும் இணைஉயர்வி லாத
அரியபணி மேவு பெருமாள்காண்

சபைமகிழப் பேசு பெருமையுடை யோரும்
தலைவணங்கு சீர்த்திப் பெருமாள்காண்

தனைஉதவு நாடு தனைஉயர்த்தற் காவி
தருசலிப்பி லாத பெருமாள்காண்

இபமரிக ளான எதிர்பொருத போதும்
இடிவரினும் மோது பெருமாள்காண்

இமயமலை ஆதி குமரிமுனை காறும்
இருக்குமொரு காந்திப் பெருமாளே! 8

தானன தத்தன தத்தன தத்தன
தானன தத்தன தத்தன தத்தன
தானன தத்தன தத்தன தத்தன தனதான

மாமல ருற்றிடு கந்தம தொத்தவர்
வாழுட லிற்செறி நல்லுயி ரொத்தவர்
மாதசை தன்னொடு மன்நக மொத்தவர் மதியாளர்

வாதுசெய் தெய்த்திடு சொற்பொரு ளொத்தவர்
மாகரும் புள்ளுறை இன்சுவை யொத்தவர்
வாளெரி கட்டையில் ஒத்தவ ரெள்ளினி லுறுமெண்ணெய்

ஆமென வுற்றவர் நன்மணி யுள்ளொளி
ஆனவர் நற்பசு தெள்ளமு திற்படு
ஆநெயை ஒத்தவர் அன்பினில் இத்தரை தனில்வாழும்

யாருநி கர்க்கலர் புன்பிரி வென்னுரை
யாதெனக் கண்டிலர் சிந்தைம கிழ்ந்துநல்
லாதர வுற்றுநல் இல்லின றந்தனில் வழுவாத

காமனை ஒத்திடு கட்டழ குற்றவர்
காதல றப்புரி நற்றவ முற்றவர்
கானம யிற்குலந் தன்னையு டைத்திடு கவினுர்ந்த

காதள வுற்றக ருங்கயல் நல்விழிக்
காமர்வ ளைக்கரத் திங்களு தற்சிறு
காசணி எற்குழல் கண்டனை சொற்பகர் இளமாதர்

தாமொரு நற்றுணை தன்பிரி வெய்திநல்
தாயொடு மக்கள்சுற் றம்பிரிந் தின்பதைத்
தான்மறந் திட்டிடர்ப் பட்டிருட் புன்சிறை தனைமேவத்

தாவிலன் பிற்புரி தண்ணளி கொண்டநற்
தாய்தனை கொன்றிடு சத்யச பர்மதி
சார்தவ முற்றிடு பெற்றிநல் வெற்றிகொள் பெருமாளே. 9

தந்தா தனந்த தந்தா தனந்த
தந்தா தனந்த தனதாளு

எந்தாய் சிறந்த மைந்தோ டுயர்ந்த
என்றே னுமெங்கும் இணைநேரா

இந்தூ டுசென்ற சிந்தா வளம்பொன்
என்னு கனின்றும் இழிகங்கைப்

பைந்தார் அணிந்து செந்தா தொளிர்ந்த
பண்பா ருசிங்க அணைமீதே

பண்பா டவண்டு நின்ரு டமஞ்ஞை
பைங்கோ லநந்தூர் பழனஞ்சூழ்

நந்தாய் அமர்ந்து சிந்தா குலந்துன்
பம்தீங் ககன்று நவைதீர

நன்றேய்ந் தெழுந்து தன்னோர் அகன்று
நந்தா தொளிர்ந்தின் றுயர்வெய்த

வந்தாய் மணின்று நொந்தார் துலங்க
வண்டேர் அரும்புத் திரிபாயின்

மைந்தா! அறங்கள் நின்ரேங் கவந்த
மன்மோ கனென்னும் பெருமாளே! 10

# 21. திருப்பணி

## காவடிச் சிந்து

பாரதமா தா,தவத்தின்
பாக்கியமா வந்தகாந்திப்
பண்ணவன்சீர் உள்ளமதிற் கொண்டு—சீலன்
பகருமெழில் நல்லறத்தைக் கண்டு—நல்ல

பண்புடைஅன் னுனடிக்கீழ்த்
தொண்டுசெய்து நிற்பினிந்தப்
பார்புகழும் சீரியவாழ் வுண்டு—தாய்
பண்டையினும் மேம்படுதல் உண்டு. 1

இந்தியர்க்கு வாழ்வளிக்க
வந்தஉயர் காந்திமகான்
இந்நிலத்தில் ஈடிலாத சீலன்—தவம்
ஏய்ந்திடுநற் புத்திரிபாய் பாலன்—துணை

என்ன,இணை பேறுபெற்ற
நன்னயக்கத் தூரிதனை
இல்லறக்கா தலியாக்கொள் கோலன்—மறம்
எனுமரக்கன் உயிர்குடிக்கும் காலன். 2

தான்பிறந்த நாடுயரச்
சத்தியநற் காந்திமகான்
தண்ணளியே ஒருருவா வந்தான்—கடுந்
தாங்கரிய இன்னலுமு கந்தான்—புகழ்த்

தாய்பயந்த மக்களைத்தீண்
டாரெனவே ஓர்குழுவார்
சாற்றுசெயல் கண்டுமிக நொந்தான்—அவர்
தாம்புரியும் தீமைக்குஉளம் வெந்தான். 3

---

*ஆங்கீரச ஐப்பசி 12, 28—10—1932*

பாங்குடைய பாரதத்தாய்
பெற்றெடுத்த காந்திஎழிற்
பாதமலர் மாமுடியிற் சூடி—அவன்
பகருமொரு பேரறத்தை நாடி—இந்தப்

பார்மகட்கு மணிமுடியாப்
பண்டிலங்கி இன்று,துயர்ப்
பட்டிடும்நம் அன்னை விலங்காடி—விழும
பரிசுபுரி வீர்விரைவில் ஓடி. 4

அன்புபொறை மெய்கருணை
அறிவுசாந்தம் புனிதநீர்மை
அத்துணையும் ஒருருவா நின்றான்—நாடு
அரசுபெறப் பெருஞ்சிறையுள் சென்றான்—உயர்

அன்னைபணி தன்னைவிடப்
பின்னோர் கடன்இல்லையென
ஆயுமறி ஞர்கொளந வின்றான்—காந்தி
ஐம்புலனும் நன்றடக்கி வென்றான். 5

சாந்தமொழி தான்தருவான்
சத்தியமே சாற்றிடுவான்
தண்ணளியே கொண்டஉயர் காந்தி—எங்கும்
தன்னிகரி லாப்புகழை மாந்தி—கடல்

தத்தளிப்போர்க் கரைசெலுத்தும்
சார்புணைபோல் அப்பெரியோன்
தகுமறத்தை உள்ளமதில் ஏந்தி—துயர்த்
தனிக்கடலைக் கடந்திடலாம் நீந்தி. 6

தாயரசு பெற்றுலகில்
சமநிலைமை யெய்திஅரி
தாங்குமொரு பேரணையைச் சார்ந்து—மணி
தங்குமொளி மாமுடியை ஆர்ந்து—பெருந்

தரைவியக்கக் கொலுவிருந்து
முன்னையினும் பன்மடங்கு
தன்பெரிய நல்லறைத்தை ஊர்ந்து—புவி
தான்புகழச் செய்திடுவீர் ஓர்ந்து. 7

துன்பெதுவும் மற்றவர்க்குச்
சூழலறம் அல்லவெனும்
துணிவதனுல் உலகுபிணி நாரை—நிலம்
தோன்றியநாள் தொட்டிலாத சீரை—எதிர்

துன்னிஅடிப் போர்தடிகள்
சுக்கல்சுக்கல் ஆமளவும்
தொண்டரடி பட்டுநிற்கும் ஏரை—காந்தி
தோற்றுவித்தான் புதியதொரு போரை. 8

முன்னம்உல கம்மதிக்கும்
மூதறிவி ளுேடுயர்ச்சி
மொய்ம்புசெறி வீரமக்கள் தம்மை—பெற்ருள்
முதுமையுடைப் பாரதநம் அம்மை—அன்ஞர்

முழுப்புவியும் ஆய்ந்துபெரி
யோனிவனென் றியாவருஞ்சொல்
மோகனன்போல் ஆண்டதுண்டோ நம்மை—அவன்
மூண்டஒளிப் பேர்சொலிற்போம் வெம்மை 9

தீண்டாமை நோயதனைத்
தொலைப்பதற்குத் தனித்தொகுதி
தேர்ந்தமுறை அன்றெனும்நல் லுண்மை— கண்டு
சேருமுயிர் தந்திடநில் வண்மை—உயர்

செய்கைநனி கண்டுதெளி
வெய்திஉல கம்முழுதும்
செப்புமொரு காந்திஉருத் தண்மை—அறம்
செய்பவர்க்கே அவ்வடிவம் அண்மை. 10

# 22. தீண்டாமை

### கண்ணிப்பா

மக்கட் பிறப்பினுளே—உடலால்
மயங்கி மாறுகொண்டு
தக்க தகாததுஓராது—உயர்வு
தாழ்வு பலகூறிப்
பக்கம் ஒருகுழுவார்—வரினும்
பாவம் எனும்மடமை
ஒக்கத் தொலைப்பதற்குக்—காந்தி
உற்பவித் தான்புவியில். 1

இந்தியத் தாய்வயிற்றில்—பிறந்த
ஏழைச் சகோதரரைச்
சொந்த உரிமைஎலாம்—இழக்கச்
சொல்லி அடிகொடுமை
இந்தத் தரையில்இலாது—இறக்க
ஏலும் செயல்புரிய
வந்துஉதித் தான்காந்தி—உயிரும்
மதியாது உதவநின்றான். 2

புலையர் என்றபெயர்—கொடுத்துப்
பூவில் அவர்இழிந்தோர்
நலம்அ வர்க்கிலைஎம்—பொருட்டு
நாயடி மைதவிர
இலைஅ வர்க்குரிமை—எனச்சொல்
இழிந்த மெய்ப்புலையர்
நிலைஅ றுத்திடவே—பிறந்தான்
நீண்டபு கழ்க்காந்தி. 3

ஆங்கீரச ஐப்பசி 23, 8—11—1932

சிறையின் உள்ளிருந்தே—அறியார்
தீண்டத் தகாரெனவே
அறையும் புன்மைதனை—அகற்ற
அரிய செய்கைபல
குறையி லாவகையில்—புரிந்தான
கூர்ஜர மண்புரிந்த
நிறைத வப்பயனுல்—பிறந்த
நேர்மை செறிகாந்தி. 4

கோவில் தனில்பறையர்—எனச்சொல்
கூட்டத் தவரைவிடல்
பாவம் எனவறியார்—உரைத்துப்
பற்பல நாளாக
மேவும் அவர்உரிமை—பறித்து
விரட்டு தீயபெரும்
பாவ வினைஅறுக்கப்—பிறந்தான்
பண்ணவன் எம்காந்தி. 5

ஏமம் அமைந்தபெருஞ்—சிறையுள்
இருந்தும் தீண்டாரென்
நாமம் அமைந்திடுநம்—துணைவர்
நலமே சிந்தைசெய்து
பாமரர் பண்டிதரென்—பகரும்
பற்பலர்த் தாங்குமிந்தப்
பூமி திடுக்கிடவே—காந்தி
பூண்டனன் ஓர்விரதம். 6

இந்திய நாட்டினிலே—தனக்கு
எத்துணை செல்வாக்கென்
எந்த உலகினரும்—மலையில்
இட்டவி ளக்கினைப்போல்
சிந்தை நனிதெளியப்—புரிந்தான்
சிறைத னில்இருந்தே
நொந்திடு தீண்டாரென்—நுவல்வோர்
நோவுஅகற் றுங்காந்தி. 7

தீண்டா தார்பொருட்டே—நாங்கள்
செகத்திற் பிறந்தோமென்
வேண்டுமட் டும்வாயால்—விரித்து
விளம்பு வார்பல்லோர்
மூண்ட செயல்ஒன்றும்—அவரால்
முடியக் கண்டதில்லை!
ஆண்தகை நாவசைத்தான்—அம்மவோ!
அதன்ப யன்சிறிதோ! 8

உண்மை உறுதிகொண்டார்க்கு—உலகில்
ஒன்றும்ஆ காதது இல்லை!
திண்மை உடைக்காந்தி—கைதியாச்
சிறைத னில்இருந்தே
உண்மை யுடன்மொழிந்தான்—அதுதான்
ஊடுரு விப்பாய்ந்தே
எண்மைக் கோவில்பல—திறந்தே
இன்பம் பலர்க்குஈந்த. 9

வேந்தி யல்உரிமை—பெறவே
வீழ்ந்து சிறைபோந்த
காந்தி தன்பெரிய—அரிய
கடமை தீண்டாரென்
மாந்தர் வாழ்வுபெறல்—எனவே
மனத்துள் கொண்டுஆவி
ஈந்தி டவும்நின்ற—செயலை
ஏவர் போற்றாதார்! 10

# 23. தாலாட்டு

### பாயிரம்

கட்டளைக் கலித்துறை

*நாலா யிரத்தினொடு ஆயிரம் முப்பத்து நான்குகலி*
*ஏலாங் கிரச எழிற்சித் திரைஇரு பத்துமூன்றில்*
*தோலா இனித்த தமிழ்க்கண்ணி யா,ராய. சொக்கலிங்கன்*
*தாலாட்டு இசைத்தனன் வேலூர்ச் சிறைதனில் தார்குழலே.*

## பெண்பால்

*மானே! மரகதமே! மாமயிலே! மாதரசே!*
*தேனே! திரவியமே! தீங்கனியே! கண்வளராய்!* 1

*சோலை அருங்கிளியே! சுந்தரியே! தெள்அமுதே!*
*காலைக் கதிர்ஒளியே! கண்மணியே! கண்வளராய்!* 2

*கோல மணிவிளக்கே! கோமளமே! கோகிலமே!*
*பாலைப் பழிக்குமொழிப் பாவையே! கண்வளராய்!* 3

*குழலின் ஒலியதனைக் கோதுஆக்க வந்தஎங்கள்*
*மழலை மிழற்றும்அரு மாமணியே! கண்வளராய்!* 4

*நாட்டைப் பிடித்தபிணி நல்குரவு பகையாதி*
*ஓட்டம் எடுக்கவந்த ஒப்பனையே! கண்வளராய்!* 5

*காந்தி அறமதனைக் காசினிஎ லாம்பரப்பப்*
*போந்த இளங்கொடியே! பொன்னே!நீ கண்வளராய்!* 6

*திருவள் ளுவர்குறளின் சீர்த்திதனைச் சீராக*
*மருவப் பிறந்தபெரு மாமகளே! கண்வளராய்!* 7

*கம்பர் இனியதமிழ்க் கவியின் உயர்கருத்தை*
*இம்பர் வளர்க்கவரும் ஏந்திழாய்! கண்வளராய்* 8

*ஆங்கீரச-சித்திரை 23, 5—5—1932*

செஞ்சொல் இளங்கோவின் சிலப்பதிகா ரக்கவினை
அஞ்சொல் அமிழ்தாலே ஆண்டருளக் கண்வளராய்! 9

சேக்கிழார் நூலில்உள சீர்திருத்தக் கொள்கைஎலாம்
வாக்கினுல் உரைத்துஉலகை வளர்த்துஅருளக் கண்வளராய்!

பாரதி பாட்டின் பண்பை,இப் பார்அறியச்
சீரதாச் செப்பச் செல்வமே! கண்வளராய்! 11

வள்ளுவனை ஈன்ற மங்காத சீர்த்தியுடைத்
தெள்ளு தமிழ்வளரச் சீரே!நீ கண்வளராய்! 12

தொல்காப் பியர்செய் தொன்மையுடைச் சீர்நூலின்
ஒல்காப் பெருமை ஒளிபெறநீ கண்வளராய்! 13

சங்கத் தமிழ்இனிய சால்புடைய நூலாய்ந்தே
எங்கள் தவம்விளக்க எதமிலாய்! கண்வளராய்! 14

உலகின் மொழிஎல்லாம் ஓதிஉணர்ந்து உளங்கொண்டே
அலகில் புகழ்பரப்பி ஆண்டுஅருளக் கண்வளராய்! 15

ஆற்றல் நிறைபெரியார் அருளிய நூற்பரப்பின்
சாற்றைப் பிழிந்துஉதவத் தையலே! கண்வளராய்! 16

பெண்ணைக் குறைத்துப் பேசுநூற் கொள்கைஎலாம்
மண்ணிற் புதைக்க வயிரியே! கண்வளராய்! 17

ஒக்கும் பிறப்பில் உயிர்எல்லாம் என்றுஉரைத்த
தக்கோன் வளர்த்த தமிழ்வளரக் கண்வளராய்! 18

கணவன் பிழைபொறுத்த கண்ணகியாள் போல்கற்பை
அணிகொள் பொறுமையோடு ஆள்வதற்குக் கண்வளராய்! 19

காதல்இது என்றுஉலகோர் காண வனம்புகுந்த
சீதைஅறம் போற்றவளர் செல்வியே! கண்வளராய்! 20

சிறக்கும் தமிழ்மொழியில் சீலம் செறிந்தபெரும்
அறத்தை இனிதுஅருளும் ஔவையாள் நீதானோ? 34

மற்றோன் மனம்புகுதல் மாசுமகட்கு என்றுஅந்நாள்
சொற்ற மருதிஎனும் தொன்மகளும் நீதானோ? 35

தொட்டுஇழுத்த தம்பியொடு துரியோத னக்கொடியோன்
பட்டுஅழியச் செய்தபுகழ்ப் பாஞ்சாலி நீதானோ? 36

பாஞ்சால மங்கையரைப் பகரமுடி யாக்கொடுமை
தாஞ்செய்தார் பூண்டுஅறுக்கத் தரித்தவளும் நீதானோ? 37

கல்வி தனில்பெரிய கம்பனூர் பெற்றுஎடுத்த
செல்வத் தமிழ்ச்சீதைச் செம்பொருள் நீதானோ? 38

வல்வரவு வாழ்வார்க்கே உரைஎன்ற வள்ளுவன்வாய்ச்
சொல்அதனால் பிரிவுஉரைக்கும் சுந்தரியாள் நீதானோ? 39

பெண்மைக்கு இலக்கணஞ்செய் பெரியோர்கள் சொன்னபடி
ஒண்மைப் புகழ்முழுதும் ஓங்கியவள் நீதானோ? 40

தீர்த்தன் அறம்வளர்த்த செல்விஎனும் எங்கள்சீர்ச்
சாத்தனூர் சாற்றுமணி மேகலையும் நீதானோ? 41

பாடிக் கொடுத்ததுஅன்றிப் பரமன் அடிஇணைக்குச்
சூடிக் கொடுத்தஇளந் தோகையாள் நீதானோ? 42

சீரைப்பார்த் துக்கணவன் திகைத்துஓடத் தமிழ்பாடிக்
காரைக்கால் வந்தஉயர் காரிகையும் நீதானோ? 43

செங்கோன்மை நிலையிட்டுத் தென்பாண்டி நாடுஅளித்த
மங்கையர்க்குப் பேரரசாம் மகராசி நீதானோ? 44

தெள்ளு தமிழ்மொழியில் திறம்பா அறம்உரைத்த
வள்ளுவனை ஈன்ற மங்கைநல்லாள் நீதானோ? 45

பைம்பொன் அரதனத்தில் பதிக்கும் கவிபுனைந்த
கம்பன் தனைப்பெற்ற கல்விமான் நீதானோ? 46

சமத்துவம்இல் லாநீதி தன்னைஅடி யோடுஅறுக்க
இமைப்பொழுதும் தாழாமல் இனியாளே! கண்வளராய்! 21

பெண்அடிமை என்றுசொலும் பேதைமட வார்தங்கள்
கண்திறக்க வந்தபெரும் கற்பகமே! கண்வளராய்! 22

ஓதுகலை தம்மைஎலாம் ஓதிஉணர்ந்து உள்ளத்தில்
தீதுஅகற்றி நன்றுகொளத் திருவே!நீ கண்வளராய்! 23

வேற்றுநாடு ஆள விழையும் மடக்கொள்கை
ஏற்றுளார் புன்மை இடியநீ கண்வளராய்! 24

எப்பொருளை எவர்சொலினும் இனிதுஆய்ந்து தன்மைஅறிந்து
அப்பொருளை ஆளவந்த ஆதரவே! கண்வளராய்! 25

சாதியால் உயர்இழிவு சாதிக்கும் வன்கண்ணர்
பேதையார் என்றுஅறியப் பெண்அரசே! கண்வளராய்! 26

வெற்றி தனைநாடி வீணன் சிறைஇருந்த
பொற்பூ மகள்அனைய பூவையே! கண்வளராய்! 27

வன்னக் கிளியே!நான் வாழவந்த எழிசையே!
சொன்ன மணிவிளக்கே! தோகையே! கண்வளராய்! 28

அன்னமே!ஆருயிரே! அமுதமே! பேரறிவே!
கன்னலே! கற்கண்டே! காதலே! கண்வளராய்! 29

வள்ளலே! கண்ணே! மனத்திலுறை மாமணியே!
தெள்ளு தமிழே! திருவருளே! கண்வளராய்! 30

எல்லார் மொழிபலவும் இருங்கலைகள் எல்லாமும்
சொல்லார் கலைமகளாம் சுந்தரியும் நீதானோ? 31

நல்ல தொழில்வளர நாடுசெழித்து ஓங்கிமிகச்
செல்வங் கொழிக்கும்எழில் திருமகளும் நீதானோ? 32

தானம் தவம்இரண்டும் தாரணியில் நின்றுஓங்க
ஞானம் விளங்கவரும் நன்மகளும் நீதானோ? 33

செஞ்சொல் அமிழ்தாலே சிலம்பை இசைத்தஉயர்
அஞ்சொல் இளங்கோவின் ஆய்ச்சியாள் நீதானோ? 47

காதல் தமிழில் கவிஞர் கவிபுனைந்த
போதம் மிகுந்த புலவர்தாய் நீதானோ? 48

முதுமை எழிலோடு முழுதுலகும் போற்றவளர்
புதுமை கலந்தஉயர் பெண்ணரசி நீதானோ? 49

பீடு பிறங்கஅரும் பெண்மைசிறந்து ஓங்கிமிக
நாடு செழிக்கவந்த நல்இயலாள் நீதானோ? 50

## ஆண்பால்

கொஞ்சு கிளியே! குஞ்சரமே! கோளரியே!
அஞ்சொல் அமுதே! ஆருயிரே! கண்வளராய்! 1

விஞ்சு கலைகள் மேவப் பிறந்தஉயர்
மஞ்ச! அறங்கள் வளரநீ கண்வளராய்! 2

கட்டிக் கரும்பே! கற்கண்டே! சர்க்கரையே!
தொட்டில் அசையத் தோன்றல்!நீ கண்வளராய்! 3

இந்தியத் தாய்விலங்கை ஈர்ந்தெறியப் பிறந்தபெரும்
மைந்தா! அருந்தவமே! மாமணியே! கண்வளராய்! 4

மருமலரே! வாழ்வே! வனப்பே! மகிழ்கனியே!
அருமந்த செல்வமே! ஆசையே! கண்வளராய்! 5

அண்ணலே! அன்பே! அருளே! அறிவே!என்
கண்ணே! மணியே! காதலே! கண்வளராய்! 6

மாதுஅடிமை கொண்டக்கால் வாழ்க்கைஇனி யாதுஎனவே
போதமிலார் புந்திகொளப் போந்தவனே! கண்வளராய்! 7

தீண்டாமை வேண்டும்எனச் செப்புகின்ற புன்மதியைப்
பூண்டோடு கீண்டுஎறியப் பிறந்தவனே! கண்வளராய்! 8

சூதுசெய்இ ராவணனைத் துலங்கும் முடிதுணித்த
சீதைமண வாளா!என் செல்வமே! கண்வளராய்! 9

இந்திரசித்து என்போனை இரண்டுதுண்டா கத்துணித்த
சுந்தரப்பொன் வில்தாங்கு தூமணியே! கண்வளராய்! 10

இராமா யணக்கதையில் இணைஇலான் இவன்எனவே
பராவு புகழுடைய பரதனே! கண்வளராய்! 11

வாய்ந்த பொறை,கருணை, வண்மை, அறிவு,நடை,
சாந்தம், புனிதம்நிறை தருமனே! கண்வளராய்! 12

பராவுபெரு வில்வளைத்துப் பாஞ்சாலன் பெற்றெடுத்த
துரோபதையை மாலையிட்ட சூரா!நீ கண்வளராய்! 13

தந்தைக்கா நல்லின்பம் தனைத்துறந்த வீட்டுமன்நேர்
மைந்த!பெரும் பேரறங்கள் மல்கிடநீ கண்வளராய்! 14

பார்த்தனார் தாம்உய்யப் பார்உய்யக் கீதைமொழி
பார்த்திப! பாரதஞ்செய் பரந்தாமா! கண்வளராய்! 15

தீதுஇல் அறம்பிடித்துத் திண்மையுடன் சங்கிலியைக்
காதல் மணம்புணர்ந்த சுந்தரனே! கண்வளராய்! 16

கருணை உருவெடுத்த காந்திஅறம் போற்றிஉயர்
பெருமை யொடுவிளங்கப் பெரியோனே! கண்வளராய்! 17

நாட்டின் விடுதலைக்கு நல்உயிரே னுஞ்சிறிதும்
வாட்டம் தவிர்த்துஈய மாமகனே! கண்வளராய்! 18

உலகில் பெரியாராம் ஒப்பிலாக் காந்திமகான்
அலகில் புகழ்பரப்ப அண்ணலே! கண்வளராய்! 19

சாதியால் நாம்பெரியோம் என்றுஉரைக்கும் சாரமிலார்
ஆதரவு மாண்டுஒழிய அம்மானே! கண்வளராய்! 20

இப்புவிஎ லாம்உயர ஏதம்இலாக் காந்திசொலும்
ஒப்பரிய கொள்கைநனி ஓங்குதற்குக் கண்வளராய்! 21

வள்ளுவன் செய்குறளின் மாண்பை உலகுஅறியத்
தெள்ளு தமிழ்விளங்கச் செம்மலே! கண்வளராய்! 22

செந்தமிழில் இராமகதை செய்த,தனிச் சீர்ப்புலவன்
தந்தகவி வளர்ந்தோங்கத் தண்ணொளியே! கண்வளராய்! 23

முந்தைப் பெரியோர்கள் மொழிந்தவற்றை ஆய்ந்தவர்தம்
சிந்தை நலம்பிடிக்கச் சீராளா! கண்வளராய்! 24

பெரிய கருத்ததனைப் பேசுமொழி தம்முள் எலாம்
அரிய தமிழ்வளர ஆதரவே! கண்வளராய்! 25

ஆண்பெண் சமமெனவே அவனிமுழு தும்உணரும்
மாண்பை இனிதாக வளர்ப்பதற்குக் கண்வளராய்! 26

தீமை முழுதுஅகலத் தேயம் செழித்தோங்க
வாய்மை நனிவிளங்க மகனே!நீ கண்வளராய்! 27

சீலம் வளரச் சிறுமை புறங்காட்ட
ஞாலம் உயர நல்லோய்!நீ கண்வளராய்! 28

செல்வமே! தேனே! தீங்கரும்பே! மாமருந்தே!
பல்கு வளமே! பாலகனே! கண்வளராய்! 29

ஆசைக் கனியே! அருந்தவமே! பேரருளே!
ஓசைத் தமிழே! உயிர்க்குயிரே; கண்வளராய்! 30

தம்பிக்கு அரசோடு தாரணியும் தான்கொடுத்து,
வெம்பு வனம்புகுந்த மேதகவோன் நீதானோ? 31

வேடன் தனை,குரங்கை, வீடணனைக் காதலுடன்
கூடித் துணையாக்கொள் கொற்றவனும் நீதானோ! 32

தோள்ஓய்ந்து இராவணனார் தோற்றதுகண்டு இன்றுபோய்
நாளைவா எனநல்கும் நல்லோனும் நீதானோ? 33

முடிதுறந்து படிதுதிக்க முன்னோனின் அடிசுமந்து,
சடைவளர்த்துத் தவம்புரிந்த தனிப்பரதன் நீதானோ? 34

அறந்தானே என்கின்ற அயோத்திவரும் இராமன்பின்
பிறந்தானும் உளன்என்னப் பிரியாதான் நீதானோ? 35

தீதுபுரி இராவணனின் செயல்வெள்கி அவன்தவிர்ந்த
சாதிஎனும் சிறுநெறியைச் சாராதான் நீதானோ? 36

ஏலும் உலகனைத்தும் இரண்டுஅடியி னால்அளந்த
சீலம் செறிந்ததிரு வள்ளுவனும் நீதானோ? 37

செவிக்குத்தேன் எனஇராமன் கதைதிருத்திச் செய்துஅமைத்த
கவிக்குந்நா யகன்என்னும் கம்பவள்ளல் நீதானோ? 38

ஒழுக்கம் இதுஎன்று உலகுணரக் காட்டுகின்ற
விழுப்பம் மிகும்எம் மெய்க்காந்தி நீதானோ? 39

சாந்தம், பொறை,கருணை, தண்மை,சீர் புனிதமிவை
ஏந்து புகழுடைய எழிற்காந்தி நீதானோ? 40

இத்தரையில் எந்நாளும் ஈடில்லான் என்றுஉரைக்கும்
புத்திரிபாய் பெற்றெடுத்த புண்ணியனும் நீதானோ? 41

கொல்லு படைவரினும் கொஞ்சமும்அஞ் சாதுகடன்
ஒல்லும் வகைஆற்றும் உயர்காந்தி நீதானோ? 42

இறைமை தனைப்பெறற்கு யாருங்கொ ளாப்புதிய
முறைமை கடைப்பிடித்த மோகனதாஸ் நீதானோ? 43

வேர்மாளத் தீண்டாமை வேண்டியவாறு உரைத்தருளி
ஏர்வாடாச் சிறையிருந்த எம்மானும் நீதானோ? 44

மன்னவர்க்கும் அஞ்சாது மாண்பதனால் இப்புவியில்
இன்னல்அதை வென்றபுகழ் என்அப்பன் நீதானோ? 45

இலக்கியம்எல் லாம்தந்த எழிற்புலவர் எல்லோரும்
விலக்கம்இன்றி ஓர்உருவாய் மேவியவன் நீதானோ? 46

இறையை எழிலாரும் இனியதமி ழால்பாடும்
குறைஇல் அடியர்உருக் கொண்டவனும் நீதானோ? 47

பிறப்பின் உரிமைபெறப் பெரியதுயர் அத்தனையும்
இறக்கும் வரைப்பொறுக்கும் எம்மானும் நீதானோ? 48

உலகம் தனைத்திருத்தி ஓங்கிஉயர் கொள்கைஎலாம்
நிலவப் பிறந்துஅருளும் நேர்மையுளான் நீதானோ? 49

தருமம் தழைத்துஓங்கத் தரணி செழித்துஉயர
அருமை விளங்கவந்த ஆரமுது நீதானோ? 50

# 24 கும்மி

## பாயிரம்

### கட்டளைக் கலித்துறை

வெம்மை தொலைசகம் ஓரா யிரத்தொடு மேவும்எண் ணூற்று
ஐம்பது அதன்மிசை ஐந்தும் அணையும்ஆங் கிரசவில்
செம்மைக் கடகம் செறிஎட் டினில்,ராய. சொக்கலிங்கன்
கும்மி அரண்செறி வேலூர்ச் சிறைதனில் கூறினனே.

கும்மிய டிபெண்காள்! கும்மி யடி!பூமி
குலுங்கிடக் கைகொட்டிக் கும்மியடி!
நம்முடை நாடு விடுதலை பெற்றிடும்
நாளும்வந் ததுஎன்றே கும்மியடி! 1

காந்திஎன்று ஓர்முனி வந்துதித் து,நம்மைக்
கண்ணைத் திறந்துஉண்மை காட்டிவிட்டான்!
வேந்துஇயல் பெற்றுநாம் விடுதலை மேவுதல்
மெய்ம்மைஎன் றேசொலிக் கும்மியடி! 2

காந்தி அறம்தரை எங்கும் வளர்ந்திடக்
கைகொட்டிக் கும்மி யடியுங்கடி!
ஏந்திழை வெண்நகை மாதர்க ளே!நல்ல
எழில்ஒழு கப்பாடிக் கும்மியடி! 3

கைவளை ஆர்ப்பச் சிலம்பு புலம்பிடக்
காதணி பேரொளி கான்றிடவே,
மைவளர் கூந்தலில் வாழ்வண்டு பாடிட,
வள்ளலை வாழ்த்தியே கும்மியடி! 4

தேனும் அமுதும் குழைத்தசொ லீர்!உங்கள்
தீங்கனி வாய்முத்தம் சிந்திடவே!
ஊனம்இ லாஉயர் உத்தமக் காந்தியின்
உண்மைப் புகழ்பாடிக் கும்மியடி! 5

---

ஆங்கீரச ஆடி 8, 23—7—1932

ஆடும் மயில்உங்கள் சாயற்குத்தோற்றே
அடைந்தது கான்என நாடறியக்
கூடிப்பஞ்சு ஊட்டிய மெல்அடி நைந்திடக்
கூர்ஜரன் பேர்சொலிக் கும்மியடி! 6

எந்த உலகும் இருங்களிப்பு எய்திட,
எல்லா அறமும்த ழைத்துஓங்க,
வந்தநம் காந்தியை வாயார வாழ்த்தியே
மகிழ்ந்து கும்மி அடியுங்கடி! 7

சேலை நிகர்த்த விழியுடையீர்! திங்கள்
சேர்ந்த முகத்தீர்! சிற்றிடையீர்!
பாலை நிகர்த்த மொழிபக ரும்காந்தி
பாத மலர்பாடிக் கும்மியடி! 8

கிள்ளை மொழிச்சிறு மெல்லிய ரே!எங்கள்
கேடுஇல் பெருங்குணக் காந்திபுகழ்
அள்ளி உலகுக்கு அளித்துக் கரங்கொட்டி
ஆடிக் கும்மி அடியுங்கடி 9

கருத்தில் அமையாது! கணக்கிடக் கூடாது!
காந்தி பெரும்புகழ் என்றாலும்
மருக்கமழ் மாதரீர்! வாய்கொண்ட மட்டும்
வழுத்திக் கும்மி அடியுங்கடி! 10

பெண்மை இழிவுஎனப் பேசு பவர்நாணப்
பெண்மை உயர்வை அவர்க்குஉணர்த்தி,
மண்ணினில் பெண்மைக்கு இணையில்லை என்றவர்
மனத்தில் கொண்டிடக் கும்மியடி! 11

ஆணுக்கும் பெண்ணுக்கும் அறிவில் வேற்றுமை
அணுவும் இல்லைஎன்று ஐயம்இன்றிக்
கோணல் மனிசரும் காண உணர்த்திநம்
கொள்கை தழைத்திடக் கும்மியடி! 12

இந்த உலகினில் மாதர் இழிவுஎன
எண்ணு பவர்க்குஇனி வாழ்வுஏது;
அந்தப் பழங்கதை மண்ணில் புதைந்ததுஎன்று
ஆரவா ரமாகக் கும்மியடி! 13

வீரமும் காதலும் மென்மையும் மேவிட,
மெச்சும் இனிய அருந்தமிழில்,
ஆரந் தொடுத்துஇறை அடிஅ டைந்திட்ட
ஆண்டாள் நாச்சியார் பெண்அலரோ! 14

அற்புதத் திருஅந் தாதி அறைந்துதம்
அறிவுப் பெருக்கை அறிவுறுத்திக்
கற்புநி லேதவ ருத பெரும்புகழ்க்
காரைக்கால் அம்மையும் பெண்அலரோ! 15

அருமைத் தமிழில் அறம்உரைத் த,எங்கள்
ஔவைப் பிராட்டியார் பெண்அலரோ!
பெருமை உடையவர் அறத்தொடு பெண்மையின்
பீடறி யார்உள்கக் கும்மியடி! 16

சங்கம் மருவிய பாக்களை யாத்ததொல்
சால்புடை யார்பெருங் கூட்டத்திலே,
மங்கையர் பற்பலர் மன்னி இருந்ததை
வாய்த்த அறிவுடை யோர்அறிவார். 17

"புறங்கொடுத் தனன்என் மகன்ஆயின்,உண்ட
புன்மை தொலைய,என் கொங்கைகொய்வேன்
விறல்இது" என்று,வாள் கொண்டு களஞ்சென்ற
வீரத் தமிழ்ப்பெண் திறம்பாடீர்! 18

பெண்மை இகழ்பவர் நன்றுஅறி யார்;இது
பேச்சுக்கல்ல; முற்றும் சத்தியமே;
தண்மை யொடு,மென்மை, நாகரி கம்,காதல்
தாய்மை,இன் னேரன்ன பெண்மைஅன்றோ? 19

விளக்கைப் பிடித்துக் கிணற்றில் விழுபவர்
மேவிடும் பெண்மை பழிப்பவரே;
அளப்பஅருங் கீர்த்திகொள் பெண்மைக்கு எதிரெங்கும்
யாதும்இல் லைஎன்றே கும்மியடி! 20

"கலைகள் பயில்வோம்; உலகின் உயர்மொழி
கற்றுக் கருத்தறி வோம்;அறியார்
வலையில் விழுந்தே அடிமையா கோம்"என
வழுத்திக் கும்மி அடியுங்கடி! 21

"சிலம்பு படிப்போம்; குறள்படிப் போம்;நல்ல
தீந்தமிழ்க் கம்பன் கவிபடிப்போம்;
அலம்பு புகழ்மணி மேகலை துறவின்
அருமை படித்து மகிழ்ந்திடுவோம்." 22

"எட்டுத் தொகை,பத்துப் பாட்டுடன் சங்கம்
ஏறிய இன்னிசை நற்புலவர்
மட்டுக்கு அடங்காப் பெருநூல் யாவையும்
மாசு மறுஅறக் கற்றிடுவோம்." 23

"பாரத்தொல் காப்பியம் பயின்றிடு வோம்;அது
பகரும் களவுகற்பு ஆதிஎலாம்
ஆரஅ மரவே ஆராய் வோம்;எங்கள்
அறிவைப் பயன்இல் வழிச்செலுத்தோம்." 24

என்றுஎழுந்து என்இளஞ் சோதரி காள்இனி
ஏலேலோ கும்மி அடியுங்கடி!
நன்று தரும்புதுக் கொள்கைஎ லாம்நனி
நாட்டிக் கும்மி அடியுங்கடி! 25

பழைய புராண மதம்பிடித் தோரே,இப்
பாரினில் பெண்மை பழிப்பவர்கள்;
பழைய புராணங்கள் பகரும் கருத்தையும்
பகுத்றி வோடுஅவர் பார்ப்பதில்லை. 26

மன்று தனில்நடம் ஆடும் பரமனும்
மங்கையைத் தன்ஒரு பங்குகொண்டான்;
கொன்றைச் சடைத்தலை தாங்கினன் மற்றொரு
கொம்பைஅச் சுந்தரன்; என்றிடுவார். 27

பாற்கடல் மேவிய கார்க்கடல் வண்ணன்தன்
பத்தினி யை,மார்பில் வைத்தனனும்;
நாற்கடல் பூப்படை நான்முகன், தேவியை
நாவில் இருத்தினன் என்றுஉரைப்பார். 28

வள்ளியை அள்ளியே பன்னிரு கையவன்
மாமயில் ஏறினன் என்றுசொல்வார்;
கொள்ளைகொள் ளையாக இப்படி அன்னவர்
கூறும் கதைகள் கணக்குஇலவாம். 29

ஆக்கல், அளித்தல், அழித்தல் உடை,இறை
ஆன, அயன்,அரி, அரனும்
நாக்கினும் மார்பினும் மேனி தலையினும்
நங்கைய ரைச்சுமந்து எய்த்திருக்க, 30

எங்ஙனம் பெண்மை இழிவாகும்? அன்னார்
ஏன்இந்த உண்மை உணர்வதில்லை?
அங்ஙனம் கூறுவார் தங்கள் கதைகளை
ஆராய்ந்து பார்க்க அறியாரோ? 31

காத லுடன்கூடி ஆண்க ளொடுபெண்கள்
கருத்துஒன்றி இல்லறம் கைக்கொண்டே,
ஆதர வாகவே ஏற்றம் இழிவுஇன்றி
ஆடிடு வோம்என்றே கும்மியடி! 32

கருத்தும் அறிவும் பொருத்தமாய் வாய்த்தஓர்
காளையைக் காதல் மணம்புணர்ந்தே,
திருத்த முடன்அறம் வளர்த்திடு வோம்என்று
செப்பியே கும்மி அடியுங்கடி! 33

முன்பின் அறியா ஒருவனுக் கும்,உயர்
மொய்ம்பிலி, மூர்க்கன் முதலோர்க்கும்
அன்புஅறி யானுக்கும் வாழ்க்கைப் படு,புன்மை
அகற்றிடு வோம்என்று கும்மியடி! 34

பெற்றவர், உற்றவர், சோதரர் ஆதியர்
பேணத் தகுந்தவர் என்றாலும்,
மற்றவர் எங்கள் உரிமை பறிக்கும்
வழக்கத்தைத் தள்ளி மிதித்திடுவோம். 35

பெற்று வளர்த்தநற் பெண்ணின் அருமையைப்
பேணாமல், தன்னல மேவிரும்பி,
விற்றிடும் பெற்றோரும் உண்டுஎனில், அம்மவோ!
வேறு விரிக்கவும் வேண்டுமதோ? 36

இட்டம் இலாத ஒருவ னுடன்கூடி
இல்லறம் என்றுஒரு பேர்சொலியே,
கட்டி அழுவதில் செத்துத் தொலைவதைக்
கைக்கொளல் மேல்எனக் கும்மியடி! 37

இந்த உலகினில் இன்ப நுகர்வுஇன்றி
எத்துணைப் பச்சைப் பசுங்கிளிகள்,
வெந்த மனத்தொடு விம்மிவிம் மிமண்ணின்
மீதில் புரண்டுஅழு கின்ற,ஐயோ! 38

கண்ணும் கருணையும் கொண்ட மனத்தினர்
காணுவ ரோ?அந்தப் பாழ்நிலையை;
மண்ணில் அந்தக்கொடும் கைம்மை அடியுடன்
மாண்டிடக் கைகொட்டிக் கும்மியடி! 39

தாலிஎன் றுசொலும் அடிமைக் கயிற்றைத்
தரித்திட மாட்டோம் இனிஎன்றே,
நாலுதிக் கும்பறை சாற்றி முழக்கியே
நன்றுடன் கும்மி அடியுங்கடி! 40

மாதர் இழிந்தவர் என்றுஅறி வின்றியே
வழுத்திடு புன்மையோர் புறம்இருக்க,
மேதினி மாந்தருள் மேலவர் கீழவர்
விள்ளுதல் விந்தையுள் விந்தைஅன்றோ? 41

சாதி பிறப்பினில் சாற்றிடு கீழ்மையைச்
சந்துசந் தாவெட்டி மீளாமல்,
ஓதக் கடலினுள் ஆழப் புதைத்துஉயர்
உண்மை விளங்கிடக் கும்மியடி! 42

தீண்டா மைஎனும் தீமை நிலத்திற்
சிறிதும் இடன்இன்றிச் சென்றுஓடி,
மாண்டு மடிந்துமண் ணாகித் தொலைந்திட
மங்கைய ரே!நனி கும்மியடி! 43

நந்தனை ரைத்தங்கள் கோவிலில் வைத்தே
நண்ணித் தினந்தொழும் நல்லடியார்
எந்த விதம்அவர் மைந்தரைத் தீண்டார்
எனமொழி வார்?இதற்கு என்னபொருள்? 44

பாணுழ்வா ரைப்போற்றும் மாண்அடி யாரவர்
பண்டை வழிவந்த மக்கள்தமை,
மாணாக் குலமென வழுத்தற்கு, மற்றொரு
வாயுமுண் டோ?இது தீதுதரும். 45

மேலவர் கீழவர் பிறப்பினில் இலே;அவை
மேவு குணம்,செயல் ஆனவற்றுல்
ஏலுவ னஎனும் உண்மை, உலகினில்
இலங்கக் கைகொட்டிக் கும்மியடி! 46

பழமையுள் தீயன தள்ளிடு வோம்;படர்
புதுமையுள் நல்லன கொண்டிடுவோம்;
கிழமை எனநற் பொருள்அனைத் துங்கொண்டு
கீர்த்திபெ றக்கும்மி அடியுங்கடி! 47

பெண்மைக்கு இழுக்குடை எழில்நலம் விற்றுஉணும்
பேதைத் தொழில்எனும் பீடை,இந்த
மண்ணில்இல் லாமலே செய்திடு வோம்என
வழுத்திக் கும்மி அடியுங்கடி! 48

வீண்நகை வேணமட் டும்சுமக் கோம்;கற்பு
மேவத் துணைவரை ஆண்டிடுவோம்;
பூணதாக் கற்பினை யேகொள்ளு வோம்;இதில்
பொற்பும்உண் டோஎன்று கும்மியடி! 49

எங்கள் அரசினில் பெண்ணுக்கும் ஆணுக்கும்
எல்லாம் சமமாகச் செய்திடுவோம்;
மங்கள மாகவே வாழ்ந்திடு வோம்என
வாழ்த்திக் கும்மி அடியுங்கடி! 50

# 25. எங்நாட் கண்ணி

## பாயிரம்

### அறுசீர் விருத்தம்

சாலிவா கன,சகம்ஆண்டு ஆயிரத்துஎண்
ணூற்றின்மேல் சார்ந்து நின்ற
நாலிஞேடு ஒருபத்து நான்குஒன்றுஆங்
கீரசவில், ஆடி நான்காம்
ஏலுநாள், எழில்,ராய வேலூர்ச்சீர்ச்
சிறையதனில் எந்நாட் கண்ணி
கோலிஞன், காரைநகர், ராய.சொக்க
லிங்கன்உயர் கொள்கை மேவ.

வாய்த்த பெருங்காந்தி மன்னும் அறம்உலகில்
பூத்து மணம்வீசிப் பொலியுநாள் எந்நாளோ? 1

வீயாப் புகழோடு மேல்நாள் உலகுஆண்ட
தாயார் விலங்கு தகருநாள் எந்நாளோ? 2

சரிநிகராய் உலகதனில் தண்ணளிசேர் நம்அன்னே
அரியணையில் முடிதாங்கி அமருநாள் எந்நாளோ? 3

மண்குளிர எங்கள் மாதா அரசுஇருக்கக்
கண்குளிரக் கண்டு களிக்கும்நாள் எந்நாளோ? 4

நாட்டை மறந்து,சுய நன்மை தனை நாடிக்
காட்டிக் கொடுப்போர் கண்பெறுநாள் எந்நாளோ? 5

தகவுஅறியா அதிகாரி சாரும் அடிவருடும்
பகதூர்கள் நல்அறிவு படருநாள் எந்நாளோ? 6

புனிதம் அறியாது புல்அடிமை போதும்என்பார்
மனிதர் எனஉலகில் வாழுநாள் எந்நாளோ? 7

ஒன்றுஅறியா அதிகாரி உதைத்த,கால் முத்தமிடும்
நன்றுஅறியா மூடர்எலாம் நலம்உணர்நாள் எந்நாளோ? 8

---

ஆங்கீரச ஆடி 4, 19—7—1932

ஆழி கிடக்கும்இந்த அளவிலாப் பேருலகில்
ஏழை அடிமைஎலாம் இலவாம்நாள் எந்நாளோ? 9

வீறோடு அரசாளும் வேற்றார்முன் இந்தியர்கள்
ஏறுபோல் பீடுநடை ஏற்கும்நாள் எந்நாளோ? 10

கோடி படைத்தோரும் குடிப்பதற்குக் கூழ்இன்றி
ஓடி அலைவர்எனும் ஒன்றுஅறிநாள் எந்நாளோ? 11

புலைமைத் தொழில்செயினும் புன்பிறப்பே காரணமாத்
தலைமை பெறவிழைவோர் சாய்ந்துஒழிநாள் எந்நாளோ? 12

சாதியால் தீண்டாதார் என்னஒரு சாராரை
வாதிக்கும் மெய்அறியார் மதிபெறுநாள் எந்நாளோ? 13

பழய வழக்கம்எனும் பகுத்தறிவுஇல் செய்கைகளைக்
குழியில் புதைத்துஅழுந்தக் கோதறுநாள் எந்நாளோ? 14

பித்துக்கொண்டு ஒப்புஉயர்வுஇல் பெண்மை தனைப்பழிப்போர்
செத்தஇடம் புல்முளைக்கச் செய்யும்நாள் எந்நாளோ? 15

காதல் புரிஇருவர் கருத்தை இடைதடுக்கும்
சாதி சமயம்எலாம் தகர்ந்திடுநாள் எந்நாளோ? 16

குதலைச் சிறுமியரைக் கோதில் நலங்கெடுத்து
விதவைப் பெயர்தருவோர் வீழும்நாள் எந்நாளோ? 17

எனக்குத் தமிழ்வாராது என்றுஉரைக்கும் புன்தமிழர்
இனித்த தமிழ்பேசி எழிலுறும்நாள் எந்நாளோ? 18

தூண்டும் அறியாமைத் தொடரான புன்மையெலாம்
மாண்டு மடிந்துஅழிந்து மண்ணும்நாள் எந்நாளோ? 19

உலகம் செழித்துஓங்கி உயர்ந்த அறம்வளர்ந்து
கலைகள் நனிநிரம்பக் காணும்நாள் எந்நாளோ? 20

பூ,தான் அளப்புஅரிய புண்ணியத்தால் பெறுபரத
மாதா அரசுஎய்தி மகிழும்நாள் எந்நாளோ? 21

வசைஇன்றி வாழ்ந்துஇந்த வையகத்தில் எல்லோரும்
பசியாமல் உண்டுஉடுத்திப் படரும்நாள் எந்நாளோ? 22

அலகிலாப் பெரும்பொருளும் அதிகாரம்போன் றனவும்
நிலையிலா என்றுஉணர்ந்து நேர்பெறும்நாள் எந்நாளோ? 23

கொத்தடிமை நீங்கிஎங்கள் கோகிலப்பொன் மாதரார்
ஒத்தநலம் பெற்றுஓங்கி ஒளிருநாள் எந்நாளோ? 24

எக்குலத்தில் எந்நாட்டில் எம்மதத்தில் இருந்தாலும்
மிக்கசெயல் பூண்டாரை மேவிடுநாள் எந்நாளோ? 25

தேமாங் கனிபோலச் செப்புமொழி கண்டுநனி
ஏமாந்த சோணகிரி ஏறுநாள் எந்நாளோ? 26

பல்லோரும் ஏத்தும் பரந்தஇந்தப் பூஉலகில்
எல்லோரும் இன்புற்று இருக்குநாள் எந்நாளோ! 27

பிறந்தார் இறந்திடுதல் பெரிதும் உறுதிஎனும்
சிறந்த அறம்உணர்ந்து சீர்பெறுநாள் எந்நாளோ? 28

வைத்த பெருநிதியம் வாழ்வுஅரசு மண்இழந்து
செத்த முடிமன்னர் திறம்உணர்நாள் எந்நாளோ? 29

முடிசூடி அரசாளும் மொய்ப்புள்ள மன்னவரும்
படிமீது மிடிகூரும் பண்புஉணர்நாள் எந்நாளோ? 30

பிறர்க்குஉரியார் நலம்துய்க்கப் பேணல்இரு சாரார்க்கும்
மறக்கஅரிய இன்னல்எனும் மாண்புஅறிநாள் எந்நாளோ? 31

பிறப்பில் உயர்வு,இழிவு பேசும் அறிவோடு
சிறப்புஇல் சிறுமனிசர் திருந்துநாள் எந்நாளோ? 32

ஆண்உயர்வு பெண்இழிவுஎன்று அறையும் அறியாமைக்
கோணல் மனிதர்உயர் குணம்பெறும்நாள் எந்நாளோ? 33

இருவர் இணைந்துபெறும் இல்வாழ்வுக்கு அறிகுறியா
ஒருவர் பெறும்தாலி ஒழியுநாள் எந்நாளோ? 34

சின்னஞ் சிறுவயதில் திருமணங்கள் செய்துஇல்லின்
மன்னும் அறம்கெடுக்கும் மாசுஒழிநாள் எந்நாளோ? 35

இத்தரையில் எல்லா எழிலார் இளையாரும்
புத்தகமும் கையுமாப் பொலியுநாள் எந்நாளோ? 36

தேவர் குறள்போன்ற சீர்மைஅற நூலொன்று
யாவர் செயவல்லார் என்றுஉணர்நாள் எந்நாளோ? 37

வேந்தன் இளங்கோ விரித்ததமிழ்ச் சிலம்புஇனிமை
மாந்தி, இறுமாந்து மகிழுநாள் எந்நாளோ? 38

உம்பர் அமிழ்துஇனிதுஎன்று உரைத்திடுவார் உண்மையினில்
கம்பர் தமிழ்அறியார் கண்டுஅறிநாள் எந்நாளோ? 39

கடமை தனைப்புரியும் கருணை செறிஅறிஞர்
உடைமை தனைப்பெற்றே உயருநாள் எந்நாளோ? 40

கண்டார் மருளக் கையில் தடிகொண்டு
தொண்டர் தமைஅடித்தல் தொலையும்நாள் எந்நாளோ? 41

மூக்கடைக்கத் தொண்டர் மூச்சடைக்க நாற்றம்உடைச்
சாக்கடையை ஊற்றுபுன்மை சாகுநாள் எந்நாளோ? 42

நாட்டின் விடுதலைக்கு நல்உயிரும் ஈவோரைக்
காட்டிப் பயன்அடைவோர் கதிபெறுவது எந்நாளோ? 43

நிலையில் பொருள்கொண்டு நீதிதவிர் ஆறதனால்
கொலைநேர் வினைபுரிவோர் குப்புறுநாள் எந்நாளோ? 44

நுண்மணல்போல் வெண்திரைபோல் நுவலரிய பல்அரசர்
மண்ணதனில் மாண்டுஒழிந்த வகைஅறிநாள் எந்நாளோ? 45

செல்லும் இடம்எல்லாம் சிறப்புஅன்றி வேறுதராக்
கல்வி பெருகியே கசடுஅறுநாள் எந்நாளோ? 46

மாதுஅடிமை யென்றுஉரைக்கும் மாண்பும் அறிவும்இலாப்
பேதை மனிசர்எலாம் பித்துஒழிநாள் எந்நாளோ? 47

நலத்துடனே இல்வாழ்வு நடத்தும்இரு காதலரும்
இலக்கியங்கள் பயின்றுநனி இன்புறும்நாள் எந்நாளோ? 48

அரிய உலகுஅனைத்தும் அறம்ஆர் அழகுசெறி
பெரிய இனியதமிழ் பிறங்கும்நாள் எந்நாளோ? 49

நல்ல பொருள்அனைத்தும் நாடிக் கடனுக்கொள்
ஒல்காப் பெருமனிதர் ஓங்கும்நாள் எந்நாளோ? 50

# 26. பேரிகை

திசைகுலுங்க அலைபுலம்பச்
சேர்ந்துகொட்டு பேரிகை!
செகங்கலங்க மலைஎழும்பச்
சேர்ந்துகொட்டு பேரிகை! 1

ஏழைஇல்லை, கோழையில்லை,
என்றுகொட்டு பேரிகை!
இந்தியா எழுந்துவிட்டது
என்றுகொட்டு பேரிகை! 2

அடிமைவாழ்வு படியில்இல்லை,
என்றுகொட்டு பேரிகை!
மடிமைஇல்லை, மிடிமைஇல்லை,
என்றுகொட்டு பேரிகை! 3

எங்கள்நாட்டை நாங்கள்ஆள்வோம்,
என்றுகொட்டு பேரிகை!
பங்கவாழ்வு வாழமாட்டோம்
என்றுகொட்டு பேரிகை! 4

விடுதலைக்கு உயிரும்ஈவோம்,
என்றுகொட்டு பேரிகை!
விடுதலையைப் பெற்றேதீர்வோம்,
என்றுகொட்டு பேரிகை! 5

என்றைக்கேனும் இறப்பதுஉறுதி,
என்றுகொட்டு பேரிகை!
வென்றிகொள்வோம்! மெய்ம்மை,மெய்ம்மை
என்றுகொட்டு பேரிகை! 6

ஆங்கீரச ஆவணி 4௳ 19—8—1932

அச்சம்என்பது அணுவும்இல்லை,
என்றுகொட்டு பேரிகை!
இச்செகத்தில் எவர்க்கும்அஞ்சோம்,
என்றுகொட்டு பேரிகை! 7

கொடுமையான சட்டம்அஞ்சோம்,
என்றுகொட்டு பேரிகை!
தடியும்அஞ்சோம் அடியும்அஞ்சோம்,
என்றுகொட்டு பேரிகை! 8

எந்திரபீரங்கிஅஞ்சோம்,
என்றுகொட்டு பேரிகை!
தந்திரப்பேச்சு இனிப்பலிக்காது,
என்றுகொட்டு பேரிகை! 9

உரிமைதடுக்கும் எதையும்அழிப்போம்,
என்றுகொட்டு பேரிகை!
உரிமைஇல்லா வாழ்வுவேண்டோம்,
என்றுகொட்டு பேரிகை! 10

காந்திவந்தான் மாந்தர்உய்ய,
என்றுகொட்டு பேரிகை!
தீர்ந்தபுன்மை யானயாவும்,
என்றுகொட்டு பேரிகை! 11

உயர்வுதாழ்வு பிறப்பில்இல்லை,
என்றுகொட்டு பேரிகை!
அயர்தல்செய்யோம் அன்னைபணியில்,
என்றுகொட்டு பேரிகை! 12

புலையர்என்று பிறப்பில்இல்லை,
என்றுகொட்டு பேரிகை!
புலமைகொண்டோர் புலையர்ஆவர்,
என்றுகொட்டு பேரிகை! 13

பெண்ணைஇழிப்போர் பேதைமாக்கள்,
என்றுகொட்டு பேரிகை!
பெண்ணும்ஆணும் ஒக்கும்அறிவில்,
என்றுகொட்டு பேரிகை! 14

அறந்தழைக்க அவனிவாழ,
அதிர்ந்துகொட்டு பேரிகை!
திறஞ்செழிக்கத் தேசம்வாழ,
தேர்ந்துகொட்டு பேரிகை! 15

பட்டம்பதவி கெட்டமாயை,
என்றுகொட்டு பேரிகை!
விட்டுத்தொலைப்பீர் வீண்பட்டத்தை,
என்றுகொட்டு பேரிகை! 16

கத்தர்பெருக மற்றதுஒழிய,
என்றுகொட்டு பேரிகை!
பித்தர்வேறு நாட்டைவிழைவோர்,
என்றுகொட்டு பேரிகை! 17

தொழில்வளரச் சோர்வுஅகல,
என்றுகொட்டு பேரிகை!
இழிவுதொலைய யாவும் உயர,
என்றுகொட்டு பேரிகை! 18

துன்பம்செய்வோர் பொருளைவாங்கோம்,
என்றுகொட்டு பேரிகை!
இன்பம்பெருக, இன்பம்பெருக,
என்றுகொட்டு பேரிகை! 19

கொட்டுகொட்டு! கொட்டிமுழக்கு!
கொட்டுகொட்டு! பேரிகை!
கொட்டிமுழக்கு! கொட்டிமுழக்கு!
கொட்டுகொட்டு! பேரிகை! 20

## 27. விடுதலை

எங்கள் நாட்டை நாங்கள் ஆள
எவர் தடுக்க வல்லவர்! — அவர்
தங்கள் நாட்டை நாங்கள் ஆளத்
தந்துவாழ வல்லரோ? 1

எங்கள் நாட்டின் விடுதலைக்கா
இன் உயிரும் ஈகுவோம்! — தாய்
பங்கம்நீங்க உயிர்கொடுத்தல்
பாக்கியம்என் றேகொள்வோம்! 2

பிறந்தபொழுதே இறத்தல்திண்ணம்
என்ற,பீடு சால்உயர் — பேர்
அறத்தைஉலகுக்கு அறைந்தநாங்கள்
அஞ்சுவோமோ உயிர்விட! 3

எங்கள்உரிமை தன்னைப்பிடுங்க
எவர்க்கும்உரிமை இல்லையால்! — இனி
மங்கிஅடிமை வாழ்வுவாழ
மாட்டோம்!மாட்டோம்! நிச்சயம்! 4

இந்தியாவை ஆளும்உரிமை
இந்தியர்க்கே உரியது! — இதை
எந்தஉலகில் யாவர்மறுத்தே
இயம்பவல்லார்! சொல்லுவீர்! 5

எங்கள் நாட்டை ஏழையாக்கும்
ஏதிலாரின் பொருள்கொளீர்! — என
எங்களவரை நாங்கள் தடுக்கும்
இதுவும்குற்றம் ஆகுமோ? 6

ஆங்கீரச ஆவணி 11உ 26—8—1932

வன்சிறைக்கு அஞ்சுகாலம்
    மாண்டுமண்ணிற் புதைந்தது!—நல்
அன்னைவிலங்கை அறுத்தற்குஅஞ்சி
    ஆவிகாப்போர் மனிதரோ? 7

தாய்விலங்கு தாங்கிநிற்கத்
    தனயர்விலங்கு தாங்கலில்—வந்து
ஏயும்குற்றம் என்னை! ஈதை
    அறியமாட்டார் இழிந்தவர்! 8

உணர்ச்சிதன்னைச் சிறைசெயற்கு
    உலகில்வல்லார் உள்ளரோ?—பெரும
கணக்கில்வலிமை படைத்தவர்க்கும்
    கருதல்ஆகு மோஅது! 9

எந்திரபீ ரங்கிஎங்கள்
    உணர்ச்சிதன்னை என்செய்யும்?—உடல்
வெந்துபோயின் வேற்றுடலில்
    வீறுகொள்வது உறுதியால். 10

# 28. இந்தியா

தொன்றுதொட்டுப் பூமிவாழத் தூய்மைமிக்க அறம்எலாம்
மன்றஉணர்த்தி வளம்பெருக்கி வாழ்ந்ததுஎங்கள் இந்தியா. 1

அன்று,புத்தன் தன்னை நல்கி அறம்வளர்த்தது இந்தியா;
இன்று,காந்தி தன்னைப்பெற்றே எழில்வளர்ப்பது இந்தியா. 2

வள்ளுவன்என்று ஒப்புயர்வுஇல் மாட்சிமிக்க புலவனால்
கொள்ளை நீதி குவலயத்துக்கு உரைத்ததுஎங்கள் இந்தியா. 3

உயிரினும் சிறந்துஉயர்வது ஒழுக்கம்என்றே உலகெலாம்
செயிர்அறத் திகழுமாறு செப்பியதுஎம் இந்தியா. 4

நாகரிகம் இன்னதுஎன்று நளிர்கடல்சூழ் நாடுஎலாம்
வாகுடனே அறியஅன்று வகுத்துஅளித்தது இந்தியா. 5

காதல்,வீரம், கற்பு,மேன்மை, கருணை,ஆதி யாவையும்
ஆதிநாள் வகுத்துஉரைத்தது அருமைகொண்ட இந்தியா. 6

வானமீன் அளக்கவல்ல மாண்புமிக்க அறிஞரை
ஏனை நாடு அளிக்குமுன்னர் ஈன்றதுஎங்கள் இந்தியா. 7

விலைமதிப்பில் பண்டைநாள் மேதினியோர் மெச்சிட,
எலிமயிரால் ஆடைநெய்தது ஈடில்எங்கள் இந்தியா. 8

கலைவளர்த்தே அறம்பெருக்கிக் கருணைவாழ்வு கண்டுஎலாம்
நிலையிலாமை என்றுஅறிந்து நேர்மைகொண்டது இந்தியா. 9

உலகந்தன்னை இயக்குவிக்கும் உண்மையான ஒருபொருள்
அலகில்ஆற்றல் வல்லதுஎன்று அறிந்தது எங்கள் இந்தியா. 10

---

ஆங்கீரச ஆவணி 11உ 26—8—1932

# 29. காதல் மறுமணம்

## வாராமைக்கு இரங்கல்

மணம் பேசி முடிவு செய்த காதலன் வாராமைக்கு வருந்தி, காதலி தோழியிடம் கூறுவது.

என் அகம் தொட்ட அவன் — சகியே!
ஏனோ வந் தான் இலேயே;
சொன்ன படிபுரிவார் — மோகனன்
தொண்டர் என் பதுபொய்யோ?
"கன்னலே தெள்ளமுதே! — உனையே,
காதல் மணம்புணர்வேன்;
உன் துயர் தீர்த்திடுவேன்; — கைம்மையை
உடைத்திடுவேன்" என்றிட்டான். 1

காந்திமேல் ஆணைவைத்து, — சகியே!
கருத்துரு கிமொழிந்தான்;
"ஏந்தும் எழில்இளமை — உடைய
இன்கனி கள், அழுதே
வீழ்ந்திடல் நான்சகிப்பேன்; — கனியே!
விதிக்கும் விதியாவேன்;
காந்தையர் பேரொளியே! — கருத்திற்
கவலை ஒழித்திடு" என்றான். 2

வாராது ஒழியானே — சகியே!
வந்ததுளத் தீத்துயரோ?
பேரா இடும்பையையும் — புரியப்
பின்வாங்கு வரோ? பெற்ற
தீராத காதலுடைத் — திருவைச்
சித்ரவ தைபுரிவோர்;
ஆரடி செய்திசொல்வார் — சகியே!
ஆற்றிட என்தனக்கே? 3

ஆங்கீரச புரட்டாதி 1௳ 16—9—1932

பச்சிளங் கன்னியரைச்—சகியே!
பருவம்உ ருமுன்னமே
இச்செகத்து இன்பம்இன் றிப்—புவியில்
ஏங்கிப்பு ரண்டுஅழச்செய்
நச்சை நிகர்கொடிய—சகியே!
நல்அறம் நன் றுஅறியா
அச்சம்இ லாமனிசர்—எதுவும்
ஆற்றத் துணிவாரடி! 4

தூய கதர்உடுத்தி—அடி!என்
சுந்தரன் பண்டுஒருநாள்,
மேய பொழிலிடையே—அமுதை
வீசும் முழுநிலவில்,
நாயகன் மேல்ஆணை—உரைத்துஎன்
நல்திருக் கையடித்து,
"நாயகிநீ" என்றிட்டான்—சகியே!
நாள்பல சென்றதடீ! 5

இன்னும் வரக்காணேன்—சகியே!
என்செய்வது என்றுஅறியேன்;
அன்னமும் செல்லவில்லை;—அடி!என்
ஆவி துடிக்குதடி!
மன்னவன் வாரானே—சகியே
வாழ்வுஎற்குத் தாரானே?
என்னசெய் வேனடிநான்—சகியே!
யார்துணை என்தனக்கே! 6

அமிழ்தும் புளிக்குதடி!—சகியே!
அதனிலும் மிக்கசுவைத்
தமிழும் கசக்குதடி!—சகியே!
சந்திரன் கொல்லுகிறான்!
கமழுதென் றலெனும்—மலையக்
காற்றும் வெதுப்புதடி!
சமையும் பொருள்களெலாம்—சகியே!
தையலை வாட்டுதற்கோ! 7

ஓதத் திரைக்கடல்தான்—சகியே!
உறங்கித் தொலைக்காதோ!
மாதுயர் நல்கும்இந்த—சகியே!
மதியும் தொலையாதோ!
தீதை எனக்குஅளிக்க—அடியே!
தென்றல்ஏன் வந்ததடி!
காதல்என் பதுநல்ல—உயிரைக்
கவரும் எமனோடீ! 8

செந்தமிழ்த் தீங்குழலும்—சகியே!
செவிக்கு விடம்எனக்கே!
அந்தி வருமாலை—அடி!என்
ஆவி குடிக்குதடி!
அந்தக் குயில்ஓசை—அகத்தை
ஆட்டி அலைக்குதடி!
எந்த விதம்சகிப்பேன்!—சகியே!
என்உயிர் வாராக்கால். 9

மாழைக் கருவிழிகள்—உறங்கும்
வகையை யான்அறியேன்;
ஏழைபடுந்துயரை—அடி!என்
இன்னுயிர்க்கு யார்உரைப்பார்?
தோழி,உரையாயோ!—சொலிஎன்
சுந்தரற் கூட்டாயோ!
வாழிநீ பல்ஊழி—அடி!என்
மருந்தை அழைத்திடுவாய். 10

# 30. கிளிவிடு தூது

காதலி காதலனிடம் கிளியைத் தூது அனுப்புவது.

பல்லவி

சொல்லி அழையாயோ—கிளியே!
சொல்லிநீ கூவாயோ!

அனுபல்லவி

சிந்தை புகுந்தஎன்கண்—மணிக்குச்
சேயிழை யாள்நிலை செப்பிக் கலந்திடச் (சொல்லி)

கட்டழகி உனை நான்—கடல்மண்
காற்றுவிண் உள்ளவரை—கனியே!
விட்டுப் பிரிவதில்லை—எனவே
விண்டிட்ட பண்டை மொழியை மனங்கொளச் (சொ)

எடுக்கும் பிறவிதொறும்—இனியாய்!
இணைபிரி யேன்உனை நான்—என,அன்று
இயம்பிய இன்உரையை—எடுத்தே
ஏல மொழிந்துஇவண் எய்திக் கலந்திடச் (சொ)

நீலக் கடற்கரையில்—மாலை
நேரம் நிலவினிலே—அடி,என்
சோலைக் குயிலே!உன்—கொடிய
துயர்,களை வேன்எனச் சொன்ன மொழியினைச் (சொ)

இளமையும் நலனும்,ஐயோ!—வறிதே
இன்ப நுகர்ச்சிஇன்றி—அழுதே
கழிந்திடல் நன்றல,ப்புன்—கைம்மையைக்
கண்ட,துண் டம்செய்வோம் என்றிட்ட வாய்மையைச் (சொ)

ஆங்கீரச புரட்டாதி 1, 16—9—1932

வழிகாட்டு வோம்நமர்க்கு—இதில்நீ
மனப்பயம் கொள்ளாதே—அழகே!
இழிவிதில் சிறிதும்இல்லை—எனஅன்று
இயம்பிய இன்னுரை தன்னை எடுத்து,நீ (சொ)

அன்றுஎன் அகம்கவர்ந்தே—இற்றைநாள்
அன்னியர் போல்இருத்தல்—சிறிதும்
நன்றல; சொன்னபடி—கனியை
நண்ணி நலங்குடித்து உய்ந்திட வாஎன்று (சொ)

அந்தி நிலவுஒளியில்—அலைக்கை
அடித்து நனிமுழக்கி—அலறிக்
கொத்தளிக் குங்கடலின்—கரையில்
கூறிய வாறுஇங்கு கூடிட வாஎன்று (சொ)

சோலை யிடைஒருநாள்—மலர்க்கை
தொட்டுஅதன் மீதுஅடித்து—தோகையே!
ஞாலம் நடுங்கமணம்—புரிவேன்
நாயகி நீஇனி என்றுஇட்ட நல்லுரை (சொ)

தன்நலம் நாடிஅல—மகளிர்
இனம்நனி வாழ்ந்திடவே—எனஉள்
மன்னிய காதலற்குஎன்—மறுஇல்
வாய்மை உணர்த்தி மணம்புணர் வாய்என்று (சொ)

காந்தியின் மெய்யடியார்—கழறும்
கட்டுரை கடத்தல்இல்லை—என,யான்
மாந்தும்என் காதலனும்—களிற்றை
வந்துஉன் கரும்பினை உண்டு மகிழ்என்று (சொ)

# 31. கோவில் திறவு

எண்சீர்க் கழிநெடில் ஆசிரிய விருத்தம்

*எங்கும்நிறை ஒருபொருளைச் சிலையிற் காணும்*
*இயல்புடையீர் நீர்என்னில், இறையின் அன்பீர்!*
*பங்கம்இலா இறைபடைப்பு,இப் பார் அனைத்தும்*
*பல்குஉயிரென்று அறிவீரேல், பரமன் தன்னைப்*
*பொங்குபெரும் காதலொடு போற்றப் போதும்*
*புதல்வர்தமைப் பிறப்பதனால் புலையர் என்று*
*தங்கும்இறை கோவிலிலே புகவி டாது*
*தடுத்திடுதல் அறமாமோ! தகவு தானோ!!* 1

*'அங்கம்எலாம் குறைந்துஅழுகு தொழுநோய் கொண்ட*
*ஆஉரித்துத் தின்றுழலும் புலையர் ஏனும்*
*கங்கைவார் சடைக்கரந்தார்க்கு அன்பர் ஆகில்'*
*கடவுள்அவர் காண்என்ன, நாவின் வேந்தப்*
*புங்கவன்அன்று அருளுமொழி மறந்தீர் கொல்லோ!*
*பொய்தீர்அன் பொடுபணியப் போவார்க் கெல்லாம்*
*திங்கள்இளங் குழவிவளர் செய்ய வேணிச்*
*சிவன்உறையும் திருக்கோவில் திறப்பீர்! சீரீர்!!* 2

*அன்புசிவம் என்றுஉரைத்தார் அறிஞர் எல்லாம்;*
*அதுமெய்யே எனநீவீர் அறிவீர் ஆகில்,*
*என்புஅணிந்து கூத்தாடும் இறைவன் அன்பீர்!*
*இறைஉருவம் கண்டுதொழ விரும்பு வோரைப்*
*புன்பிறப்பே காரணமாத் தடுத்தி டாதீர்!*
*புலையர்எனப் பிறப்பில்உண்டோ? புனிதன் வாழும்*
*மன்பெரிய திருக்கோவில் வணக்கம், எல்லா*
*மக்களுக்கும் பொதுவாக வைப்பீர்! வாழ்வீர்!!* 3

ஆங்கீரச புரட்டாதி 22, 7—10—1932.

கொண்டல்வணன் அடியவரைப் பழிப்போர் தாமே
குவலயத்துப் புலையர்எனக் குறித்துப் பண்டு,
தொண்டர்அடிப் பொடிஆழ்வார் வாய்மலர்ந்து
சொன்னஅறம் தனைமறந்தீர்! தூய மாலைத்
தெண்டன்இடச் செலும்அடியார்த் தடுத்தி டாதீர்!
தீய,புலைப் பெயர்தாங்கிர்! திருமால் பாதத்
தொண்டுடையீர்! தடைஇன்றி அடியார்க்கு எல்லாம்
தூயதிருக் கோயில்களைத் திறந்து தாரீர்! 4

வம்புஅவிழ்தா மரையாளை மார்பில் வைத்த
வனப்புடைய உலகம்எலாம் காக்க வல்ல
செம்பவள வாய்த்திருமால் அடியீர்! இந்தச்
செகமுழுதும் காக்கும்ஒரு மாலே, நீங்கள்
நம்புபெரும் கோவிலிலே உள்ளான் என்னில்,
நாடாமல், பொருள்இன்றி அவன்ப யந்த
தம்புதல்வர் தமைத்தடுத்தல் தகுதி ஆமோ?
தாழ்க்காது தடைஎடுப்பீர்! சால்பு வேண்டின். 5

கிள்ளைமொழிச் செய்யவாய் முல்லை மூரல்
கெண்டைவிழித் திங்கள்நுதல் கேடி லாத
வள்ளிஎனும் குறக்கொடியைக் காதல் கொண்டு
மணம்புணர்ந்தான் மால்மருகன், அரனுர் தந்த
புள்ளிமயில் வேலன்,எனப் புராணம் சொல்வீர்!
பொற்கொடிவள் ளியைவைத்துப் பூசை செய்வீர்!
எள்ளிஅவள் தனைவளர்த்தோர் அவளைக் காண
ஏலாமல் தடைபுரிதல் இனிதோ சொல்லீர்! 6

மோதுபெரும் வடிவேலைக் கையில் தாங்கி
முருகன்அவன் நிற்பதற்குப் பொருள்நீர் காணீர்!
தீதுடையார் தமைஒறுக்க அன்றோ அந்தத்
திருக்கோலம்! தீண்டாதார் என்றே அன்னுன்
காதலியின் சுற்றத்தார் முதலி னோரைக்
கருதிநீர் வீணுக ஆல யத்துள்
போதரற்குத் தடைபுரியும் புன்மை தன்னைப்
பொறுத்திடான்; விடும்இதனை; புகழும் உண்டாம். 7

உலகம்எலாம் பெற்றெடுத்தாள் அன்னை என்றே
உரைத்திடுவீர்! அவள்பயந்த மக்கட் குள்ளே
சிலர்அவள்வாழ் கோவிலுக்குள் சென்று, தாயைத்
தெரிசித்தல் கூடாதுஎன்று உரைப்பீர்! ஐயோ!
நலம்ஒன்றும் அறியீர்கொல்! நல்கும் மாதா,
நடத்துவளோ வேறுபட மக்கள் தம்மை?
தலம்ஏற்காது உமதுமொழி! தேவி கோவில்
தமைத்திறப்பீர்! எல்லோர்க்கும் தடைஇ லாமல். 8

நந்தனைத்தொழுவீர்! பாணழ் வாரை
நல்அரங்க நாதர்எடுத்து ஆண்டார் என்று
சொந்தமாச் சொல்லிடுவீர்! அன்பு மேனித்
தூயபெரும் கண்ணப்பர் ஆதி யோரை
வந்திப்பீர்! அன்னபெரி யோர்கள் எல்லாம்
வந்துதித்த மரபினரைத் தீண்டார் என்பீர்!
இந்தமொழி ஏலாது! கோயில் எல்லாம்
இனித்திறக்கத் தாழ்க்காதீர்! இறைவன் அன்பீர்! 9

பிறப்பதனுல் தீண்டாதார் என்று கொண்டு
பெரியதிருக் கோவில்எலாம் புகவி டாது,
மறுத்திடுதல் அறமன்று; தீண்டல் ஆகா
மாண்பில்செயல் வாய்ந்தோர்எக் குலத்தார் ஏனும்
புறக்கணிப்பீர்! மிக்கசெயல் பூண்டோர் யாண்டுப்
போதரினும் புகவிடுமின்! பொருள்இல் செய்கை
அறக்களைமின்! பிறப்பதனுல் தீண்டார் என்னல்
அறிவுலகம் ஏருதால்! அறிவை ஆள்வீர். 10

# 32. வீர நாடு

காவடிச் சிந்து

பூமகள் மாமுடி யாகமுன் நாளில்
பொலிந்த வளநாடு—புகழ்
நாமகள் நன்னடம் ஆடக் கலைசெறி
நம்தவ நன்னாடு. 1

நினைப்பதற் கும்எட்டா நீள்நெடு நாள்முனர்
நிகர்ஒன் றிலாதுவளர்—புவி
அனைத்தும் வியந்திட வீரம் உலகுக்கு
அளித்த வளநாடு. 2

மக்களுக் காகவே மன்னவர் வாழ்வுஎன
மனம்அதிற் கொண்டபுகழ்ப்—பெரு
மன்னவர் பற்பலர் ஆண்டிட வாய்ந்தது
மாண்புடை நம்நாடு. 3

வாள்தடங் கண்ணியர் இன்பம் துறந்து,தம்
வாழ்வுமண் தந்தைக்கா—விட்ட
விட்டுமன் என்றபேர் வீரம் செறிதவ
மேலவன் சீர்நாடு. 4

சிறுமை பலப்பல செய்த சிறியவர்
தீமை,பன் னுள்பொறுத்த—நிறை
பொறுமை யுடைய தருமன் என்னும்புகழ்ப்
புண்ணியன் பொன்னாடு. 5

"தொட்டுத் துரோபதை மாதைத் துகில்உரி
துச்சா தனக்கொடியோன்—உடல்
பட்டிடச் செய்துசெந் நீர்குடிப் பேன்"எனும்
பார்த்திபன் வாழ்நாடு. 6

ஆங்கீரச ஐப்பசி 13, 29—10—1932

காதலி பேர்எழில் கண்டுஅவ ளைப்பெறக்
கயமைச் செயல்கள்எலாம்—செய்த
பாதகர் தங்களை மோதி அழித்தநற்
பற்குனன் வாழ்நாடு. 7

"தொடையில் இருத்திடச் சொன்ன சுயோதனன்
துண்டு படுங்களத்தே—அவன்
உடல்உகு நீர்கொடு குழல்முடிப் பேன்" எனும்
ஒருமறப் பெண்நாடு. 8

வஞ்சனை செய்து,தன் தேவி தனைச்சிறை
வைத்த இராவணனை—ஒரு
தஞ்சம் அறமடித் திட்ட தயரதன்
தன்மகன் சீர்நாடு. 9

தாய்உரை கொண்டு,தந் தைதரு தாரணி
தன்னை வெறுத்துமுன் னோன்—தனை
மேய்அவன் நல்அடி மாமுடி சூடிய
மேல்பரதன் நாடு. 10

சோரனுக் குத்துணை செய்த அவன்மகன்
தொல்இந் திரசித்தன்—எனும்
வீரன் தலைதரை வீழ்த்தும் இளையவன்
வீரம் செறிநாடு. 11

தன்ஒரு மைந்தனின் மார்பத னில்தேர்
தான்விடுத் தேமடித்த—நீதி
மன்னவன் மாமுறை கண்ட மநுஎனும்
மாண்புடை யான்நாடு. 12

பெற்ற மகன்உயிர் விட்ட களம்போய்ப்
பிணக்குவை தான்புரட்டி—மகன்
இற்ற உயர்ச்சிகண்டு ஈன்றதி னும்மகிழ்
ஏந்திழை யாள்நாடு. 13

தன்கண வன்தவறு இல்லா தவன்எனச்
சபையில் வழக்குரைத்துத்—தமிழ்
மன்னவ னைப்பழி வாங்கிய கண்ணகி
மங்கை பெருநாடு. 14

குற்றம் இல் கோவலன் தன்னைக் கொலைசெய்
கொடுமை உணர்ந்தவுடன்—உயிர்
சற்றும் தயங்காது விட்ட பெரும்புகழ்த்
தமிழ்க்கோன் அருநாடு. 15

புறவின் பொருட்டுத் தசைஅரிந் திட்ட
புகழுடை மன்னவனும்—சிபி
அறமுடைத் தண்மையன் ஆண்ட சிறப்புடை
அணிப்பர தநாடு. 16

காதல் யசோதரை இன்பக் கடலைக்
கடந்து, பெருந்திருவை—விட்டுப்
போதி யிருந்து,அறம் ஓதிய நாதன்எம்
புத்தன் தவநாடு. 17

பிறப்புரி மைசுய ஆட்சி எனுமறை
பேசிய பேர்அறிஞன்—உயர்
சிறப்புடைப் பாலகங் காதரன் என்றஎம்
திலகனின் தாய்நாடு. 18

அன்றும்இன் றும்என்றும் அவனி தனில்இணை
அருமை எனஉயர்ந்த—அறம்
நன்அறி நாயகன் மோகன தாசன்எம்
நல்தவன் வாழ்நாடு. 19

எல்லையில் குண்டுகள் இல்லாப் பழையநாள்
எவரும் நடுங்கிடவே—போரில்
வில்லில் சரந்தொடுத்து உலகு கலக்கிய
வீரர் மலிநாடு- 20

# 33. விடுதலைப் பாடல்

(அறுசீர் விருத்தம்)

மாதாநல் அரசுபெற நீபுரிந்த
 செயல்இந்த மாநி லத்தில்
யார்தாம்செய் தார்சொல்லாய்! எங்காந்தி!
 எவ்வுலகும் இணையே இல்லா
மேதாவி! இந்தியத்தாய் முடிசூடி
 அரியணையில் மிளிர்தல் இன்று
நீதான்நின் அருள்விழியால் கண்டுஉவந்து
 நீடூழி வாழி! வாழி!! 1

பாண்டவர்கள் அரசாண்ட தில்லிநகர்
 தனில்இன்று பார தத்தாய்
நீண்டபுகழ் அரியணையில் முடிசூடிக்
 கோல்ஓச்சி நேமி தாங்கி,
காண்தகுசீர்ச் சவகர்லால், வல்லபாய்
 இராசேந்தரர், காத்து நிற்ப,
ஆண்டுயர்தல் கண்டிட்டோம்; கண்படைத்த
 பயன்இன்றே அடைந்திட் டோமே. 2

(கண்ணி)

வீர சுதந்திரம் வேண்டிநின் றோம்;அதை
 வீறுடன் இன்றுபெற் றோம்-நல்ல
ஆரமுது உண்ணுதற்கு ஆசைகொண் டோம்;அதை
 அள்ளியே பருகுகின் றோம். 3

தாதாபாய் நௌரோசி சொன்ன சுதந்திரத்
 தாகத்தி னுல்துடித் தோம்-சுவைச்
சர்க்கரைத் தீம்பால் தேனெனும் சுதந்திரம்
 தான்அருந் திக்களித் தோம். 4

சர்வசித்து ஆடி 30, 15—8—1947

"பிறப்புரி மைசுய ஆட்சி"என்று அன்று
பெரியோன் திலகன்சொன் னான்-அதைப்
பெற்றுப் பெருமிதம் எய்திம கிழ்ந்து,இன்று
பீடுடன் விளங்குகின் றோம். 5

லாலா லசபதி போன்றவீ ரர்பட்ட
நலிவினால் அன்றோ நாம்-இன்று
மேலாம் வாழ்வினை மேவுகின் றோம்என
விண்வரை முழக்கிடு வோம். 6

வா. உ. சிதம்பர வள்ளலும் சுப்பிர
மணிய சிவாவும்அன் று-சிறை
மேவிச் செக்கிழுத் ததன்பய ன்அன்றோஇவ்
விடுதலை முழக்கமெ லாம். 7

ஆனந்த சுதந்திரம் அடைந்துவிட் டோமென்றே
ஆடினான் பாரதி தான்-அவன்
ஆனந்தக் கனவினை நனவினில் மெய்யே
அடைந்துவிட் டோம்இன் று. 8

அறுபத்து இரண்டுஆண் டாகக் காங்கிரஸ்
ஆற்றிய தியாகமெ லாம்-நன்கு
நிறைவுற்று இன்று நேர்ந்த சுதந்திரம்
நின்று நிலவிடு க! 9

காந்திம கான்பட்ட கட்டங்கள் கண்ட
கல்லும் கரைந்துரு கும்-அந்தக்
காந்திம கான்கண்ணால் காண விடுதலை
கண்டோம் கண்டோ மே. 10

தில்லி,கல் கத்தா, பம்பாய், சென்னைப்
பெருநகர்க் கோட்டைஎ லாம்—நம்
எல்லையில் லாப்புகழ் இந்திய நற்கொடி
ஏறிப் பறத்தல்கண் டோம். 11

பாரத மாதா மகுடம் புனையப்
பார்க்கும் பேறுபெற் றோம்—பரி
பூரணன் ஆணை தலைமேல் கொண்டுஇப்
பூமியை ஆண்டிடு வோம். 12

# 34. நாம் ஆர்க்கும் குடிஅல்லோம்

"நாம் ஆர்க்கும் குடியல்லோம்" என்றுஅருளி
    மணிமன்றுள் நடனம் ஆடும்
கோமாற்கே ஆளாகிக் கொய்ம்மலர்ச்சே
    வடிஇணையே குறுகி, உய்ந்த
பாமாலைத் தேவார நாவேந்தன்,
    காந்திஎனும் படிவம் கொண்டு,
பூமாது செய்தஉயர் தவப்பயனாய்
    அவதரித்த புதுமை கண்டோம். 1

நாவரசப் பெருந்தகையே காந்திஎனும்
    அருள்வடிவாய் நம்மை எல்லாம்
காவல்செயப் பிறந்து,அன்னை கட்டுண்ட
    தளைமுறிக்கும் கடமை பூண்டு,
பூஉலகம் வியக்கஒரு புதியமுறைப்
    போர்கண்டு, வெற்றி கொண்டு,
மேவுஅடிமைத் துயர்கொன்று விடுதலைவாழ்வு
    அளித்தது, இந்த மேலாம் நல்நாள். 2

என்அன்னையார் பேர்இன்பக் கடல்ஆடித்
    திளைத்தநாள்; ஈடுஇ லாத்தன்
பொன்அரியா சனத்துஏறித் தனக்குஉரிய
    பழம்பெருமை பொலிய, ஓங்கி,
மின்னும் மணிமுடிசூடி, அறஆழி
    தனிசெலுத்தி, மேலாம் எங்கள்
அன்னையவள் அரசிருந்த புனிதநாள்,
    ஆகஸ்ட்டு பதினைந் தாம்நாள். 3

*விரோதி ஆடி 31, 15—8—1949.*

சேவடி இணையே குறுகினோம்;கொய்ம்மலர்ச்
சேவடி இணையே குறுகினோம்.
அங்குஇங்கு ஆதபடி எங்கும் நிறைந்தவன்;
சங்கையில் மறைகளும் சாற்றுதற்கு அரியவன். (சேவடி)
ஐயன் அணிதில்லை அம்பலத்து ஆடும்
வையம் கடந்து வான் நிமிர்ந்து ஒலிக்கும், (சேவடி)
திருவரங் கத்தே யாவும் உணர்ந்துஉறங்கும்
ஒருவன்விண் தாண்டி ஓங்கி உலகளந்த, (சேவடி)
நாம்ஆர்க் கும்குடி அல்லோம் அல்லோம்;
பூமேல் இனிநாம் யார்க்கும் குடியல்லோம். (சேவடி) 4

நடமாடும் மேடையே உலகமெலாம்;
அவ்அரங்கில் நடனம் ஆடும்
மடவாரும் மைந்தர்களும் மற்றவையும்
கணந்தோறும் மாறி மாறித்
தடுமாறும் உலகியற்கை தனைக்காட்ட,
ஓயாது, தானே மன்றுள்
நடமாடும் பெருமானார் நாள்மலர்ச்சே
வடிஇணையே நணுகி னோமே. 5

எவ்உயிரும் இடுக்கண்உறின் உடன்அகற்றல்
இறைசெயல்என்று எவரும் காண
வவ்விய,வெம் முதலைவாய்ப் பட்டுஅலறும்
கரி,முன்னர் வந்து தோன்றிக்
கவ்விய,வாய் தனைஅகற்றி, யானையைமுன்
காத்தருளும் கடவுள், தூய
செவ்இதழ்த்தா மரைவாழும் திரு,வருடும்
சேவடியே சேர்ந்திட் டோமே. 6

அற்றவர்கட்கு அருமருந்தை, அவனிக்குஓர்
பெரும்பொருளை, அறத்தை, அன்பை,
கற்றவர்தம் தனித்துணையை, கருணைபொழி
மாமழையை, காந்தி தன்னை,
மற்றவரும் வணங்கும்ஒரு மணி மலையை,
வள்ளலை,நாம் வாழ ஈந்த
குற்றமிலா மெய்ப்பொருளின் கொய்ம்மலர்ச்சே
வடிஇணையே குறுகி னோமே. 7

# 35. இராஜன்பாபு-வரவேற்புரை

அகவற்பா

வருக! வருக!!ரா சேந்திரா வருக!!!
பெருகுக வாழ்நாள்! பீடுசால் நினக்கே;
"தோன்றில் புகழொடு தோன்றுக!" என்னுமாம்
ஆன்றசொற்கு இலக்கா அவனியில் வந்த
சான்றவர் தம்முள் தக்கோர் சான்றோய்!
இந்திய மாதா இருவிலங்கு அறுக்க
வந்திடு காங்கிரஸ் மன்னிய தலைவ!
அந்தோ! இயற்கையின் அடாத கொடுமையால்
இந்தமா நிலத்தார் யாவரும் உருக
வெந்துயர் அடைந்து வீழ்ந்த,பீ காருக்கு
எந்தை! நீ செய்த இயற்றஅரும் பணியைப்
பெரியஇவ் உலகில் பேசார் யாரே?
விரிகடல் பூவில் வியவார் யாரே?
படிதனில் உயர்ந்த பாரதத் தாயின்
முடிஉறை மணிகளுள் முதலமை வரிசையுள்
நடுஉயர் காந்தி நன்மணிப் பாங்கர்
வடுவிலாது ஒளிரும் வயிரமா மணியே!
இந்தியர் வாழ வந்துஅவ தரித்தோன்;
சிந்தனைக்கு எட்டான்; செய்தவன்; சீலன்;
உலகினை அன்பினால் ஆண்டிடும் இந்த
உலகினில் பெரியோன் உரை,செயல் பற்றி
இன்பம் துறந்தே இடர்பல தாங்கி,
மன்பதை வாழ்வே வாழ்வெனக் கொண்ட
பாபுரா சேந்திரப் பண்போய் வருக!
மாபெரும் காங்கிரஸ் வாழ்வே! வருக!
துங்கமார் கீர்த்தித் தூய! நின் வரவால்
எங்கள்மா நகரும் யாங்களும் களித்தோம்.
திங்கள்,விண் இரவி திகழும்நாள் காறும்
மங்கள மாகநீ வாழ்கபல் லாண்டே.

---

*காங்கிரஸ் தலைவர் இராஜேந்திரப் பிரசாத் அவர்களுக்குக் காரைக்குடி, செட்டியார் நலஉரிமைச் சங்கம் அளித்த வரவேற்புரை. 1935.*

# 36. சுபாஷ் சந்திர போஸ்

**அறுசீர் விருத்தம்**

*இந்தியத்தாய் விலங்கறுக்க எழுந்தபெரும்*
*படைத்தலைவா! இந்த நாடு*
*சொந்தஅரசு எய்துதற்குத் துணிந்துஅரிய*
*செய்கைபல சூழ்ந்த சூரா!*
*தந்தை,ஒரு காந்திஎனில், தாயெனவே*
*உனை நாடு தழுவி வாழ*
*வந்தசுபாஷ் சந்திரனே! மாதாவின்*
*விடுதலையை வந்து வாழ்த்தாய்!* 1

*பாண்டவர்கள் அரசாண்ட பாரதத்தார்*
*தலைமைபெறு பதியாம் தில்லி*
*ஈண்டி,நமது இந்தியரின் அரசுரிமை*
*நிறுவுவான் எழிற்போர்க் கோலம்*
*பூண்டு,பெரும் படைநடத்தி "தில்லிசலோ"*
*எனமுழக்கிப் போந்த நீதான்,*
*காண்டிலையே! தில்லியினில் நம்அன்னை*
*கொலுவிருக்கும் காட்சி தன்னை.* 2

*"வந்தேமா தரம்"என்னும் மாதாவை*
*வணங்கும்ஒரு மறையின் பின்னே,*
*"இந்தியா வெல்க"எனும் பொருள்அமைந்த*
*"ஜெய்ஹிந்"தை இசைத்தே, இம்பால்*
*வந்துஅரிய போர்புரிந்த தனித்தலைவா!*
*வல்லபாய், சவகர், இராச*
*இந்திரரும் பணிகேட்பத் தாய்அரசு*
*செய்கின்றாள்! எங்குற் றாய்நீ!* 3

*சர்வசித்து ஆடி 21, 6—8—1947*

பேராசைப் பெரும்போரால் பிடிப்புண்டு
தத்தளித்த பிறநாடு உற்ற
ஆராஅன்பு இந்தியர்தம் ஆவியோடு
உடல்பொருள்கள் அனைத்தும் காத்த
சீராளா! சிங்கை,இரங் கோன்,செய்கோன்
வாழ்மக்கள் தினமும் போற்றும்
பேராளா! மணிமுடியும் செங்கோலும்
பெற்ற,தாய் பெற்றி நோக்காய். 4

"செயற்கரிய செய்வர்பெரி யார்"என்ன
வள்ளுவனார் செப்பும் ஆற்றால்
தயக்கம்அறப் பெரியோய்! நீ என்றுஉன்னைச்
சாற்றுதற்குத் தடைதான் உண்டோ?
வியக்கஉயர் அறிஞரெலாம் விடுதலைக்கு
நீபுரிந்த விஞ்சை வீணோ?
செயக்கொடிநாட் டித்தாயார் முடிதாங்கி
அரசுசெயும் சிறப்புப் பாராய்! 5

"தில்லிசலோ" எனமொழிந்தாய்! நினைந்தபடி
முடிந்ததின்று! நமதே தில்லி!
"வெல்கஇந்தி யா"என்னும் "ஜெய்ஹிந்"தை
முழக்கினாய்! வெற்றி மேவி,
எல்லையில்சீர் இந்தியத்தாய், எழில்மகுடம்
புனைந்துசெங்கோல் இனிதின் ஏந்தி
நல்லரசு செய்கின்ற கண்கொள்ளாக்
காட்சியை,நீ நயந்து காணாய்! 6

# 37. அன்புச் செல்வம்

அன்பே சிவம்என அருளினர் அறவோர்;
அன்பே உலகினை அணைத்துப் பிணைப்பது;
அன்புஇலா யாக்கை என்புதோல் பண்டம்;
அன்புஇலா வாழ்க்கை துன்பம்ஆர் ஆழி;
‘அன்பினால் இந்த அவனியை வெல்லலாம்’

என்பதைக் கண்ணால் யாவரும் கண்டோம்;
‘அறத்தினை ஆக்கலே அன்பின் செயல்’எனல்,
அறிவிலார் கூற்று;அவ் அறம்செயல் அன்றி,
‘மறத்தினைப் போக்கவும் வல்லதாம் அன்பு’எனும்
வள்ளுவப் பெரியோன் மறையைமெய் ஆக்கினன்,

ஒள்ளிய சால்புஎலாம் ஓர்உருக் கொண்ட
தெள்ளிய காந்திச் சீரியோன். அம்மா!
அன்புஎனும் கோல்கொண்டு அவனியை ஆண்டான்;
என்பெரும் தெய்வம்! எம்மான் காந்தி!
அறமே புரிந்தான்; அதுசெயா தாரையும்

அன்பினால் வென்றான்; அண்ணல்எம் காந்தி!
முன்தமிழ் வள்ளுவன் முழங்கிய அன்பை,
பின்வரு காந்தி பிறங்கிடச் செய்தான்;
அடைக்கும் தாழ்ப்பாள் அன்புக்கு உண்டோ?
மடைகடந்து ஓடும் வார்புனல் அன்பு.

உள்ளத்து உள்ளே உருகி ஊற்றெடுத்து
வெள்ளமாப் பாயும் மிகுநீர் அன்பு.
அன்பு மனத்தில் அரும்பும் நெகிழ்ச்சியே;
அன்பே அனைத்தினும் தலைப்படு நெகிழ்ச்சி.
சித்திரைத் திங்கள் சேர்நடுப் பகலில்

எத்திசை நோக்கினும் காய்ச்சிய இரும்புஎனத்
தொட்ட பொருள்எலாம் சுடும்கடும் கோடைப்
பட்ட வெயில்,தன் பால்வரு புழுவைப்
பொசுக்கிக் கொல்வது போல,அன்பு இலாரை
நசுக்கிச் சாய்க்குமே நல்அறக் கடவுள்.

‘அன்பைப் பொருளா அணிந்த மேலோர்’
‘என்பும் ஈகுவர் பிறருக்கு’ எனவே
முன்பு மொழிந்தான் முதுதமிழ்ப் புலவன்;
என்பும் ஈந்தநல் கதையும் இங்குஉண்டு.
தன்னிடம் அரும்பித் தாய்பால் தந்தைபால்

தன்பெரும் வாழ்வு தழைத்திட வாய்த்த
சால்புடை வாழ்க்கைத் துணைபால் சார்ந்து,
மேல்வரு மக்கள்பால் மேம்பட நின்று,
சுற்றம் தழுவித் தொல்உலகு எல்லாம்
பற்றி வளர்வதே பாங்குறும் அன்பு.

அன்பு குறிக்கும் அருமைப் பொருள்களே,
என்பு,ஈ ததீசி, எங்கள் கண்ணப்பன்,
மன்பதைக்கு அருள்செய் வள்ளுவன், புத்தன்,
இன்பதா மாண்ட ஏசுவும் காந்தியும்.
விண்ணவர்க்கு இறையா வீற்றிருந் தாலும்,

மண்ணெலாம் ஆளும் மன்னரே எனினும்,
அன்புஇலார் ஆயின் அவர்தம் அரசும்
தன்பெரு வாழ்வும் பாழே! சரதம்.
பொன்னும் பொருளும் போகமும் துய்க்கும்
பின்னிய கோடி பெற்றவர் ஏனும்

மன்உயிர் மாட்டுஅன்பு உற்றிலர் ஆயின்
அன்னவர் வாழ்நாள் அவமே! அவமே!!
நூல்பல கற்றே நுண்அறிவு உற்ற
மேலவர் ஆயினும் மேதினி யோர்பால்
ஏலும்அன்பு இலரேல் எல்லாப் படிப்பும்

காலக் கொலையே; கருதுவீர் இதனை!
அன்பினால் உயர்ந்தார் அடியார் எல்லாம்.
அன்பினால் சிறந்தார் ஆழ்வார் பலரும்.
அன்பினால் பெருக்கம் அடைந்தார் அறிஞர்.
அன்பதே அன்றோ அந்தணத் தன்மை.

தன்ஆர் உயிரெனத் தன்தாய், தந்தை
பொன்ஆர் உயிரென வாழ்க்கையில் புகுந்த
மன்ஆர் உயிரென வாய்ந்த,தன் மக்கள்
இன்ஆர் உயிரென, எல்லா உயிரையும்
அன்பினால் கட்டி, அவனியில் உயர்ந்தே

இன்பநல் வாழ்வுக்கு இலக்கியம் ஆமின்!
அன்புஇலாத் துன்ப வாழ்க்கையை அறுமின்!
அன்புஉடை இன்ப வாழ்க்கையை அடைமின்!
அன்பு தனக்குஇணை அன்பே, பிறிதுஇலை;
உலகில் உயர்ந்தது அன்புஎனும் ஒன்றே.

அலகில் பெரும்புகழ் அன்பிலே மலரும்;
செல்வம் பலவும் சிறந்து கிடக்கும்;
செல்வ உலகில் சிறந்த செல்வம்;
செல்வத்துள் எல்லாம் சிறந்தநற் செல்வம்,
அன்புச் செல்வமே! அன்புச் செல்வமே!

பலப்பல செல்வம் படைக்கினும் உளத்தில்
தலைப்படும் அன்புஆம் தனிப்பெரும் செல்வம்,
நிலைப்படாது ஆயின் நீள்பிற அனைத்தும்
வீழுமே; அதனால் மேம்படு செல்வம்ஆம்
வாழிய! அன்புஎனும் செல்வம் வாழியவே!

# 38. காந்தி இரங்கற்பா

## அறுசீர் விருத்தம்

அடிமைஎனும் விலங்குஅகற்றி அன்னைதனை
அரசாள அமைத்த ஐயா!
மிடிமை,பிணி பகைஅனைத்தும் வீழ்த்துதற்கு
வீறுகொண்டு நின்ற மேலோய்!
கடிதினில்நீ மறைந்தனையே! நின்கருணைக்கு
இதுதகுமோ? காந்தி வள்ளால்!
படியில்நிகர் இல்லாநின் அருள்வடிவத்
திருமேனி பார்ப்பது எங்கே? 1

ஐயோஎன்று உலகுஅலறத் தில்லிநகர்
யமுனைநதிக் கரையில் உன்தன்
மெய்,தீயில் வெந்ததுஎனல் அமைந்திடுமோ?
அறம்அனைத்தும் வெந்த தீயில்;
பொய்தீர்ந்த பொன்மேனி குடியிருந்த
புண்ணியமும், பொறையும், அன்பும்
மெய்யோடு வெந்தனவே! மேதினியோர்
உள்ளமெலாம் வெந்த தீயில். 2

மந்திரிமார், முடிமன்னர், மாபெரிய
தலைவரெலாம் வந்து வந்து
சந்ததமும் நினதுதிருச் சந்நிதியில்
தலைசாய்த்துத் தாழ்ந்து நிற்பச்
சிந்தனையை நின்றுருக்கும் செகமதிக்கும்
பெருவாழ்வு போதும் என்றே
இந்திரனூர் அடிவணங்கி எதிர்கொள்ளப்
பரமபதம் எய்தி னாயோ? 3

அடிகள் மறைந்தது 30—1—1948.

ஆண்டவனுர் வாழ்க்கைநாள் இவ்வளவே
எனவிதிக்கின் அந்த எல்லை,
தாண்டிவிட வல்லதுவோ? தனிஅறத்தின்
பெருமலையும் சாய்ந்தது அந்தோ!
ஈண்டுஎழுந்த பெருஞ்சுழியில் எதிர்த்துஏறும்
வலிபடைத்த எந்தாய்! காந்தி!
மாண்டுஅமைதி நீஉற்ருய், நாங்கள் ஒன்றும்
தோன்ருதே மயங்குகின்ருேம். 4

அன்புதவழ் முகம்எங்கே? அருள்சுரக்கும்
விழிஎங்கே? அமுதம் ஊறி,
இன்புஒழுகும் திருவாயில் இனிக்கின்ற
பேச்செல்லாம் எங்கே? எங்கே??
பொன்புரையும் திருமேனிப் பொலிவுஎங்கே?
மோகனப்புன் சிரிப்பும் எங்கே?
என்புஉருக்கும் திறம்எங்கே? எழில்உகுக்கும்
பெருங்காந்தி எங்கே? அந்தோ! 5

ஆயிரம்ஆண் டுக்குஒருகால் அவதாரம்
செய்திடுவர் பெரியார் என்ப;
நீ,அவருள் ஒருவன்எனல் நிறைமதிநேர்
மின்மினிஎன்று உரைப்பது ஒக்கும்;
மாஇருஞா லத்தினிலே நின்போல
வாழ்ந்திட்டான் ஒருவன் உண்டோ?
தாயனையாய்! தண்ணளியே! சத்தியமே!
தவப்பழமே! தன்னேர் இல்லாய்! 6

பண்கொண்ட குழல்ஊதிப் பசுக்காத்த
திருமாலும், பங்கில் பச்சைப்
பெண்கொண்ட பெருமானும், பிரமன்எனும்
மறையோனும், புத்தன், ஏசு,
மண்கொண்ட வள்ளுவனும், மற்ருெழிந்த
பெரியோரும் ஒன்ருய் வந்த
கண்கண்ட தெய்வம்எனும் காந்திதனை
இழந்திட்டோம் அந்தோ! அந்தோ!! 7

## வாழி

காந்திஎனும் கருணைபொழி கவின்மேகம்
வாழ்க!உல கத்து வாழும்
மாந்தரொடு பல்உயிரும் வாழ்க!அறம்
யாவும்நனி வாழ்க! வாழ்க!
வாய்ந்தபுகழ் கொண்டுஅன்று வாழ்ந்தபெரும்
பாரதத்தாய் வாழ்க! நாங்கள்
ஏந்து,தமிழ் வாழ்ந்திடுக! எழிலாரும்
அறவோர்கள் என்றும் வாழ்க!



| பாட்டு முதல் | பக்கம் | பாட்டு முதல் | பக்கம் |
|---|---|---|---|
| அகழ்வாரை | 6 | அன்பு கயிறு | 203 |
| அக்கமதில் | 210 | அன்பு சிவம் | 261 |
| அங்கமெலாம் | 261 | அன்புதவழ் | 277 |
| அச்சமென்பது | 251 | அன்புபொறை | 226 |
| அஞ்சாமை | 89 | அன்பே | 274 |
| அஞ்சொல் இள | 186 | அன்று அலர்ந்த | 208 |
| அடிமை எனும் குறை | 122 | அன்று என் | 260 |
| அடிமை எனும் | 276 | அன்று புத்தன் | 255 |
| அடிமை வாழ்வு | 250 | அன்றும் இன்றும் | 266 |
| அடியேன் தனை | 158 | அன்னமே | 233 |
| அண்ணலே | 235 | அன்னை எனினும் | 54 |
| அண்ணல் உயர் | 93 | அன்னை நோய் | 196 |
| அந்தணர் | 19 | அன்னை விலங்கு | 203 |
| அந்திநில | 260 | ஆக்கல் | 243 |
| அப்பெரியோன் | 2 | ஆசை அற | 86 |
| அமிழ்தமொழி | 186 | ஆசைக் | 237 |
| அமிழ்தும் | 257 | ஆடகவரை | 192 |
| அமுதம் அன்ன | 197 | ஆடாமோ | 202 |
| அமைச்சர்க்கு | 99 | ஆடின மயில் | 183 |
| அமைச்சன் என | 7 | ஆடுமின் | 138 |
| அம்பலத்தே | 213 | ஆடும் மயில் | 240 |
| அம்மாசிறை | 204 | ஆணுக்கும் | 240 |
| அய்ய | 30 | ஆணை அருந்தவ | 161 |
| அரிய உலகு | 249 | ஆணை உரைத் | 133 |
| அரிய வினை | 214 | ஆண் உயர்வு | 248 |
| அரு மருந்து | 126 | ஆண்டவனார் | 277 |
| அருமை அழகு | 202 | ஆண் பெண் | 237 |
| அருமைத் தமிழில் | 241 | ஆயிரம் | 277 |
| அருமையுடை | 219 | ஆய்தந்த | 70 |
| அருளே இனித்த | 158 | ஆய்ந்த சொலார் | 195 |
| அருளை அறத்தை | 120 | ஆய்ந்து தெளி | 101 |
| அலகிலா | 248 | ஆவியே | 192 |
| அற ஆழி | 199 | ஆழி கிடக்கு | 247 |
| அறம் தழைக்க | 252 | ஆற்றல் என்பர் | 211 |
| அறம் தானே | 237 | ஆற்றல் நிறை | 232 |
| அறம் மலி | 34 | ஆன இந்த | 43 |
| அறிவுடை | 196 | ஆனந்த | 268 |
| அறுபத்து இரண்டு | 268 | இகத்தில் | 25 |
| அறை சகம் | 194 | இச்சை நோய் | 88 |
| அற்புதத் | 241 | இட்டம் | 243 |
| அற்றவர்கட்கு | 270 | இத்தரை செழி | 24 |
| அனிச்சமும் | 151 | இத்தரையில் எந் | 238 |
| அன்பால் உலகை | 15 | இத்தரையில் எல்லா | 248 |
| அன்பால் பகைமை | 61 | இந்த உலகினில் | 240 |
| அன்பால் பிணை | 104 | இந்த உலகினில் | 244 |

| பாட்டு முதல் | பக்கம் | பாட்டு முதல் | பக்கம் |
|---|---|---|---|
| இந்தியத்தாய் இரு | 198 | இன்பம் | 62 |
| இந்தியத்தாய் சமம் | 132 | இன் மழலை | 186 |
| இந்தியத்தாய் | 272 | இன்னசெய்கை | 42 |
| இந்தியத்தாய் வயிற்றில் | 228 | இன்னபுகழ் | 1 |
| இந்தியத்தாய் விலங்கை | 235 | இன்று | 14 |
| இந்திய நாட்டி | 229 | இன்னும் | 257 |
| இந்தியர் ஆர் | 29 | ஈசன் | 16 |
| இந்தியர்க்கு வாழ்வு | 225 | உடலினை | 180 |
| இந்தியர்க்கு வாழ்வு | 63 | உடல் ஈவேன் | 211 |
| இந்தியாவை | 253 | உணர்ச்சிதனை | 254 |
| இந்திரசித்து | 236 | உணவை | 111 |
| இந்து முகமதி | 50 | உண்டி | 116 |
| இந்து முசல் | 50 | உண்ணாது | 75 |
| இந்த்யர் | 43 | உண்ணாமைகொண்ட | 171 |
| இந் நாள் | 16 | உண்ணாமைகொண்டி | 67 |
| இந்நில | 53 | உண்மை உறுதி | 230 |
| இப்புவி எலாம் | 236 | உம்பர் | 249 |
| இம்மிப் பிழை | 91 | உயர்கொள்கை | 175 |
| இயல் எடுத்து | 149 | உயர்வு | 251 |
| இயற்கை | 160 | உயிரினும் சிறந்து | 255 |
| இராமாயண | 236 | உயிரினும் போற்ற | 162 |
| இரு நிலம் | 12 | உயிர் வாழ் | 175 |
| இருந்தகைமை | 200 | உய்யாது | 110 |
| இரு மூன்று | 29 | உரிமை | 251 |
| இருவர் இணைந்து | 248 | உலகம் எலாம் | 263 |
| இலகுபுவி | 178 | உலகம் எலாம் படைத் | 211 |
| இலக்கியம் | 238 | உலகம் செழித் | 247 |
| இலது என்று | 145 | உலகம் தன்னை | 255 |
| இலை உமை | 153 | உலகம் தனை | 238 |
| இவ் உலகைக் காந்தி | 74 | உலகம் புகழும் | 188 |
| இழிவுபிறன் | 156 | உலகவர் | 13 |
| இழுக்கல் | 197 | உலகின் மொழி | 232 |
| இழுக்காக | 39 | உலகில் பெரியா | 236 |
| இழை ஆயி | 39 | உலகுயிர்கள் | 213 |
| இளங்கதிர் | 183 | உழவுத்தொ | 117 |
| இளங்கிளி | 123 | உள்ளத்தால் | 207 |
| இளமையும் | 259 | உள்ளத்து உயர்வே | 95 |
| இறை மனம் | 28 | உள்ளத்துறவோன் | 77 |
| இறை மைதனை | 238 | உறுதி கடை | 203 |
| இறையை | 238 | உற்ற நோயை | 198 |
| இனிப்பிறவி | 20 | உற்றவரை | 108 |
| இனிமை | 22 | ஊழி நாள் | 181 |
| இனியவன் | 150 | ஊழி பெயர் | 98 |
| இன் அமுதே | 136 | ஊன் ஒடுக்கி | 46 |
| இன் நலமே | 162 | எக்குலத்தில் | 248 |

| பாட்டு முதல் | பக்கம் |
|---|---|
| எங்கட்கா | 174 |
| எங்கள் அரசினில் | 245 |
| எங்கள் உயிரனான் | 192 |
| எங்கள் உரிமை | 253 |
| எங்கள் நாட்டின் | 253 |
| எங்கள் நாட்டை ஏழை | 253 |
| எங்கள் நாட்டை நாங் | 253 |
| எங்கள் நாட்டை நாங் | 250 |
| எங்கும் நிறை | 231 |
| எங்ஙனம் | 243 |
| எடுக்கும் பிறவி | 259 |
| எட்டு | 242 |
| எண்ணாத | 103 |
| எத்தரையும் | 217 |
| எதிர் கால | 21 |
| எந்த உலகும் | 240 |
| எந்த வினையும் | 104 |
| எந்தாய் சிறந்த | 224 |
| எந்தாய் வருக | 31 |
| எந்திர பீரங்கி | 251 |
| எந்திரபீரங்கி | 254 |
| எப்பொருளை | 142 |
| எந்தை இரும் | 233 |
| எம்மை உல | 202 |
| எய்துசகம் | 3 |
| எரிந்தனை | 154 |
| எல்லா உலகும் | 96 |
| எல்லாமாய் | 11 |
| எல்லார் | 233 |
| எல்லாவகையும் | 59 |
| எல்லையில் | 266 |
| எவரும் | 131 |
| எவ் உயிரும் | 270 |
| எவ்வுயிரும் கொல் | 114 |
| எள்ளல் இல் | 196 |
| எள்ளல் இல்லா | 197 |
| எனக்குத் தமிழ் | 247 |
| என் அகம் | 256 |
| என் அனையார் | 269 |
| என் நலம் நாடி | 260 |
| என்பும் உலகில் | 61 |
| என்று எழுந்து | 242 |
| என்றும் அறத் | 118 |
| என்றென்றும் | 178 |
| என்றைக்கேனும் | 250 |
| என்னை இனிய | 140 |
| ஏதானும் | 82 |
| ஏதும் அறியா | 181 |
| ஏந்தல் இரு | 166 |
| ஏந்தல் பணி | 123 |
| ஏமம் அமைந்த | 229 |
| ஏய்ந்தபெருமை | 120 |
| ஏராரும் புகழ் | 54 |
| ஏரார் இளங்கிளியே | 187 |
| ஏரார் இளங்கொடி | 189 |
| ஏர் ஆரும்வளா | 3 |
| ஏலம் தருகுழல் | 167 |
| ஏனும் | 238 |
| ஏவும் பணி | 101 |
| ஏழை இல்லை | 250 |
| ஏழை பங்காளன் | 23 |
| ஐம்பெரிய | 47 |
| ஐயாயிரத்து | 183 |
| ஐயோ என்று | 276 |
| ஐயோ மனம் | 160 |
| ஒக்கும் | 232 |
| ஒடுக்கப்பட்ட | 171 |
| ஒழிந்திடுக | 176 |
| ஒழுக்கமது | 38 |
| ஒழுக்கம் | 238 |
| ஒன்றிக்கடமை | 125 |
| ஒன்று அறியா | 246 |
| ஒன்று உரைப் | 145 |
| ஓங்கு கடல் | 206 |
| ஒதத்திரை | 258 |
| ஓதுகலை | 233 |
| ஓயாது அறத் | 94 |
| ஓர் ஆடை | 203 |
| ககனத்து | 58 |
| கடமை | 249 |
| கடமையாக | 44 |
| கடல் ஆடை | 180 |
| கடவுள் | 56 |
| கடன் அறிந்தேன் | 122 |
| கட்டழகி | 259 |
| கட்டி உலகு | 84 |
| கட்டிக் கரும்பே | 235 |
| கணவன் | 232 |
| கண் இமைக்கும்முன்னரே | 85 |
| கண்டார் | 249 |

| பாட்டு முதல் | பக்கம் | பாட்டு முதல் | பக்கம் |
|---|---|---|---|
| கண்ணும் | 244 | காந்தி உயிர் | 213 |
| கதி அடை | 49 | காந்தி உரையதனை | 57 |
| கத்தர் உடுத் | 126 | காந்தி உலகிற்கு | 179 |
| கத்தர் பெருக | 252 | காந்தி எனும் | 278 |
| கம்ப மத | 190 | காந்தி என்று | 239 |
| கம்பர் | 231 | காந்தி கருணை | 168 |
| கருங்கயல் | 130 | காந்தி தனை | 72 |
| கருணை உரு | 236 | காந்தி நீ | 173 |
| கருனை கொள் | 196 | காந்தி பெருமை | 57 |
| கருணைச் செயல் | 73 | காந்தி மகான் | 268 |
| கருணையின் | 184 | காந்தி மறைவா | 95 |
| கருது மின் | 137 | காந்தி மிக | 204 |
| கருது வண | 121 | காந்தி மேல் | 256 |
| கருத்தில் | 240 | காந்தியின் | 196 |
| கருத்தும் | 243 | காந்தியின் மெய் | 260 |
| கலங்காத | 182 | காந்தி வந்தான் | 251 |
| கலைகள் | 241 | காந்தி வருக | 30 |
| கலைவளர் | 255 | காலம் கருதி | 105 |
| கல் நாணும் | 208 | காவி உடை | 59 |
| கல்வி தனில் | 234 | கிளிபோல் | 124 |
| கள் ஒழிக் | 111 | கிள்ளைகளே | 141 |
| கற்பின் திருவே | 164 | கிள்ளைமொழி | 262 |
| கற்றான் | 56 | கிள்ளைமொழி | 240 |
| கற்றுஉணர்ந்த | 4 | குதலைச்சிறுமி | 247 |
| கற்றைப் புகழ் | 201 | கும்மி | 239 |
| கனிவாய் | 165 | குழலின் | 231 |
| கன்னல் | 15 | குழலொடு | 195 |
| காதலி | 265 | குற்றம்இல் | 266 |
| காதலியே | 134 | குற்றம்புரி | 40 |
| காதலில் | 221 | கூடிடுக | 174 |
| காதலுடன் | 243 | கூடியஅந் | 138 |
| காதல் இது | 232 | கூட்டுவீர் | 148 |
| காதல் தமிழ் | 235 | கைவளை ஆர்ப்ப | 239 |
| காதல் நிறை | 199 | கொங்குவிரி | 189 |
| காதல் புரி | 247 | கொஞ்சு கிளியே | 235 |
| காதல் யசோ | 266 | கொஞ்சு மொழி | 186 |
| காதல் வீரம் | 255 | கொஞ்சு மொழி | 195 |
| காதார் குழை | 190 | கொடிப்பவள | 194 |
| காந்தி அறமதனை | 231 | கொடுமையான | 251 |
| காந்தி அறம் எனும் | 139 | கொட்டுகொட்டு | 252 |
| காந்தி அறம் சேர் | 153 | கொண்டல்வணன் | 262 |
| காந்தி அறம் தலை | 152 | கொத்தடிமை நீக்கு | 248 |
| காந்தி அறம் தரை | 239 | கொத்தடிமை நீங்கி | 218 |
| காந்தி இக் | 196 | கொம்பே | 149 |
| காந்தி உடல் | 113 | கொல்லாமை | 83 |

| பாட்டு முதல் | பக்கம் | பாட்டு முதல் | பக்கம் |
|---|---|---|---|
| கொல்லுபடை | 238 | சிறுநான் விழி | 143 |
| கொல்லுபடை | 97 | சிறுமை | 264 |
| கொல்லுபுலி | 84 | சிறைப்பட்ட | 218 |
| கொள்கைக்கு | 77 | சிறையார் | 185 |
| கொள்ளை நலம் | 201 | சிறையில் அடை | 99 |
| கொன்றுகுவி | 115 | சிறையின் உள் | 229 |
| கொன்றுவிட | 109 | சிற்றுடல் | 175 |
| கொன்னே நம் | 22 | சினவேல் | 202 |
| கோடி இரவி | 79 | சின்னஞ்சிறு | 248 |
| கோடிஉயிரை | 89 | சீரைப் பார்த் | 234 |
| கோடிபடை | 247 | சீர் ஆர் எனது | 144 |
| கோயிலிலே | 216 | சீர் உடை | 176 |
| கோல | 231 | சீர் கெழு | 191 |
| கோவியலை | 199 | சீர் சேர் | 221 |
| கோவில்தனில் | 229 | சீர் மலியும் | 45 |
| கோழிகள் | 182 | சிலத்து உயர் | 100 |
| சகம் ஆண்டோர் | 191 | சிலம் | 237 |
| சங்கத் தமிழ் | 232 | சுருங்கும் | 102 |
| சங்கம் மருவிய | 241 | சுரும்பீர் | 146 |
| சட்ட சபை | 48 | சூது செய்த | 236 |
| சத்தியத்தை | 37 | செங்கோல் | 26 |
| சந்தேகம் | 105 | செங்கோன்மை | 234 |
| சபர்மதி | 223 | செஞ்சொல் அமிழ் | 235 |
| சமத்துவம் | 233 | செஞ்சொல் இளங்கோ | 232 |
| சரி நிகராய் | 246 | செந்தமிழில் | 237 |
| சாதி சமய | 33 | செந்தமிழ்த் | 258 |
| சாதி பிறப்பினில் | 244 | செந்நெல் | 34 |
| சாதியால் உயர்வு | 233 | செப்புக | 125 |
| சாதியால் தீண்டாதார் | 247 | செம்பவள | 187 |
| சாதியால் நாம் | 236 | செயல்கண்டும் | 1 |
| சாந்த மொழி | 226 | செயற்கரிய செய் | 214 |
| சாந்தம் என்னும் | 33 | செயற்கரிய | 273 |
| சாந்தம் பொறை | 238 | செயிர்தீர் | 200 |
| சாந்தம் பொறை | 4 | செய்த பிழைகள் | 66 |
| சாந்தம் பொறை | 190 | செய்தவன் | 196 |
| சாந்தம் வீரம் | 198 | செய்தற்கு | 60 |
| சாலிவாகன | 246 | செய்து அளித்த | 119 |
| சாவைத்துரும் | 74 | செய்யாமல் | 103 |
| சாற்றரிய | 218 | செல்லச் சிரிப்பு | 106 |
| சாற்றுக | 131 | செல்லாமை | 135 |
| சிந்தை | 25 | செல்லும் இடம் | 249 |
| சிலம்பு | 242 | செல்வம் | 18 |
| சிறக்கும் | 234 | செல்வமே | 237 |
| சிறியதொரு | 210 | செல்வனை | 148 |
| சிறுகுதலை | 187 | செவிக்குத்தேன் | 238 |

| பாட்டு முதல் | பக்கம் | பாட்டு முதல் | பக்கம் |
|---|---|---|---|
| சேக்கிழார் | 232 | தாங்கரிய | 97 |
| சேண்புகழ் | 185 | தாதாபாய் | 267 |
| சேரன் இசைத்த | 140 | தாம் பெற்ற | 90 |
| சேயிழையே | 136 | தாயரசு | 226 |
| சேலை | 240 | தாயவள் | 196 |
| சேவடி | 270 | தாயுரை | 265 |
| சொத்திலா | 91 | தாய்விலங்கு | 254 |
| சொந்த | 199 | தாலி என்று | 244 |
| சொல்அரும் | 206 | தானம் | 233 |
| சொல்லி அழையாயோ | 259 | தான் தவறு | 68 |
| சொல்லின் | 62 | தான் பிறந்த | 225 |
| சோம்பல் கெடுத்து | 96 | திங்களே எ | 36 |
| சோரனுக்கு | 265 | திசை குலுங்க | 250 |
| சோலை | 231 | திரட்டி வடித்த | 201 |
| சோலையிடை | 260 | திரு முகத்தா | 209 |
| சோற்றை | 76 | திருமேனி | 179 |
| ஞாலம் தனில் | 189 | திருவள்ளுவர் | 231 |
| ஞாலம் பெறினும் நடு | 12 | திரு வாய் திறந்து | 130 |
| ஞாலம் பெறினும் நவி | 81 | தில்லி கல்கத்தா | 268 |
| ஞாலம் மதிக்கும் | 32 | தில்லி சலோ | 273 |
| ஞாலம் மதித்திட | 168 | தீச் சொல் | 65 |
| ஞாலம் முழுவதும் | 222 | தீஞ்சாலி | 10 |
| ஞானத்து உயர் | 109 | தீண்டாதார் | 230 |
| தகப்பனை | 9 | தீண்டாமை எனும் | 244 |
| தகவு அறியா | 246 | தீண்டாமை ஒழிக | 21 |
| தக்க தகா | 47 | தீண்டாமை நோயதனை | 227 |
| தங்குபுகழ் | 176 | தீண்டாமை வேண்டும் | 235 |
| தந்தைக்கா | 236 | தீது இல் | 236 |
| தமிழுடன் | 198 | தீது புரி | 237 |
| தமிழே பயின்று | 144 | தீமைக்கடல் | 90 |
| தமிழ் பாட | 4 | தீமை முழுது | 237 |
| தம்பிக்கு | 237 | தீய புரிந் | 71 |
| தருமம் தழை | 238 | தீராச் சீர் | 203 |
| தலைவன் தனி | 127 | தீர்த்தன் | 234 |
| தவமே | 156 | துறவிக்கு | 193 |
| தள் அரிய | 200 | துன்பமே | 60 |
| தனக்கு என்று | 87 | துன்பம் உற | 92 |
| தன் ஆவி | 178 | துன்பம் செய் | 252 |
| தன் உயிர் | 23 | துன்பம் புரிந்திட்ட | 81 |
| தன் உயிரும் | 72 | துன்பெதுவும் | 227 |
| தன் ஒரு மைந்தனை | 265 | தூண்டும் அறி | 247 |
| தன் கணவன் | 266 | தூண் நல்ல | 188 |
| தன்னரசு | 19 | தூய கதர் | 257 |
| தன்னிகர் | 196 | தூய்மை அரி | 80 |
| தன்னை உயர் | 93 | தூய்மை உடற் | 79 |

| பாட்டு முதல் | பக்கம் | பாட்டு முதல் | பக்கம் |
|---|---|---|---|
| **தெள்ளு தமிழ்** | 234 | நாட்டைப்பிடி | 98 |
| தென்னாப்பிரிக்கா எனும் | 9 | நாட்டை மறந்து | 246 |
| தென்னாப்பிரிக்காவில் உரிமை | 207 | நாம் ஆர்க்கும் | 269 |
| தென்னாப்பிரிக்கா சென்று | 40 | நாம் விண்ணில் | 36 |
| தென்னாப்பிரிக்காவில் நின் | 45 | நாயக நம் | 163 |
| **தேமாங்கனி** | 248 | நாயக நற் | 180 |
| தேர்ந்த அறம் | 201 | நாயகனே | 157 |
| தேவர் குறள் | 249 | நாலாயிரத் | 231 |
| தேறினான் மெய் | 87 | நாவரச | 269 |
| தேனார் | 27 | நாவாழ | 209 |
| தேனும் | 239 | நாவுக்கா | 86 |
| தேனை ஈ | 116 | நாள்பெருக | 174 |
| **தொடத்தகார்** | 215 | நான் என | 172 |
| தொடையில் | 265 | **நியாயம்** | 44 |
| தொட்டு இழுத்த | 234 | நிலத்தில் | 119 |
| தொட்டுத் துரோ | 264 | நிலத்து | 176 |
| தொண்டிற் | 147 | நிலவு அருநும் | 212 |
| தொல் உலகை | 64 | நிலவு தரும் | 177 |
| தொல் காப்பியர் | 232 | நிலையில் | 249 |
| தொழில் வளர | 252 | நிற்தும் நிலை | 177 |
| தொன்று தொட்டு | 255 | நினைக்கு அரிய | 216 |
| **தோள் ஓய்ந்து** | 237 | நினக்கு அரிய | 181 |
| தோன்று புகழ் | 129 | நினைப்பதற் | 264 |
| **நடந்தாள் தனி** | 141 | நின் புகழ் | 184 |
| நடமாடும் | 270 | நின் மக்கள் | 7 |
| நட்புப்பகை | 64 | நின் வழக்கு | 28 |
| நந்தனாரை | 244 | நின்னுடைய | 51 |
| நந்தனாரை | 263 | **நீசலைகள்** | 37 |
| நமை அடக்க | 207 | நீங்கியயான் | 146 |
| நம்பன் புகழ் | 203 | நீதிகையாதே | 135 |
| நம்பி | 66 | நீ படைத்த | 5 |
| நலத்துடனே | 249 | நீலக் கடல் | 259 |
| நலத்துறை | 165 | நீள் பாரு | 42 |
| நலமோமகப் | 161 | **நுண்மணல்** | 249 |
| நலம் ஆர்ந்த | 194 | **நூலொடுநுண்** | 134 |
| நல்தவன் | 150 | **நெருங்கும்** | 108 |
| நல்லதொழில் | 233 | பகைமை | 76 |
| நல்லபொருள் | 249 | பசியும் பிணியும் | 107 |
| நன்று அலநாம் | 139 | பச்சிளங்கன்னி | 257 |
| நன்று | 41 | பச்சைநிற | 195 |
| **நாகரிகம்** | 255 | பச்சைப்பசுங் | 185 |
| நாடு செழித்திட | 124 | பட்டம் பதவி | 252 |
| நாட்டின் விடுதலை | 236 | பண் கொண்ட | 277 |
| நாட்டின் விடுதலை | 249 | பண்டுஇந் | 49 |
| நாட்டை | 231 | பண்தேய்த்த | 195 |

| பாட்டு முதல் | பக்கம் | பாட்டு முதல் | பக்கம் |
|---|---|---|---|
| பந்துபயில் இளம் | 143 | பிறர்க்குரியார் | 248 |
| பராவு | 236 | பிறவிப்பிணி | 88 |
| பலபலவாக | 179 | பீடுபிறங்க | 235 |
| பல்லாண்டு பல்லாண்டு | 193 | புகழே பொறுத் | 73 |
| பல்லாண்டு வாழ்க | 172 | புகழ்சேர் | 5 |
| பல்லாண்டு வாழ்ந் | 85 | புண்ணியனே | 180 |
| பல்லோரும் | 248 | புத்திரிபாய் | 205 |
| பல்லோர் | 177 | புத்திரிபுத்திரன் | 196 |
| பழமையுள் | 245 | புலமைத் தொழில் | 247 |
| பழையபுராண | 242 | புலையர்எனச் | 221 |
| பழையவழக் | 247 | புலையர் என்ற | 228 |
| பனிமலர் | 167 | புலையர் என்று | 251 |
| பாகுபொருவு | 201 | புறங்கொடுத் | 241 |
| பாக்கியமார் | 210 | புறவின் | 266 |
| பாங்குடைய | 226 | புனித மெய் | 112 |
| பாஞ்சால | 234 | புனிதம் அறியாது | 246 |
| பாடஅறி | 157 | புன்சிரிப்பு | 118 |
| பாடிக்கொடுத் | 234 | பூதலத்தில் | 6 |
| பானாழ்வாரை | 244 | பூதலத்து | 220 |
| பாண்டவர்கள் | 267 | பூதான் | 247 |
| பாண்டவர்கள் | 272 | பூமகள் | 264 |
| பாரதத்தாய் | 205 | பூமி புகழ் | 69 |
| பாரதமாதா தவத்தின் | 225 | பூரணசுதந் | 183 |
| பாரதமாதா | 268 | பெண் அடிமை | 233 |
| பாரதி | 232 | பெண் அரசே | 163 |
| பாரத்தொல் | 242 | பெண்ணை இழிப் | 252 |
| பாரார் | 27 | பெண்ணைக் குறைத்து | 232 |
| பாரில்பாதக | 48 | பெண்மை இகழ் | 241 |
| பாருள்ள | 2 | பெண்மை இழிவு | 240 |
| பார்த்தனார் | 236 | பெண்மைக்கு இலக் | 234 |
| பால்மதி | 52 | பெண்மைக்கு இழுக் | 245 |
| பாவையர் | 195 | பெரிய | 237 |
| பாற்கடல் | 242 | பெரியோய் | 220 |
| பித்துக்கொண்டு | 247 | பெரியோர்கள் | 214 |
| பிரிவுசதி | 107 | பெருகுக | 159 |
| பிறந்த பொழுதே | 253 | பெரும வருக | 31 |
| பிறந்தார் | 248 | பெரும் புகழ் | 137 |
| பிறப்பதனால் | 263 | பெற்ற மகன் | 265 |
| பிறப்பில் | 248 | பெற்றவர் | 243 |
| பிறப்பினில் | 14 | பெற்று | 243 |
| பிறப்பின் | 238 | பெற்று எடுத்த | 217 |
| பிறப்பு உரிமை சுய எனா | 266 | பேணி அருந் | 129 |
| பிறப்பு உரிமை சுய என் | 268 | பேதை என | 195 |
| பிறருக்கு | 71 | பேராசை | 273 |
| பிறர்குற்றம் | 20 | பேர் அறிவு பெற் | 82 |

| பாட்டு முதல் | பக்கம் | பாட்டு முதல் | பக்கம் |
|---|---|---|---|
| பேர் அறிவு | 208 | மற்றோன் மனை | 65 |
| பேர் ஆற்றல் | 209 | மனப்பிணி | 169 |
| பேர் இன்பத்து ஆழும் | 68 | மனமே உயரும் | 128 |
| பேர் உலகில் | 92 | மன் உயிர்கள் | 75 |
| பேர் படைத்த | 1 | மன்னவர்க்கும் அந் | 206 |
| பைம் பொன் | 234 | மன்னவர்க்கும் | 238 |
| பொய் அறியா | 78 | மன்னிய | 173 |
| பொய்கை | 184 | மன்னுபுகழ் | 159 |
| பொய் வளரும் | 200 | மன்னும் உலகில் | 121 |
| பொருந்தும் | 154 | மன்று | 242 |
| பொருள் எது | 152 | மாசில் | 189 |
| பொருள் நீ | 204 | மாசு அறு | 164 |
| பொறுமை | 212 | மாதர் | 244 |
| பொறையுடைய | 219 | மாதவ வாழ்வே | 173 |
| பொன் புரையும் | 46 | மாதவத்துக் கத்தூரி | 205 |
| பொன் மணக்க | 52 | மாதவத்துப் புத்திரி | 199 |
| பொன்ற வரும் | 102 | மாதா நல் | 267 |
| போடி உன் | 204 | மாது அடிமை | 249 |
| போர்ப்பந்தர் | 10 | மாது அடிமை | 235 |
| போயர் | 41 | மாது அவள் | 142 |
| மகவு பல | 218 | மாநிலமே | 212 |
| மக்கட்குள்ளே | 18 | மாநிலம் | 13 |
| மக்கட் பிறப் | 228 | மாந்தர் உய | 200 |
| மக்களுக்கா | 264 | மாமயிலார் | 194 |
| மக்கள் அன்று | 206 | மாமலர் உற் | 223 |
| மக்கள் உயர் | 35 | மாரதர் | 192 |
| மங்களத்து | 175 | மால்பெற்ற | 193 |
| மட்டில் புகழ் சேர் | 178 | மாழைக்கரு | 258 |
| மட்டில் புகழ்ப் பாரத | 217 | மாற்றான் | 67 |
| மண் அனைத்தும் | 216 | மானே | 231 |
| மண் குளிர | 246 | மான் நேர்விழி | 127 |
| மண்ணில் நிகர் | 212 | மிக்கவினை | 106 |
| மண்முழுதும் | 215 | மிடிபிணி | 191 |
| மத்து எறிந்த | 8 | முடிக | 174 |
| மந்திரிமார் | 276 | முடிசூடி | 248 |
| மந்திரியின் | 11 | முடிதுறந்து | 237 |
| மயக்கம் | 166 | முதுமை | 235 |
| மயிலே | 133 | முந்தைப் | 237 |
| மரணம் | 26 | முழுது உலகி | 53 |
| மருந்து | 155 | முனை நாளுயர்ந்த | 222 |
| மருமலரே | 235 | முன் உலகின் | 219 |
| மருவுகொழு | 202 | முன்பின் | 243 |
| மறைபுகலும் | 38 | முன்னம் உலகம் | 227 |
| மற்றையோர் | 69 | முன்னம் நமது | 17 |
| மற்றோன் மனம் | 234 | மூக்கு அடைக்க | 249 |

| பாட்டு முதல் | பக்கம் | பாட்டு முதல் | பக்கம் |
|---|---|---|---|
| மெத்து புகழ் | 112 | வாறுள் | 177 |
| மெய்த்திரு | 17 | வாய்கொண்ட | 215 |
| மெய் நொந்து | 128 | வாய்த்த | 246 |
| மெய்மணக்கும் | 209 | வாய்ந்த பொறை | 236 |
| மேதகவோனை | 110 | வாராது ஒழி | 256 |
| மேலவர் | 245 | வாழி மணி | 179 |
| மேலவனே | 172 | வாழிய உலகெலாம் | 193 |
| மேனுள் | 24 | வாழிய நீ | 173 |
| மோகனதாசனை | 132 | வாழிய மோகன | 170 |
| மோகனனை | 70 | வாழ்ந்தது | 184 |
| மோகனன் | 196 | வாழ்ந்திடு | 172 |
| மோதுபெரும் | 262 | வாள்தடம் | 264 |
| யாராலும் | 100 | வானமீன் | 255 |
| யாரானும் | 113 | வானம் இடிந் | 115 |
| யாரும் நிகர் | 55 | வானம் நனி | 190 |
| யாரும் வியக்க | 80 | வானுர் | 186 |
| யார் எது | 114 | வான்ஏற | 169 |
| யார் வல்லார் | 215 | விஞ்சுகலை | 235 |
| லாலாலசபதி | 268 | விடிந்தது | 183 |
| வசைஇன்றி | 247 | விடுதலைக்கு | 250 |
| வஞ்சனை | 265 | விடுதலையே | 63 |
| வணிகர் | 58 | விண் உறையும் | 35 |
| வண்டே புகல் | 147 | விரி கதிர் | 182 |
| வந்தேமா | 272 | விலைமதிப்பில் | 255 |
| வம்பவிழ் | 262 | விளக்கை | 241 |
| வம்பின் பொருள் | 203 | வீண் நகை | 245 |
| வருக | 271 | வீயாப்புக | 246 |
| வல்வரவு | 234 | வீரசுதந்தி | 267 |
| வழிகாட்டு | 260 | வீரமும் | 241 |
| வள்ளலே கண்ணே | 233 | வீறேடு | 247 |
| வள்ளலே வாழிய | 181 | வெண்பா | 171 |
| வள்ளல் மகா | 78 | வெந்த புண் | 197 |
| வள்ளால் | 32 | வெம்மை | 239 |
| வள்ளியை | 242 | வெள்ளையரே | 94 |
| வள்ளுவரும் | 51 | வெற்றி | 233 |
| வள்ளுவர் சீர் | 8 | வேடன் | 237 |
| வள்ளுவனை | 232 | வேண்டும் எனும் | 2 |
| வள்ளுவன் நூற்ற | 155 | வேதனை | 196 |
| வள்ளுவன் செய் | 236 | வேந்தன் | 249 |
| வள்ளுவன் என்று | 255 | வேந்தியல் | 230 |
| வற்றல் | 197 | வேர்மாள | 238 |
| வன் களம் | 151 | வேளாண்மை | 117 |
| வன் சிறைக்கு | 254 | வேற்றுர் | 204 |
| வன்னக்கிளியே | 233 | வேற்றுநாடு | 233 |
| வா. உ. சி. | 268 | வைத்தபெரு | 248 |
| வாடுபயிரை | 197 | | |